உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# தொண்டைநாட்டுத்திருப்பதித்
# தோத்திரக்கோவை.

———:o:———

இஃது,
சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தோருவரும்
ர்ஜூபீஸ் டிராபிக் ஓவர்சீயருமாகிய
பெரியமெட்டு
மோசூர் - முனிசாமிமுதலியாரால்
இயற்றப்பட்டு,

மேற்படி திருக்கூட்டத்தோருவரும்
புதுவை - புதுப்பாக்கம்
சுந்தர பெரியசாமிமுதலியாரவர்கள் புத்திரருமாகிய
சு-பெ-பொன்னுசாமிமுதலியாரால்

சென்னை:
வே. நா. ஜூபிலி அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

சார்வரிஸு ஆவணிமீ.
1900.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# நூன்முகம்.

அருந்தமிழறிந்த அன்பர்காள்! அடியேன் சென்று தரிசித்த தலங்கள் பலவற்றுள் தொண்டைநாட்டுத் தலங்கள் முப்பத்திரண்டிற்கும் ஒவ்வோர் துதியிருத்தல்வேண்டுமெனப் பேரவா பிடர்பிடித்துந்தலால் அவை யொவ்வொன்றிற்கும் தோத்திரப் பாமாலை யியற்றிச் சிலவற்றை யச்சிடுவித்தேன். அவற்றைக் கண்ணுற்ற அன்பர் பலர் அச்சிடுவித்தவைகளையும் அச்சிடாது எஞ்சிநின்றவைகளையும் ஒருங்குசேர்த்து முறையே ஒருநூலாக்கிப் பலர்க்கும் உபகரிக்கிற் பேருதவியாமென வேண்டியபடி திருக்கச்சியேகம்ப முதலாகத் திருஇரும்பைமாகாளம் ஈறாக அச்சிடுவித்ததுடன்,

"உலகெலாமுனை வழுத்துக வழிபடா தொழியிற்
கலிகொள் வேதிய ரும்பரா யினுமவர் கரும
நிலமி சைப்புய னெய்துரு தழிகநின் னிணைத்தாண்
மலர்வ ழுத்தினோர் பெரும்பய னெய்துக மாதோ."

என்றபடி யாதொரு இடையூறும் எடுத்தகாரியத்திற் றோன்றுவண்ணம் விக்கினேசுவரர் தோத்திரமும், முறையே சுப்பிரமணியர், சமயாசாரியர்கள் தோத்திரங்களும் இயற்றிச்சேர்த்து, அவை பலவினப்பாவாகவிருப் பிற் செவிக் கினிமைதோன்றிப் பத்திவிளைதற்கோ

ரமுவாகுமென்றெண்ணி ஆங்காங்கு ஆசிரியவிருத்தம், வெண்பா, கலித்தாழிசை, கலிநிலைத்துறை, கலிவிருத்தம், கட்டளைக்கலித்துறை, கோச்சகக்கலிப்பா, ஆசிரியப்பா, கட்டளைக்கலிப்பா, சந்தக் கலிவிருத்தம், சந்தவிருத்தம், என்னும் பாவினங்கடோன்ற நிரோட்டகம், இரட்டை மணிமாலை, ஒருபாஒருபஃது, நவமணிமாலை, பதிற்றுப் பத்தந்தாதி, சோடசப்பாமாலை, கலித்துறையந்தாதி, மும் மணிமாலை, நான்மணிமாலை, வெண்பாவந்தாதி, பஞ்ச ரத்தினம் என்னும் பிரபந்தங்களாக வமைத்துத் தொண் டைநாட்டுத் திருப்பதித் தோத்திரக்கோவை எனத் திரு நாமமுஞ் சூட்டினன். அன்றி, அவ்வத்தல சுவாமி தேவியார் திருநாமங்கள், தீர்த்தங்கள், விருட்சங்கள், பூசித்துப் பேறடைந்தவர்பெயர்க ளாதியனவற்றையுஞ் சுருக்கி யறிந்தவளவிற் காட்டியுள்ளேன். அவற்றைக் கண்ணுறும் அன்பர்யாவரும் "நஞ்சுமமுதமாமங்கலம் புகினே" என்றபடி சொன்னயம் பொருணயம் அமை யாச்சொற்க ளடங்கியவையாயினும் இறைவனையே எழில்பெறத்துதித்த செய்யுட்களாதலால் செய்யுட் குறைகளை யெடுத்துநோக்காது எம்பெருமான்றுதி யெனக்கொண்டு களிப்பரென்று கருணாநிதியின்றிரு வருளைச் சிந்திக்கின்றனன்.

இங்ஙனம்

தாழ்மையுள்ள

மோரூர் - முனிசாமி.

# சிறப்புப்பாயிரம்.

தஞ்சாவூர் பிரமஸ்ரீ-சதாவதானம்,
சுப்பிரமணிய ஐயரவர்கள் இயற்றிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நீர்பூத்த வளத்தொண்டை நன்னாட்டிற் றமிழ்வேத
    நிகழ்த்துஞ் சென்னி
யார்பூத்த வறமூர்த்தி யமர்ந்தருளு மவ்வறத்தெண்
    ணாந்த லங்கட்
சேர்பூத்த புகழ்த்தோத்தி ரக்கோவை யெனுமோர்நூ
    லிசைத்தான் மோசூர்ச்
சீர்பூத்த நனிசாமி நிறைபவுறு முனிசாமிச்
    செல்வி யோனே.

---

சென்னைக்
கிறிஸ்டியன் காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிசர்
பிரமஸ்ரீ-வி. கோ. சூரியநாராயணசாஸ்திரியாரவர்கள் பி. ஏ.
சொல்லிய,
எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கற்றவர் கல்லா ராதியர் படித்துக்
    களிக்கிய தோமற வொளிர்பு
தெற்றெனு நூலாத் தொண்டைநன் னாட்டுத்
    திருப்பதித் தோத்திரக் கோவை
நற்றவச் சைவ னம்முனி சாமி
    நனிபுனைந் திடலுமஃ தச்சி
னுற்றிவ னுலவ வுயர்பொன்னு சாமி
    யுவந்தினி துதவினன் மாதோ.

ம-ா-ா-ஸ்ரீ வித்வான்.

## திருமயிலை - சண்முகம்பிள்ளையவர்களியற்றிய நேரிசைவெண்பா.

சீர்த்தொண்டை நாட்டுச் சிவத்தலக்குப் பேரார்ந்த
தோத்திரக் கோவையெனச் சொல்லினான் - கார்த்திரள்சேர்
பூம்பொழில்சூழ் மோசூர் முனிசாமி வேள்புலமை
மேம்படுவோ னின்று விளைந்து.

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பொன்னாடு காவுடைத்துப் பொன்னிநா டனமுடைத்தாம்
போந்தை சூடி
நன்னாடு மால்யானைத் திரளுடைத்திங் குமையளிப்ப
நம்ப னுண்ட
சென்னாடு முதனுடைத்தத் தீர்த்தனுமை கைத்தொண்டே
செய்ய நாடு
மின்னாடு தொண்டைநா டென்பரிக் காரணத்தியாதே
சிறந்த தம்மா.

அன்னநாட் டினிற்கலையுட் சிவகலையு மாயனுவ
வெழுத்தோ ரஞ்சும்
மன்னுதருக் களிற்கற்ப தருவுமான் வருக்கத்தின்
மாத வன்பாற்
றன்னுசர பியுமறையிற் சாமமுமா மெனயாருஞ்
சொல்லா நின்ற
பொன்னியலு மணிமாடப் புரிசைமோ சூரென்றும்
பொலியு மாலோ.

அப்பதியி லன்றரன்ற னடியார்தம் பத்திமையே
யன்பாய்ப் பாடும்
பொற்புறுசே வையரதிபன் வருகுலத்திற் றோன்றியோன்
பூவை பாகன்
சொற்பதுமச் சிலம்புறுசே வடிக்கென்றுந் தமிழ்பாடித்
தொலைவில் சீர்த்தி
யிப்புவியிற் பெற்றதன்றி யெனையாண்ட முல்லைவள
ரீசன் றேச்சு.

மேரகுசத் திரமுதல வமைத்தவன்பேர் முனிசாமி
யெனவே மேலோர்
போதவுரைத் திடுநெண்ப னையனுமை தொண்டுசெயப்
புரியும் பொற்பான்
ஓதுறுபாத் தொண்டுசெயக் கருதியிந்நாட் டெப்பதிக்கு
மியைய நாடித்
தீசகலுந் தோத்திரக்கோ வைப்பெயரி னொருநூலைச்
செறித்தான் மன்றே.

இன்னநூல் பல்லோரும் படித்திரும்பே றிங்குறுவா
னிதயத் தெண்ணி
அன்னமா டுறுதடஞ்சூழ் வதுவையருப் புதுவைநக
ரமர்ந்த மாண்பான்
என்னிருகண் மணியனையான் பொன்னுசா மிக்குரிசி
லென்றுந் தன்பேர்
மன்னவெழு தாவெழுத்திட் டுவதற்கென் கைம்மாறு
வகுப்ப தம்மா.

---

சிதம்பரம் ஈசானியமடம்
ஸ்ரீமத் - இராமலிங்கசுவாமிகள் மாணுக்கருள் ஒருவரான
க வ. திருவேங்கட நாயடவர்கள் இயற்றிய
எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வெண்ணிலாக் கதிர்கள் விழுதுவிட் டிலங்கும்
வேணியோன் கடுக்கைவேய்ந் திடுவோன்
பண்ணினேர் மொழியாள் பங்கனும் பரமன்
பரிவுட னமர்ந்திடுந் தலங்க
ளெண்ணிறெ லெண்ணுன் கென்பர்க டொண்டை
நாட்டினி லிசைமருஉ வவற்றைக்
கண்ணினுற் கண்டே யுடல்பெறும் பேற்றைக்
கவருவா னெண்ணினன் கருத்தால்.

நிச்சலு நீற்றைக் கண்டிகை புனையு
நேயத்தான் கற்றுணர் வோரை
ஆவச்சபொக் கிசமாக் கருதியே போற்று
மாண்பினன் மதிப்பருங் குணாளன்
கச்சப முதுகிற் கூனிய விரும்பைக்
கருக்கிடும் பள்ளர்கள் பரவு
முச்சமா மோகூர் வருமுனி சாமி
யுத்தம னுணர்வுடைப் புலவன்.

மேயசீர்த் தலங்கண் முன்னுரைத் தவற்றை
மேவிய வன்புபின் னுந்த
காயமும் வாக்குங் கருத்துமே யொன்றக்
கண்டுசே வித்துநா வாரப்
பாயசீர்ப் புனைந்த பனுவன்மா லையினைப்
பரம்பரன் பதுமத்தாள் பரிக்கத்
தூயதா டணிந்தா னதுதொண்டை நாட்டுத்
திருப்பதித் தோத்திரக் கோவை.

வாயினைப் படைத்தார் வம்பளந் திட்டு
மறுமைக்குஞ் சிறுமையே செய்து
நோயினைப் பெருக்கிப் பேயெனப் பறந்து
நொய்யாய்ப் போகுதல் புன்மை
சாவெனக் கருணை தரும்பரம் பரனைத்
தம்பிரு வாயவா றேனும்
போய்ப்பழிச் சிடுமி னெனத்தெரித் திட்டான்
புரியுங்கைம் மாறெவ னவற்கே.

---

சென்னைக்

கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்

ஈக்காடு. இரத்தினவேலு முதலியா ரவர்களியற்றிய

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மதியணி சடிலத் திறைவனும் புனிதன்
மன்னுயிர்த் தொகைகளுக் கருள்வான்
வதிதருபதிக ளெண்ணில வவற்றுள்
வளமிகு தொண்டைநாட் டிலகு

## சிறப்புப்பாயிரம்.

பதிகவெண் ணன்கும் பரவியே பரமன்
பைங்கழ றதிபுரி பனுவல்
விதியுளி பிரபந் தங்களா யியற்றி
விளக்கினன் மேதக விரித்தே.

அன்னவ னெம்மூன் றம்பகன் மவுலி
யமர்திரி பதகையின் மரபும்
கன்னவி றேளுங் குவளைசேர் மார்புங்
கவினலப் பதாகையு முடையோன்
தன்னையே சார்ந்தோர் பொன்னையே யடையத்
தயைபுரி கருணையோர் வடிவன்
என்னிரு கண்க ணேர்முனி சாமி
யெனும்பெயர்ப் புலவர்நா யகனே.

கருப்பதிற் புகாது கண்டவர் துதிக்கக்
கவினுறு கவிகளாப் புனைந்து
விருப்புடன் சான்றோர் குழாமிடைந் தெங்கும்
விளங்குறு தொண்டைநாட் டமருந்
திருப்பதிக் கோவை யென்றொரு பெயராற்
றிகழ்தர வளித்தன னவற்கு
அருப்பமில் கைம்மா றறிஞர்க ளியற்றற்
காவதொன் றுள்ளதோ வறைமின்.

---

### அஷ்டாவதானம்,

### பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்களியற்றிய

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இண்டையஞ்ச டைப்பெருமா னினிதுவீற் றிருந்தருளு
மெழிலை வாய்ந்த
தொண்டைமண்ட லத்தனிநா லெட்டினுக்குந் தனித்தனியே
தோத்தி ரங்கள்
கண்டைநற் கரும்பைத்தே னைப்பாலைக் கயப்பிக்கக்
கனிந்து சொற்றான்
பண்டையசெந் தமிழ்ப்புலமை நிறைமோசூர் முனிசாமிப்
பாவ லோனே.

---

சைவசித்தாந்த சஞ்சீவினி சபைப் பிரசாரகரும்
மாயாவாத தும்ஸ கோளரியுமாகிய
யாழ்ப்பாணத்து மேலைப்புலோலி,
வித்வான் - நா - கதிரைவேற்பிள்ளை அவர்களியற்றியன.

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திருமேவுங் கரும்புயலு மொருமலரின் மறையவனுந்
தேட வோர்பு
சருமேவு முயற்கூட்டுச் சடைக்காட்டைப் பதமலரைத்
தாநா டாது
மருண்மேவு மலத்தொடக்கி னிலைமாறிக் கீழிடந்து
வான்மேற் போகி
யிருண்மேவி யறியொணா வொளிவடிவப் பரம்பொருளன்
றோராட் டெண்ணி.

உலகுயிரி னிடர்குமைத்துத் திருவடிக்கீழ்ப் பெரியசுக
முறுப்பான் கொண்ட
வலகிறிரு வருளுருவா நிலவுலகத் தமர்ந்தருணற்
றலங்கள் கோடி
யிலகுமவற் றதற்கதுவே நிகரான தொண்டைநாட்
டெங்க ளம்மை
தலமுயவே வளர்த்தனமுப் பானிரண்டென் றறிகுறிக்குச்
சான்ற வாகி.

பெருமைபெறீஇ யுனுமளவி னிமைமறுமைப் பேறளிக்கும்
பெட்பார் முப்பா
னிருமையுறு மவிர்தலங்க ளவைமரீஇச் சேவையினி
தியற்றுங் காலை
யருமையுற மலர்மாண்சொன் மாலைவகை சாத்தியரு
ளூற்றக் காக
வொருமையினர் கோவையாத் தருகவெனத் தந்தனனா
லொருவன் மாதோ.

அன்னவன்யா ரெனின்வேட மாலயத்தை யரனென்றே
வழிபா டாற்று
மன்னவனம் வரதநியின் மரபிறு னம்மரபின்
மாட்சி நூலிற்
பன்னுவா னத்துவித சித்தாந்த வுண்மைநிலைப்
படிமை யாள
னன்னயமா விலக்கியமைந் திலக்கணமே முதற்கலைக
ணன்காய்க் கற்றோன்.

சொல்வளமும் பொருள்வளமும் வளர்ந்திலகப் பாமழையைச்
சொரியு மேகம்
பல்வளமும் படைத்தமோ சூர்ப்பதியின் புகழ்பரவி
ராம சாமிச்
செல்வனொரு பெருந்தவத்து வருகுமரன் குமரனடி
சென்னி சூடுந்
துல்வளவன் முனிச மிப் புலவனெனப் பெயரியநற்
சொல்லோ னன்றே.

---

மஹாவித்வான் பென்னலூர்நாராயணசாமிநாயுடவர்கள்புத்திரர்

ம-ள-ள-ஸ்ரீ வித்வான். நாதமுனிநாயுடவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பண்டைநாட்டிற் புற்றதமிழ் மணங்கமழு நால்வர்களாற்
பதிகம் பெற்ற [ளச்
தொண்டைநாட்டுத் திருத்தலத்தோத் திரக்கோவை யமிழ்தமெ
சொற்றான் மாதர்
கொண்டைநாட்டுக் கடிமலரிணை றுபதங்கண் முரன்மோசூர்
கோமான் சீர்த்த
தொண்டைநாட்டுப் புலமையுறு முனிசாமி யெனும்பெயர்கொ
டேயன் மன்றே.

நேரிசை வெண்பா.

பணியா மிருவினைக்குப் பானுவென மோசூர்
முனிசாமி வள்ளன் மொழிந்தான் - வனசக்
குருத்தலத்தின் கூர்நதியாற் கூறுபடுந் தொண்டைத்
திருத்தலத்தின் றோத்திரநற் சீர்.

---

மஹா-ள-ள-ஸ்ரீ வித்வான்,

பீராயங்குப்பம் - முத்துலிங்கப்பிள்ளையவர்களியற்றிய

**அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.**

பொன்னனத்தான் மணிசேடன் சிரமசைக்கக் கண்மலர்ந்தான்
பொதிகைச் சாமி
யென்னனத்தான் செங்கமலை முகம்பார்த்துக் களிப்புற்று
னிமையா நாடர் [பதித்
சொன்னயத்தான் பொருணயத்தா னெனமதித்தார் தொண்டை
தோத்தி ரப்பா
பன்னநத்தா ரியார்மோசூர் முனிசாமி வனைந்ததமிழ்
பார்த்தம் மம்மா.

---

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத் தொருவராகிய

கயப்பாக்கம் - சதாசிவசெட்டியார் பி. ஏ. அவர்களியற்றிய

**அகவற்பா.**

உலகொருமூன்றுமிலகுறவளர்ந்த
திருமறுமார்பத்தொருதனித்தேவன்
நாணுறவோங்கிச்சேணுயர்குழுமி
நந்தியம்பொருப்பினெந்தையெம்மீசன்
செஞ்சடைக்கூத்தன்நஞ்சடைக்கண்டன்
செம்மலர்நோன்றாள்மெய்ம்மனத்திருத்தும்
தீதடையப்பெறு அமாதவவசிட்டன்
தெய்வச்சுரபிமுன்பெய்தெழுதீம்பால்
பெருகியபாலிப்பெருவளஞ்சுரக்கும்
தொண்டையெனுஞ்சீர்மண்டலமதனின்
மாசூரப்பெறு அமோசூரென்னும்
நல்லூரகத்துத்தொல்குடிப்பிறந்தோன்
இம்பர்ஞாலத்தெம்பெருமாற்கு
தென்மொழிவாரியின்னமுதருத்தியும்
எண்டிசையும்புகழ்தொண்டைத்தொகைதரச்

சிரணிமெய்ம்மைக்காரணமாயும்
மணமகளென்னும்குணம்பாராது
கூந்தலரிந்தெளிதேந்திநல்கியும்
சாலிமாவடிவாலமுண்டார்க்கு
அரும்புமெய்யன்புடன்விரும்பியுதவியும்
மருணாதங்கடந்தவருணாதப்பனுவல்
நாடியமனத்திற்பாடிப்பற்பல
அற்புதச்செய்கைபொற்புறவியற்றியும்
இறைவன்றானைதப்பொருதுளம்வருந்தியும்
நிந்தைசெய்நாவினைநந்திடக்கொய்தும்
"பூக்கொளுமாதர்மூக்கினையரிந்தும்"
வாய்த்தவண்மைச்சீர்த்தியாளர்முன்
தோன்றியதொல்சீர்சான்றகுலத்தான்
ராமசாமியெனும்நாமஞ்சிறந்தோன்
தவத்தினின்வந்துபவத்திறங்கடிவோன்
யாவர்யாதொருதேவரையுன்னினும்
மாதொருபாகத்தாதிதேவனே
அவ்வத்தெய்வத்தவ்வவர்க்கங்கு
அருள்செயுமன்றிமருள்செயுந்தெய்வம்
பிறக்கும்வினைசெயுமிறக்குமென்னும்
புரையிலாதநல்லுரையுளங்கொண்டோன்
மூர்த்தியுந்தலமுந்தீர்த்தமுந்தொடங்க
அனுவருள்செயும்ஞானாசாரியன்
கிட்டுவனென்னுங்கட்டுரைகொண்டு
புண்ணியத்தலந்தொறும்நண்ணிவழிபடும்
பவங்கடிவேட்கைச்சிவனடியாரது
கூட்டஞ்சேரும்நாட்டமுடையோன்
விதிவழுவாதுதுதிபெறுதொண்டை
மண்டலஞ்சேருமெண்டகுநாவெண்
பதிவருமெய்பசுபதியைப்டாகும்
வழிபாடாற்றிமொழிபெறுமற்பல
தோத்திரஞ்சேர்த்தசாத்திரமீங்கு
இதயத்தெண்ணியுதவினனாமால்
மதராசார்பர்சதுராராபீஸ்
பியர்தன்னோவர்சியராமெங்கள்
கனிவாசகஞ்சேர்முனிசாமிப்பேர்
பாவல்லோனெனும்நாவல்லோனே.

---

இந்நூலாசிரியர் மாணாக்கரும்

பெரியமெட்டு. சின்னமுருகப்பசெட்டியார் குமாரருமாகிய

பே. மு. சிவஞானசெட்டியாராலியற்றிய

### பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சீர்பூத்த கடலாடை யுடுத்தசக தலமதனிற்
    சீர்த்திசெறி சான்றோர்களைத்
திருத்தமொடு கொண்டநா டெனுந்தொண்டை நாட்டிலகு
    திருப்பதிமுப் பானிரண்டு
ளேர்பூத்த பாங்கினொடு வமரவப் பதிகளுங்
    கிணையில்தோத் திரக்கோவையை
யின்னலற வியற்றமிழி னிசைத் தனனரிய
    வின்பவா ரியின்மூழ்கவே
பார்பூத்த சென்னையர னடியவரி லொருவனும்
    பன்னும்வே ளாண்மரபினைப்
பகர்ந்தவன் மதராசு பியர்டிராபிக் கோவர்சீர்
    பகருமா யுள்பண்டிதன்
கார்பூத்த வெனதுவெம் பிறவிக்கட னீந்துநற்
    கல்விநல மீந்திட்டவன்
கங்கைகுல மோங்கவரு மோகூர்வாழ் முனிசாமி
    கவிவாண னன்றின்றரோ.

---

இந்நூலாசிரியர் மாணாக்கருள் ஒருவராகிய

போ. சுப்பாராவ் அவர்களாலியற்றிய

### நேரிசை வெண்பா.

முப்பழமுஞ் சர்க்கரையு மோகூர் முனிசாமி
கைப்பவள மாகக் கழறியதால் - ஒப்புகர
பாத்திரக்கோ வைத்தான் பராவுக் திருத்தலத்துத்
தோத்திரக்கோ வைக்குண்டோ சொல்.

திருச்சிற்றம்பலம்.

---

# தொண்டைநாட்டுத் திருப்பதிகளின்

## அட்டவணை.


| எண். | | பக்கம். |
|---|---|---|
| — | விநாயகக்கடவுள் ... ... ... | க |
| க | திருக்கச்சி ஏகம்பம்... ... ... | ௩ |
| உ | திருக்கச்சி மேற்றளி ... ... | க௬ |
| ௩ | திருக்கச்சி ஓணகாந்தன்றளி ... ... | க௮ |
| ௪ | திருக்கச்சி அநேகதங்காவதம் ... ... | உ0 |
| ௫ | திருக்கச்சி நெறிக்காரைக்காடு ... ... | உஉ |
| ௬ | திருக்குரங்கணின்முட்டம் ... ... | உ௪ |
| ௭ | திருமாகறல் ... ... ... | உ௫ |
| ௮ | திருஓத்தூர் ... ... ... | உ௭ |
| ௯ | திருப்பனங்காட்டூர் ... ... ... | உ௯ |
| க0 | திருவல்லம் ... ... ... | ௩க |
| கக | திருமாற்பேறு ... ... ... | ௩௩ |
| கஉ | திருவூறல் ... ... ... | ௪௮ |
| க௩ | திரு இலம்பையங்கோட்டூர் ... ... | ௫0 |
| க௪ | திருவிற்கோலம், கூவம் ... ... | ௫உ |
| க௫ | திருவாலங்காடு ... ... ... | ௫௫ |
| க௬ | திருப்பாச்சூர் ... ... ... | ௫௭ |
| க௭ | திருவுளம்பூதூர், வெண்பாக்கம் ... | ௫௯ |
| க௮ | திருக்கள்ளில் ... ... ... | ௬௭ |
| க௯ | திருக்காளத்தி, சீகாளத்தி ... ... | ௬௯ |
| உ0 | திருவொற்றியூர் ... ... ... | ௭௫ |
| உக | திருவலிதாயம், பாடி ... ... | ௮௫ |
| உஉ | வடதிருமுல்லைவாயில் ... ... | க0க |
| உ௩ | திருவேற்காடு ... ... ... | கக௮ |
| உ௪ | திருமயிலை ... ... ... | கஉக |
| உ௫ | திருவான்மியூர் ... ... ... | க௩௫ |
| உ௬ | திருக்கச்சூர் ... ... ... | க௪க |
| உ௭ | திரு இடைச்சுரம் ... ... ... | க௪௩ |
| உ௮ | திருக்கழுக்குன்றம் ... ... ... | க௪௯ |
| உ௯ | திரு அச்சிறுப்பாக்கம் ... ... | க௫௫ |
| ௩0 | திருவக்கரை ... ... ... | க௫௮ |
| ௩க | திருவரசிலி ... ... ... | க௬0 |
| ௩உ | திரு இரும்பைமாகாளம் ... ... | க௬௪ |
| — | திருப்போரூர் ... ... ... | க௬௮ |
| — | திருத்தணிகை ... ... ... | க௭0 |
| — | ஆளுடையபிள்ளையார் ... ... | க௮௯ |
| — | ஆளுடையவரசு ... ... ... | க௯உ |
| — | ஆளுடையநம்பி ... ... ... | க௯௭ |
| — | ஆளுடையவடிகள் ... ... ... | க௯௯ |

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# தொண்டைநாட்டுத்திருப்பதித்

# தோத்திரக்கோவை

## விநாயகக்கடவுள்.

பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சீர்பெற்ற வுலகெலா மிருணீங்கி யொளிபெறச்
செய்யுநற் றிருவானனே!
திவ்யதே ஜோன்மய சொரூபா சுகானந்த
சிற்சுகோ தயவிலாசா!
ஏர்பெற்ற மாலய னிந்திர னகத்திய
னிணையிலாப் புருகண்டரும்
இன்பமொடு நாரையூர் நம்பியாண் டார்நம்பி
யிசைந்தமெய் கண்டசிவமும்
பேர்பெற்ற வௌவைசந் திராதித்த ராதியர்
பெருமைபெற்று பூசனைசெயப்
பெறலரிய பேரின்ப வாழ்வினை யளித்திட்ட
பேசரிய வக்ரதுண்டா!
நேர்பெற்ற திருவடியி னிறைவுற்ற வன்பினொடு
நிதமருச் சிக்கவருளாய்
நித்திய வகண்டபரி சுத்தசிவ சத்தியருள்
சித்தகண பதிநாதனே.

# விநாயகர் தோத்திரம்.

## நேரிசைவெண்பா.

சீருஞ் சிறப்புந் தெருளொடு மேல்வீடுஞ்
சேருமன மேழுதியோர் சிந்தையினுற் - றேருமெழில்
ஐந்துகரத் தானைவித மந்தியொடு சந்திவலம்
வந்துகரத் தான்மலர்தூய் வாழ்த்து. (௧)

பேரின்ப வீட்டைப் பெறவேண்டின் மாமனமே
தாரின் மலர்தொடுத்துச் சாத்தியே - காரின்
வணத்தந்தி யானனத்தான் வண்புகழ்சேர் நல்ல
குணத்தந்தி யானமுறக் கூடு. (௨)

மெய்யடியார் தங்குழுவின் மேவவைத்து நாயேனை
வெய்ய வினையகற்றி வீடுபெறச் - செய்வான்
பணபதிவா யாயிரத்தாற் பாடுமெழிற் சீர்த்திக்
கணபதிநல் லோர்பாற் கலந்து. (௩)

கரிமுகத்தி ராக்கதனைக் காய்ந்துதலை நாளில்
பரிவுடனவ் வானவரைப் பண்பாற் - புரிந்த
விநாயகனே பேரின்ப வீட்டரசை யுன்பால்
தநாதிபனே சன்சுதனே தா. (௪)

ஈண்டினே னன்பர்களை யேத்தே னுனதருளைப்
பூண்டியான் சன்மப் பொருகடலைத் - தாண்டினேன்
காமனறு கத்தனெனக் கண்டான் முதற்சுதனும்
வாமனனுற் றீவினையை மாய்த்து. (௫)

விடைக்கொடியா னென்னும் விரிசடையா னுந்தந்
திடைகொடியா மம்பிகையுஞ் சீராய் - எடுத்துவிதங்
கொஞ்சரத்த வண்ணத்துக் கோமானை யோர்கோட்டுக்
குஞ்சரத்தைச் சேர்ந்தாற் குணம். (௬)

தூயவருக் கெட்டுவான் துட்டவினை செய்துழலுந்
தீயவருக் கெட்டான் பிரியவனன் - தூயமணத்
தாமரைநேர் தாளத்தன் தந்தா னனைமுகத்தான்
சாமரைபோற் கன்னத்தான் றான். (௭)

போதங் கொடுத்தளிக்கும் புண்ணியனும் வல்லபையி
னாதன் மலமறுத்தோர் நண்ணுறுபொற் - பாதன்
அறுகுமருக் கொன்றைபுனை யத்தனரு ளாலே
பெறுகுவெனா னின்றுபெரும் பேறு. (௮)

எங்கு மலைந்துழலு மென்னெஞ்சே யைங்கரனைக்
கங்குல்பக லுங்கரைந்து கண்களாற் - பொங்குரு
சலம்பெருக மெய்ப்புளகஞ் சாரத் துதித்தால
சலம்பெருக வாரான் சமன். (௯)

அறவினைக ளானு மகலா தியற்றுந்
துறவிகளுள் ளத்திலுறுந் தோன்றல் - பிறவி
சரணவற்பு தப்பூவைச் சார்ந்தவெனக் குண்டோ
பிரணவத்து மெய்ப்பொருளே பேசு. (௧௦)

---

## எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நீரொடு மலரிட் டருச்சனை புரியேன்
நின்றிருத் தாடொழ வறியேன்
சீரொடு தமிழ்ப்பா வோதவு மறியேன்
சிறந்தநன் னெறிகளு மறியேன்
பாரொடு விண்ணோர் பரவுமெய்ப் பொருளே
படிறனேன் பவத்துடைத் தருளாய
சூரொடு கிளைகண் மாய்ந்திடச் செய்த
சுந்தர விநாயக மணியே. (௧)

வந்தனை செயவெவ் வாத்துய ரொழித்து
வழங்குதி செல்வமென் றறிஞர்
முந்திய மறையு மொழிவதை யுன்னி
முதல்வனே திருமுன ரடுத்தேன்
பந்தனைப் பிறப்பி லழுத்திடு முனது
பங்கயத் தாளினை மறவேன்
சொந்தமென் றினைந்தேன் வந்தெனைக் காவாய்
சுந்தர விநாயக மணியே. (௨)

## விநாயகர் தோத்திரம்.

துட்டரோ டுறவு செய்திடும் பொல்லேன்
துகளறு கல்வியுங் கல்லேன்
மட்டிலாப் பாவந் தனைப்புரிந் திட்டேன்
மலரடிக் கன்பிலா மனத்தேன்
எட்டிபோ லீகை யிலாதபுன் ஞேயே
னென்செய்கே னினியுன தருளே
சுட்டவெண் ணீறு துலங்குமெய் யழகோய்
சுந்தர விநாயக மணியே. (௧).

பெரியரை யிகந்த பாவமோ வன்றிப்
பிறர்மனை நயந்தபுன் செயலோ
குருமொழி மறுத்த குற்றமோ வறியேன்
கொடியவெங் கலியினுன் மெலிவேன்
திருவரு ளாலென் றீவினை யகற்றிச்
செல்வமுங் கல்வியுந் தருவாய்
சுருண்மலி குழலி திரிபுரை பயந்த
சுந்தர விநாயக மணியே. (௨)

இந்திரன் முதலா வெண்டிசை யதிப
ரிமையவ ரரியய னருக்கன்
சந்திரன் கபிலன் கீரன்பார்க் கவனும்
சரணடைந் தவரவர் விரும்பும்
விந்தையாம் பதங்கள் பெற்றன ரெந்தாய்
விரும்பிடா திருந்தன னின்றே
சுந்தரி யீன்ற மைந்தவெற் கனிப்பாய்
சுந்தர விநாயக மணியே. (௩)

வைகறைத் துயினீத் தடியினை யுன்னி
மணமலி பன்மலர் பறித்து
மெய்யுறு பூசை புரிகிலா துழலும்
வினையனேற் கருடர லென்றோ
வையக முற்று மனுசன்சூழ்ந் தோடி
வருமுனர் கொடியினிற் றந்தை
தய்யமே னியினை வலம்வரும் பரமே
சுந்தர விநாயக மணியே. (௪)

மணமெனு மதத்த யானையை யறிவாம்
வலியதோ ரங்குசங் கொண்டு
தினந்தின மடக்கி யுனதுதொண் டாற்றத்
திருத்தியாட் கொள்ளுநா னெதுவோ
அனையுமன் னுயிர்க்குத் தாதையு மாகி
யனைத்துல கும்புரந் திடுவோய்
துனிவறுத் தொலிக்கு நான்மறை யறியாச்
சுந்தர விநாயக மணியே. (எ)

திருவுரு வத்தை மனத்தினி னினைக்கச்
செப்பவுன் சீர்த்தியை வாயின்
மருமலர்க் கழலைச் சிரத்தினில் வணங்க
மருளனேற் கருடா ரென்றோ
இருநிதிக் கிழவன் மகிழ்ந்திடு நேய
னீன்றமு டிகப்பரி யோனே
துரிசறு சேடன் சொலற்கரும் புகழோய்
சுந்தர விநாயக மணியே. (அ)

ஆர்கலி புடைசூ ழகலிடத் தென்று
மருகிடாச் செல்வமு மன்பாற்
பார்புகழ் கல்வி யுந்தெளி யறிவும்
பருவர லாவிரப் பவர்க்கீண்
டார்வமொ டளிக்கு மீகையு மெளியேற்
கருள்புரி வாயமர் புரிந்த
சூர்தடிந் தவற்கு முன்னுதித் தவனே
சுந்தர விநாயக மணியே. (௯)

பலபல வமர ரிந்திர ரொருசார்
பரிவுள முனிவர ரொருசார்
தலைமிசைக் கரங்கள் கூப்புநின் னவையிற்
சார்தரத் தமியனேற் கருள்வாய்
கலியினிற் கருணைக் கடவுணீ யன்றிக்
காண்கிலேன் றினந்தின மடுத்துச்
சலவுமெய் யடியா ரகஞ்சூடி கொண்ட
சுந்தர விநாயக மணியே. (௧௦)

---

## கலித்தாழிசை.

சீர்கொண்டுவாழ் திருசெல்வமுஞ் சிறப்பகர் புறம் போந்திட, ஊர்கெட்டுநல் பேர்கெட்டவ ருடல்கெட்டுமா னிசைகெட்டுப்போய், நார்கட்டுமா தர்கள்விட்டுநோய் நலி வார்கள்வாழ் வதுநாடிலேன், கார்பெற்றெழுமிர் கருணைகரா கணநாயகா கணநாயகா. (௧)

பணமேபெரும் பதமென்றெணிப் பதடிகளைப் பலபாடி னேன், மணமேதருங் குழன்மாதரான் மதராசனுன் மிகவாடி னேன், குணமேதுமில் லாதேனிடங் குடிகொண்டுகாத தரு ளாவிடின், கணமேனுமுன் றனைநான்விடேன் கணநாயகா கணநாயகா. (௨)

தாயற்றதோர் மகவேயெனத் தவிக்கின்றவெந் துயர்நீக் கியே, நோயற்றவாழ் வதுதந்துநுண் ணறிவிற்பயில் நலமீகு வாய், வாயற்றபூச் சியனென்றெனை வருந்தவிட லதுநீதியோ, காயற்றமா முனிவோர்பணி கணநாயகா கணநாயகா. (௩)

சமனார்விடும் படர்பாசமுந் தடியும்பிடித் தெதிர்மேவியே, குமையாமுன மெளியேனையாள் குமரேசனார் மகிழ்முன்ன வா, அமராபதிக் கிறையோடரா வணைமாயனார் முனிவோர் மணக், கமலாசனன் புகழ்சோதியே கணநாயகா கணநாயகா. ()

வஞ்சப்பிறப் பதுவேண்டிலேன் வண்டார்குழன் மட மாதரார், நஞ்சம்புரை மயல்வேண்டிலேன் நாடும்பல பொருள் வேண்டிலேன், தஞ்சம்மென வடைந்தார்தமைத் தீநீக்கி நல் லருளீந்திடும், கஞ்சம்மலர்ப் பதம்வேண்டினேன் கணநா யகா கணநாயகா. (௫)

விரகந்தருங் குயமாதர்கண் வேளாற்புணு மியசெஞ்சினே ன், நரகம்பெறு வகையாதரி ஞானக்குறு முனிவைக்கொளுங், கரகங்கவிழ்த் தொருகாவிரி கவின்மாநதி தருமையனை, கர கங்கைவே ணியனார்தருங் கணநாயகா கணநாயகா. (௬)

கல்லாதவ னென்றெனைக் கருணைசெயா விடிலார்துணை
பொல்லாதபின் னைகளாயினும் பொறுப்பார்களின் றவர்சாலவே
பல்லார்கள்சொல் பழிக்கஞ்சியே யதறித்திரு வடியண்டினேன்
கல்லாயநெஞ் சுருகவருள் கணநாயகா கணநாயகா. (எ)

சிந்தாமணி முதலைந்தருத் திருவேண்டிலேன் சனனத்தினால்
சிந்தாகுலங் கொண்டேங்குமிச் சிறியேனையிந் நொடியேயருள்
மந்தாகினிச் சடையானருண் மைந்தாபெருங் கும்போதரா
கந்தார்கரி வதனம்பெறுங் கணநாயகா கணநாயகா. (அ)

கொடையென்பதெவ் வணமோவெனக் குறியாதவெங் கொலைபாதக, நடையேறியா னிரவாமலே நனினப்பத மதுநல்குவாய், விடையேறிநா மதிசூடிய விமலனரு ளியபாலனே, கடையேனையாட் கொளவேண்டினேன் கணநாயகா கணநாயகா. (கூ)

விண்ணேத்தவும் விரைமாமலர் வீசிக்குழா மொடுசேர்ந்தத
மண்ணேத்தவும் நின்றாயென மகிழ்வுற்றனை யடுத்தேனினி
எண்ணேன்பல பவதேவரை யின்பாகுகற் கண்டேயிரு
கண்ணேயுயிர்க் குயிராயுறுங் கணநாயகா கணநாயகா. (௰)

---

கலிநிலைத்துறை.

மணியாரரவப்பாய்கொண்டமரும்மணிவண்ணன்
அணியார்கழலையிறைஞ்சிடவட்டமளித்தோனே
தணியாத்துயராற்றுளிளைபாடுந்தமியேனைத்
தினியாயாண்டுகொளாய்வரசித்திவிநாயகனே. (க)

மானைப்பொருவிழிமானைக்குகனொடுமருவிக்க
வானையுருக்கொடுசென்றிடுமெங்களம்மானே
சேனைவருக்கத்தொடுமாமுகனைச்செற்றோனே
தேனேயாண்டுகொளாய்வரசித்திவிநாயகனே. (உ)

குன்றாவனைறுமாரிதடுத்தகோமானை
யன்றாவிருமாவெனவேகொண்டருணம்பாவோ
சென்றேயிடயத்துறவேன்போதத்திருவமுதைத்
தின்றேயாண்டுகொளாய்வரசித்திவிநாயகனே. (௩)

வண்டார்குழலுடைவனிதையர்சித்திபுத்திமகிழ்
தண்டாரணிந்திடுந்திருமுகத்தெந்தற்பரமே
தண்டாமரைமலர்தாளிணையேத்தித்தீவினையை
விண்டேனாண்டுகொளாய்வரசித்திவிநாயகனே. (௪)

பருமாமலைமேற்பாரதந்தீட்டியபண்ணவனே
திருமாலரவுருவினைநீத்தருளுந்திருவாளா
கருமாலுற்றேற்கருள்வாய்விரைவாய்க்கணநாதா
திருவேயாண்டுகொளாய்வரசித்திவிநாயகனே. (௫)

தாரணிசூழ்ந்தேயுடையெனவோங்குந்தகைமிக்க
வாரணமுண்டிடுமாமுனிக்கருடருமன்னவனே
காரணிகண்டத்தப்பனைமாங்கனிக்காவலஞ்செய்
தீரனேயாண்டுகொளாய்வரசித்திவிநாயகனே. (௬)

பாவிரைந்தோதிப்பணிபுரிந்தேத்தும்பகரௌவை
தாவிடக்கைலையில்வைத்திடுமைங்கரத்தற்பரனே
பாவிபடுந்துயர்தீர்த்திலையென்னோபல்லுயிர்க்குச்
சீவனேயாண்டுகொளாய்வரசித்திவிநாயகனே. (௭)

மண்ணோர்வானோர்வந்துவணங்கவரமருளுங்
கண்ணேகண்ணிற்கருமணியேநினைக்கசிந்துருகி
யென்றுதிருந்தேனென்செயவல்லேனெம்மானே
விண்ணேயாண்டுகொளாய்வரசித்திவிநாயகனே. (௮)

எத்திறத்தவருமெய்திடற்கரியவெம்மரசே
முத்தனையாய்செம்மணியனையாயெம்முன்னவனே
அத்தனேயென்றுனையேத்திடுமெம்பிக்கருள்புரியுஞ்
சித்தனேயாண்டுகொளாய்வரசித்திவிநாயகனே. (௯)

சாந்தனெற்றிக்கண்ணனேதற்பரசாம்பவிதன்
பூந்தனக்கோடடேனாரீருலவைபொருத்திடுவோய்
வந்தனனிந்திரனேத்திடவாழ்த்திடுமெந்தாயே
வேந்தனேயாண்டுகொளாய்வரசித்திவிநாயகனே. (௰)

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# க.—திருக்கச்சி ஏகம்பம்.

## இரட்டைமணிமாலை.

---

### காப்பு.

நேரிசை வெண்பா.

அன்னவயல்சூழ்கச்சியத்தனடிமலர்மேன்
மன்னுமிரட்டைமணிமாலை - பன்ன
மழையிவருமேனிமணிமார்பனேத்தும்
புழையிவருங்கையானைப்போற்று.

### நடேசர்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

படங்காட்டுமரவசைத்த பரம்பரனைப்படர்சடையிற் படியுங்கங்கைத், தடங்காட்டுஞ்சழற்கணிச்சிப்படையானைத்திருமிடற்றிற்றகைமையோடு, விடங்காட்டும்பெருமானைவியாகிரமும்பாப்பரசம்வியக்கத்தில்லை, நடங்காட்டுமம்பரனைநலந்தருபேரருட்டிறத்தானுடிவாழ்வாம்.

### சிவகாமித்தாயார்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பிடியமருநடையாளைப்பிண்டிகொப்பதத்தாளைப்பேணுமன்பர்
மிடியகலவளித்தாளைமிளிர்கமலமுகத்தாளைமீனவேண்டும்
படியுருவமெடுத்தாளைப்படிறனைக்காத்தாளைப்பரிவினாளைக்
கடியவிழுங்குழலாளைச்சிவகாமசுந்தரியைக்கருதிவாழ்வாம்.

## சுப்பிரமணியர்.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சதிகாட்டுஞ்சூருரத்தைப்பிளந்தமரர்தமைக்காத்ததகைமை யானை, விதிகாட்டுநான்மறையும்விள்ளரியாற்பொருளைவியக்க வேணி, நதிகாட்டுமரன்றனக்குநலத்தகுடிலையினுரையைநயப் பித்தானைக், கதிகாட்டுங்கழலிணையைக்கனவகத்துமறவாதுகரு திவாழ்வாம்.

## திருநந்திதேவர்.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கொன்பூத்தகொன்றைபுனை யிறையருளாற்சடைமுடியுங் கோலமார்ந்த, மின்பூத்த நுதல்விழியும் புயநான்கும் மழுமானும் விளங்குஞ்செங்கை, பொன்பூத்த நற்பிரம்பும் படைத்தரிய சிவ ஞானபோதநூலைத், தென்பூத்த வருளாலே.தெரித்தநந்தியீசர் பதஞ்சென்னிசேர்ப்பாம்.

## திருஞானசம்பந்தசுவாமிகள்.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மானேறுகண்ணுமையாளமுதருத்தவுண்டருளமன்னுஞ்சீர் த்திக், கூனேறுமதிமுடித்தகுழகனைச்செந்தமிழ்மறையாற்குழை யப்பாட, மீனேறுகொடியவன்றன்சுரமகற்றவமண்சமயம்விளி யவாட்ட, வானேறுபுகழ்ப்பிரமபுரிவந்தபுண்ணியன்றாள்வண ங்கிவாழ்வாம்.

## திருநாவுக்கரசுசுவாமிகள்.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

விண்ணூர்ந்தபுகழ்த்திலகவதியராலமண்சமயம்விலக்கவன் பாற், றண்ணூர்ந்த கருங்கடலைக் கற்புணையாற்கடந்தருளத்தா வில்சீர்த்திப், பண்ணூர்ந்த வாரூரில் வைதிகசை வந்தழைப்பப் பண்பாய்த்தோன்றிக், கண்ணூர்ந்தவிசைவருசெந்தமிழ்நாவுக் கரையர்கழல்கள்போற்றி.

## சுந்தரமூர்த்திசுவாமிகள்.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நீர்தந்தகமலமலரயனெடுமாலாரணமுநேடிக்காணாக்
கார்தந்தமிடற்றானைக்கங்குலினிற்றாதுவிடுங்கணத்தொண்டா
யோர்தந்தமுதலையொருமகவுதரச்செய்தானையெந்தாயானைச்[னை
சீர்தந்தசெந்தமிழின்றிறத்தானைச்சுந்தரனைச்சிந்தைசெய்வாம்.

## மாணிக்கவாசகசுவாமிகள்.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தாதார்ந்தகுருந்தினிழற்கண்ணுதலோனருள்பெற்றுத்தர
ணியெல்லாந், தீதார்ந்தபிறவியெனும்வெப்பொழிந்துதிருவரு
ளிற்றிளைத்துவாழ, வேதாந்தத்துட்பொருளைவிளக்குதிருவாசக
மாய்விரும்பித்தந்த,நாதாந்தப்பேரொளியிலொளிவானநாதனடி
நவிற்றிவாழ்வாம்.

## சண்டேசுரர்.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தாதுசெறிமணமலருந்தகைமைசெறியருங்கனியுந்தான்
கைக்கொண்டு, மாதுபங்கன்றிருவுருவமணலிலமைத்தருளி
மகிழ்வோடாட்டத், தீதுசெறியாக்கறவைப்பானிறைத்தகடங்
களெலாஞ்செம்மையாய்த், தாதையிடறிடத்தடிந்தசண்டேசர்
பதத்துணையைத்தலைமேற்கொள்வாம்.

## நூல்.

### நேரிசை வெண்பா.

பொன்னாருங்கச்சிவளர்புண்ணியன்றன்பூங்கழலைப்
பன்னாளுமேத்திப்பணிவார்கள் - எந்நாளு
மெக்கர்ப்பிறவியிரிந்தோடவின்பமுடன்
கைக்கொள்வர்காணாக்கதி. (௧)

### கட்டளைக்கலித்துறை.

கதியேகதிவழிகாட்டுங்கண்ணேகச்சிக்காவலனே
மதியேய்சடையுடைமாணிக்கமேமணிமன்றினுறை
நிதியேகருணைக்கடலமுதேநாளுநீக்கமறத்
துதியேபுரிந்திலனாண்டருளேமறைப்பொருளே. (௨)

### நேரிசை வெண்பா.

பொருள்சேருமெய்ஞ்ஞானப்போதமுதவும்பொல்லா
மருடீருயர்கச்சிமன்னை - அருமனமே
பூங்கணையினானைப்பொடியாக்கும்புண்ணியனை
யாங்கணைந்தேபூசித்தறி. (௩)

### கட்டளைக்கலித்துறை.

அறிவுடையந்தணராரழல்வேட்டிடுமையர்தினஞ்
செறிவொடுசென்றுபணிந்திடுங்கச்சித்திருப்பதியைக்
குறியொடுபோற்றிக்குழைந்திலைபாடிலைகுற்றமுறும்
பொறிவழிச்சென்றனைநன்மொழிதேராப்புலைமனனே. (௪)

### நேரிசை வெண்பா.

மனனேயீரங்கொல்விமாமரபில்வந்தே
கனவாடையன்றொலித்தான்காண - முனமேயுங்
கச்சித்திருப்பதியான்கஞ்சமலர்ச்சேவடியை
யிச்சித்திருப்பதியாமென்று. (௫)

### கட்டளைக்கலித்துறை.

என்றுவணங்குவதுன்மலர்த்தாளிணையேவிரும்பி
மன்றுணடம்புரிமாமணியேமறைவாசியனே
யொன்றுமரும்பொருளேதிருமாலயனுன்னித்தினஞ்
சென்றுவணங்கொளியேயருள்வாய்கச்சிச்சேவகனே. (௬)

### நேரிசை வெண்பா.

சேவகத்தையட்டதலத்தேசெலுத்துஞ்சீரரனூர்
மாவகத்தைக்கொண்டவடிவாளன்—பூவலஞ்செல்
ஐயடிகள்காடவர்கோனன்புபுரிகச்சிநகர்
பொய்யடிமையின்றியவண்போ. (எ)

### கட்டளைக்கலித்துறை.

போதார்பிரமன்றலைகொய்தவாமடப்பூங்குயிலா
மாதாரிடமுடைமன்னவனேகச்சிவாழ்த்துகிற்கு
மாதாரமிந்தவடியேற்கருளிநல்லம்புயப்பொற்
பாதாரவிந்தம்பணியும்பணியைப்பணித்தருளே. (அ)

### நேரிசை வெண்பா.

அருளாருந்தேவாரமன்பினொடுசாத்துந்
தெருளாருமூவர்புகழ்தேவைக்—கருளாரு
மும்மலத்தைநீக்கிடவேமூதறிவோர்போற்றுமொரு
செம்மல்கச்சிமன்னனையேசேர். (௯)

### கட்டளைக்கலித்துறை.

சேராப்பழவினைசெல்வஞ்சுரக்குஞ்சிறப்புடனே
வாராச்சிவபோகம்வாய்த்திடும்வல்லமகவுதருந்
தீராப்பிணியுந்தொலைந்திடுங்கல்வித்திறனுதவுங்
காரார்பொழிலுடைக்கச்சிக்கடிநகர்கண்டவர்க்கே. (௧௦)

### நேரிசை வெண்பா.

கண்டடைந்தவன்பரெலாங்காணும்பரசுகத்தைத்
தொண்டனெனக்காரருள்வார்தோன்றலே-பண்டைமறை
தேடுகைக்குமெட்டாததேசிகனேகச்சிவளர்
ஈடடையாய்நின்னைவிடவிங்கு. (௧௧)

### கட்டளைக்கலித்துறை.

இங்குலைச்செந்தீவணமுடைமேனியிறையவனே
பொங்கலைதங்கும்புரிசடையாய்வினைபோக்கியருள்
செங்கலைப்பெண்ணுப்புரிந்திடுவோன்றுதிசேர்நகராங்
கொங்கலர்பூம்பொழில்சூழ்ந்திடுங்கச்சியிற்கொற்றவனே, (௧௨)

### நேரிசை வெண்பா.

கொற்றவனேநின்றன்குரைகழலைப்போற்றாத
குற்றம்பொறுத்தடிமைகொண்டருளாய்—பற்றவே
பொன்னாடர்வந்திறைஞ்சிப்போதமுறுங்கச்சிவளர்
மன்னாகப்பூணுடையவா. (கங)

### கட்டளைக்கலித்துறை.

வாசக்கமலந்தலைமேல்வலியவைத்தாண்டருள்வாய்
ஆசைக்கடலினகப்பட்டருளற்றவந்தகன்கைப்
பாசத்திலல்லற்படவிருந்தேனைமெய்ப்பத்தியுறும்
நேசத்தைத்தர்தநிகரற்றகச்சியினின்மலனே. (கச)

### நேரிசை வெண்பா.

மலமாயாகன்மமயக்கதனிற்சிக்கிப்
பலமழியாதோங்கிப்பலகால்—சலமறவே
பற்றரியகச்சிப்பரமனுக்காளாவார்சீர்
பொற்பாதமென்றலைமேற்பூ. (கரு)

### கட்டளைக்கலித்துறை.

பூத்தநற்கொக்கின்புடையமர்கச்சிப்புராதனனே
நாத்தங்குபுன்மொழியேறியவாயரைநாடியொரு
மாத்திரைப்போதுமலரடியெண்ணிமகிழ்ச்சியொடுந்
தோத்திரஞ்செய்கிலனென்னுடல்பெற்றிங்குத்தோன்றினனே.

### நேரிசை வெண்பா.

தோன்றாத்துணையாகத்தோன்றுமுயர்கச்சி
மான்றோலுடையான்மலரடியை—ஆன்றோர்முன்
பூசித்தடையும்புகழ்ப்பயனையென்னெஞ்சே
நேசித்தடைவதென்றுநீ. (கஎ)

### கட்டளைக்கலித்துறை.

நீங்காதமாயைப்பெருங்கடல்வீழ்ந்துவினைமறந்து
தீங்காம்பிறப்பிலலைவேனைக்காக்குந்திறம்புகலாய்
ஓங்காரத்துட்பொருளானவனேயன்பருள்ளிருக்கு
மாங்காரவேர்களைந்தாளுந்திருக்கச்சியாண்டவனே. (கஅ)

## நேரிசை வெண்பா.

ஆண்டவனையெங்குவளராரமுதைத்தில்லைவளர்
தாண்டவனைவேதத்தனிப்பொருளை—மாண்டிடவே
காலன்றனையுதைத்தகண்ணுதலைக்கச்சியினிற்
சாலப்பணிற்திடுவேன்சார்ந்து. (கக)

## கட்டளைக்கலித்துறை.

சார்ந்திடு ஞானியர்வாழ்ந்திடுங்கச்சியிற்சங்கரனே
சேர்ந்தவினையாமிருணீத்தெளியனைநீயளிப்பாய்
ஓர்ந்தசனகாதியர்க்கருமாதவமோதிடுவான்
ஆர்ந்திடுகல்லாலமர்சிவமேயொளிராணிப்பொன்னே. (உ0)

திருச்சிற்றம்பலம்.

சுவாமிதிருநாமம்:—ஏகாம்பரநாதர். அம்பிகைதிருநாமம்:— காமாட்சியம்மை. கம்பாநதிதீர்த்தமுதலிய பலதீர்த்தங்களுள. இக்காஞ்சிபுரமானது தொண்டைநாட்டுள், முதன்மைப்பெற்றது. அது வெகுகாலம் பிரபலமான இராஜதானியாயிருந்தது. உமாதேவியார் ஏகாம்பரநாதரை மிருத்திகையாற் ரூபித்துப் பூசிக்க அவரது அன்பு சோதிப்பான் எம்பெருமான் கம்பாநதியைப் பெருகவிடுக்கவும், அவ்வம்மையார் அன்புமேலீட்டினாற் றழுவிக்கொள்ளச் சிவபெருமான் மனமுருகி அவரது முலைத்தழும்பும் வளைத்தழும்பும் பெற்றனர். இவ்வாலயத்துள் நல்லகம்பம் வெள்ளகம்பம் கள்ளகம்பம் திருமயானம் வாலீச்சரமென்னும்பஞ்சப்பிரதான தலங்கள் சிறந்திருக்கின்றன. அவற்றுள், வெள்ளகம்பம்பிரமன்பூசித்தது. கள்ளகம்பம் விஷ்ணுபூசித்தது. நல்லகம்பம் உருத்திரன்பூசித்தது. திருமயானம் பண்டாசுரன்பூசித்தது. வாலீச்சரம் வாலிபூசித்து எதிர்த்தவர்தன்வலியிற் பாதிதானடைய வரம்பெற்றது. இவைகளேயன்றிக் கச்சபாலயம், காரோணம்,பணாதரீச்சுரம்,சுரகரீச்சுரம், பராசரீச்சுரம், வீரட்டகாசம், மணீச்சுரம், உருத்திரகோடி, மாகாளத்தன்றளி இவைகளும் திருக்கச்சிநெறிக்காரைக்காடு, திருவேகம்பம், திருக்கச்சிமேற்றளி, திருவநேகதங்காவதம்,

திருவோணகாந்தன்றளி முதலியனவும்; பிறவும் திருவேகம்பத்திற் சேர்ந்தவைகள். இவைகளுள் ஈற்றிற்குறித்த ஐந்து தலங்கட்குந் தனித்திருப்பதிகங்களிருக்கின்றன. இது உமாதேவியார் இருநாழிநெற்கொண்டு முப்பத்திரண்டறமும் வளர்த்தருளியதலம். அங்கு அம்மையாருக்குக் காமக்கோட்டமென்னும் ஆலயமும், குமாரக்கடவுளுக்குக் குமரக்கோட்ட மென்னும் ஆலயமும், பிறதேவர்களுக்குப் பல ஆலயமுமுண்டு. இது ௧௦௮. சிவாலயமுள்ளதலம். முத்தித்தலங்கள் ஏழினிலொன்று. வேதங்களே மாவிருட்சமாக கம்பாநதிக்கரையி லிருக்கப்பெற்றது. பன்னிரு திருநாமமுள்ளது. சுந்தரமூர்த்திசுவாமிகள் "ஆலந்தானுகந்தமுதுசெய்தானை" என்னுந் திருப்பதிகம்பாடி ஒரு கண்பெற்றதலம். இத்தலத்தில் அதிசயத்தையும் விநோதத்தையும் உண்டாக்கும் விஷயங்கள் அனேகம் உண்டு. திருக்குறிப்புத்தொண்டநாயனார் திருவவதாரம், ஐயடிகள் காடவர்கோன்நாயனார் திருவவதாரஞ்செய்தருளி க்ஷேத்திரவெண்பா பாடியருளியது. சமயாசாரியர் மூவராலும் பதிகம்பெற்றுள்ளது.

---

திருச்சிற்றம்பலம்.

# உ.—திருக்கச்சி மேற்றளி.

—————:o:—————

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சடையார்கதிர்மதி யுடையாய்மாசறு தன்னேரிலருட் கட
லோனே, அடையார்புரமவைபொடியாய்விழமுனமழலார்குறுந
கைபுரிவோனே, உடையானையினுரிவிடைமாலெனைக்கொளும்
விமலாநுதல்விழியெந்தாயே, கடையேனுனதிருகழலேத்திட
வருள்கடியார்திருமேற்றளியோனே. (௧)

பெருமாமறைமுடியுறைவாய்புகலரும்புகழோய்முழுமுதல
ரசேனாய், மருவார்பொழிலுறைமதுரைப்பதிவுணர்மன்னுமனம
கிழ்ந்தானாயேற், கருவாதனையினிற்கடைபட்டழிவதுகடனும்
முடிபுமென்றறியாயோ, பெருமாவுரிகொளுந்திருநாயகவுயர்
பிரமாபணிமேற்றளியோனே. (உ)

கனிவாயிளமுலை மடவார்மயல்கொடு காலங்கழித்திடுங் கடையேனை, இனியாயினு நினதிருதாமரையடி யினிதேபணி செயவருள்வாயே, பனிவாழ்வரைமகள் தழுவுந்திருவுருப் பவ ளேவிடைமிசைப்பொலிவோனே, தனிநாயகமுகிலினம்வந் தெழின்மதிறவழுந் திருமேற்றளியோனே. (௩)

விடையார்கொடியுடையிறைவாவிண்ணவரிறைஞ்சும்விம லாவெனவோதி, அடைவாயடிமலர் நறுமாமலர்கொடுமடியா ரொடுதினமணுகாமல, நடைவாய்ப்பிணமெனத திரிவேனையு நனிநடுவென்றொடரிலென்செய்வேன்கொல், மடைவாய்மிடை கயலுகளும்புனலவளமலகுநதிருமேற்றளியோனே. (௪)

விதியார்கணக்கினியெழுதாவகையெனை விடுவித்தலைசெ யதாண்டருள்வாய், மதியாதவனெரி விழியாலுலகியல் வகையா னிறவியதகையானே, நதியார்சவின்முடி யுடையாய்நினைவிட நலமேவியதுணைநாடகிலேன், நுதியாரயிலமர்கரனே பழமறை நுவலூர்திருமேற்றளியோனே. (௫)

சதுமாமுகவனைச்சிரமேதடிந்திடுஞ் சதுரார்சகநதியுடை யானே, மதுவாணிறைகுழன்மடவாள்பரவையின்மணிவாயிலைய டையொருதூதா, முதுமாமறைபுகழ்முதல்வாசிகரியின்முதிரந் தவழ்முதுகிரியானே, பதுமாசனமடவரலாரிருவர்கள்பணியுந் திருமேற்றளியோனே. (௬)

அடியார்நகைதர நடியாத்திரிதரு மவலனுயினுங்கடையே னைச், செடியார்வினையறப்புடையாய்விமலனேசெய்யாளுறைத ருமருதூரில், குடியாயுறைதரு குருவேகுரைகழல் குறியாவ ணங்குவதென்றாளோ, கடியார்பொழில்வளர்காசிகநினையெனு ங்கவிஞர்திருமேற்றளியோனே. (௭)

படமாசணவணியரையாயடனமன்படர்காலொருமொழி யுரையாயே, விடமாரமுதெனமிசைவாய் விபுதர்கள்விரும்புவி ண்ணவர்தங்கோவே, கடமாமதகரியுரியாயிருவருங்காணுதவம ருமெரியாய்நீள், வடமாமரவடியுறைவாய்தெளிதமிழ்வலஞர் தி ருமேற்றளியோனே. (௮)

சயமார்செஞ்சடைக்கண்ணுதலேகறைக்கண்டனேகவின்பெறுமறைநான்கின், பயனேபடங்கொளும்பாம்பணைசேர்த்திடும்பரமாபகரரும்பரஞ்சோதி, அயனோடன்றரியறியாவடிமுடியடியேன்காணவந்தாண்டருள்வாய், நயமாரன்பர்களடித்தொழுதிடுநலமார்திருமேற்றளியோனே. (௧)

அடியார்கொடுவினைகெடுமாறருள்புரியரசேயண்ணலேயருண்மேனி, வடியாரயில்விழியுடையார்தமையுனியடியாவரமருள்வாய்வரதா, துடியார்கரதலதுரியாதிதநிலைதுலக்குந்தூரிசறுபெருமானே, மடையார்ந்திடுமணங்கயலார்ந்துலவிடமகிழுந்திருமேற்றளியோனே. (௧௰)

திருச்சிற்றம்பலம்.

கச்சியப்பேச்சுரர், காமாட்சியம்மை. புரசவிருட்சம், மகாவிஷ்ணு சிவசாரூபம் பெறும்பொருட்டுத்தவஞ்செய்து சிவாஞ்ஞைப்படி திருஞானசம்பந்த சுவாமிகளால் சிவசாரூபம்பெற்றதலம். சமயாசாரியர் மூவராலும் பதிகம்பெற்றுள்ளது.

---

திருச்சிற்றம்பலம்.

௫.—திருக்கச்சி

# ஓணகாந்தன்றளி.

## ஒருபாவொருபஃது.

——:O:——

கட்டளைக்கலித்துறை.

திருக்கச்சியோணகாந்தன்றளியென்றுதிகழ்தலத்திற்
பெருக்கச்சிவானந்தபோகம்பழுத்துப்பிறங்கலவர்
வருக்கச்சிதேந்திரியர்க்காளாய்வாழ்குவர்மாயையினுற்
கருக்கச்சிலேயகப்பட்டுழலாரென்றுகாண்மின்களே. (௧)

காமாட்சிநாயகனோணகாந்தேசனற்காலகண்டன்
ஓமாட்சிமந்திரத்துட்டங்குகாரணனென்பதத்திற்
பாமாட்சியாற்புனைந்தன்பர்களீட்டம்பரவிநிதம்
காமாட்சிறுழிகையாற்றிடினெஞ்சேநமன்றுஞ்சுமே. (௨)

அஞ்சுகநாணமிழற்றுமொழியாநலர்க்கொளிசெய்
கிஞ்சுகநாண்மலர்போலிதழாரார்க்கிடைக்குமின்பம் [மின்
விஞ்சுகனைப்பொருளென்றெண்ணித்தொண்டிலரந்துசெய்ம்
மஞ்சுகனைசலக்கொங்கைகாமாட்சிமகிழ்நனுக்கே. (௩)

காமாதியாறையுநீத்துப்பேரின்பத்தைக்கண்டனர்காண்
மாமாதிடங்கொண்டவோணகாந்தேசன்மகிழ்தலத்திற்
பூமாதினையகன்பேராற்றிகழும்புனல்படிந்து
நேமாதியாவையுங்கொண்டவரென்றுநிகழ்த்துவரே. (௪)

நிகரிலானந்தத்திருவோணகாந்தநிருதரும்பர்
புகரிலாநெஞ்சத்தினற்பூசைசெய்துபுகழ்தலமா
நகரிலாமான்மியந்தன்னையெஞ்ஞான்றுநுவலினிக்கப்
பகரிலாகாச்சுகமுண்டோவிரைவிற்பரவுமினே. (௫)

பரசுகமேபெறப்பாமாலைசூட்டிப்பணிந்துநிதம்
பரசுகவீசர்கள்போற்றிநொவற்பனவர்பிரான்
வரசுகழற்கணியோணகாந்தேசனைவாழ்த்திலர்கள்
அரசுகவிகைசிவிகைபெற்றென்பயனுய்ந்திடினே. (௬)

என்புபெறுதவிழிபிறப்பெற்கினியெய்திடினுந்
தென்புலக்கோமான்றிகைக்கவுதைத்ததிருவடிக்கண்
அன்புபெறக்கடைக்கண்பார்த்தருளோணகாந்தன்றளி
மன்புகழ்மேவுதலத்தினிலோங்கியமன்னவனே. (௭)

மன்னவரும்பற்றலராலயனியன்மாறிவலை
துன்னவருமபொருடோற்றனர்செல்வத்தொகுதியினல்
என்னவருந்திருவோணகாந்தேசனிணையடியை
உன்னவரும்பருங்காணுதவீட்டடையுதவுவரே. (௮)

வீட்டுக்குவேண்டுமெய்க்கிரியைச்செய்யவிரைமின்கடு
காட்டுக்குப்போகுமுன்னேயுலகோங்கிடக்காளியுடன்
ஆட்டுக்குவந்தவராருடைநம்பியறைந்தவிசைப்
பாட்டுச்சேர்குளாசைகொள்ளோணகாந்தேசர்பதிபுகுந்தே. (௯)

பதிபுகுந்தன்பர்களீட்டங்கலந்திடப்பண்ணுங்கொலோ
சதிபுரிந்தாழ்நரகக்குழிவீழ்ந்திடத்தள்ளுங்கொலோ
எதுபுரியுங்கொலெனவறியேன்வந்திரந்தவரைத்
திதிபுரிந்தானோணகாந்தன்றளியான்றிருவுளமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

ஓணகாந்தேசர், காமாட்சியம்மை. விஷ்ணுதீர்த்தம். தேவர்களும், ஓணன் காந்தனென்னு மசுரர்களும் பூசித்ததலம். சுந்தரமூர்த்திசுவாமிகளுக்குப் பொற்காசளித்ததலம். மேற்படி சுவாமிகளால் பதிகம் பெற்றுள்ளது.

---

திருச்சிற்றம்பலம்.

௪.—திருக்கச்சி

# அநேகதங்காவதம்.

## நவமணிமாலை.

—:o:—

கட்டளைக்கலித்துறை.

பார்வளமோங்கியவாயிரத்தெட்டென்பதிகளுக்குட்
சீர்வளமார்ந்தவநேகதங்காவதத்தென்பதிக்கண்
ஆர்வமொடேற்றவரும்பெறன்மாணிக்கமாமலையைச்
சேர்வரெனிற்பிழைப்பார்கணிரயத்துச்செல்பவரே. (௧)

பல்லுதிர்வுற்றுப்பழுவெலும்போங்கிப்பனித்துடலம்
வில்லுமிகர்க்கவளைந்திடுங்காறுமவ்வேற்கணல்லார்
புல்லுருவத்தினைப்பாடிப்புலம்பும்புலைமனனே
நல்லுறவாமென்றுகாவதநாதனைநாடுதியே. (௨)

கஞ்சனுங்கஞ்சனைக்காய்ந்தானுமேத்துங்கணபதியாம்
மஞ்சனுமஞ்சனவாவிக்குபேரனும்வாழ்த்தெடுப்ப
அஞ்சனமஞ்செனுங்கோதைகாமாட்சியரிவையொடுங்
கொஞ்சவமைஞ்சவக்காவதநாதனைக்கூடுமினே. (௩)

மாமறையோது மநேகதங்காவதவண்பதியிற்
றூமறைபூத்தொளிர்காமிதாயசதண்டடம்படிந்தால்
வேமரைமாகொடிப்போதினிற்றீயவினைகளெனக்
காமரைவென்றமுதியோர்கண்முன்புகழறிஞரே. (௪)

கடைகக்கணெருப்புகச்சீறிக்கடாவைக்கடாவுநமன்
படைக்கலமோச்சியழித்தலுஞ்செங்கேழ்ப்பதுமத்தண்ணல்
படைக்கலுமாகுங்கடலைக்கடந்திடப்பண்ணுமென்பர்
அடைக்கலம்புக்கார்க்குக்காவதநாதனடிமலரே. (௫)

பூப்பவனும்பலவண்டப்பரப்பையும்பூரணமாக்
காப்பவனுங்கடைககாலத்திற்சீறிக்கனல்விழியாற்
றீப்பவனும்வளர்காமாட்சியென்னுமோர்தேவியைநீங்
காப்பவனுகுமநேகதங்காவதக்கண்மணியே. (௬)

சேலுமசுணமுந்தந்தியும்விட்டிலுந்தேனுநிகர்
நாலுமொன்றுமிந்தியத்தாலழியுமஞ்ஞானியரே
ஞாலுங்குழலுமெனவினையால்வருநோய்களினி
மேலுமுறுவணங்காவதநாதனைவேண்டுமினே. (௭)

வேருணிரைப்புனலாலேதளழக்கும்விருக்கமென
ஊருணியார்ந்தவநேகதங்காவதவொண்டலத்துக்
காருணியற்குப்புரியுநிவேதனக்காரணத்தாற்
பாருணிரைந்தசராசரமோங்கிப்பலிக்கின்றவே. (௮)

சம்பந்தனேதியபாட்டுக்குகந்தான்தரையயின்ற
அம்பந்தமுப்புரமீதேவினுணருளைப்புரிவான்
நம்பந்தநீங்கவநேகதங்காவதநாதனடிச்
சம்பந்தமுற்றுமலர்தூய்மகிழ்ந்தின்றுசார்குவமே. (௯)

திருச்சிற்றம்பலம்.

அநேகபேசர் காமாட்சியம்மை. காமிதாயதீர்த்தம். கணபதியும் குபேரனும் பூசித்ததலம். சுந்தரமூர்த்தி சுவாமிகளாற் பதிகம் பெற்றுள்ளது.

---

திருச்சிற்றம்பலம்.

### ௫.—திருக்கச்சி

# நெறிக்காரைக்காடு.

## நிரோட்டகம்.

——:0:——

### கட்டளைக்கலித்துறை.

காரைக்காட்டிற்றென்னனைக்கனி பத்தன்கச்சிநெறிக்
காரைக்காட்டிற்றங்கரன்கஞ்சநேர்சீர்க்கழலிணைக்
காரைக்காட்டிக்காவலனாரடியாதிரார்கண்டத்தினிற்
காரைக்காட்டித்திதிசெய்யிடிற்சீறிக்கதித்திலரே. (க)

கரியானனன்றந்தைகாரைக்காட்டீசன்களாக்கனிநேர்
கரியானனத்தனற்றணீள்சடைச்சென்னிகண்டறிதற்
கரியானனத்தங்கணீக்கியாளீசனகிலர்க்கெல்லாங்
கரியானனங்கனைச்செற்றனெனைதகக்கண்ணினனே. (உ)

தஞ்சந்தனந்தானென்றேகிரிந்திட்டிநற்றையலார்கள்
தஞ்சந்தனந்தாங்கெழினகிற்கீசஞ்சலத்தையரித்
தஞ்சந்தனந்தாநெறிககாரைக்காட்டிலரனாகினைக்
தஞ்சந்தனர்தாணடைக்கன்னியாளடியண்டிலரே. (௩)

சஞ்சலஞ்சேகரித்தேன்கடைத்தேறச்சலத்தையழிச்
சஞ்சலஞ்சேலென்றலைநெறிக்காரைக்காட்டாயனிச்சஞ்
சஞ்சலஞ்சேர்கஞ்சநேர்தாளவிந்தியந்தங்கியதே
சஞ்சலஞ்சேரழிந்தாகந்தளரத்தியகத்தே. (௪)

கங்கர்தராநெறிக்காரைக்காட்டத்தகற்கஞ்சத்திறன்
கங்காதராநாயினேனின்சலசக்கழலிலடக்
கங்காதராதலர்தந்தாளணீயதிகாரிபெனக்
கங்காதராற்கதிதந்தாளணீயன்றியாரெனக்கே. (௫)

தினகரன்றந்தங்களைத்தட்டினானைத்திகழெழிற்செந்
தினகரன்றந்தையைச்சத்தியநாதனைச்செந்தழலேந்
தினகரன்றன்னைநெறிக்காரைக்காட்டானைத்தீயெயிற்சாந்
தினகரன்றன்னைச்செறியார்சங்கத்தினிற்சேர்ந்திலனே. (௬)

கத்தலையார்சாகரத்தானையேய்ந்தநற்காசினியேற்
கத்தலையாலிரந்தாய்காரைக்காட்டீசகாத்திநெஞ்ச
கத்தலையாசையினீக்கியென்றன்னைக்கடிதினிற்ச
கத்தலையார்நின்னையல்லாற்கதிதரக்கத்தர்களே. (௭)

கண்ணனையாத்தியலரார்சடைச்சங்கராசகத்ரக்
கண்ணனையாதரித்தாயர்க்கர்ச்செற்றகாங்கெயனுக்
கண்ணனையாதித்தனையனெனத்தந்தகத்தனெயென்
கண்ணனையாயெனையாளாயெனிற்கதியாதிங்ஙனே. (௮)

காட்டானைக்கண்டிலர்க்குக்கதிகாரைகலந்ததடக
காட்டானைச்சத்தியநாதனையிட்டியற்கண்டகர்கள்
காட்டானையீர்த்தசெங்காட்டானைசெர்நீக்கரத்தனையாற்
காட்டானையெண்ணினன்னெஞ்சேகடக்கச்செய்காலனையே. ()

கஞ்சிதரிக்காரைசாற்றினைச்சேர்த்துகழனிகடண்
கஞ்சிதரிக்காரைக்கீண்டிழியச்செய்கதலிகனிள்
*கஞ்சிதரிக்காரைக்காட்டானையேத்திடிற்காலன்றனக்
கஞ்சிதரிக்காரைந்தத்தியினாலதீயாழ்நரகே. (௰)

திருச்சிற்றம்பலம்.

சத்தியவரதநாதேசர், காரார்குழலியம்மை. சத்திய தீர்த்தம். இந்திரன்பூசித்துப் பேறுபெற்றதலம். காரைவன விருத்தவினால் இன்றுங் காரைக்காடெனப் பெயர்வழங்குகின்றது. திருஞானசம்பந்தசுவாமிகளாற் பதிகம்பெற்றுள்ளது.

* கஞ்சி மெலித்தல்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

# ௬.—திருக்குரங்கணின்முட்டம்.

—:o:—

## கொச்சகக்கலிப்பா.

சீராரும்வானவர்கள்செழித்திடப்பாற்கடலெழுந்த
காராருநஞ்சினையேகந்தரம்வைத்தாயென்பர்
நாராருமனமுடையநாயேன்பாலில்லைகொலோ
கூராருமயில்கரங்கொள்குரங்கணின்முட்டத்தரசே. (௧)

எத்தனையோவிம்மையிலேயெடுத்தவுடலினியெடுப்ப
தத்தனையுமுடற்சுமையென்றறியாமேயவைபொருளாய்க்
கத்தியவைக்கழிவுவரிற்கலுழ்ந்துதுயர்க்கடற்குளித்த
குத்திரன்வந்தேனருளாய்குரங்கணின்முட்டத்தரசே. (௨)

மறைநாலுமலரவனுமணிவண்ணனெடுமாலும்
நிறைவானவன்பர்களுநின்றுநினைந்துள்ளுருகி
யிறைவாவென்றேத்தவருளீந்தபரஞ்சோதியனே
குறையாறவந்தருளாய்குரங்கணின்முட்டத்தரசே. (௩)

நத்திமனங்கரையகிலேனாடகிலேன்பாடகிலேன்
பத்தியொடுபூதிமணிபணியகிலேனணியகிலேன்
மத்தனையுமாட்கொண்டமாட்சிமைக்குமாறுளதோ
கொத்தலர்பூம்பொழிற்சோலைக்குரங்கணின்முட்டத்தரசே. ()

பாடிப்பணிந்துபழவினையின்பற்றையறுத்
தாடியலறிக்கனிந்தேயானந்தமேலிட்டுத்
தேடிப்பிடித்தருளைத்தேக்கறவுண்டார்குழுவிற்
கூடியிருப்பதென்றோகுரங்கணின்முட்டத்தரசே. (௫)

பழியிலென்றாழ்காணுதபங்கயமுநீர்வானம்
பொழிமழைகாணுப்பயிரும்போலுமுனம்வாடுகின்றேன்
தழைவுறுதங்கொழுநரையேதலைமைபெறுதெய்வமெனுங்
குழன்மொழியாருறைதருநற்குரங்கணின்முட்டத்தரசே. (௬)

தந்தைதாய்பெண்டமரிற்றுவிப்பயில்கிற்கும்
புந்தியிலுன்செங்கமலப்பூம்பதத்தையுட்பதித்து
வந்தனையுஞ்சிந்தனையுந்தரப்பெறுவதெந்நாளோ
குந்தமரம்விண்டடவுங்குரங்கணின்முட்டத்தரசே. (எ)

பணமாடப்பதஞ்சலியும்பரிந்தாடநறுங்கொன்றைத்
துணராடச்சடையாடத்தும்புருநாரதராட
வுணங்காடவணிதில்லையம்பலத்தேயாடுகின்ற
குணங்கூறிப்பாடவருள்குரங்கணின்முட்டத்தரசே. (அ)

பரையார்ந்தபாகமுடைப்பண்ணவனேபழமறையின்
உரையார்ந்தவொருமுதலேயுள்ளிருக்குமாசறுப்பாய்
விரையார்ந்தமலர்கொடுநின்வியனடியர்தம்மொடுநான்
குரையார்ந்தகழல்பணியேன்குரங்கணின்முட்டத்தரசே. (௯)

ஆழ்த்தகொடும்பிறவியெனுமருங்கோடையால்வெதும்பிக்
கீழ்த்துறையைநாடியவங்கிடக்கின்றநாயேற்குப்
பாழ்த்தபிறப்பறுதருளைப்பாலிப்பதுன்கடனுங்
கூழ்த்துறையைநீத்தவர்வாழ்குரங்கணின்முட்டத்தரசே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

வாலீசர், இறையார்வளையம்மை. வாலிதீர்த்தம். வாலி, அணில், காக்கை, பூசித்துப் பேறுபெற்றதலம். திருஞானசம்பந்தசுவாமிகளாற் பதிகம்பெற்றுள்ளது.

குரங்கு - வாலி, அணில் - அணிப்பிள்ளை, முட்டம் - காக்கை.

---

திருச்சிற்றம்பலம்.

## எ.—திருமாகறல்.

—:o:—

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கவளயானைமுகத்தனோடியர்கார்த்திகேயனைத்தந்தவாதியே, பவமிகுஞ்சிறுவிதிசெய்வேள்வியைப் பயனிலாததாய்ச் செய்த வாபுரி, பவளவார்சடைப்பரமனேயெனைப்பரிபவந்துடைத்தாளுவாய்திரு வுவண கேதனனுடியே நிதமுன்னு மாகறலுற்ற சோதியே (௧)

முதல்வனேமறைமோலிமேவியமூன்றுகண்ணுடைமோன
ஞானமே, முதலைவாயினின்மதலையைத்தருமூர்த்திபோற்றிடு
மிறைவனேபகர், குதலைமென்மொழிமாதுபங்கனேகோதிலாத
வானந்தவாரியே, இதயமேவியென்னிருளகற்றுவாயினையின்
மாகறலுற்றசோதியே. (௨)

சமரமாபுரி சண்முகத்தனைத் தந்துசூரற வாட்டோதனே,
அமரர்மாதவர் முனிவர்போற்றிடு மன்பினன்னிலையிற் றெளிச்
சொலித், தமரநூபுரமோலிடுந்திருத் தாளையென்றலைச் சூட்டி
யேயிடர், குமையவிங்குமையோடுவந்தருள் குலவுமாகறலுற்ற
சோதியே. (௩)

இமைப்பிலாவிழிகொண்டதேவர்களேத்தியேசிரமேற்றுக்
தாளனே, உமைக்கொர்பாகமற்றரிக்கொர்பாகமுமுவந்தளித்தி
டுமுரகமார்பனே, அமைத்தகன்னெறிப்பத்திசெய்திடுமன்பனை
த்தினமாளுவாய்கவின், சமைத்துயர்ந்திடுசிகரிசூழ்தருதக்கமாக
றலுற்றசோதியே. (௪)

வந்திபிட்டினையுண்டுகொட்டினை வளர்நெடுங்கரம்வைத்த
வேதிய, கொந்துசேர்வனமாலிபோற்றிடுங் கொற்றவாகுவா
கழலிலேதினம், புந்திநைந்துருகுமாறருள்புவனம்யாவை
யுந்தந்தவாதியே, ஐந்தடக்கியசிந்தைமாதவ ரமருமாகறலுற்ற
சோதியே. (௫)

விமலநாரணன்விரிஞ்சனாதியர்மினிருநின்பதங்காணவல்ல
ரோ, இமயமால்வரைக்குமரிகாதல வென்னையாளுடைப்பரம
னேயுயர், சமயமென்னுமோர் சைவம்வாழ்வுறத் தக்கமேலவர்
தான்மகிழ்வுற, இமயரேத்திடுங்காழிவேந்தராலேத்துமாகறலுற்
றசோதியே. (௬)

ஆதிமூர்த்தியென்றேத்துமாலினுக்காழிவாரணமீந்தவன்ன
லே, நீதிசேர்முனி மார்க்கண்டற்கரு ளித்தன்னடி சேயமீந்
தனே, வாதியாவகைவஞ்சவல்வினைவாட்டங்கொண்டிடவே
டச்செய்குவாய், ஓதும்வேதியர்வென்வியாற்றிடு மொப்பில்மா
கறலுற்றசோதியே. (௭)

ஓசையோடெமணியணிந்புறவொழுகுபாற்கடலீந்தநாயகா,
வாசைமாலிகைவிளையுமன்மதன் வன்புரத்தினிவ்வன்னிவைத்த
வா, ஏகநாதனேயெல்லையில்லதோரின்பமென்றனக்கொல்லை
யேயருள், ஈசகாற்குணை மெய்துவோருறைந் திலகுமாசறலுற்
றசோதியே. (அ)

கருவையம்பதிக்களவினீழலிற் கருதியேயுறைகண்ணுதா
னறை, குரவுசெஞ்சடைமீதில்வைத்திடுங்குழகவுழையினுரி
யைப்போர்வைகொண், டரவுசூடியவத்தனேயெனையாளுவாய்
வினைமாயவேகுரை, பரவைசூழ்நிலமன்பதைபுகழ்பழுதின்மாக
றலுற்றசோதியே. (கூ)

அண்டகோளமுமகிலலோகமு மண்டுசெந்தழல்வடிவனே
யெனை, நண்புகொண்டிட மோனஞானமே நவிலுவாய் நகை
கொண்டுமுப்புரம், பண்டெரித்திடும்பணிநிலாமுடிப்பண்ணவா
பரமேட்டிவம்பலர்செண்பகம்வளர்வாவிசூழ்நதிடுஞ்சீர்கொண்
மாகறலுற்றசோதியே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

அடைக்கலநாதேசர், புவனநாயகியம்மை. அடைக்கல
தீர்த்தம். கடகனென்னும் அசுரன்போர்க்காற்றாது இந்திரன்
பூசிப்ப, குண்டலையினின்றும் பிரசன்னராகி யநுக்கிரகித்த
தலும், உடும்பு ஒன்று சுவாமியைத் தழுவிக்கொண்டதுபோன்ற
வடிவும் சிவலிங்கத்திற் றோன்றுகின்றது. திருஞானசம்பந்த
சுவாமிகளாற் பதிகம்பெற்றுள்ளது.

---

திருச்சிற்றம்பலம்.

## அ.—திருவோத்தூர்.

:0:

சந்தக்கலிவிருத்தம்.

பொன்னார்செஞ்சடைமேற்றிகழ்ப்புனல்வைத்தவனே
வன்னேர்பொற்புயிருமலைவல்லிமணாளனே
கன்னேர்நெஞ்சனென்றேபிவன்மைவிடலார்துணைநான்
ஒன்றாரடையவிலைத்திருவோத்தூருறைவோனே. (௧)

அள்ளியவன்னமதையொருவந்தணன்வாய்சிந்தும்
புள்ளருள்பெற்றுயநல்லருள்புரியும்புண்ணியனே
கள்ளமனமுடையேனெனைக்காப்பதுமுன்கடனே
ஒள்ளியவேலுடையோய்திருவோத்தூருறைவோனே. (உ)

சீதமதிமுடித்தோய்சிந்தைநொந்துனைவந்தடைந்தேன்
போதனறியவொண்ணாப்பதப்போதெனக்கென்றருள்வாய்
வேதமொழிப்பயனைமுனிவேந்தர்களுட்டெளிய
ஓதியருள்புரியுந்திருவோத்தூருறைவோனே. (௩)

வானமுலகேத்துந்துருவாசர்பசியாறப்
போனகந்தந்தருளுமுமைபூரித்திடப்பயிலும்
ஞானநடமதனைச்சிறுநாயேற்கென்றருள்வாய்
ஊனமற்றோர்பணியுந்திருவோத்தூருறைவோனே. (௪)

ஆண்பனைபெண்பனையாய்ச்செயுமாளுடைப்பிள்ளையருள்
காண்டகுபோதமதைத்தருகவியினுக்கருள்புரிவோய்
மாண்டுபிறந்துழலாவகைவந்தெனையாதரிப்பாய்
ஊண்டெறுமாதவத்தோர்பணியோத்தூருறைவோனே. (௫)

புண்டரீகபுரமாம்புலியூரமர்புண்ணியனே
தொண்டைமானுக்கருளுந்திருத்தொண்டர்தொழும்பெரியோய்
பண்டைவினைபாறப்பதம்பாடிப்பரசிடுவேன்
உண்டிடுமாலகண்டமுடையோத்தூருறைவோனே. (௬)

ஆங்காரக்காடதனினிலையைம்புலக்கள்ளர்கையில்
வாங்காதடியேனிதம்படுவாதனைத்தீர்த்தருளாய்
தூங்காதவின்பசுகம்பெறுந்தூயவர்நாடித்தொழும்
ஓங்காரமான்வனேதிருவோத்தூருறைவோனே. (௭)

குரவங்கமழ்குழலாளொருகூறுடைக்கொற்றவனே
அரவம்புலிபணியும்பதமளித்தெனையாண்டருளாய்
பிரமபுரீத்தவத்தால்வருபுண்ணியனல்லிசையால்
உரவர்துதித்திறைஞ்சுந்திருவோத்தூருறைவோனே. (௮)

நிலநீர்நெருப்புவளிவான்மதியரிகீண்டவுயிர்
குலமானவெட்டுருவாமுன்றிருவுருக்கூறுவனே
புலம்பாநினைவணங்குங்குணபூடணபாண்டியனுக்
குலவாக்கிழியளித்தோய்திருவோத்தூருறைவோனே. (கூ)

மத்தமதம்பொழியுங்கொடுவாரணநல்லுரியோய்
முத்தனேமூவர்தொழுமுழுமுதற்பொருளானநினைப்
பத்தியாய்நாயேனிதம்பதம்போற்றிடவந்தருள்வாய்
உத்தமஞனவனேதிருவோத்தூருறைவோனே. (க0)

திருச்சிற்றம்பலம்.

வேதநாதேசர், இளமுலையம்மை. வேததீர்த்தம். ஓர் காலத்து வேதப்பொருளுணராது மயங்கும் முனிவருக்கும் தேவர்களுக்கும் சிவபெருமான் பொருள்விரித்தருளியதும்; சூரியன் பூசித்துரதசத்தமிதினம் ஒருசக்கரமுள்ள ரதம்பெற்றதும; குமாரசுவாமி பூசித்துத் தரையில் கீறினால் ஜலமுண்டாக்கும் வேலாயுதம் பெற்றதும்; விஷ்ணுபூசித்துப் பிருகுமகாரிஷியினாலுண்டான சாபம் போக்கியதும; கல்லியாண மகாமுனி சாபத்தால் இலட்சுமிக்குண்டான பெண்மானுருவம் போக்கியதும்; சிவனடியாரிலொருவராலுண்டுபண்ணும் பனைகளியாவும் ஆண்பனையாயிருக்ககண்ட சமணமதஸ்தர்கள் அவ்வடியவரைக கொடிறுகூறுவதைக்குறித்து, அககாலத்தெழுந்தருளிய திருஞான சம்பந்தசுவாமிகளோடு முறையிட, அவர் திருப்பதிகம்பாடி அவ்வாண்பனைகளைப் பெண்பனைகளாகச்செய்த அதிசயத்தைப்பார்த்த அப்புறசமயிகள், சைவசமயம் புக்குப்பேறுபெற்றதுமானதலம். திருஞானசம்பந்தசுவாமிகளால் பதிகம் பெற்றுள்ளது.

---

திருச்சிற்றம்பலம்.

# கூ.—திருப்பனங்காட்டூர்.

—:o:—

## சந்தவிருத்தம்.

கங்கையாருஞ்சடையாய்வானோர்கழல்பணியக்கருணைசெயு
மங்கையாள்கண்காணநடமன்றிலாடுமாமணியே
பங்கயன்மால்காணவொண்ணாப்பரமவெனையாளவேண்டுஞ்
செங்கைசூலங்கொண்டாதாதிருப்பனங்காட்டூருளீரே. (க)

வாதனைகடாநின்றன்வார்கழலைத்தஞ்சமென்றேன்
ஆதனேனையாண்டுகொள்ளாயருமருந்தேயமரரேறே
வேதனோடுவெள்ளைமேனிவித்தகியும்விண்ணவருஞ்
சீதனோடுமாலும்போற்றுந்திருப்பனங்காட்டுளீரே. (௨)

பாதகஞ்செய்துர்ச்சகனும்பண்டிறக்கக்கண்டுகதி
போதவுவந்திட்டருளும்பொற்புமிகும்புலியூரானே
மாதரார்கண்மாயவலைமாழ்கிநிற்குந்தமியனேன்றன்
றீதகற்றியாளவேண்டுந்திருப்பனங்காட்டுளீரே. (௩)

பார்ப்பதிதன்மனுவையோதும்பார்ப்பனிகண்காணவன்று
பார்ப்புகழக்கிழவனாகிப்பகருநற்குமாரனுமாய்
சீர்ப்பெறவேகுழவியாகுஞ்செய்யமேனிச்செல்வவெந்நோய்த்
தீர்த்தருடந்தாளவேண்டுந்திருபனங்காட்டுளீரே. (௪)

வீரனையேகல்கித்தக்கன்வியன்மகத்தைநூறுசெய்த
வாரணியுநாரிபங்காவருணையதிருங்கழலாய்
காரணியுங்கண்டமுடைக்கண்ணுதலேகடையனேனைத்
தீரமுடனாளவேண்டுந்திருப்பனங்காட்டுளீரே. (௫)

அணிதிகழுமாடமல்குமாலவாயிற்சித்தராகி
மணிதிகழ்பூவணத்திற்சென்றுமாதுபொன்னையாள்செய்யும்
பணிதனக்கேயாணிப்பொன்னைப்பரிந்தளித்தபரம்பரனே
திணிபெறவேயாளவேண்டுந்திருப்பனங்காட்டுளீரே. (௬)

தடமதில்சூழொற்றியூரிற்சங்கிலியிற்றீபமேற்றி
மிடராறத்தகலியனாரைவிரைந்துகரம்பிடித்தருளும்
படர்புகழ்சேர்பண்ணவனேபவவினையின்வேரறுக்குந்
திடமருளியாளவேண்டுந்திருப்பனங்காட்டுளீரே. (௭)

கருத்துவந்துகண்ணுவன்முன்கருநிறஞ்சேர்பனங்கனியை
திருத்தநிற்கேதந்திடத்தானீன்கருணைசெய்தவனே
பருத்திபம்பாடும்பாதகனேனிற்பணியத்
திருத்தியுடனாளவேண்டுந்திருப்பனங்காட்டுளீரே. (௮)

ஆலமையரவணிபரமவற்புதனேதற்பரனே
வாமனன்றன்வலியடக்கும்வள்ளானின்னைப்போற்றிடாது
காமுகனுய்க்காரிகையார்கண்வலையிற்பட்டழிந்தேன்
சேமமுறவாளவேண்டுந்திருப்பனங்காட்டூருளீரே. (௯)

சடைபொருந்தத்திங்கள்சூடுஞ்சங்கரனேசாமகீத
படமுடியாத்துன்பங்கொண்டுபேரதவிக்குமேழைநாயேன்
கடனுனக்கேகாத்தலெனக்கழலடியைப்பற்றினேன்
திடமதளித்தாளவேண்டுந்திருப்பனங்காட்டூருளீரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

பனங்காட்டீசர், அமிர்தவல்லியம்மை. அமிர்ததீர்த்தம், சம்பந்ததீர்த்தம், அப்பர்தீர்த்தம், சுந்தரதீர்த்தங்களிருக்கின்றன. கண்ணுவமகாருஷி நிவேதிக்கப் பொருளின்றி கையிற்கிடைத்த பனங்கனியை நிவேதிக்கச் சிவபெருமான் முன் தோன்றி யநுக்கிரகித்தமைபற்றி, இக்காலத்தும் பனங்கனி நிவேதிக்கப்படுந்தலம். சந்நிதியில் இரண்டுபனைவிருட்சங்களிருக்கின்றன. இதற்குத்தெற்கு ஒரு மைலில் வன்பாக்கமெனும் ஊர் இருககின்றது. இதில் (சுவாமி இராமசாமீசர், அம்மை பஞ்சின் மெல்லடியம்மை) அம்மார்க்கத்திற் சுந்தரமூர்த்தி சுவாமிகள் எழுந்தருளிவந்தபோது சிவபெருமான் பிராமண வேடம் பூண்டுவந்து கொடுத்த கட்டமுதைப்புசித்தவுடன் பிராமணரைநோக்கி எந்தவூரென்று கேட்க, வன்பாக்கத்துக்கும் பனக்காட்டூருக்குமாக இருப்போமென்று சொல்லி மறைந்தருளினர். உடனே இதுவுஞ் சிவபெருமானுடைலெனத்தேர்ந்து திருப்பதிகம்பாடியருளினர். சுந்தரமூர்த்திசுவாமிகளாற் பதிகம்பெற்றுள்ளது.

---

திருச்சிற்றம்பலம்.

## ௧௦ — திருவல்லம்

—:0:—

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திங்கள்சூடியசெக்கர்வான்சடைச்செல்வனேசிவலோகனே,
பங்கமில்விழிமூன்றுமுச்சுடராக்கொளும்பரிபூரணா
சங்கையற்றவர்சார்ந்திடுஞ்சிவசங்கராசரணுண்டருள்
வங்கநற்கிரிமேவுநாதனேவல்லமேவியவள்ளலே. (௧)

அள்ளிவெண்டிருநீறுபூசியணிந்திலேன்றிருக்கண்மணி
தெள்ளுநற்றமிழ்வாணர்தம்மைத்தெரிந்திலேன்றிருமந்திரம்
உள்ளிநின்னடிபோற்றிலேனினியுய்யுநல்வழியேதுவாய்
வள்ளிநாதனையீன்றவாதிருவல்லமேவியவள்ளலே. (௨)

காளகண்டனேகாதலாயுனைக்கருதிபூசனையாற்றுவல்
லாளனேத்திடுமண்ணலேவல்லாம்பிகையிடத்தப்பனே
நீளநற்கிரகங்கள்போற்றிடுநின்மலாசிவனேதிரு
வாளவாதனைதீரவந்தருள்வல்லமேவியவள்ளலே. (௩)

நேயநன்மனைவிழைவொறுத்திடுநீலகண்டனிறைஞ்சிடுந்
தூயவாதுரியங்கடந்ததுணைவனேதுணைத்தாளிணை
மேயவாவுடன்போற்றிலாக்கொடுவிழலனேனைவருத்திடு
மாயவல்லிருணீக்கியாடிருவல்லமேவியவள்ளலே. (௪)

கல்லையேசிலையாகவேந்திடுங்கத்தனேகழுகாசலா
தில்லையின்னடமாடியசிவசம்புவேசிதையாதுறுந் [ன்
தொல்லைநான்மறைபோற்றநின்றிடுந் தோன்றலேசிறுநாயினே
வல்லையேயறவந்தருடிருவல்லமேவியவள்ளலே. (௫)

நாட்டமூன்றுடைநாயகாநினைநாடிநாளும்பணிந்திடேன்
வாட்டடங்கணில்வாட்டுமாதர்மயக்கினிற்படவெமபடர்
கூட்டம்வந்தெனைக்குறுகுநாளையிற்கூறுநாமமறிந்திலேன்
வாட்டமுற்றிடாமுன்னமேயருள்வல்லமேவியவள்ளலே. (௬)

ஆதியேயறவாணனேநினையன்றிவேறிலையாதரம்
நீதியாகவேயேத்தவந்தருணித்தனேயுமையம்மையோர்
பாதியேபரமேட்டியேபரப்பிரமமேபழமலவினை
வாதியாதெனையாண்டருடிருவல்லமேவியவள்ளலே. (௭)

பஞ்சநற்சுரவானையைத்தரும்பரமனேபவநாசனே
கஞ்சமாமலர்கொண்டிறைஞ்சிடக்கருதியேகருணையா
தஞ்சமென்றுனைவந்தடைந்தனன்றற்பராதயைகூர்ந்திவண்
வஞ்சநெஞ்சனையாண்டருடிருவல்லமேவியவள்ளலே. (௮)

வாசமார்ந்திடுமலரவன்சிரம்வாங்கியமறையோகியே
மாசிலாதபுலிக்குநல்லரவுக்குமாநடந்தன்னையே
பூசமாந்தினங்காட்டியாண்டருள்புனிதனேயடியேன்வினை
மாசறுத்திடுமன்னவாதிருவல்லமேவியவள்ளலே. (௯)

தஞ்சம்வேறிலையென்றுநின்னருட்டாளிணைத்தனிவேண்டியே
கஞ்சனுதியர்போற்றிடக்கருணைசொரிந்தகடைக்கணு
அஞ்சவேனெமனூதர்பற்றியலைப்பரென்றுமயங்குநாள்
வஞ்சியாமுமையோடுவந்தருள்வல்லமேவியவள்ளலே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

வல்லநாதேசர், வல்லாம்பிகையம்மை. சிவகங்கைதீர்த்தம். கவுரிதீர்த்தம். நவக்கிரகங்களும் வல்லாளனென்னுமரசனும் பூசித்ததலம். சீதாபிராட்டியார் தந்தையாராகிய ஜனகமகாராஜன், கவுரிதீர்த்தத்திலமிழ்கி கரையேறுங்காலத்தில், உண்ணவந்த கஞ்சனென்னுமரக்கனை நந்திதேவரால்சங்காரஞ்செய்வித்து ஷை மகாராஜனுக்குக் காட்சிகொடுத்ததலம். திருஞானசம்பந்தசுவாமிகளாற் பதிகம்பெற்றுள்ளது.

---

திருச்சிற்றம்பலம்.

# ௧௧.—திருமாற்பேறு.

## பதிற்றுப்பத்தந்தாதி.

—:0:—

காப்பு.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பால்வணங்குலாவுசங்குதாங்குதிருமாற்பேற்றிற்பரசுவார்கண், போல்வணங்குலக்கருணைநாயகியாண்மன்னனுக்குப்புகழ்ந்துசீர்சால்,மால்வணங்குபரமனுக்குப்பதிற்றுப்பத்தந்தாதிவிளைவதற்கு, ஞால்வணங்குறுங்கைமதகரிமுகவன்மலர்ப்பதத்தைநாடுவோமே.

## கலிவிருத்தம்.

வாரிசங்கத்தொனியொடுவோர்செறி
பேரிசங்கத்தொலிகொண்மாற்பேற்றினில்
நாரிசங்கரிநாதனைநண்ணுமின்
ஆரிசங்கரனன்றியாறில்லையே. (௧)

ஆறுசெய்யசடிலத்தணிந்துவெண்
ணீறுசெய்யவுடல்புனைநித்தன்றேன்
சேறுசெய்யமருந்திருச்செங்கண்மாற்
பேறுசெய்யருளாகமம்பேசுமே. (௨)

பேசிப்பேசிமாற்பேற்றினன்வண்புகழ்
வீசிவீசிவிரைமலர்சந்தனம்
பூசிப்பூசிநற்பூசனைசெய்திலேன்
சீசிசீசியென்சென்மமென்சென்மமே. (௩)

சென்னகம்படிமாற்பேற்றிற்சேர்ந்தனென்
என்னகத்திலிருந்தருள்செய்குவாய்
பன்னகத்தன்பரவியவெண்பொறு
நன்னகத்தினினண்ணியநாதனே. (௪)

நாதநீதவிந்நாயேற்கருண்மலர்ப்
பாதபீதவுடையான்பணிபுரி
தாதநீதறுசத்தியனேபிர
மாதமீதலமாதுறைபங்கனே. (௫)

மாதிருந்துமகிழ்வான்புரியினோர்
போதிருந்துபுராதனன்சீர்சொலித்
தீதிரிந்துசெழும்பரஞ்சோதிபா
லாதிரந்தகனூரச்சமில்லையே (௬)

அச்சுதன்முன்பருள்பெற்றமர்தலங்
கச்சுதங்குமுலைக்கருணைகரி
மெச்சுதன்மருணைத்தினன்மேவினன்
நச்சுதன்மிகநன்றென்றனெஞ்சமே. (௭)

தெஞ்சமஞ்சனநேர்ந்திடுமண்ணலை
அஞ்சமஞ்சநடைதருமன்னையைக்
கஞ்சமஞ்சனவன்பேறுகாண்பதி
தஞ்சமஞ்சயருறுணர்தக்காலமே. (௮)

காலனூர்கொள்கதந்தவிர்வீரொளி
காலமாற்பேற்றின்கண்கண்ணனுக்கருள்
காலமூன்றுங்கடந்தவன்றாமரைக்
காலலர்த்தலைக்கையலர்தூமினே. (௯)

தூவியன்னமுந்தோற்குநடையினள்
காவியங்கட்கருணைகரிக்குமன்
கூவிநற்பணிகொண்டருளானெனின்
ஆவிக்கெங்கணுமாதரவில்லையே. (௧௦)

## எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆதாரமென்று திருமால்வணங்குமரனருளத்தின்வழியே
தீதானளிக்கும்வெப்பஞ்சிறந்ததேசைக்கொடுக்குமிரவி
மாதாரைமேகமுதவுஞ்சலிக்கும்வாதந்தரிக்குமகல்வான்
தீதானதின்றிச்சிதமென்றசித்துந்திகழூற்றுநாளுலவுமே. (௧௧)

உன்னப்படாததிருமால்வணங்குமுவன்யாவனென்றுமுயல்வீர்
முன்னப்படாதவலியார்ந்தகாமமுதலாறுகுற்றமொருவி
மன்னப்பரந்தவுயிரில்விரோதமனமின்றிநிட்டைமருவி
மின்னப்பரந்தவெயில்சூழுமாற்பேறவன்றாட்பணிந்துறுமினே.

பணிசூடிமாயன்பணி பூதநாதன்பரிமாணமற்றபெருமான்,
திணிதூலருக்குமங்கட்குணின்று திகழ்வண்ணமொன்றுமில்வான், பிணிமூப்புமின்றியொருதன்மைபெற்றபெரியோன்பதத்தின்மலரை, யணிவாரடிக்கணடைவார்செருப்பெனணிசென்னிதங்குமணியே. (௧௨)

தங்கந்தரங்கருவாகியன்றுதனிவாதவூரார்முன்னர், அங்கந்தபாதமருண்மால்வணங்குமரனைத்திகழ்ந்தபரனைத், தங்கந்திகழ்ந்தகழலானையன்புதலையாட்கண்மந்தவினைகற், சங்கம்புகழ்ந்தவிடையானைமேவுசதிசெய்யவேலைமதியே. (௧௩)

மதிகான்றவெள்ளமுதசீதவாரிவளமேயசெஞ்சடிலமும், கதிரா
லூநாலுவகையோனிசீவர்கதியேறவோங்குமடியும், விதியேறு
சென்னிமிளிர்பாணியோடுவிதியேறவைத்தகரமும், பதியேற
வென்றூனருள்மால்பதிக்கண்பதிவேவ்வொறுத்தன்முறையே. ()

வேதம்புகழ்ந்தகழலான்மெயன்பர்மிளிர்நோக்கினின்றுகழலான்
சூதம்பொருந்துநகிலான்மிடைந்ததுயர்நீக்குமுண்கண்மலையின்
மாதங்கன்வாழுமால்பேற்றினுளும்வதிவாரைநன்குமதியார்
சாதங்கள்கோடிபலவாய்ந்தயர்ந்துசலியாமிகத்துயர்வரே. (கசு)

துயர்நெஞ்சகக்கலுருகிப்புகழ்ந்துசுடர்மேயநின்னடியினில்
அயர்வற்றதொண்டுதினமுஞ்செயச்செயருளுயகிக்குமுதல்வா
தயிருண்டமாயன்கும்பர்க்கிசைந்துதிசிக்குடைந்துதோற்ற
மயர்வற்றவாழிமீண்டுங்கொடுத்தவள்ளற்பெருஞ்செல்வமே. ()

செல்வஞ்செறிந்தபுரமூன்றெரித்ததிருமாறிருப்பதியனே [இ
வில்வங்கடுக்கைவெறிதும்பையாத்திவெண்ணொச்சியாதியவணீ
நல்வர்தனத்தோடின்றூட்கியைந்தநசையார்குழாத்துண்மேவி
அல்வந்தசிந்தையெளியேன்பிழைக்குமந்நாளறிந்திலனே. ()

நாளைக்கெனாதுபின்னைக்கெனாதுநாட்பூச்சரங்கடொட்ட
வேளைக்கடுத்தவிழியாயென்முன்னிவ்வேளைக்கடுத்தருள்புரி [ய்
வாளைக்குளத்துவனசத்தின்மொய்த்துவண்டாடுமால்பேற்றிலா
காளைக்கடுத்தவெரினேறுமீசகடவுட்குழாத்துமணியே. (க௯)

மணியாரனேத்துமலைமங்கைபங்கன்மணியார்ந்தமைந்ததுத்திப்
பணியாரன்மாசிலடிபோற்றிநைந்துபணியாரைமேவநமனூர்
துணியாதிரார்முமலவேரைநன்குதுணியாவலங்கலடியி
லணியாநினைந்துவருமன்பினுரையணையானெனப்பகர்வரே. ()

## கோச்சகக்கலிப்பா.

பகருமிடத்துன்னடியார்ப்பார்த்தவித்தனென்றன்றே
நிகரில்பவத்தென்றனையுநீபுரத்தனல்விசையே
ஒகரநடமிடுபொழில்சூழுயர்திருமாற்பேற்றரசே
புகர்முகத்தானையினுரியைப்போர்த்தொளிருங்கற்பகமே. (உக)

கற்புடையாருக்கணியாங்கருணைநாயகிபதிபால்
அற்புடையராகிநிலையறியாதாரார்ந்தவும்
கற்பமெலாம்புரிந்துமாறுங்கனலிலவிசொரிர்திடினும்
அற்பமதாயழிந்திடுமென்றுன்றோர்களறைந்தனரே. (௨௨)

அறைபுகழ்சேர்திருமாற்பேற்றமலனருள்பெரும்பொருள்சேர்
மறைபிறெழுக்கினினடவாமடமையிறோரீனர்களே
குறைவகலவுரைத்தவற்றின்குறிப்பறிந்தோரெவரேனும்
நிறைபுகழ்செல்வத்தினராநீணெறிகொளந்தணரே. (௨௩)

அந்தணனே திருமாற்பேற்றறக்கொழுந்தேகைப்பாலிற்
செந்தழலேந்தினகரனேசெறிகொன்றைமலர்ச்சடையாய்
மந்தமதியேனையுன்றன்மலரடிக்காளாக்கினையால்
இந்தவுதவிக்கென்னேவியற்றுவதுகைம்மாறே. (௨௪)

கைம்மாவினுரிபோர்த்தகண்ணுதலேதிருமாற்பேற்
றெம்மானேகோற்றேனேயிருநிதியேயெந்துரையே
அம்மாதவன்மலரோனறியாதவடிமுடியாய்
இம்மாநிலத்தென்னையினிப்பிறவாதாட்கொள்ளே. (௨௫)

கொள்ளாமுடைப்புழுக்குரம்பையெடுத்தெய்த்தேன்
உள்ளார்விடாயொழியவுன்றன்னினூறும்
தெள்ளாரமுதைத்தெளித்தாள்பொழிலெங்குங்
கள்ளார்மாற்பேற்றுட்கண்ணுர்ந்தசெங்கரும்பே. (௨௬)

கரும்பிரதச்சேற்றூற்கழனிசெந்நெல்விளையும்
பெருந்திருசேர்திருமாற்பேற்றுச்சுடர்விளக்கே
சுரும்புசெறிமலரடியாந்தூய்க்காந்தமென்னெஞ்சாம்
இரும்பையிழுத்துய்யுமாறிதுதருணந்தயைபுரியே. (௨௭)

தருணமார்கருணையாடனைத்தணியுமுத்தமே
கிரணமலர்வாவிகினர்திருமாற்பேற்றையா
கரணங்கள்நான்குங்கடக்குஞ்சரமத்திற்
சரணவிணைப்புணையாற்றமியேனைத்தாங்குவையே. (௨௮)

தாங்கமுடியாத்தரித்திரத்தையுற்றிடினும்
நீங்கலிலாச்செல்வநிறைந்திடினுநீ மறவேல்
ஓங்குபரம்பரனையொண்மாற்பேற்றண்ணலைத்
தீங்குதுடைத்தாளுந்தேசிகனையென்மனமே. (௨௯)

மனம்போனபோக்கேபோய்மதியழிந்தபுன்மையேன்
சினந்தோய்ந்தநெஞ்சத்தாற்றீமைபலசெய்தேன்
தினந்தோறுநின்னைத்தியானித்துயச்செய்வாய்
அனம்பரவுமாற்பேற்றிலார்ந்தொளிருந்தெள்ளமுதே. (௩௦)

ஆர்வமூன்றையுமறுத்திடுமமலரையாள்வான்
கார்விராவியகூந்தனங்கருணையன்னையுடன்
ஏர்வழாமலேநண்ணுமாற்பேறெனும்பதியின்
சீர்பராவவத்திசைமுகனன்றியார்வலரே. (௩௧)

முகமன்கூறியென்முன்னொருவெள்விடையேறி
அகமலர்ந்தினியஞ்சலென்றருடரவேண்டும்
சகமளந்தமாற்பேற்றில்வாழ்சகளநிட்களனே
பகடிவர்ந்துதென்றிசைநமன்பகைத்தெழுஞான்றே. (௩௨)

ஞாலஞாலவிடைக்கணிநற்புலியதளின்
சேலசேலனசீர்நயக்கருணைநாயகிமேல்
மாலமாலபன்வழுத்தியபுகழ்மலிநீற்றுப்
பாலபாலனைப்பாலனைபாலுஞைதருளே. (௩௩)

அருளுமல்கியகல்வியுமறிவொடுபுகழும்
பொருளுமுய்யப்பொன்னடிபரவினர்க்குதவி
மருளுமாற்றியமால்வணங்கீசவிக்காயம்
உருளுமுன்னெனதொளிக்கெதிர்வந்தருளாயே. (௩௪)

வந்தனம்புரிமாசினல்லடியவரெனவே
சிந்தைநைந்திலேன்சிறியவன்றீமையிற்சிறந்தேன்
பந்தமுந்திநின்பாலுறப்பற்றுவதென்றோ
நந்தநந்தனனண்ணுமாற்பேற்றினுக்கரசே. (௩௫)

அரசிருந்தவரையமேற்றுண்டனீரதனாற்
கரவமைந்திடுங்காசினைப்பொருளெனமதியேல்
வரசிதம்பரத்தையனைமால்வணங்கரனை
பரசிவாழுதிபாழ்மதியேயிதுததியே. (௩௬)

ததியருந்தியசக்கரமால்வணங்கீசன்
முதியநான்மறைமுறையிடும்பெரும்புகழ்படைத்தோன்
புதியபொன்னடிபோற்றிடும்புண்ணியமுடையோர்
விதிநமன்கையில்விடுதலையாகியுய்வாரே. (௩௭)

வார்விசித்தபூண்உணர்முலைக்கருணைநாயகியைச்
சேர்விசித்திரன்றிகழ்ததீசிப்பெயர்த்தவத்தோன்
ஊர்வசிப்பதியும்பரும்பராவுமாற்பேறும்
ஊர்வசிப்பவர்க்குறுமிசையெவருரைப்பவரே. (௩௮)

உரைக்குமுள்ளத்தினுக்குமெட்டாப்பரனொருவன்
தரைக்குணல்வளனோங்குமாற்பேற்றினிற்றங்கும்
இரைக்குமங்கையர்தனத்திற்குமிச்சைகொண்டேங்கிப்
பரக்குநெஞ்சமேசோம்பலைவிடுத்தின்றுபரசே. (௩௯)

பரசுமன்பருட்டிலங்கியபரஞ்சுடர்மாற்பேற்
றரசுமால்வணங்கீசனுள்ளரவணிமூர்த்தி
வரசரோருகத்தாளனும்வங்கத்தினிவர்ந்து
கரைசெயாப்பிறப்பெனுங்கடல்கடக்குதிநெஞ்சே. (௪0)

## வேறு.

நெஞ்சந்தங்கிகிச்சலுநோய்செய்நெறியில்லா
வஞ்சங்கொய்துண்மஞ்சளசிதவரிவண்டார்
கஞ்சம்பொங்குந்தாளிணையேத்தக்கடையேனைக்
கொஞ்சங்கண்பார்காருணியத்தாய்கோமானே. (௪௧)

கோமானேயெழிற்றிருமாற்பேற்றிற்குடிகொள்ளும்
சீமானேதேனேகோனேயிச்சிறியேன்முன்
பூமானேபாமானும்பொறியும்புகழ்தாயோ
டேமானேக்கிவந்தருள்செய்குவதென்னானே. (௪௨)

எந்நாளுன்றம்புயநேர்தாளெளியேன்றன்
இன்னாநெஞ்சத்துண்ணிறுவித்திண்ணமனாலும்
அந்நான்முகனாலும்படுதுன்பமறவுய்வேன்
பன்னாகப்பாய்மால்பணிந்தேத்தும்பழையோனே. (௪௩)

பழையோனேமெய்யன்புடையடியார்பயிரோங்க
மழைபோலருளாற்றும்பெருமானேமாற்பேற்றின்
உழையாய்நான்மறையுச்சியினிற்குமொளியோனே
பிழையோட்டிச்சிறியேன்சனனப்பிணிபெயராமே. (௪௪)

பிணியோய்ந்தெவ்வாறுய்குவர்கொன்றைப்பிரசங்கொள்
கணியாராலப்பணியார்சடையார்கருணைக்கோ
ரணியாமன்னைப்பதியார்விதியாரணிசென்னித்
துணியாநின்னூர்பொன்னடிநாளுந்துதியாரே. (௪௫)

துதியேனுன்றன்றூயமலர்த்தாளினிநீங்க
மதியேன்மாயக்கொடுமையினாலிம்மயர்வுற்றேன்
கதியேதுங்காணேன்மாற்பேற்றின்கண்வதியும்
பதியேயெளியேனின்னுழிவாழும்படிசெய்யே. (௪௬)

செய்யிற்செங்காலன்னமுலாவுந்திருமாற்பேற்
றய்யற்காம்பணிநிச்சலுமாற்றினகமேயாம்
உய்யற்காமென்றெத்துணையாகவுரைசெய்தும்
மய்யற்காளாய்மாய்ந்திடலாமோவகையற்றே. (௪௭)

அற்றிருபற்றும்மாவிவருந்தாதன்பாற்றிப்
பொற்றிடுநற்றாளேத்தவளித்தல்பொருளாமோ
சிற்றறிவுற்றுத்தீமைபயிற்றுஞ்சிறியேனை
நற்றவரேத்துந்திருமாற்பேறுநகரோனே. (௪௮)

நகமகமகிழத்தந்திடுகருணாநாயகிதன்
அகமகிழ்கோமானம்புயநேர்தாட்கன்புள்ளார்க்
கிகசுகமும்பரசுகமுந்தந்திடுமெய்ப்பெருமான்
புகர்முகமாவுரியானென்னையாளும்புண்ணியனே. (௪௯)

புண்களுடற்றும்புன்சடலத்தைப்போற்றிநிதம்
பண்கண்மிழற்றிப்பத்திகொண்மூத்தின்பற்காட்டும்
பெண்களிடத்தன்புற்றுழல்வேனைப்பிழைதீர்வின்
தண்கழல்வைத்தாள்மாற்பேற்றினில்வாழ்தனியானே. ()

## சந்தக்கலிவிருத்தம்.

தனித்தனியாய்வருசன்மராசிபென்னும்
பணிக்குலமானவோர்பானுபோன்றவையா
மனக்கணிஞேகியமால்வணங்குமீசா
எனக்குனதாளிணிலின்புகாட்டவென்றே ( க)

காட்டமதிற்பேய்க்கணங்களோடுகூடி
நாட்டிபமாடிகொதமாலவணங்கும்
தாட்டுணையன்புதரித்தமாசிலன்பர்
ஈட்டநிறுதிபெனைப்புரநதிடாயே. (௫௨)

புரந்தரன்போலப்புழைக்கையானையேறி
நிரந்தரஞ்சீர்மைநிறைநதவாழ்விவனஞ்சே
வரந்தருமாலோன்வணங்குமீசனுரைப்
பரிநதிடுமெண்பாற்பராவன்மிக்கன்றே. (௫௩)

மிக்கவலிச்சமன்மேவியாவிகொள்ள
உக்கிரமாகவுறுத்தவரும்வேளைத்
தக்கநலன்பொடுதாங்கியாள்வையென்றே
இக்கணமால்வணங்கீசநாடினேனே. (௫௪)

நாடியசிற்பரநற்பரசின்மயமாய்க்
கூடியதற்பரகோதறுசத்தியஞ்சேர்
சூடறுநான்மறையேத்திமால்வணங்கும்
தேடருமற்புதனேனையாளே. (௫௫)

தீனர்களாகித்திகைத்திருந்தநால்வர்க்
கானிழன்மேவியரும்பெரும்பதஞ்சொல்
ஞானகுணகரநம்பமால்வணங்குஞ்
சானவிமன்னதமியனையாட்கொள்ளே. (௫௬)

தமியவனுளுஞ்சரண்டுதிக்கிலலேன்
முமலவளற்றினின்மூழ்கிமிக்கவைந்தேன்
உமையெனுங்கருணையொண்டொடிகருமன்று
சமயமீதுனடிதந்துதாங்குவாயே. (௩௭)

தந்தருளாய்நின்தாமரைப்பொற்பாதம்
வந்தனையாற்றிடமன்னுணர்வெனக்கே
முந்திவிளங்கியமூன்றுகட்கரும்பே
கந்தமலர்க்குழற்கருணைவல்லிகோவே (௩௮)

வல்வினைத்தொடர்பின்மாட்டிவாட்டியென்னை
அலலெனுங்கடலாழ்த்திடாமலாள்வாய்
செல்வமலிந்தமால்சேர்ந்துபூசைசெய்யும்
வில்லமலிந்துவிளங்கும்வேணியானே. (௩௯)

வேணிநாதனெனவேதனேத்துசார்ங்க
பாணிமால்பரவும்பாவைபங்கன்சீர்த்தி
ஏணியாங்கதியிலேற்றுதற்காமென்பர்
சாணியாப்பெறுவர்கயிலையென்னும்வீடே. (௪0)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கயிலைமலையிலுறுகடவுளடிக்கமலமலரிலரிவையர்கலசக், குபவிணைகளினணிபுயமிசையக்கொளுநசையினிலொருகடுகளவே, நயமுடையவர்கதிபெறுவரெனநவிலுவர்முநியவர்கருணைமிகுந, கழல்விழிபதியடிமருவிலரக்கடியசுரரருகுபடுவர்களே. ()

சுடுவினைதருசனனக்கடலிற் றுயரெனுமலையினிலியானெனைதென், படுமுதலையினிடைதெருமரலாற்பலபலவதையுறுமெனையருள்வாய், கடுவுறுகளதிருமாற்பேற்றுக்கருணைவலிமருவுகுணநிதியே, நடுவனுரமதிரவுதைவிடுமொண்ணறவொடுகமழ்மலரடியினனே. (௪௨)

மலமறநலமுறமனமசையாவகையுனதிருவடிமருவவருள்
பலகலைதெரிசம்பந்தனருட்பனுவலையமலகமலவடியில்
நிலைபெறவனைபரமானந்தநிலையபராபரநித்தியபொற்
கலசமுலைக்கருணம்பிகைதன்காதலதிருமாற்பேற்றரசே. (௪௩)

திருவடிமருமலரிச்சிறியேன்சித்தமமர்த்தினையாயிரமாய்
மருவுபெயர்களுரைசெய்துதிருமாற்பேற்றரசேயென்றமுதம்
பருகுமவர்களெனவானந்தப்பரவசமாயகமுருகவரும்
பெரியசுகமுறவளித்தனையிப்பிரியமொருவனென்புகலுவதே.()

புகலருமறைபுகழ்மாதவனைப்புனிதமலரிலுறுகிழவனெனத், திகழ்தருதிருமாற்பேற்றிலுறுந்தீனதயாநிதிதுணையடியின், தரு மிசையிணையடிக்கடியினிதிற் சாற்றுபுவதிமுதுநாவலர்கள், மி கைசெறிகற்பகநிழன்மேவும்வெறுக்கையொருசிறிதும்வேண்டி லரே. (௯௫)

இலகிடஞானங்களிகூரவிதையநிலைத்திடநானெனதாம்
புலையறவின்புறமாற்பேறென்புரிபதிநின்பெயர்நாளும்
நிலையுறவென்றுத்தமும்பேறநிரைபடவுரைசெயவானந்தச்
சலதியின்மூழ்கிடவோர்வரமே தருதிவருதிதநியென்னெதிரே.

வருகலைதெரிபெரியோர்வாழ்த்தும் மாற்பேற்றிறைவன்ம லர்த்தாளைக், கருமலமறப்படித்தேனாடிக்கனிவொடுகுடிக்கருதி• நிதம், மருவுவிமலவடியார்குழுவின்மன்னியுரியதொழும்பானே ன்முன், செருமலியவொரடிபேர்த்தினிமேற்செறிகுவனோகொ டுமர்தகனே. (௯௭)

கொடியனபுரியைங்கருவிநிலைகுலையவறிவுதடுமாறிடவாய், விடமமுதுவழியவடிகுளிரவிரவுசரமதசைநாளினினின், கடிம லரடியுளமுள்குவெனோகருதுவெனோவதனாலின்றே, நெடிய மொழியருளுநின்னுமங்கைநந்தேன்மாற்பேற்றொளிர்மணியே.()

நினைவேண்டுவதொன்றுளதெளியேனி ரயவனற்கண்வீழ்ந்திடி
னிளையார்கற்பகநிழலிமையாநாட்டத்தரிவையர்புடைசூழ [னும்
தனிநாயகனாய்வாழினுமின்றாட்டாமரையின்பாலன்பாம்
கனமாநிதிமாற்பேற்றுறையுங்கண்ணேபொன்னேயாருயிரே.()

கண்ணுஞ்செவியுந்தாளுமலர்க்கையுந்தலையுமுனையகலா, வ ன்னங்காணக்கேட்கவிசைவாழ்த்தக்குவிக்கத்தாழகலம், நண் ணிப்பிழைத்தேன்மாற்பேற்றுநாயகமணியேசெம்பவள, வண் ணப்பொருப்பேவெண்டலையின்மாலைகுலாவியமேனியனே. ()

## கலிவிருத்தம்.

பாலையோட்டுமைந்தெழுத்தெனும்புணையின்வன்பவ
வேலையின்கரைக்கண்மேவவீங்குமாசைகொண்டனன்
காலமாலையோதுமன்பர்காண்கிலிம்மையம்மைதன்
பாலவின்பநல்குமால்பராவிநின்றவள்ளலே. (௭௧)

வள்ளலென்னையாள்பவன்மதிக்குண்மன்னுமாமணி
தெள்ளுதண்டமிழ்க்குகந்ததேவதேவன்மான்மனத்
துள்ளியேத்தவாழியீந்தவுத்தமன்பராபரன்
கள்ளொருக்கமாலையண்ணல்கத்தனென்றுகாண்மினே. (௭௨)

சுத்தனத்தன்மால்வணங்குகாலகாலன்கான்மலர்
முத்திவித்துஞானர்நெஞ்சமுளரிபானுவட்டமா
சித்திமூலமாதவத்தர்தெள்ளுதேறலென்பரால்
பத்திகொண்டபுத்தகப்பராவிநோக்குமன்பரே. (௭௩)

கொண்டல்வண்ணமால்வணங்குகோமளப்பதத்தினிற்
றொண்டுகொண்டெனைப்புரந்துதூயனுக்கமென்றுகாண்
வண்டுகிண்டுகொன்றைதுன்றுவார்சடாதராபரா
கண்டுமண்டுதீஞ்சொன்மேயகருணைவல்லிகொண்கனே. (௭௪)

கருணையாகுமமுதுபில்குகாமதேனுவேயரும்
பொருணிறைந்தவேதமேபுகழுமாற்பேற்றண்ணலே
கரணநீங்குபோதெனைக்கழற்றுணைப்புணைக்கொடே
இருண்மலிந்தபிறவியாழியேற்றியாதரித்திடே. (௭௫)

ஆழிவண்ணமாலின்பேற்றிலார்ந்தநின்பதம்பணிந்
தூழின்வந்துதோன்றுதுன்பவுச்சிவேரறுத்துயத்
தாழுமன்பரன்பர்தாளடைந்துநாயினேன்
வாழுமாறுவந்துவந்துவந்தளித்திமுன்பனே. (௭௬)

முன்புபின்பிலாதுமூன்றுமூர்த்தியாகிமுத்தொழில்
அன்பினாற்றுவானெவன்னனைத்துயிர்க்குமுற்றுற
மன்பரன்னெவன்னவன்னெனைப்புரக்கவல்லனால்
இன்புகொண்டுமாலின்பேறெனுந்திருத்தலத்தினே. (௭௭)

தலத்தின்வாதையிற்படிந்துசஞ்சலங்கொணெஞ்சமும்
மலத்தினாற்குலாலனாழிமானுமிப்பிறப்பினால்
உலத்தலுற்றுமாய்வுறாமலுன்மலர்ப்பதத்தினிற்
கலத்தலென்றுபால்வணக்கவின்கொண்மாலின்பேற்றனே. ()

பால்வணத்தனூர்புரப்பதத்தனாழிவேண்டியம்
மால்வணங்குமாண்பினான்மணங்கொளம்புயத்தயன்
சூல்வளர்ந்தமேகநாதன்சூழும்பர்தம்பிரான்
மால்வருக்கநீக்கியாளவாழ்த்துகிற்றிநெஞ்சமே. (௭௯)

வாழுமாறுவஞ்சநெஞ்சவன்கலைக்கணாத்தெனைச்
சூழுமாறுதீயரைத்தொலைத்துனாதுபொன்னடி
தாழுமாறளித்தியாதவன்சயர்தமீர்த்துபோம்
ஏழுமாவிறங்குசோலையெய்துமாற்பேறையனே (௮௰)

## கோச்சகக்கலிப்பா.

பேராநந்தம்பவம்போம்பேரானந்தம்பலிக்கும்
பேரானந்தம்படைத்தபெம்மான்மாற்பேற்றிறைவன்
காரார்களத்தனிருகான்மலரைக்கைதொழுது
வாராருமுலையர்நசைமாசொழித்துமாமனமே. (௮௧)

மாசுணம்புலிச்சடையாய்மாசுணம்பொலிபணியாய்
மாசுணம்புலக்கடையார்மாற்பேற்றுமாமணியே
தேசுதருநின்னிரண்டுசெந்தாமரைபதங்கள்
பாசமறவென்னுளத்திற்பதித்தருளற்கென்குறையே. (௮௨)

பதிகம்பெற்றான்வாணிபதிகம்பெற்றானெவர்க்கும்
பதிகம்பெற்றான்றலைசம்பந்தனாதியர்புகலும்
கதியுதவமாற்பேற்றிற்காத்திருப்பக்கைவிட்டு
விதுநுதலார்மாமயலில்வீணாள்கழித்தேனே. (௮௩)

கழித்தேனோற்குணத்தைக்கழித்தேனோநல்வினைத்தைக்
கழித்தேனேவாணாளைக்கம்புகுழைமாற்பேற்றாய்
செழித்தார்ந்ததண்டலைசூழ்தில்லையின்மாகாளியொடு
தழைத்தாடுநடராசதற்பரதயாபரனே. (௮௪)

நடலையார்புன்பிறப்பினடலையானுற்றகிலேன்
நடலையாவுந்தொலைத்துஞானக்கணயந்தருளாய்
சுடலையாடும்பரனேதூய்மைசெறிமாற்பேற்றாய்
விடலையாமார்க்கண்டவேதியனையாண்டானே. (அரு)

மார்க்கண்டன்போன்றகுருமார்க்கண்டன்புற்றுவிட
மார்க்கண்டன்மாற்பேற்றான்மாணடியைப்போற்றுதலால்
நீர்க்கொண்டகொண்மூவைநேர்நோக்கும்பைங்கூழ்போற்
சீர்க்கண்டவடியவரைச்சேர்ந்துநசைசீர்த்தன்றே. (அசு)

சீமூதனேவெள்ளிச்சீமூதனேபொழிலிற்
சீமூதநேரொலிக்குந்திருமாற்பேற்றையாவே
தாமோதரன்பிரமன்றாண்முடியைக்காண்பரியார்
ஆமோவென்னுஞ்சீரளர்தெடுத்துக்கழறற்கே. (அஎ)

கந்தரத்தனேகரளக்கந்தரத்தனேபொழிலிற்
கந்தரத்தரங்குமுறிக்கண்வளருமாற்பேற்றாய்
அந்தரத்தராய்மலர்தூயர்ச்சிக்குந்தாணிழலாற்
பந்தமுறும்வெம்பிறவிபறக்கேதழையுயலென்றே. (அஅ)

பறந்தலையும்பாழ்மனமேபறந்தலைக்குப்போமுனாட்
பறந்தலைவைத்துக்கொடியவைம்புலனைச்சுட்டெரித்து
துறந்தவர்க்குந்துறவாததூயவர்க்குங்கருணைமடை
திறந்தூற்றுமாற்பேற்றான்சேவடியைச்சேராயே. (அகூ)

சேமஞ்செறிந்துபரசேமஞ்செழுத்தையர
சேமஞ்செழிற்சிகரிசேர்மாற்பேற்றற்புதனே
வாமந்தனிற்பெண்ணைவைத்தவனேபொற்கடுக்கைத்
தாமந்தழைத்தவருட்டாண்மலர்க்கன்பார்வதென்றே. (கூ0)

## கலிவிருத்தம்.

தாமங்கொன்றைச்சடைமாற்பேற்றாய்
நாமம்போற்றிஞானச்செல்வ
நேமந்தருவாய்நிமலாபோற்றி
ஆமன்பனெனக்கருணன்னெறியே. (கூக

நெறியேதுமிலேனீசக்கடையேன்
குறியேனுனைநற்குணனேபோற்றி
சிறியேனையருட்டிருமாற்பேற்றிற்
செறிமூவிலைவேற்றிரிநேத்திரனே. (௧௨)

திரியும்மனனைத்தினமும்முனதாட்
பிரியங்கொளவும்பிரியாதடிமை
புரியும்படியும்புரிமாற்பேற்றாய்
திரியம்பகபோற்றிசெழுந்தனனே. (௧௩)

தனமேபோற்றிதனிமாற்போற்றும்
பனுவலணிந்தபரனேபோற்றி
கனியேகருணைக்கடலேயழியாத்
தனிநாட்டின்பந்தருநாயகனே. (௧௪)

நாயேற்குதவுநாதாபோற்றி
பேயேற்கருண்மாற்பேற்றாய்போற்றி
சேயேன்பரவுஞ்செல்வாபோற்றி
நீயேகதிநின்மலநித்தியனே. (௧௫)

நித்தாபோற்றிநிமலாபோற்றி
கத்தாபோற்றிகதியேபோற்றி
அத்தாமாற்பேற்றனகாபோற்றி
முத்தாவென்றும்மூவாதவனே. (௧௬)

முத்தியளித்தருண்முதலேபோற்றி
அத்தியுரித்திடுமழகாபோற்றி
சித்தர்பராவியதிருமாற்பேற்றாய்
பித்ததிகம்பரபிரமப்பொருளே. (௧௭)

மன்னியவின்பவாழ்வேபோற்றி
துன்னியபுகழ்சேர்தூயாபோற்றி
வன்னிநுதற்றிருமாற்பேற்றினின்வாழ்
பின்னுசடைத்தவர்பேணுங்கதியே. (௧௮)

கதியேதுமிலாக்கயவன்றனையாள்
மதியார்சடையாய்மாற்பேற்றரசே
முதியோர்பரவும்முகிலேபோற்றி
பதியேபோற்றிபடர்வேணியனே. (கக)

பனிமாமதியம்படியுஞ்சடையாய்
கனியார்சோலைக்கவின்மாற்பேற்றாய்
தனியாய்போற்றிதமியேற்கருளாய்
இனிதாகியதாளிணைவாரிசமே. (க00)

திருச்சிற்றம்பலம்.

மால்வணங்கீசர், கருணைநாயகியம்மை. விஷ்ணுதீர்த்தம் கும்பனென்னுமரசன்பொருட்டுத் ததீசிமுனிவரோடு பொருது சக்கரமிழந்த திருமால், வேறு சக்கரம் பெறும்பொருட்டுப் பூசித்துப் பேறுபெற்றதலம். திருநாவுக்கரசுசுவாமிகள், திருஞானசம்பந்தசுவாமிகளாற் பதிகம் பெற்றுள்ளது.

---

திருச்சிற்றம்பலம்.

# கஉ.—திருவூறல்.

—:o:—

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மாவிலங்குமாதரார்மயக்ககன்றுன்வர்கழல்
காவின்மாமலர்கொடுக்கனிந்துபூசையாற்றிலேன்
நாவினானினைந்துநாமநாடுவாரைநாடிடா
தோவியம்போனின்றனனூறன்மேவுமெந்தையே. (க)

புண்ணியம்புரிந்திலாதபுன்மையேன்புகழ்ந்துனை
நண்ணிலேன்பிறந்தைநீங்கநல்லநின்னருளினாற்
பண்ணயந்தபாவினாற்பராவிநிற்கப்பணிகொளாய்
உண்ணயந்தோரேத்தெடுக்குமூறன்மேவுமெந்தையே. (உ)

வன்னியோடிலிங்கங்கூவம்வயங்குஞ்சாக்ஷியாகவே
கன்னியைமணஞ்செய்வித்தகாளைகாழியம்பரன்
பன்னியேத்தும்பரமனேபரிந்துநின்கழற்பதம்
உன்னியோங்கவேண்டுவேனூறன்மேவுமெந்தையே. (ங)

தந்தைதாளினைச்செகுத்தசண்டியாவின்பாலினால்
அந்தமாதியற்றநிற்கேயன்புகொண்டிங்காட்டிடச்
சிந்தைகோயிலாவெழுந்துசீரலங்கடந்தவா
என்றனையுமாளவேண்டுமூறன்மேவுமெந்தையே. (௪)

வாதனைசெய்தொல்வினையைவன்பிணியைநீக்கியே
நீதமோடுநேடியாளநீள்கருணைசெய்தியால்
கோதிலாதவென்குணங்கொள்கோளராப்பரித்தவா
ஓதரும்புகழ்சொடோங்குமூறன்மேவுமெந்தையே. (௫)

பன்றியாங்வந்துதித்தபாலர்பாலருந்தவே
நன்றியே டுகோலமேனிநன்றடைந்தநாயகா
சென்றொரைம்புலன்வழிசெருக்கடைந்தநாயினேன்
ஒன்றிபேதநல்லருள்செய்யூறன்மேவுமெந்தையே. (௬)

சந்தமாமலர்கொடுன்கழலிணைபணிந்திடக்
சங்கரமோலியேநிறைசந்நிதியைச்சார்ந்திலேன்
பந்தியெம்பெருந்தகையினற்றிருவாய்நின்றுநீர்
உந்திபோலுதிக்குநல்லவூறன்மேவுமெந்தையே. (௭)

கடலயின்றமாமுனிகணிர்துபோற்றுமாண்டவா
விடநிறைந்தகண்டனேவிரைந்துசெய்வதோர்கிலேன்
படநிரைத்தபாம்பணிந்திடும்பரமபத்திமை
யுடையனேனையாள்வையோவூறன்மேவுமெந்தையே. (௮)

சோதியானவோரிடந்துலங்கக்காட்டியென்றனை
நீதியானநின்னிலையினிற்கச்செய்யவேண்டுமால்
போதமுண்டபிள்ளைநாளும்போற்றிசெய்யநின்றவா
ஊதியமருள்வையோங்குமூறன்மேவுமெந்தையே. (௯)

அப்பனேயெனம்மையேயருள்வழிந்தகண்ணனே
இப்புவிதனிலெடுக்குஞ்சென்மநீங்கியுய்யவே
தெப்பமீதென்றறிகிலேன்றெளியுமாறருள்வையோ
ஒப்புயர்விலாதுநின்றவூறன்மேவுமெந்தையே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

உமாபதீசர், உமையம்மை. பார்வதிதீர்த்தம் உமாதேவி பூசித்ததலம், இத்தலத்தில் திருநந்திதேவரது வாயினின்றும் நீரூறிக்கொண்டிருக்கும் மகிமையா லப்பேர்பெற்றதலம். திருஞானசம்பந்தசுவாமிகளாற் பதிகம்பெற்றுள்ளது,

---

திருச்சிற்றம்பலம்.

# ௧௩.-திருஇலம்பயங்கோட்டூர்.

—:O:—

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

*பொன்னுடன்மண்ணும்பெண்ணும்போகமும்விழைந்துனார்*
*கொன்னுறுபாசதண்டங்குடங்கையிலேந்திநக்கு தேன்*
*மின்னுறமிருள்போற்கூற்றம்பிடர்பிடித்திர்க்குங்காலை*
*என்னினிச்செய்வல்லேனிலம்பயங்கோட்டூரெந்தாய்.* (௧)

*குடமெனப்பணைத்தகொங்கைகோட்டுமாலாம்பலல்குற்*
*படங்களுக்கிலக்காத்தொல்லைப்பாழ்வினையீர்க்கப்பாழ்த்தேன்*
*நடம்பயிலுதவேதநாயகநாயேனுய்யு*
*மிடங்கொடுத்தருளவேண்டுமிலம்ப[illegible]கோட்டூரெந்தாய்.* (௨)

*எனதலதொன்றைக்கண்டேயெனதெனமயங்குகின்றேன்*
*உனதடியவர்தாளேத்தியுறுபொருளுணரகில்லேன்*
*மனமொன்றுமாறுசெய்யும்வகையொன்றுங்கண்டிலேனுன்*
*இனமணிகொழிக்கும்பாலியிலம்பயங்கோட்டூரெந்தாய்.* (௩)

*வழுவழுப்பின்றிநெஞ்சில்வஞ்சகமின்றிநாளு*
*மழுதழுதலறியேங்கியகங்குழைந்துருகிநெக்குத்*
*தொழுதெழுமடியார்கள்தொறுந்தொறுங்கோயில்கொண்டே*
*இழுதனையருளளிப்பாயிலம்பயங்கோட்டூரெந்தாய்.* (௪)

*பனிமலர்கொய்துசூட்டேன்பதமலர்கருதமாட்டேன்*
*கனிமொழிமடவார்நட்டேன்கலந்துறவாகிப்பட்டேன்*
*தனிமுதற்பொருளைவிட்டேன்தாமதித்தறிவுகெட்டேன்*
*இனியொருதுணையுங்காட்டாயிலம்பயங்கோட்டூரெந்தாய்.* (௫)

நீறுபூத்தலர்ந்தமெய்யுநெறிகுழலிமயவல்லி
கூறுமாயிருந்தகோலங்குறியுமேகாட்டியென்று
மாறிலாஞானவாரிவாரியுண்டுள்ளந்தேக்க
ஈறிலாதளிக்கவேண்டுமிலம்பயங்கோட்டூரெந்தாய். (௬)

மன்னுமோர்கணப்போதேனுமதித்திடற்கரியயாக்கை
யென்னதென்றெண்ணியேங்கியினியிலாக்களவுசாமம்
முன்னிப்பொய்யுரைத்துப்போந்துமுழுதுமேயவலமானேன்
எந்நெறியடைந்துய்வேனிலம்பயங்கோட்டூரெந்தாய். (௭)

புல்லறிவாளர்பாற்போய்ப்புகழ்ந்துபுன்மொழிகள்கூறிப்
பல்லினைக்காட்டிக்கெஞ்சிபரிந்துபல்பகர்ந்துவாழ்ந்தேன்
கல்லினுங்கடியநெஞ்சன்காமுறுக்காமன்சொல்லா
எல்லையில்கொடுமைசெய்தேனிலம்பயங்கோட்டூரெந்தாய் (௮)

மன்னியகுருதியென்புமச்சையுமயிருந்தோலுந்
துன்னியமலமிறைச்சித்துருத்தியைச்சுகமென்றெண்ணிப்
பன்னெடுங்காலம்போக்கிப்பதைப்புறாதிருந்தேனாயேன்
என்னெனக்கேட்பர்யாரோவிலம்பயங்கோட்டூரெந்தாய். (௯)

பண்ணினாற்பூவால்நாவால்பழிச்சுநின்னடியரோதுங்
கண்ணியந்தொடையல்சூழுங்கழல்கமலப்போதை
நண்ணிவீற்றிருக்கும்பேறுநானடைந்துய்யுமாறு
எண்ணிநின்றுருகச்செய்வாயிலம்பயங்கோட்டூரெந்தாய். (௧௦)

திருச்சிற்றம்பலம்.

சந்திரசேகரேசர் - காடேந்து முலையம்மை. சந்திரதீர்த்தம் - சந்திரன்பூசித்ததலம். திருஞானசம்பந்தசுவாமிகளாற் பதிகம் பெற்றுள்ளது.

திருச்சிற்றம்பலம்.

## கூவம் எனவழங்குந்

# கச.—திருவிற்கோலம்.

சோடசப்பாமாலை.

—:O:—

அறுசீர்க்கழிநெடிலடிலாசிரியவிருத்தம்.

அமுதத்தடங்கட் புராந்தகிக்கோரரைமேனியிற்பங்களித்தோனே, குமுதத்தவனை யறுமுகத்திற் கொழிக்கும்பொறியிற் கொடுத்தோனே, சமுகப் பூதநாயகனே தமியேன் சரணாகதி யென்றேன், குமுதத் தடஞ்சூழ் கூவத்தாய் கூவியென்னை யாட் கொள்ளாயே. (க)

கூவத்தின்வளையும்வளையும்குவளையும்வளையும்வளமார்
கூவத்தின்வதியும்பெருமான்கோகனகப்பூங்கழலிணைக்கே
ஆவத்தின்வந்தபயமெனவடுத்தார்தொன்றுதொட்டுவரும்
பாவத்தின்சிறைநீங்கியரும்பரமானந்தம்படிவாரே. (உ)

படியிற்காமக்கனலினகம்பதைத்துநீறாய்வெந்தலையும்
கொடியேனினதுபொன்னடியைக்குறிப்பின்வழுத்தநினைவளித்
கொடியும்பிரியாநேயத்தானுவலும்படிநல்வரமீந்தாய் [து
கொடியுஞ்செடியும்பூமணக்குங்கூவத்தமைந்தகுணக்குன்றே.()

குணமெண்வகைகொண்டறல்வெளிதீகூகால்கரணமோர் நான்காய், கணமாமுடலுக்குயிருணர்வாய்க்கலந்துவிளங்குமற் புதனே, பணமாரரவாபரணத்தாய்பரவுர்திருவிற்கோலத்தாய், துணைவாரிசத்தாற் பிறவிதுயர்துடைத்தென்றனையாட்கொண் டருளே. (ச)

கொண்டல்வணத்துக்கோமானுங்கோகனகத்துப்பூமானும்
அண்டர்பிரானுமமரர்களுமடுத்துத்தினமூர்துதிபுரியத் [ல்
தொண்டரேத்தத்திரிபுரத்தைத்துடைத்துத்திருவிற்கோலத்தி
அண்டும்பரமாசனைப்பேராழிக்கரையினெனையேற்றே. (ரு)

கரைகாண்பரியகாதலினாற்கண்ணீர்துளித்துக்கூவத்திற்
கொருநாயகனெண்புராந்தகியாமொகரச்சாயலாள்கொழுநன்
விரைமாமலர்த்தாளுள்ளுமவர்வெறுக்கைமக்கண்மனையொக்கல்
பெருவாழ்விவற்றைப்பொருளென்னப்பேதுற்றலமந்துழலாரே

அலமரலில்லாமாதவரோடமரர்திரண்டுநித்தியமுங்
குலமறையோதித்துதிபுரியுங்குரைகழலேத்தத்தமியேற்கு
நலமருள்செய்தான்விற்கோலநகருறையெம்மான்சிவசத்தி
பலமலர்தூவிப்பூசைபுரிபசுபதியென்னுந்தெள்ளியனே. (௭)

தெள்ளியர்பரவுபுராந்தகிசேர்திருவிற்கோலத்துக்காசன்
கள்ளவிழ்கொன்றைக் கண்ணிபுனை கண்ணுதலம்போருகவடி
கள்ளமரும்புங்காழ்வினையுங்கனகத்தினையுமதித்துழலா [யைக்
துள்ளிடுமாறென்னெஞ்சகத்தையுவப்புறநாளும்வணங்குவனே

வணங்கரியானுநான்முகனும்வன்புலன்வென்றிடுமாதவர்தங்
கணங்களுமோதற்கரியபுகழ்சுபவரினத்தினிணக்கத்தால்
குணங்கரியேன்சொலவசமாமோகூவத்திற்கொருகாவலனே
சுணங்குமுலைப்பார்ப்பதியென்னுந்தோகைகளித்திடுமெய்ப்புசனே

அம்புதிசூழவனிமிசையசரசரங்களெனும்பிறவி
வெம்புவலைக்கணகப்பட்டுவீணிலுழன்றனனின்றளவும்
பம்புபடைக்கலமோச்சிநமன்படர்கள்வெருட்டுஞ்சரமத்தில்
நம்புமெனைக்காவிற்கோலநகரத்துறையும்பெருமானே. (௧௰)

பெருகுகளிப்பாற்புணையணம்பிலிற்றக்கல்லேயனையவுளம்
உருகிக்குழறநாவிம்மியுடலிற்புளகமிகவரும்பி
மருவுவசம்போய்ப்பரவசமாய்வளமானந்தமாந்தேனைப்
பருகப்புரிந்தான்விற்கோலப்பதியான்சடைவாழ்மதியானே. ()

மதியாச்சீயுஞ்செந்நீருமலியுந்தசையுநரம்பென்பும்
பதியுமுடலைச்சுமந்தெய்த்தேன்பாழாம்பிறப்புமிறப்புமிவை
விதியாற்சமனுன்மேவாமல்வீட்டையளித்தாள்வித்தகனே
முதியார்டணிவிற்கோலத்தின்முளைத்தேவனார்முக்கட்கரும்பே.

கரும்பெந்திரத்துட்படுமாபோற்கடுகினைவுமிடையின்றி
அரும்பேருகிலிருவினையிலகப்பட்டலையுந்தொழின்மாற்றி
சுரும்பேய்ந்தூ தூளினத்தாட்டுணை தந்தருணற்றாமரையின்
அரும்பேய்கொங்கைபுராந்தகியினகத்துக்கொதத மணமகனே.

மணமார்கொன்றையறுகாத்திமலியுஞ் சடையானேறு
டையான், குணமேகோயில்கொண்ட திரிபுரசுந்தரன்விற்கோ
லத்தில், வணைவா ரிசக்கண் ணன்னகிரை மன்னுங் கூவ தீர்த்தத்
தின், நணியாடுறுவோர்துன்புறுமாழ்நரகினின்றுமீண்டாரே ()

மீண்டார்சனனச்சிறைநின்றுமேதக்கோர்கள்விற்கோலத்
தீண்டாத்திருமேனிப்பெருமான்செய்யவடியினெஞ்சகம்வைத்
தாண்டானடிமையாய்நிற்குமன்றன்புகழையென்மனமே
வேண்டாமுடைநாறுடலத்தைவெறுக்குமுன்னரோதாயே. ()

ஓதக்கடனஞ்சுண்டமாருய்யச்செய்தான்சம்பந்த
னைப்பனுவலைக்கொண்டானுவப்பாலன்று சிவசத்தி
போதைச்சொரிந்துபூசைசிதம்புரியும்புரசங்காரனிசை
காதற்பிறவித்தீயின்விளைகளைமாற்றுவதற்கமுதாமே. (௧௬)

திருச்சிற்றம்பலம்.

திரிபுரசுந்தரேசர், தீண்டாத்திருமேனி, புராந்தகியம்மை. கூவதீர்த்தம். இச்சிவலிங்கப்பெருமானுக்குத் தீர்க்கசடாநிர்த்தன், சர்த்தாருணன், சிவாரதன், தேவநாயகன், சீலகண்டன், கோதண்டா அலங்கிருதேசர், அசேஷபுவனேசர், கூவரேசர், இரட்சகர், தியாகராஜர், கிளானிக்னர், ஜகத்பிரபு, எனப் பன்னிரண்டு திருநாமங்களுண்டு. திரிபுரதகனஞ்செய்ததின்மேல் தேவர்கள்யாவருமொருங்குகூடிப் பூசித்தது. சிவசத்திபூசித்தது. இத்தலத்தின் வடக்கு ஒருமைலில் விருத்தக்ஷீரநதி உத்தரவாகினியாக வருமிடத்தில் ஒருதிடரில் உத்தேசம் அரைக்காணிநிலம் மணலாக இருக்கின்றது அதிலூற்றுண்டாக்கி நான்குகாலத்திலும் திருமஞ்சனங் கொண்டுவர்து புனிதத்துடன் சிவலிங்கப்பெருமானுக்கு அபிஷேகஞ் செய்கின்றனர். இத்தீர்த்தத்தை அசுசியாக நெருங்கினவரை இக்காலத்தும் அரவஞ்சீறி வருகின்றது. திருஞானசம்பந்தசுவாமிகளாற் பதிகம்பெற்றுள்ளது.

திருச்சிற்றம்பலம்.

# ௧௫.—திருவாலங்காடு.

—:ப:—

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பூவாருங்கொன்றைபுகழாடணிந்தபொடியாடுமேனிபுனிதா
நாவாரவேத்திநவிலாதபாவிநாயேற்கிரக்கமிலாய்
சேவாருமெங்கள்சிவனேநினைந்துதெளிவார்சிறந்ததமிழாந் [யே.
தேவாரமோது மொருமூவர்போற்றுந் திருவாலங்காட்டுமணி

இரும்பாரகக்குழியியாறுபொய்யரிமைமேதினிந்தேனிசைவாய்
அரும்பாதகத்தையடைவேபுரிந்தவாகாதமூடனறிவோர்ப் [த்
பெருபாதமென்றும்புகழாதவஞ்சன்பிறவாதபேற்றையடைய
திரும்பாதபாவிதலையாளவேண்டுந்திருவாலங்காட்டுமணியே.()

பண்டாரணைக்கின்முடிமீதிருக்கும் பண்பாபரிந்துனருள்சேர், தொண்டாற்றுந்தூயவடியார்கள்காணதோமற்றவேற்றுகந்து, வண்டாருங்கூந்தலுமையம்மையோடுவருமோனஞானமுதல்வா, திண்டாடுமென்னைசதிகையாதருள்வைதிருவாலங்காட்டுமணியே. (௨)

எத்திக்குமேத்துமிறைவாவளர்ந்தவிளமாமதிச்செஞ்சடையாய்
அத்திக்குநல்லவரமேயளித்தவமலாவணங்கோர்பாகா
பத்திக்குநஞ்சபரனேநினைந்துபதமன்றுபாடவறியேன்
தித்திக்குஞானதிகழ்கன்னனேருந்திருவாலங்காட்டுமணியே.

வரமாதரிக்கும்வானோர்கள்போற்றுவள்ளால்விளங்குமலரேய்
கரமாதரிக்குங்கலைபாயோர்கங்கைகதிர்வேணிசூடுமணியே
கருமாலகற்றிக்கடையேனையாளகருதாய்கனற்கணரசே
சிரமாலைநண்ணியணிதேவதேவதிருவாலங்காட்டுமணியே.(௫)

புகழாருநின்றனடியாரிழைத்தபுன்மைமதவிர்க்கும்புனிதா [ய்
மகிழாருமொற்றிப்பதிமேவியன்றுமகிழ்ந்துசென்றமறையோ
இகழ்வாரும்வேறுசமயப்புகுந்தேயிடராழ்ந்திடாதருளுவோய்
திகழ்பாதம்போற்றவருள்தேவதேவதிருவாலங்காட்டுமணியே.

ஒருகாளிதன்னையுகந்தாடிவெல்லவொருதாளெடுத்தவரவோய்
முருகார்ந்ததும்பைமுடிசூடுநாதமுதலந்தமற்றமுடிவே
வருகாலன்றன்னையன்றேயுதைத்தமலர்ப்பாதமன்றிமதியேன்
திருவாளமுக்கணுறுதேவதேவதிருவாலங்காட்டுமணியே. (எ)

அடலாருமூவர்புரமூன்றெரித்தவனகாவனாதிமுதல்வா
கடவாரணத்தினுரியாய்கனிந்துமடவார்கணேசமுழலா
சடவாதனைக்குள்புகுதாதுநல்ல+லசம்வணங்கவருளாய்
திடகாழிமன்னன்புகழ்தேவதேவதிருவாலங்காட்டுமணியே. ()

ஒருவாதுநாளுமினிதேத்துவாதவூரானையாளவுரவாய்குரு
வானகோலமதுகொண்டுஞானக்குழகாவெனப்பரசிடேன், பெ
ருமாலுழன்றுமனநைந்துகெட்ட பேதைப்பரிந்தன்னடியைத்,
திருவாளநாடியடைந்தேனையாள்வைதிருவாலங்காட்டுமணியே

மருநீலம்போன்றவிழிவள்ளிதெய்வமங்கைக்குகந்துமகிழ்வாய்
பெருநீலகண்டந்தனிலேறியாடுபெம்மானைத்தந்தவமுதே
கருநீளம்போக்கிக்கடையேனையாளகழலன்றியில்லைகதியே
திருநீலகண்டமுறுதேவதேவதிருவாலங்காட்டுமணியே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

ஊர்த்ததாண்டவேசர். இரத்தினசபை – வண்டார்குழலியம்மை, முத்தித்தீர்த்தம். பலாவிருக்ஷம்.

தேவேந்திரம், ஆதிசேடன், சுனந்தர் முதலியோர் பூசித்தது. காளியுடன் நிருத்தவாதஞ்செய்த சிவபெருமான் ஊர்த்த தாண்டவத்தால் வென்றருளியதலம். காரைக்காலம்மையார் என்றும் பிரியாது திருநடனந்தரிசிக்குந் தலம். இத்தலத்தில் நிர்மாலிய தோஷமில்லை. வேளாளர்கள் செட்டிபழிக்காகத் தீப்பாய்ந்து புகழ்பெற்ற தலம். சமயாசாரியர் மூவராலும் பதிகம் பெற்றுள்ளது.

திருச்சிற்றம்பலம்.

# ௧௬.—திருப்பாசூர்.

:o:

## கலிவிருத்தம்.

திருமாலொடுந்திசைமாமுகன்றிகழ்நான்மறையுணராப்
பெருமானெனப்புகலிக்கிறைபேசுந்தமிழ்முறையை
மருமாலையெனக்கொண்டருள்மருந்தேகுணக்குன்றே
பருமாமலைவளைத்தோயருள்பாசூர்ப்பரம்பரனே. (௧)

மல்லார்திணிதோளாமழுமானேறியகையாய்
கல்லாமுடையிறைவாவுனையேத்தாதவர்மனத்திற்
செல்லாத்திறலோனேயருட்சிவஞானமதிலங்கும்
பல்லோர்புகழ்பாதாவருள்பாசூர்ப்பரம்பரனே. (௨)

மூவாதுணையிலாமறைமேலாவுமைலோலா
ஆலாகழற்காலாநினையன்பர்க்கனுகூலா
தூலாவிதிமாலோர்ந்திடாதுனையேத்துநோன்மையர்தம்
பாலாவரம்வந்தேயருள்பாசூர்ப்பரம்பரனே. (௩)

கந்தங்கமழ்வாணிதிருகஞ்சன்சசிநாதன்
சிந்தைசெயவந்தாதரிசிவமேயருட்குருவே
உன்றன்பதம்புகழ்ந்தேத்திநானுய்யும்படிக்கருளிப்
பந்தமறுத்தெனையாளுவைபாசூர்ப்பரம்பரனே. (௪)

கங்கைச்சடையானேமுடைகங்கையுடையானே
சங்கைப்பிடிமாலைத்திடுந்தாளாமழுவாளா
மங்கையுமையாளார்ந்திடுமோர்பாபிறப்பென்னும்
பங்கையறநீக்கியருள்பாசூர்ப்பரம்பரனே. (௫)

சனகாதியர்க்கன்றாலின்கீழிருந்தேதவமுரைத்த
அனகாதவரதிபாநினையடைந்தோர்தமைக்காக்குந்
தனிகாநகுதலையாய்சன்மச்சிறைசார்ந்திடாதருளிப்
பனகாபரவெனையாண்டருள்பாசூர்ப்பரம்பரனே. (௬)

பானல்விழியுமையாள்பசுபதிநாயகிமகிழ
ஞானநடம்புரிந்தோய்கழைநாடியுறைநின்னைக்
கோனேகுருநாதாவெனக்கொண்டாடியசோழன்
பானேரரவாட்டிவரும்பாசூர்ப்பரம்பரனே. (௭)

காரொன்றியகுழலார்கொடுகாமவலைப்பட்டே
ஈசாவெனயேத்தாமலேயிருந்தேயலமந்தேன்
வாசங்கமழ்மலர்சூடியவரதாவெனையாளாய்
பாசந்தவிர்தீர்த்தமுளபாசூர்ப்பரம்பரனே. (௮)

தோடார்செவியுடையாயுனையன்றிப்பிறதெய்வம்
நாடாப்பணியாற்றுந்திருநாவுக்கரசெம்மான்
கூடாவருள்கொண்டேத்திடக்கோவேயெனைநாளும்
பாடாவணசெய்பாதருள்பாசூர்ப்பரம்பரனே. (௯)

சிவமாமறைமுடிமீதுறைதிருவேசெழுங்கனியே
தவமாதவர்தொழுமம்பிகைதழுவுந்திருப்புயனே
கவலேதுமிலாதேயுனைக்கருதும்பரிசருளாய்
பவநீத்திடுவியாதன்பணிபாசூர்ப்பரம்பரனே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

பாசூர்நாதேசர், பசுபதிநாயகியம்மை, சோழதீர்த்தம். வியாசரிஷிபூசித்தது மூங்கிலடியில் முளைத்தருளிய சிவலிங்கப் பெருமானைத்தொழுத சோழராசனுக்காகச் சிவபெருமான் பாம் பாட்டி சொரூபமாகவந்து தரிசனங்கொடுத்தது. சந்திரனும் அங்காரகனும்பூசித்துப் பேறுபெற்றதலம். திருஞானசம்பந்த சுவாமிகள், திருநாவுக்கரசுசுவாமிகளாற் பதிகம்பெற்றுள்ளது.

திருச்சிற்றம்பலம்.

## திருவுளம்பூதூர் என்னும்

# ௧௭.—திருவெண்பாக்கம்.

## மும்மணிமாலை.

### காப்பு.

நேரிசை வெண்பா.

சீர்சான்ற வண்டமிழோர் சிந்திக்கும் வெண்பாக்கப்
பேர்சான்ற வூர்சிவனெம் பெம்மான்மேல்—நார்சான்ற
மும்மணிமாலைக்கு முடிகழு ரைங்கரனே
யெம்மனத்திற் குளப்ள யிரு.

நேரிசை வெண்பா.

சீரார் செழுங்கடுக்கைச் செஞ்சடையானைச் சிவனைக்
காரார் களம்படைத்த கண்ணுதலைப்—பேரார்
திருவுளம் பூதூரிற் சேவிப்பார் சேரார்
கருவுளம் பூதலத்திற் காண். (௧)

கட்டளைக்கலித்துறை.

காண்டவந்திக்குத்தருகுந்தியினிடைக்காண்முளையாம்
பாண்டவன்வில்லாலொருவன்கல்லான்முற்படைத்தடிக்க
வாண்டவன்வெண்பாக்கத்தாண்டவன்றேனலர்தூய்ச்சொரிந்
நீண்டவன்பாற்றுதிப்பாரையாட்கொள்ளாயனிக்கிலனே. [து

ஆசிரியப்பா.

நீக்கமில்லாமணிறைந்தெவ்வுயிரையுங்
காக்கவளிக்கவழிக்கக்கருணையிற்
கனிவாய்மொழியொடுகலந்துநிச்சலுங்
கனிவாய்வெண்பாக்கத்தமர்கின்றனன்
கருமமுப்பிறவியுங்களைந்துசந்தத
நிருமலப்பேற்றினைநீர்பெறவேண்டின்

கருதியதருமவன்கமலத்தாளிணை
ஒருகொடியேனுமோயாவன்புட
னிருகரங்களைக்குவித்தெண்ணுதிர்
பொருதிரைக்கடல்சூழ்புவியிலுள்ளீரே. (௩)

நேரிசை வெண்பா:

உளமிரங்கிச் சுந்தரனுக் கூன்று கோலீந்த
வளமலிந்தநெஞ்சத் தெம்மானைக்—களவினையேன்
நன்னடக்கை யில்லே னேயாயினும் போற்றினேன்
றொன்னடிக் கீழ்வைக்கப் புரந்து. (௪)

கட்டளைக்கலித்துறை.

புரந்தரர்தைப்பிறங்கைத்தள்ளியன்பரைப்போகத்தினில்
நிரந்தரம்வைக்குந்திருவுளம்பூதூரைநேர்ந்தவர்க்குக்
கரந்தையுந்தும்பையுஞ்சூடியசெஞ்சடைக்கண்ணுதலோன்
றரந்தரமாகவரந்தரத்தங்குந்தலங்காண்மினே. (௫)

ஆசிரியப்பா.

தலத்தினிலெங்குந்தவித்துச்செல்வர்பாற்
பலப்பலபேசிப்பல்லினைக்காட்டித்
தனத்தினையீட்டித்தையலர்வடமார்
தனத்தினிற்கீழ்ந்துதாழ்வடையாமல்
இனத்தொடுவயல்களெங்குஞ்சங்கினை
அனப்பெடைதஞ்சினையாமெனவெண்ணிச்
சேர்த்தடைகிடக்குந்திருவுளம்பூதூர்ப்
பேர்த்தலமதனிற்பேரழகார்ந்த
கனிவாய்மொழிமகிழ்கணவன்
பணித்தாட்கபயம்பரிவுடனென்மினே. (௬)

நேரிசை வெண்பா.

என்பணிந்த வெண்பாக்கத் தீசனூர் சந்நிதியின்
முன்பணிந்து நின்று முறையிட்டே—அன்பணிந்த
நெஞ்சகத்த னாகி நிறையிக் கியங்கள்புரி
வஞ்சகத்தை மாற்றுவனுன் மன். (௭)

## கட்டளைக்கலித்துறை.

பன்னியநான்மறைவாக்கியத்தின்படிவாழநின்னை
உன்னியநாயினேன்றன்னைக்காவாமலொழிந்திடவோ
அன்னியராகுமைவர்க்கிரையாக்கினையாடகத்திற்
றுன்னியமாடத்திருவுளம்பூதூரிற்றூயவனே.

## ஆசிரியப்பா.

தூய்த்திருவுளம்பூதூரினிற்கனி
வாய்மகிழ்நாதமலகியவுலகை
ஓவியன்சித்திரமுள்ளகத்தடக்கி
மாவியல்பெறநனிவகுக்குமாறே
அலகிலவாகவுள்ளமைக்கவுங்காட்டவும்
உலவணீயுனக்குமாலயனுதியர்
பொன்னையிருந்தைபொருந்தினும்பருந்தைச்
சின்னகொதுகுசேரினுமினையெனு
மின்மினியிரவிசேர்மேவினுங்கூவம்
மன்னியகடலினைமானினுநாள்கள்
சந்திரனுக்குநேர்தங்கினும்
எந்தவகையினுமேற்றமாகாரே. (௯)

## நேரிசைவெண்பா.

ஏற்றமென மாதர்மொழிக் கிரமுதை யுங்கருப்பஞ்
சாற்றினையு மக்காரந் தன்னையுஞ்—சாற்றிவருந்
தொண்டர் திருவுளம்பூ தூரரைக் கதிவேண்டின்
அண்ட ரருநெறியை யாய்ந்து. (௰)

## கட்டளைக்கலித்துறை.

ஆயுந்துறவறத்தார்திருவுள்ளமாமம்புயத்திற்
றேயுங்கமலத்தானண்ணுக்குவிக்கவொடுங்கிலவி
யோயுந்தருணத்திலெற்கருள்வாய்வட வேதிமத்தை
யேயுந்தனிநடைவாய்கனிவாய்மொழியின்பதியே. (௧௧)

### ஆசிரியப்பா.

இன்பமுந் துன்பமுமிரவும்பகலும்
வன்பகையுடனேமாற்றருமுறவும்
விடமுமமுதமும்வெப்பமுஞ்சீதமும்
இடம்படுபெருமையுமிழிதருசிறுமையுஞ்
சமமென்றெண்ணுநற்றத்துவந்தெரிந்து
தமகுணமவித்தசதானந்தர்க்கருள்
பரமன்றிருவெண்பாக்கத்திறைவன்
சரமசரங்களைச்சமைத்தும்புரந்துஞ்
சங்கரிக்குந்தனித்தாணுவென்றறிந்துந்
றங்கட்குப்பரஞ்சாற்றிச்சில்லோர்
உலகத்துள்ளோருளத்தைச்
சலிக்கப்புரிந்துசரிக்கின்றனரே. (௧௨)

### நேரிசைவெண்பா.

சரியை இரியை தனியோக ஞானந்
தெரியுமவ ரீட்டமே சேரும்—பெரியதிரு
வெண்பாக்கத் தீசனையே மேவுமின் மேதினியீர்
கண்பார்த் தருள்வான் கலந்து. (௧௩)

### கட்டளைக்கலித்துறை.

கலர்தந் தகன்றமர்பாசத்தைவீசமக்காலத்திலே
அலந்தந்தசேற்றினந்தூரும்வெண்பாக்கத்தமலனெழில்
நலந்தருநாமம்புகலுதற்கேலாநவின்றிடுவிர்
மலந்தந்தநெஞ்சத்துவஞ்சனையாவையுமாற்றியின்றே. (௧௪)

### ஆசிரியப்பா.

மாற்றருந்தொழும்பாய்வானவரேத்து
நீற்றுநுதற்கணன்னீரசத்தடஞ்சூழ்
வெண்பாக்கத்தின்விளங்கியவிமலன்
திண்பார்பரவுந்திரிபுண்டரதரன்
சூலபாணிசூர்ப்பகைதாதை
காலகாலன்கபாலபாணி
பாண்டரங்கன்பசுபதியரமன்
காண்டகுசுந்தரக்கனிவாய்மொழிபதி

அரிபையயன்றன்னையங்கமாவுடையோன்
திரைகடற்பிறந்ததீயவிடத்தினை
அரும்பெறலமுதெனவருந்தியகடவுள்
இரும்பனநெஞ்சினேனியற்றியகவியையுங்
கொள்ளுவனென்றேகுறித்துத்
தெள்ளிதினுணர்ந்துசெப்பினனின்றே. (௧௫)

## நேரிசைவெண்பா.

தெள்ளுபசுந் தேனைத் திருவுளம்பூ தூரானை
உள்ளுவா ருள்ளத் தொளிர்மணியைக்—கள்ளவினை
அய்வரான் மாயா தடுத்துப் பழிச்சுமவர்
உய்வராற் றீமை யொழிந்து. (௧௬)

## கட்டளைக்கலித்துறை.

தீமையினாலிந்தவங்கமலைந்துதிகைப்பதற்கோ
ஆமையெனும்பதநாரியைநின்னையடுத்தலறக்
காமையின்மேல்விளையாடியுலாவுங்கடம்பணிந்த
வாமயில்வீரனையீன்றவெண்பாக்கத்தரும்பரனே. (௧௭)

## ஆசிரியப்பா.

அருந்தினைமாத்திரையற்பசுகர்தரும்
பெருந்தனததுடனனப்பெடைபொருநடையுங்
கெண்டையங்கண்களுங்கெளிறனவிரல்களுந்
தொண்டையதரமுந்தோகையின்சாயலுங்
கண்ணடியிகலியகன்னமிரண்டும்
விண்ணிடைபொலிதருவிதுபோன்முகமுங்
கட்செவிபடநேர்கடிதடமுந்திகழ்
கட்செவிமலரணிகார்க்குழலும்பெறு
பாவையர்கலவியும்பரதநூல்வண்ணமுங்
கோதைநடமிடுகோலமும்பாடலும்
விரும்பித்தவிக்கும்விழலரைநீங்கி
பெரும்பதமதனைப்பெறுதற்பொருட்டே
யன்றுகோற்சுந்தரற்குதவுந்
தோன்றலையடுத்தனன்றூய்ப்பூதூர்க்கணே. (௧௮)

### நேரிசைவெண்பா.

அடுத்துப்பொய்ந்நூலெல்லாமாராய்ந்துமுத்தி
கொடுக்குமுதலைத்தேடுங்கொள்கை—விடுத்தினிநீர்
வேதம்பரமெனச்சொல்வெண்பாக்கத்துக்கடவுள்
பாதம்பரவுதலேபண்பு. (௧௯)

### கட்டளைக்கலித்துறை.

பண்பாடிவண்டர்தம்பார்ப்புடன்சூழும்படப்பைசெறி
வெண்பாக்கத்துற்றகனிவாய்மொழிமகிழ்வேந்தனருட்
கண்பார்த்திவ்வேழையைப்பாதுகாவாதினிக்கைவிடுமேன்
மண்பாலெடுக்கும்பிறவிக்குவான்மீன்வரம்பெஞ்சுமே. (௨௦)

### ஆசிரியப்பா.

எஞ்சலிலுடைக்குமின்னுணவுக்கும்
அஞ்சனவிழியாராசையினுக்கும்
அனுதினந்திரிந்தேயலமந்துழல்வீர்
இனிநீரெடுக்குமின்றுமுடையுடற்
கென்செயமனங்கொண்டேமாப்புற்றீர்
நன்செய்கருப்பாறுஞ்சாற்றாலே
விளைந்தோங்குந்திருவெண்பாக்கத்துறை
களங்கறுத்தெழிலேகாட்டியகடவுள்
பொன்னடிக்கன்புபுரியுமவர்க்குத்
தன்னைக்கொடுத்துளந்தண்ணெனச்செய்து
கருத்திறைசையைக்கணத்தின்முடிப்பவர்
மருத்தண்டாமரைமலர்புரைதிருவடி
போற்றித்திருப்புகழ்புகன்று
கூற்றுவற்கேவிடைகொடுத்திடுமின்னே. (௨௧)

### நேரிசைவெண்பா.

மின்னலைநிகர்த்தவிடைமெல்லியலெனுங்கனிவாய்
நன்னலநுகர்ந்துவருநாயகரோ—துன்னுங்
கருமஞ்சனமயினிக்காட்டாமலாள்வார்
திருமஞ்சரண்மதியேயேத்து. (௨௨)

### கட்டளைக்கலித்துறை.

மதித்துத்தன்மாத்தகாமம்பெருமோக்கவழிபட்டன்பிற்
றுதித்துத்தாவென்பவர்க்குத்தரவென்றேதுவர்க்கனிவாய்ச்
சதிக்குலப்புத்தரத்தங்கிடமென்பரச்சங்கரனூர்
குதித்துச்சேலார்தடவெண்பாக்கமென்னுங்குலத்தலமே. (உ௩)

### ஆசிரியப்பா.

தலத்துள்வெண்பாக்கந்தான்பெரிதென்றெணி
நலத்தினங்குறையுநாயகர்வாய்மைக்
கருத்தறியாமுனங்கருதுபுண்ணியத்தாற்
பொருத்தியவுலகிற்புகழ்பெறவாழினும்
இருண்டவீட்டினுள்ளிருப்பவரைப்போல்
மருண்டலைகின்றனர்மாசிலப்பரமன்
றன்மையாயொளிருமிஞ்ஞாலமனைத்திலுந்
தொன்மையினிறைந்தருட்சியதிற்றோர்
அச்சம்பெறுரென்றறைவர்
நிச்சயநன்னூனெறிநின்றவரே. (உ௪)

### நேரிசைவெண்பா.

நெறிபிறழாமூத்தோர்நினைவெனுந்தண்கஞ்சஞ்
செறிதிருவளம்பூதூர்தேவே—யறிஞர்புனை
நூலின்வழிமாறாதுநோற்றபுண்ணியப்பகுதி
பாலின்முடிவானபலன். (உ௫)

### கட்டளைக்கலித்துறை.

ஆனனைமைந்துடைவெண்பாக்கத்தீசனையன்னையெனும்
மானனைநோக்கிக்கனிவாய்மொழியொடுவாழ்த்தப்பெற்ற
ஞானகலச்செல்வமேசெல்வமற்றவைஞாலத்திலே
ஊனைநலந்தருஞ்செல்வமென்றோதுவருத்தமரே. (உ௬)

### ஆசிரியப்பா.

உத்தமன்சீர்த்திருவளம்பூதூரரன்
சத்தர்களேத்தியசதாசிவமூர்த்தி
பிறப்பொடுமூப்புப்பிணிசாக்காடு
மறப்புமில்லாதமங்கையோர்பாகன்

பயமற்றவன்பரன்பரமான்மாவரன்
சுபம்பிரகாசன்சுதந்திரன்சயம்பு
நித்தியனின்மலனீரணிசடையன்
சத்தியனருளைச்சந்ததம்போற்றி
மலிபவைம்புலமயக்குகரவடம்
ஈலியவீறில்லாநாட்டினின்மேவ
நவிலுமெனென்றனுவிற்
றவிர்தலிலாதவன்றனிநாமங்களே. (உஎ)

நேரிசைவெண்பா.

நாமர்தவெண்பாக்கநண்ணிப்பழிச்சுவாம்
பூமண்டலத்திற்புணையின்றி—நேமச்
சுருதித்தொகையணைத்துஞ்சொன்னபடிநெஞ்சிற்
கருதித்திருப்பரனைக்கண்டு. (உஅ)

கட்டளைக்கலித்துறை.

கண்டங்களாயகண்டப்பரப்பாரிக்கலந்தபல
வண்டங்களுக்குமாதாரமாயாதரவற்றவனுத்
தண்டண்டலைசெறிவெண்பாக்கமேயவன்றங்குகின்றான்
கண்டங்கழலிணையைப்பணிவாயென்றன்கன்னெஞ்சமே. உகூ

ஆசிரியப்பா.

நெஞ்செனும்பஞ்சிங்கிமைப்பொழுதேனும்
எஞ்சலிலாசையாமிருங்காற்றாலே
அலமராதுன்றனம்புயத்தாளில்
நிலையுறப்புரிகுவைநீயெனத்துதித்தனன்
கதலியுங்கரும்புங்கமுகமுந்தெங்கும்
மதுரவருக்கையுமாவும்புன்னையும்
ததைபொழிலெங்குந்தழைத்துச்சுலாவுறூஉம்
புதுமைசேர்திருவுளம்பூதூர்த்தலத்தில்
சேர்ந்தொளிசெய்மகாதேவனின்
ஆர்ந்தபுகழ்கொள்ளரும்பெருஞ்சீரே. (௩௦)

திருச்சிற்றம்பலம்.

வெண்பாக்கநாதர், கனிவாய்மொழியம்மை வெண்பாக்கதீர்த்தம். சதாநந்தருஷிபூசித்ததலம். சுந்தரமூர்த்திசுவாமிகள் சங்கிலிநாச்சியாருக்குத் திருவாக்கருளியது, தப்பினமையால், கண்களிழக்கப்பெற்று வருந்தியிங்குருற்றுத்திருப்பதிகம் பாடச் சிவபெருமான் சிறிதிரங்கி ஊன்றுகோல்கொடுத்தருளியதலம். இத்தலத்தை திருவெண்பாக்கம் எனவழங்குவர். சுந்தரமூர்த்திசுவாமிகளாற் பதிகம்பெற்றுள்ளது.

---

திருச்சிற்றம்பலம்.

# சஅ.—திருக்கள்ளில்.

—— ·o: ——

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பாரூரன்பர்பரவும்பரனேபால்கொள்வெண்ணீற்றாய்
ஆரூரரசேயரவப்பணிகொளயங்காட்டியமறையாய்
சீரூர்கமலச்சேவடிபாடுஞ்சீர்த்தியைததந்தருள்வாய்
காரூர்பொங்கர்புடைசூழ்ந்தோங்குங்கள்ளிலுடையானே. (க)

ஊனுயிராயுடலாயுலகாயுறையுமிறையோனே
தேனார்குழலாருமையாடமுவுந்திண்டோளம்மானே
வானோர்போற்றுமடியைப்பணியும்வண்மையையீந்தருள்வாய்
கானார்கயிலைமலையைப்பொருவுங்கள்ளிலுடையானே. (உ)

பொன்னார்புயனார்புகழும்புனிதாபுலியின்னதளுடையாய்
ஒன்னார்குலங்கண்முழுதுமழிகருமொன்னியவேலுடையாய்
மின்னார்புறவப்பதியான்பரவுமிளிர்சேர்தாளுடையாய்
கன்னேர்நெஞ்சக்கயவனெனையாள்கள்ளிலுடையானே. (ங)

கண்ணார்நுதலோய்கணிச்சிப்படையாய்கதிர்மாமதிசூடி
அண்ணாமலைவாழரசேயடியேனருவெந்துயரகல
எண்ணாவருவாயென்றேகாளுமெழிலைத்துதித்தருளிக்
கண்ணாமலைபத்தினிநீர்கலுழ்வேன்கள்ளிலுடையானே. (ச)

எண்பார்மதுரைவணிகச்சிறுவனெழிலார்நின்கோயில்
நண்பாய்வேண்டிப்பணியவழக்கைநலம்பெறவேசெயிக்கப்
பண்பாய்செட்டிப்படிவங்கொண்டபரனேயெனையாளக்
கண்பாரரசேகடிவளர்பொழில்சூழ்கள்ளிலுடையானே. (௫)

பொருளுங்குலமும்புவியும்புகழும்பொருவில்வீடதுவம்
அருளுமழகுமறிவுமளிக்குமாண்டகைநீயெனவே
தெருளுமடியார்திருவுளமுறைவோய்தீவினைசெய்துபாங்
கருளுமகற்றிக்கடையனையாள்வைகள்ளிலுடையானே. (௬)

விடைமேல்வருவாய்விதிமாலறியாய்விண்ணவர்தினநாடி
அடைவாய்ப்பணியவருள்வாயரசேயல்லற்பிறவியெனுங்
கடல்வாய்பட்டிக்கதறுங்கடையேன்காசினிமேலினியென்
கடவேனுரையாய்கரிமாவுரியாய்கள்ளிலுடையானே. (௭)

விரைமாமலர்சேர்குழலார்விடநேர்விழியான்மிகவாடி
தரைமேலடியார்தமைநாடகிலாத்தமியேன்றனையின்று
பரையானவள்வாழ்பங்காவடியேன்பதபங்கயம்போற்றக்
கரையாமனநீகரையக்கண்பார்கள்ளிலுடையானே. (௮)

மன்னியவிரவின்மின்னலைநிகரும்வாழ்வைச்சதமென்று
பன்னருநினதுபதமலர்ப்போற்றுப்பதகனையாண்டருள்வாய்
அன்னத்தொகுதியடைவாயுறையுமாரஞ்செறிபழனங்
கன்னற்பொங்கர்புடைசூழ்ந்திலங்குங்கள்ளிலுடையானே. (௯)

அருளார்கவிதையரையுமடியாரனுதினமேதுதிக்க
இருளார்கலியைத்தவிர்த்தேயருளையின்புறவேபொழிந்த
தெருளார்ஞானத்துருவேகருணைத்தென்களவினிலுறைவோய்
கருளார்பிறவிதனைநீத்தருள்வாய்கள்ளிலுடையானே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

சிவாநந்தேச்சுரர், ஆநந்தவல்லியம்மை, திருநந்திதீர்த்தம். பிருகுருஷிபூசிக்கத் தக்ஷிணாமூர்த்தி சொரூபமாகத் தரிசனந்தந் தருளியதலம். திருஞானசம்பந்தசுவாமிகளாற் பதிகம்பெற் றுள்ளது.

திருச்சிற்றம்பலம்.

# கசு.—சீ கா ள த் தி.

———:o:———

## காப்பு.

நேரிசை வெண்பா.

வேதவொலியார்ந்ததிருவெள்விடையார்காளத்தி
நாதரடிக்கோர்மாலைநாட்டுவான்—ஓதுபுகழ்
அத்திவதனத்தவனையத்தனருள்புத்திரனை
நத்துவெனகத்தினிடைநான்.

## சுப்பிரமணியர்.

கலித்தாழிசை.

விதிசெய்தலைவேறுக்கியேவிளைவிக்கவேவருதங்கமே
சதிசெய்திடும்படைசூரனைச்சாதிக்கவேமருவங்கமே
நதியெய்திடுஞ்சடையற்குளகலமூறியதிருப்பொங்கமே
துதிசெய்திடுமடியார்வினைதுணிசெய்திடுந்துரைசிங்கமே.

## கண்ணப்பநாயனார்.

கட்டளைக்கலித்துறை.

எண்ணப்படுஞ்சீர்த்திச்சீகாளத்தீசனிதம்பெறநல்
வண்ணப்பலமலர்வாய்நீர்ப்புலாலைவழங்கிமகிழ்
திண்ணப்பனென்னுமெயினர்குலத்துச்சிகாமணியாங்
கண்ணப்பன்பொற்றாள்பிறவிக்கடற்குக்கலமென்பவே.

## நூல்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஞாலமுண்டதிருமாலுமலரில்வந்த
நான்முகனுமருந்திமகிழருமருந்தே
பாலனுக்காயந்தகனையுதைத்துக்காத்த
பரம்பொருளேசிறுமதலையுண்ணஞானப்

பாலமுதமீந்துபலகலையுந்தாமே
பாடவருடந்துபாற்கடலையந்தச்
சீலவுபமன்னியருக்களித்துகந்த
சீகாளத்திசனையேசேர்ந்துவாழ்வாம். (௧)

செனனமொடுமரணமெனுந்தளையுட்பட்டுச்
செங்கமலன்மறலிவசஞ்சிக்குப்பட்டுக்
கனமழிந்துகளைப்பட்டுக்கலங்கிநெஞ்சங்
கசிந்துருகுமடியாரைக்காக்கும்வண்ணம்
னகநிறஞானப்பூங்கோதையோடு
கந்தன்கணபதிநந்திகணங்களார்ப்பத்
துணியரவமணிந்தாடுஞ்சீகாளத்திச்
சுரத்தமர்ந்தபெருமானைத்துதித்துவாழ்வாம். (௨)

பல்வீழ்ந்துநாத்தளர்ந்துமெய்யும்வாடிப்
பசிநோயாலலையுற்றுப்பாவைமார்கள்
செல்வீழ்ந்தாலெனச்சுற்றிக்கதறக்கூற்றுச்
செருக்கழிக்கச்செயலற்றுப்போகாமுன்னம்
நல்வாழ்வார்ஞானப்பூங்கோதையோடு
நயந்துசீகாளத்தியமர்நாதனார்க்குச்
சொல்மலிமாலிகைசூட்டித்தொண்டர்த்தொண்டாய்த்
தொண்டுசெய்து தொல்வினையைத் துடைத்துவாழ்
[வாம்.

நன்றியொன்றுமில்லாதேன்புலாலருந்து
நாயினேனாரியர்களுட்டமாட்ட
மன்றிவேறொன்றறியேனந்தோவுய்த
லகத்தில்லேனடிமைநானலையாவண்ணம்
மன்றிலேநடமிடுமாமணியேயெங்கண்
மாதரசிஞானப்பூங்கோதையோடு
துன்றுமடியார்கள்வினைதொலைக்குஞ்சீர்த்திச்
சுரர்தொழுஞ்சீகாளத்தியினைத்துதித்துவாழ்வாம். ()

தையலார்மோகமெனுந்தழலிலாழ்ந்து
தயங்கிமெய்ம்மறந்துழலுந்தமியனேனைப்
பையவேயேமன்கைப்பாசங்கொண்டு
பாழ்நரகிலடைத்திடரிற்படுத்தாமுன்னே

அப்பன்மால்பிரமனடிமுடியுங்காணு
வண்ணலார்ஞானப்பூங்கோதையோடு
துய்யவடியார்கணிதஞ்சூழ்காளத்திச்
சுரத்தமர்ந்தபெருமானைத்துதித்துவாழ்வாம். (௪)

வல்வினையைத்தீர்ப்பதற்குவள்ளாலுன்கை
வசமிருக்கநன்மருந்தைவழங்கித்தீய
தொல்வினையாற்சுழலுகின்றநாயேன்றன்பந்
தொலைத்தருளித்தொண்டரொடுங்கூடுதற்கு
நல்வினையிவ்வேழைக்குநல்கிடாமை
ஞாயமோஞானப்பூங்கோதையொடு
கல்வினைசேர்மாளிகைவான்கலந்திலங்குங்
காளத்தியமர்ந்தானைக்கருதிவாழ்வாம். (௫)

தந்தைதாய்மனைபெண்டிர்தமர்களென்னுந்
தளைப்பட்டுத்தனந்தேடிக்களைப்பட்டந்தோ
வெந்தவுடற்போலுருகிமெலிந்தேனுன்னை
வினையுடவகையறியாதுமிழற்றுவேனைச்
சிந்தைமயலகற்றிச்சிந்தாதவாழ்வில்
சேர்ப்பதற்கேஞானப்பூங்கோதையோடு
சந்ததங்காளத்தியினிற்றழைக்குமெங்கள்
சங்கரனற்சரணமலர்சார்ந்துவாழ்வாம். (௭)

நாய்நரிகள்பேய்கழுகுநாடித்தின்று
நாற்றமுடனமதென்றுநலங்கொண்டாடித்
தீயவழிப்பொருட்டேடித்தினமுழலைத்
தின்றுகொழுத்திறுமாந்துதிரிந்தேனந்தோ
மாயவுடற்பிணமாகிமறையாமுன்னே
மாதரசிஞானப்பூங்கோதையோடு
வாய்ந்தநலம்விளங்குகாளத்திமல்கும்
வானவர்தங்கோனடியைவணங்கிவாழ்வாம். (௮)

கருவழித்துக்கற்பழித்துக்கையிற்றந்த
கனகமிலையெனமறுத்துக்கடுமையாம்பொய்க்
கரியுரைத்துவழிபறித்துக்காணுதொன்றைக்
கண்டதாமுண்டெனத்தடித்துக்கடுஞ்சொல்லோச்சிப்

பெரியவரையிகழ்ந்துதிரிந்தலைந்தபுன்மைப்
பிறவியேன்கொடுகரகப்பீழைசேர்முன்
திரிபுரையாள்ஞானப்பூங்கோதையோடு
சேர்ந்திடுகாளத்திபனைச்சேர்ந்துவாழ்வாம். (௯)

பத்தியொடுமலர்பறித்திட்டுண்ணாப்பாவி
பரமனுரையைந்தெழுத்தைப்பகராப்பாவி
முத்திநெறிகாட்டுமணிமுடியாப்பாவி
முழுதுமடியவர்தொண்டின்முனையாப்பாவி
சத்திதருவெண்ணீறுசாத்தாப்பாவி
சங்கடப்பட்டந்தகன்கைச்சாருமுன்னே
நித்தியமாம்ஞானப்பூங்கோதையோடு
நின்றசீகாளத்திநினைந்துவாழ்வாம். (௧௦)

---

நேரிசைவெண்பா.

பொன்னாற்றுகிலாற்புனைந்திடினுமிவ்வுடல
மென்றாகுமற்றிதைநீயெண்ணிலையே—வன்னெஞ்சே
காலன்புடைக்குமுனேகாளத்திநாயகன்றாள்
மேலன்புவைத்தவரைவேண்டு. (௧)

பாசவினைக்குட்படுத்துறுமப்பாவையர்மே
லாசையுனக்கெவ்வாறடைந்ததுவே—நேசமொடு
சேணுடையேத்துந்திருக்காளத்தீச்சுரனைக்
காணாததென்னேகழறு. (௨)

தொல்லைவினையாற்றொடர்க்குற்றுத்தோற்றுமே
அல்லலுற்றநாளுமழுந்தினாய்—வல்ல
இலங்கைக்கோனைத்தாட்கீழிட்டகாளத்தி
நலங்கைக்கொணெஞ்சேயிந்நாள் (௩)

சென்றுசென்றேயணுவாய்த்தேயுமேதீயவினைகள்
நின்றிடாதொன்றுவினைகண்டாய்—குன்றிலுறை
வாகானகாளத்திவாழ்வானடிமலரைச்
சாகாமுன்கைதொழுதுசார். (௪)

ஆக்குவானெல்லாமழிப்பானடர்ந்தவினை
போக்கிக்கருணைபொழிந்திடுவான்—நீக்கனலு
நாட்டத்தான்காளத்திநாதனையேத்தும்பெரியார்
கூட்டத்திலென்னகமேகூடு. (௫)

வஞ்சியேகாளத்திவாழ்வானருகிருக்க
வஞ்சுகின்றதென்னோவறைகுவாய்—மிஞ்சிநமன்
வந்தாலுதையுண்டமாண்புசொலிக்காட்டியினி
முந்தாதேயென்றுமுடிக்கு. (௬)

காணங்கைபங்கன்கறைக்கண்டன்றாளிணையைக்
காணங்கையாற்றொழாக்கன்னெஞ்சே—காணம்
வருந்திக்காளத்தியுறைவள்ளறனைவிட்டாய்
பொருந்துமோநிற்கேபொருள். (௭)

வாரிதியினஞ்சையுண்டுவானவருக்காரமுதங்
கோரினவண்ணங்கொடுத்தபரன்—வீரமொடு
வீற்றிருக்குங்காளத்திவேந்தன்விருப்புறச்
சாற்றிமலர்தூவிடமுன்சார். (௮)

கட்டியணைத்துக்கனகமுலையழுந்தக்
கிட்டிமுத்தந்தந்தெனதுகேதமறச்—சட்டமுடன்
வாரானோகாளத்திவாழ்வானருளமுதந்
தாரானோபொன்னடியைத்தான். (௯)

வந்தவரவைமறந்தனையோவன்னெஞ்சே
நந்தவிவாக்காளத்திநாதனைநீ—பந்தமற
எண்ணார்புரமெரித்தவேந்தலேயென்றுதுதி
பண்ணலுண்டாகும்பதம். (௧௦)

---

## வாழி.

### கலி விருத்தம்.

வாழியானைமுகன்முருகையனும்
வாழிநீறுமணியைந்தெழுத்துமே
வாழிகாளத்திநாதன்பூங்கோதையும்
வாழிகண்ணப்பன்மாணடிவாழியே.

திருச்சிற்றம்பலம்.

# சீகாளத்தி.

காளத்தீசர், ஞானப்பூங்கோதையம்மை. பொன்முகரி தீர்த்தம். சீ. காளம். அத்தி என்ற மூன்றுபதச்சேர்க்கையால் சீகாளத்தி என்றாயிற்று. அவற்றுள் சீ-என்பது சிலந்தி. காளம்-என்பது பாம்பு. அத்தி-யென்பதுயானை இம்மூன்றும் பூசித்து முத்திபெற்றன. ஸ்ரீ கைலாயகிரியில் சிவானந்தமென்கிற சிகரத்தில சுபாவமாக வெண்ணிறத்தோடு பிரகாசிக்கின்ற சிவலிங்கத்தை வாயுபகவான் சகல சீவர்களுக்கும் தான் ஆதாரமாகவிருக்கப் பூசித்து அப்பேறடைந்தனன். ஆனதாலிதற்கு வாயுலிங்கமெனப் பேராயினது. பிறகு பிரமன் சிவானந்த நிலையமென்னுஞ் சிகரத்தை பூமியிற் கொணர்ந்து இவிடத்திற்ருபித்ததனால் இதற்கு கயிலாயமெனப்பேராயது. இது வாயுலிங்கமெனபதற் கடையாளமாக இச்சந்நிதானத்திலிருக்கும் திருவிளக்கு எக்காலத்திலும் எந்தவேளையிலும் சதா அசைந்துக் கொண்டேயிருக்கின்றது. சகலவேத ஆகம புராண இதிகாச சாஸ்திர மந்திர இரகசியங்களையும் ஒரு பர்வதரூபமாகி யதன்மேல் ஸ்ரீசுப்பிரமணியர்வீற்றிருக்கும் ஓர் மலையுமுண்டு. துர்க்காமலையுமுண்டு. அகத்தியமுனிவர் பிரமனை நோக்கித் தபஞ்செய்துகொணர்ந்த பாதாளகங்கையே, பொன்முகரி சுவர்ணமுகிமுதலிய இருபத்தைந்து திருநாமங்களோடு விளங்குகின்றது. இத்தலத்தில் பாதாளவிக்கினேச்சுரர் முதலிய பல மூர்த்தங்களும் பலராலும் வழிபட்ட பலசிவலிங்கங்களும் பலதீர்த்தங்களுமுள. வேடுவகுலத்திற்பிறந்த திண்ணனென்னும் கண்ணப்பநாயனார் ஆறுநாளைக்குள்ளாக ஆறு உட்பகைகளையும் சிவார்ப்பணஞ்செய்து ஆராதாரநிலையேறி கண்ணிடந்தப்பிச் சிவபெருமானால் "நில்லுகண்ணப்ப நில்லுகண்ணப்ப - என்னன்புடைத்தோன்ற னில்லுகண்ணப்ப" என்றழைக்கப்பட்டு தைமாத மிருகசீரிடத்தில் முத்திபெற்றனர். கடைச்சங்கத்து வித்வசிரோமணியாகிய நக்கீரதேவரும் கைலைபாதி காளத்தி பாதியென திருவந்தாதிபாடி முத்திப்பெற்றனர். சிவகோசரியாரென்னும் இத்தலவர்ச்சகரும் சிவனடிப்பெற்றனர். இரண்டு தாசிப்பெண்களும் பெருமானைத்தரிசித்து சோதியி லிரண்டறக்கலந்தனர். இன்னும் பலரும்பூசித்து முத்திபெற்றிருக்கின்றனர். பலவதிசயங்களுமுள்ள தலம். சமயாசாரியர் மூவராலும் பதிகம்பெற்றுள்ளது.

திருச்சிற்றம்பலம்.

# உ0.—திருவொற்றியூர்.

## காப்பு.

பஃறொடைவெண்பா.

அத்தி முகனே யடியார்க் கருள்பரனே
யெத்திசையும் போற்று மிறைவனே—முத்தர்புகழ்
சத்தியருள் புத்ரனை துத்தமம லர்ச்சரண
சித்தமுநி னைக்கவரந் தா.

## நடேசர்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

புரமெரித்த தனிமுதலே போற்றி காமன்
பொடியவழல் விழிதிறந்தாய் போற்றி பூமன்
சிரமறுத்த நகநுதியாய் போற்றி யேமன்
செருக்கழிக்குந் திருவடியாய் போற்றி போற்றி
யுரஞ்செறிந்த சலதரன்வா யுதிரஞ் சிந்த
வொருவிரலா லாழிவகுத் தொறுத்தாய் போற்றி
யருமறைக ளொலிசிலம்போ டெவையு மாட
வனவரத நடம்புரிசெஞ் சரணம் போற்றி.

## சிவகாமியம்மை.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மைவளருந் திருமிடற்று னழல்செறிந்த திருக்கரத்தான்
மதிவெண் ணீற்றான்
பையரவப் பணியுடையான் பாகமதூ பிரியாத
பண்பு மிக்காள்
சைவமெனும் பயிர்தழைக்கச் சீகாழி மறைச்சிறுவர்க்
கமுத மீந்த
கொய்வனச மலர்நிறத்தாள் மெய்ம்மறைகா ளுப்பதத்தான்
குறித்து வாழ்வாம்.

## தியாகேசர்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மறைதேடும் பதத்தானை மாசற்ற மணியானை
மாலேற் றானைக்
கறையாடு மிடற்றானைக் கங்கைமுடிக் கணிந்தானைக்
காத லாய்ச்சிற்
பறையோடு நடித்தானைப் பரவையிற்க ணடைந்தானைப்
பணிப்பூ ணானை
முறையோங்குந் திருவொற்றி யூரானைக் கருதுநெஞ்சே
முத்தி யுண்டே.

## சுப்பிரமணியர்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வண்டமிழ் வாணர்க் கன்று வந்தரு டந்து ஞானம்
விண்டமிழ் வேலோ யாதி வீரம யூர நாளு
மண்டர்கள் பணியு மொற்றி யண்ணலா ரடியைப் பாடுந்
தொண்டெனக் கருள்வைசோதித் துணையடி போற்றிபோற்றி.

## திருநந்திதேவர்.

கலிநிலைத்துறை.

மன்னுமாலய னிந்திரன் வானவ ரசுரர்
மின்னு மாமணி முடியடி பொருந்தவக் கைலை
துன்னு மாதவன் சிலாதர முனிவனற் றவப்பே
றென்னு மாப்பெரு நந்தியா னிணையடி தொழுவாம்.

## திருஞானசம்பந்தசுவாமிகள்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கனல்புனலி லேடேறக் கனக மாக்க
கதித்தபுத்தர் தலையிடறக் கருதுவேத
வனமதனிற் கதவடைக்க வெந்த வென்பு
வங்கமடந் தெழுவந்த வலிய நாகச்

சினந்தவிர்த்தாண் பனையைப்பெண் பனைய தாக்கிச்
சிறைக்கூனை மாற்றி முயலகனை நீக்கி
மனமுவந்து மணவறைக் கென்றழைத்து முத்தி
மடைதிறந்த புகலிசெல்வர் மலர்த்தாள போற்றி.

## திருநாவுக்கரசுசுவாமிகள்.

### நேரிசைவெண்பா.

நஞ்சருந்தி நீறுடி நால்வாய் மதங்கடிந்து
துஞ்சிநின்ற பிள்ளையினைத் தோற்றுவித்து—விஞ்சுபெருஞ்
சன்மிதக்கக் காட்டிற் கதவு திறக்கவருள்
சொன்மிகுவா கீசரடி சூடு.

## சுந்தரமூர்த்திசுவாமிகள்.

### நேரிசைவெண்பா.

அராவுண்ட சேயழைக்கு மன்றூற்றி விட்ட
வராப்பொன்னை மீளவரு விக்கும்—பராபரனை
மாதுபாற் றூதுவிடும் மாவேறும் வன்றொண்டர்
பாதமலர் நெஞ்சே பணி.

## மாணிக்கவாசகசுவாமிகள்.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வாதுபுரி புத்தர்வலு வடக்கிவைகை யழைத்துநரிப்
பரிய தாக்கி
மாதுபங்கன் மண்சுமக்க மன்னவனு லடிபடுத்தி
மருவு மூகைக்
கோதிலரு ளடுத்தோதக் குழகன்மகிழ்ந் தெழுததிருக்
கோவை பாடுந்
தாதவிழும் திருவாத வூரர்திருத் தாளிணையைத்
தலைமேற் கொள்வாம்.

## சண்டேசுரர்.

கலிவிருத்தம்.

தாதை தாளைத் தடிந்துபி ரான்றிருப்
பாத தாமரைப் பூசனை செய்துபூங்
கோதை மாலை புனைந்திடுஞ் சேய்ஞலூர்
நாத னாரடி நம்முடி மேற்கொள்வாம்.

---

## பட்டினத்துப்பிள்ளையார்.

விருத்தம்.

மட்டி லாநிதி படைத்துயர் மனையறஞ் செலுத்தி
யட்ட மூர்த்தியோ ராரிய னுகிவந் தருள
வொட்டு பற்றின்றி யுலகினைத் துறந்தமெய்ச் செல்வப்
பட்டி னத்தரைப் பரவிநம் பழவினை தெறுப்பாம்.

---

## நாயன்மார்கள்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கண்பிடுங்கிக் கழுத்தரிந்து வயிற்றைக் குத்திக்
  கதித்தபொரு டனைக்கொடுத்துக் கனிக்கொப் பான
பெண்ணளித்துப் பெற்றபிள்ளை யறுத்து நீரிற்
  பிறங்குநெல்லைச் சமைத்திட்டுப் பெறல ருஞ்சீர்
வண்மைமிகு சிவவேடத் தஞ்சி வாவா
  வாவியுடல் பொருளுடன்மற் றெவையு மையன்
றிண்மைமெசெறி மலரடிக்கே தந்து ஞானத்
  தீரரா நாயன்மார் திருத்தாள் போற்றி.

---

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

## திருநேரிசைச்சந்தம்.

அருளொடு நிறைநின் பாத மடைந்தவ ரன்பினோடு
மருவரு மலரைக் கொண்டு மாலடி பணிந்தார் சான்றோ
ருருவிருந் தயரும் வாழ்க்கை யுண்மையென் றுழைந்த நாயே
னிரும்பவ மகற்று மொற்றி யென்னையா ளுடைய கோவே. (க)

வேங்கையைக் கண்டு நெஞ்சம் வெதும்பிய மேடம் போலுங்
தீங்குறு மாத ராலுந் தீப்பசிப் பிணியி னாலும்
பாங்கறி யாம லிந்தப் பாழினி லுழன்றே னிப்பா
லேங்கிடா வழிசெ யொற்றி யென்னையா ளுடைய கோவே.()

தாய்தனைப் பிரிந்த சேய்போற் றரணியி லுன்னைத் தேடிப்
பேயெனத் திரிந்தே னிந்தப் பேதையை யாள்வ தின்றேல்
ஞாயமோ வன்ப ரும்மை நகைமொழி யுரைத்தி டாரோ
வேயமா தவர்சூ ழொற்றி யென்னையா ளுடைய கோவே. (௫)

கள்ளநெஞ் சுடையா மோகக் கானலின் மூழ்கி நாளு
முள்ளமு நெக்கு நெக்கா யுருகினே னொப்பி கந்த
தெள்ளூறு முனது பாதத் திருநிழ றனில்வைத் தன்பா
லெள்ளள வருள்செய் யொற்றி யென்னையா ளுடைய கோவே.

மெய்யெனப் பொய்யைச் சொல்லி மேதினி தன்னி லிந்நாட்
பையெனத் திரிந்தே னிந்தப் பாவியை யாள்வ தென்றோ
வுய்யவே றுண்டோ வுன்ற னுபயாற் சரண மல்லா
லெய்திட வழியே தொற்றி யென்னையா ளுடைய கோவே. ()

உன்னிரு பதத்தைப் போற்ற வுளவறி யாத யானுங்
கன்னியர் வலையிற் சிக்கிக் கனமழி வேனை யாள்வாய்
நன்னய முடைய தேவர் நான்மறை போற்றும் பாதா
வென்னிரு வினைதீ ரொற்றி யென்னையா ளுடைய கோவே.()

கஞ்சனைச் சிறையி லிட்ட காளையை யளித்தாய் போற்றி
வஞ்சனை யகற்ற யானும் வாய்மையொன் றறியே னிந்தப்
பஞ்சனை யாள வேண்டும் பரமலம் பரந்தோய் நெற்றி
இஞ்சிசூழ்ந் திலங்கு மொற்றி யென்னையா ளுடைய கோவே.()

தந்தைதாய் பெண்டிர் தெய்வஞ் சற்குரு மாமன் சுற்ற
மந்தமாம் பொருளும் யானு மகிலமு நீயே யென்று
பந்தவா ணைவந்த விர்த்துன் பதத்தினுக் கடிமை யாக
வெந்தைநின் னருள்பா ரொற்றி யென்னையா ளுடைய கோவே.

பரவையி னலையிற் பட்ட துரும்பெனப் பாவை நல்லார்
பெருமித மோகந் தாழ்ந்து பிறப்பதற் காளாய் நைந்தே
னரவினிற் றுயிலு மாலு மலருறை யயனுங் காணு
வொருவனே யாளா யொற்றி யென்னையா ளுடைய கோவே.

சிறியதோர் மதவு தீமை செய்யினுய் பொறுக்கு மாப்போ
லறிவிலா வுணர்வி னாலே யரியவுன் புகழி யற்றப்
பெறும்பிழை யதனை நீக்கிப் பேரரு டந்தாட் கொண்டுமக்
குறுயபினை யகற்று மொற்றி யென்னையா ளுடைய கோவே. ()

---

போற்றிக்கவி.

போற்றி யென்பணி போத சதாசிவ
　　போற்றி வெண்பிறை கொன்றைச் சடாதர
போற்றி நந்தி மிசையூர் பவபர
　　போற்றி யேழுட னேழ்சங் கரவர
போற்றி நால்வர்க் கறத்துறை தந்தவ
　　போற்றி யன்பர்க்கன் பானென நின்றவ
போற்றி பிரம சொரூப சதானந்த
　　போற்றி யொற்றி யுறைதிரு வாளனே

---

வடிவுடையம்மை

# தியானபஞ்சகம்.

விநாயகர்.

பஃறொடை வெண்பா.

மங்களஞ் சேரொற்றி மாதாம் பிகையடிக்குச்
சங்கையிலாப் பஞ்சகத்தைச் சாத்தவே—துங்கமிகு
தந்திமுகர் தொந்திவயி றிந்துபிறை தந்தமுடை
யைந்துகரத் தெந்தைதுணை யாம்.

---

## பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

காரொத்த குழலழகு மதியொத்த வதனமுங்
கனியொத்த செவ்வதரமுங்
கருணையே வழியுமிரு விழியினழ குஞ்சீர்
கதித்தகுமிழ் நாசியழகு
மேரொத்த திருமிடறு மிணையின்ம டக்கிள்ளை
யேந்திய கரத்தினழகு
மிகமெலாம் பெற்றுப் புரக்கின்ற திருவயிற்
றிசைந்தபொன் னுடையழகுஞ்
சீரெலாங் கொண்டே திரண்டெழுந் தென்னச்
சிலம்பசை பதத்தினழகுஞ்
சிற்றறிவி னுலெடுத் தோதவச மாகுமோ
செகமகிழு மொற்றிநகர்வாழ்
தாரணியெ லாமுண் டுமிழ்ந்தவன் றங்கையே
சமியேன் றொழப்பெறுவனோ
தஞ்சமெனு மன்பருறு சஞ்சலந் துஞ்சவரு
பஞ்சாக்ஷரீ கௌரியே. (க)

சேலொத்த விழியினர் பாலொத்த மொழியினர்
தேனொத்த மெல்லிதழினர்
செண்டொத்த முலையினர் வண்டொத்த குழலினர்
தேசுற்ற தேகத்தினர்
வாலுற்ற விடவரவி னல்குற் றடத்தினர்
வன்மைசெறி நெஞ்சத்தினர்
மன்னுமணி கலையணியு மிணையலன விடையினர்
மடவன்ன வொயில்நடையினர்
மாலுற் றனங்கன்விடு மலர்வாளி யாலுயிர்
மயங்கிமன தலையாளரும்
வஞ்சகர்க் காளாய் வரைந்தமுறி வாங்கவொரு
கோடிவர்தன மம்மணி
தாலத்தை யோரடி யளந்தவன் றங்கையே
தமியனேற் கருள்கண்டாய்
தஞ்சமெனு மன்பருறு சஞ்சலந் துஞ்சவரு
பஞ்சாக்ஷரீ கௌரியே. (உ)

ஆதரவ தாகுநின் பாதமலர் தலைகொண்
டடைந்தவடி யார்கலனெலாம்
அநியாய மாகப்பொய் வினையினிற் சிக்கியே
யதிவிரக பூசலெய்திப்
போதவுடல் பிணிகொண்டு நரைதிரைப் பொறையுண்டு
பொங்கிபெழு மறலிகையிற்
புடையுண்டு நரகத் தடைந்துகனி யலையுண்டு
புந்திமிக வாடாமலே
வேதன் முதலாகச் சராசர மனைத்தையும்
விளங்கிட வளித்தவனையே
விரைமலர்ச் சேவடிக டரல்வேண்டு மிதுசமய
மெய்யொற்றி யம்பதியில்வாழ்
தாதுவிழு துளபமணி மாயவன் றங்கையே
தமியனேற் கருளுகண்டாய்
தஞ்சமெனு மன்பருறு சஞ்சலந் துஞ்சவரு
பஞ்சாக்ஷரீ கௌரியே. (௧)

முந்நீ ருடுத்தபுவி முழுதாள வேண்டிலேன்
முடிவிலாப் பொருள்வேண்டிலேன்
முத்தனைய நகையார்க ளுறவையும் வேண்டிலேன்
முனிவர்துதி பரவவாழும்
பொன்னாடு வேண்டிலே னளகையது வேண்டிலேன்
பொற்பமைந் திடுகமலனூர்
தன்னாடு வேண்டிலேன் றண்டுளப மாலையான்
றன்னகரும் வேண்டிலேன்யா
னின்னாத ரம்பெருகி நின்கமல வடியிணையை
நித்தலும் பூசைசெய்து
நெஞ்சினி னினைக்கின்ற வன்பருக் கன்பனாய்
நின்றுபணி செய்வதொன்று
தன்னையே வேண்டுமிஃ தென்னெண்ண மம்மணீ
தமியனேற் கருளுகண்டாய்
தஞ்சமெனு மன்பருறு சஞ்சலந் துஞ்சவரு
பஞ்சாக்ஷரீ கௌரியே. (௨)

ஒருகாலுன் கோயில்வலம் வரவேண்டு மென்னவே
யுன்னினோ ருலகாளுவா
ருண்மையுடன் வந்துனைக் கண்டுதுதி செய்தவர்க
ளும்பர்பதிக் காளாகுவார்
மருவரு மலர்கொண் டருச்சித்த பேர்களம்
மாலயன் பதவிபெறுவார்
மாறாத நின்புகழை வாயார வேத்துவோர்
மகேச்சுர ப மெய்துவா
ரருகாத வன்பருக் கன்பனு மெந்நாளு
மகலாது தொண்டுசெய்தே
யந்தமுள நினதடியை முடிவைத்த பேர்களை
யண்டாது பிறவியென்றுந்
தருவார்ந்த வாதிபுரி தலமேய வம்மையே
தமியனேற் கருளுகண்டாய்
தஞ்சமெனு மன்பருறு சஞ்சலந் துஞ்சவரு
பஞ்சாக்ஷரி கௌரியே. (௫)

## வாழி.

கட்டளைக்கலிப்பா.

வெள்ள வேணி யலைக்கொடி வேதியன்
வீறு வெண்கம லாசனி யாற்கடற்
பள்ளி செங்கம லாசனி யும்பர்கள்
பத்தி செய்யடி யார்களு மக்கமுந்
தெள்ளு நற்றமிழ் நீறு பஞ்சாக்கரந்
தெய்வ வேதிய ரொற்றியெ னும்பதி
வள்ள வாய்மலர் வண்டுரு மாலையும்
வாழி கேட்டளங் கொண்டவர் வாழியே.

திருச்சிற்றம்பலம்.

படம்பக்கநாதர், மாணிக்கத்தியாகேசர். வடிவுடையம்மை. கிருபாதீர்த்தம், அலைவாய்த்தீர்த்தம். அத்திவிருட்சம், மகிழவிருட்சம். ஆதிசேடனால் பூசிக்கப்பட்டது. பிரமன், கங்கை, பார்வதிமுதலியோர் பூசித்துத் திருநடன தரிசனம்பெற்றனர். சுக்

தரமூர்த்திசுவாமிகள் சங்கிலி நாச்சியாரைத் திருமணஞ் செய்விக்கும்பொருட்டு வேண்ட, சிவபெருமா னிரவிற் சங்கிலிநாச்சியாருக் கறிவித்து அவரனுமதியாற் சுந்தரமூர்த்தி சுவாமிகளை மகிழடியிற் பிரமாணஞ் செய்வித்தபின்னர் மணப்பித்தருளினர். கலியநாயனார் வணிகர்குலத்தில் வைகாசிமாசம் அசுவனியிற் றிருவவதாரஞ் செய்தருளித் திருவிளக்குப் பணிபுரிந்து வருபவர், இறுதியிற் பொருளின்மையாற் றடைப்படுவதறிந்து மனைவியை விலைகூறியுங் கொள்வாரின்மையால் தாந்தொடுத்த பணிமுட்டுருவண்ணம் உதிரத்தை வார்த்தாவது தீபமேற்றக் கருதி, தமதுகண்டத்தைச் சேதித்தபத்தியைச் சிவபெருமான் வியந்து ஆடிமாதங் கேட்டைநாளிற் றமது சாயுச்சிய பதவியருளினர். காவிரிப்பூம் பட்டினத்திலே வேளாள குலத்திற் சாமுசித்தரா யவதரித்தருளிய திருவெண்காடரென்னும் பட்டினத்துப்பிள்ளையார் பலதலங்களுந்தரிசித்து இங்கடைந்து ஒருபாவொருபஃது முதலிய பிரபந்தங்களும் தனிப்பாடல்களும் அருளிச்செய்து, பேய்க்கரும்பு தித்திக்கும் படியான முத்தித் தலமெனத் தெரிந்து, கடற்கரையிற் சிறுவராற்செய்யப்பட்ட மணற்கேணியில் இலிங்கமாய் விளங்கியருளினர். இச்சிவாலயமத்தியில் பிலத்துவார மொன்றிருக்கின்றது. அதில் வட்டப்பாறைநாச்சியாரென்று சொல்லப்படும் ஒருபராசத்தி யிருக்கின்றனள். ஐயடிகள் காடவர்கோன்நாயனார் க்ஷேத்திர வெண்பா பாடியருளியதலம். திலீபமகாராஜனுக்கு நடன தரிசனங் கொடுத்து அவன்பாவம் நாசமாகும்படி செய்தமையால் அசையுந்தியாகரென நாமமுண்டாயிற்று. மாந்தாதாவென்னு மரசனனுப்பிய திருமுகத்தில் வரிபிளந்தெழுதியகாரணத்தால் எழுத்தறியும்பெருமானெனத் திருநாமம பெற்றனர். ஆதிபுரீசுரனெனவுந் திருநாமமுண்டு. பலதேவர்களாலும் முனிவர்களாலும் பூசித்த இலிங்கங்கள் பலவுள. இன்றுங்காணலாம். சமயாசாரியர் மூவராலும் திருப்பதிகம் பெற்றுள்ளது.

திருச்சிற்றம்பலம்.

பாடியெனவழங்குந்

# ௨௧.—திருவலிதாயம்.

—:o:—

## கலித்துறையந்தாதி.

### காப்பு.

கட்டளைக்கலித்துறை.

ஆரணத் தைச்செய்த வாதியைச் சோதியை யண்டத்துக்குக்
காரணத் தைத்திரு வாழ்வலி தாயத்துக் கண்ணுதலைப்
பூரணத் தைக்கலி னந்தாதி யாற்றொழப் பூட்கைமத
வாரணத் தைசெய்ய மாமலர்த் தாளில் வணங்குதுமே.

### சமயாசாரிகள்.

கட்டளைக்கலித்துறை.

அங்கத்தை பூமையைப் பாம்புண்ட மைந்தனை யாலயத்தின்
செங்கல்லை நாதனை திரவிட வேதத் திறமையினாற்
பங்கமி லாம லுருவாக்கிப் பேசிப பரிந்தெழுப்பித்
தங்கம தாக்குநர் தேசிகர் பொற்றா டலைக்கணியே.

---

### நூல்.

தாமரைப்பூந்தடந்தண்வலிதாயத்திலுற்றதையல்
வாமரைப்பூதத்துநாதரைக்குண்டலிமன்னுபரந்
தாமரைப்பூப்படைத்தாரையங்கத்திற்றரித்தவரைக்
காமரைப்பூதிசெய்தாரையெஞ்ஞான்றினுங்கைதொழுமே. (௧)

தொழப்பாகுவோருக்கருள்புரியண்ணறுடியிடைநற்
செழும்பாகுபோன்மொழித்தாயம்மைகூறுடைச்சேவகனென்
றெழும்பாகுலாவுமெய்யன்பாற்பரசவதென்றுகொலோ
விழும்பாகுமெய்கொண்டிழன்றிடுவேள்வியன்பூவகத்தே. (௨)

அகத்தியன்பாரத்துவாசனுஞ்சூழ்ந்துயராரணஞ்சொன்
மகத்தியன்பாற்புரிவண்பாடியன்கண்மதியனைய
முகத்தியன்னப்பெடைநேர்நடைத்தாயெனுமொய்குழலா
ளகத்தியன்மன்னனையாரணத்தாதியையண்டுமினே. (௩)

அண்டம்பலபடைத்துக்காத்துமீண்டுமழிப்பவன்சீர்
பண்டம்பலவன்வியாழனைக்காத்தபதியிசைக்கிற்
கண்டம்பலவனைநோக்கும்வெள்கிடுங்கண்முழந்தாள்
அண்டம்பலவின்சொலர்சூழும்பாடியரும்பதியே. (௪)

அரும்பன்னகொங்கையத்தாயம்மையின்மீதிலாதரத்தான்
பெரும்பன்னகங்களிலோங்கியவெள்ளிப்பிறங்கலிலே
இரும்பன்னகம்புனைந்தனபலரக்காப்பவனெவ்வுலகும
விரும்பன்னமார்வபன்மாவலிதாயத்துவேதியனே. (௫)

வேதியரேனும்வலிதாயநாதனைவேண்டலர்கீழ்ச்
சாதியரேயபிமானமிரண்டையுந்தள்ளியண்டாக்
க தியரேசரணந்தருவீர்மலையாரணங்கின்
பாதியரேயெனிற்பஞ்சமராயினும்பார்ப்பனரே. (௬)

பார்ப்பதிநாயகன்றேவின்றேற்போர்த்தமெய்ப்பண்ணவர்கோ
சேர்பபதிமாவலிதாயத்தலம்பலர்செய்பவதனைதப் [ன்
பேர்ப்பதியாமெற்றுகவெங்கணுமோடிப்புன்பேதையர்போல
வேர்ப்பதியாக்கையென்னன்னெஞ்சமேயங்குமேவுதுமே (௭)

மேவுதும்பையரவாபரணத்தனைவீங்கிவண்டர்
கூவுதும்பைச்சடையானைச்சிகரிக்கொடிச்சியைத்
தாவுதும்பைதனுடைத்தாமெம்வலிதாயன்றன்னைவினைச்
சேவுதும்பைத்தறித்தென்மனமேகதிசேருகைக்கே. (௮)

சேராதனஞ்செய்யிலல்லியங்கஞ்சத்திருமலரா
யோராதனஞ்செய்துலாம்வலிதாயத்திலுற்றகல
ஆராதனஞ்செய்யநெஞ்சாலியற்றியனுதினமூர்
கீர்த்தனஞ்செய்துகண்டனைப்போற்றுதியருக்கே. (௯)

தீயருக்கன்மதிமண்ணீர்வளிவெளிசெப்புமுரு
வாயருக்கன்புனைந்தார்க்குகப்பாம்வலிதாயமெனும்
வாயருக்கன்னையாந்தாயம்மைகோச்சுவணக்கஞ்செயாத்
தீயருக்கன்புடனெவ்வாறுகூடப்புகுஞ்செங்கரமே. (௧௦)

செங்கரஞ்சென்னிகுவித்தார்க்குப்பாடியிற்சேர்ந்தருள்செய்
தங்கரஞ்சென்னியனுக்கருளேதருதூயர்விடம்
பொங்கரஞ்செந்நிறமேனிக்கணியெனப்பூண்டவர்மா
தங்கரஞ்சென்னியையக்கரநெஞ்சிலழுத்துமினே. (௧௧)

அழுத்துமினோநமன்றூதுவரிங்ஙனணுகுமுன்னீ
ரெழுத்துமினேருடனில்லாதின்றேநுயதெண்ணத்திலே
வழுத்துமினோர்வலிதாயத்ததிபனைவழ்த்துமவர்
வழுத்துமினோரிழையாகுநற்றாயம்மைமன்னனையே. (௧௨)

மன்னனைப்பூசலார்மார்புதித்திட்டமணியையுழலை
நன்னனைநேர்முறுவற்செறிதாயம்மைநாயகனைப்
பொன்னனையார்செறிநல்வலிதாயத்தெம்புங்கவனை
யென்னனைபோல்பவனைப்பணியார்க்குறுமேதங்களே. (௧௩)

ஏதங்கலந்தபுன்கள்வர்கடேசிவலிங்கமென
வேதங்கமுன்புவழுதுணங்காயினைமேவவைத்தோன்
வேதங்கறங்கும்வலிதாயத்தென்றும்விளங்குகின்றான்
பாதங்களையடுத்தேத்திடப்பாறும்பாதகமே. (௧௪)

பாதகம்பாற்றியருளுவையென்றுனைப்பற்றினின்றேன்
சீதகம்பாநதியிற்பெருநீத்தந்திரைத்துவந்த
போதகம்பார்ப்பதிகைகந்தனைத்தீந்தவொண்பொற்றழும்பார்
நாதகம்பாங்கணத்தாயம்மைமேவியநாயகனே. (௧௫)

நாயகபாலனையிஞ்ஞான்றுவந்துநணுகிவரத்
தாயகபாலனைசெய்குமைமுப்புரஞ்சாம்பர்புரி
சாயகபாலனைபாலுணப்பேறுதருதியெனத்
தூயகபாலனைத்தாயம்மைகோனைத்துதிமனமே. (௧௬)

துதியரைமாத்திரையேனும்புரிபவர்தூய்ப்பாடியாம்
பதியரையன்னவர்செந்தாமரைத்தாள்பணிந்துவரு
முதியரைநாளும்பிறப்பிறப்புத்தொழின்முற்றிவரும்
விதியரைக்கார்நிறப்பாசவெங்காலரைவெல்குவரே. (கஎ)

வெல்லம்பழங்கராவொழித்தாயெனுமெல்லியலா
ணல்லம்பழகுறுநேத்திரத்துக்கேற்றநாயகன்ற
னெல்லம்பழனவலிதாயம்போற்றிநெடுங்கயிலை
யில்லம்பழவினையீர்த்தளிப்பானன்பர்க்கென்பர்களே. (கஅ)

என்புறுந்தேகமெடுத்தவர்க்காரூரினிற்சிறந்த
வின்புறங்காசித்தலமிறந்தோர்சகுமெழிற்புலியூர்
முன்புறுங்கோலங்கண்டேத்தினர்க்கெய்திடுமுத்திநல
மன்புறுநாதன்வலிதாயத்தீகுவனுத்திகரே. (க௯)

ஆத்திவலம்புரிபொன்னிதழ்க்கொன்றையலர்குறித்துச்
சாத்திவலம்புரிகண்டத்தெந்தாயைச்சதுமுகனே
டேத்திவலம்புரியான்சேர்வலிதாயத்தீச்சுரனைப்
போற்றிவலம்புரிவார்கண்மெய்ஞ்ஞானத்துப்புண்ணியரே உ௦

புண்ணியம்பாவங்களின்னனவென்றுயர்போதகர்பா
னண்ணியம்பாதம்பணிந்தறிந்தேபுகழ்நன்னலத்தை
யெண்ணியம்பாம்விழித்தாயம்மைதாவியவீசனடிக்
கண்ணியம்பாதவரேறுர்பவத்தின்கடற்கரையே. (உக)

கடலம்புவிக்கணிபாம்வலிதாயத்தைக்காண்மினிந்த
வுடலம்புகுமுயிர்போமுனந்தாயம்மையோடரன்றன்
மடலம்புயங்கர்தாள்களையெண்ணுமின்மாயவினைப்
படலம்புறஞ்செலுமார்த்தாண்டனைக்காண்பனியெனவே. உஉ

பனிக்கமலஞ்செறிநீர்த்தடத்தாயப்பதிக்குமந்தா
இனிக்கமலங்குபொற்கோடீரனுக்குக்கிளர்மறையின்
கனிக்கமலம்பெறுங்கற்பகத்துக்குக்கருத்தினைசை
னிக்கமலங்கணமக்கறும்வாழ்த்தென்றனிமனமே. (உ௩)

தனிச்சங்கமாரனுமான்றீர்த்தப்பாடித்தலத்திலகும்
அனிச்சங்கழலுடைத்தாயம்மைநேசனடியிணையை
யினிச்சங்கையின்றிமெய்யன்பர்களீட்டத்திருந்தகத்தி
லுனிச்சங்கமாம்பவமோடப்புகழினையோதுதுமே (௨௪)

ஓதுங்கலைவெளுத்தீந்தவன்சென்னிக்குமொள்வாளினன்
மோதுங்கலையரிவெட்டாயர்க்குங்கரமுன்பருள்பூ
மாதுங்கலைமகளும்புகழ்தாயெனும்வல்லிபதி
மீதுங்கலைநிகர்நெஞ்சுற்றுருகுமின்வீணர்களே. (௨௫)

வீணாரவாரங்கணீக்கிவன்றூயபத்துமேவியராப்
பூணாரவானவனாருயெனுஞ்செல்விப்புருடனையச்
சேணாரவாகக்கொண்டுசேவித்துநிற்குந்திருவருளை
மாணாரவாழ்த்திடவம்மின்கள்காலன்வருமுன்னமே. (௨௬)

வருதும்பிதோலுரிந்தான்வலிதாயத்தில்வானுலகங்
கருதும்பிரானருட்டாயம்மைநேசன்முக்கண்ணுதலோன்
பொருதும்பியாலுங்கடுக்கையங்கண்ணிபுனைந்தயயங்
தருதும்பிரார்த்தித்தபேருக்கென்றன்பினிற்றங்கினனே. (௨௭)

தங்கந்திரங்கபத்தன்வீசுதிண்சிலைதண்மலர்போற்
பொங்கந்தாப்புனைந்தாரைப்புகழ்மலிபுண்ணியரைத்
துங்கந்தருகணநாயகரன்னைத்துணைவரெனு
மங்கந்தரத்தரைப்பொன்வலிதாயத்தடுத்துய்ம்மினே. (௨௮)

அடுத்துப்புரந்தரனாதியர்போற்றவவர்க்கபயங்
கொடுத்துப்புரந்தரவோட்டியமாயக்கொடியர்களைக்
கடுத்துப்புரந்தனைசெய்தவன்றாயத்தைக்காண்மின்வினை
தடுத்துப்புரந்தரன்மீளாப்பதந்தருந்தாரணிக்கே. (௨௯)

தாரணிசுத்தியவூருணிசூழ்வலிதாயபர
னாரணிபொற்சடையாறணியற்புதனண்டர்பிரான்
பேரணியுற்றிடுவாரணிகொங்கைபெறுஞ்சிலையாம்
பூரணியம்பிகைநாரணிமன்னனைப்போற்றுதுமே. (௩௰)

போற்றிக்குவளைகடலலைரோர்துயர்போக்குதுங்காண்
சாற்றிக்குவளைமதனனார்பண்ணையிற்றங்குகளை
மாற்றிக்குவளையெறிவலிதாயனைவாண்முகத்தி
னீற்றிக்குவளைசேர்கைத்தாயம்மாளுக்குநேசனையே. (௩௧)

நேசத்தலங்கலயரர்தினந்தொழுகின்றபல
தேசத்தலங்களுக்குள்ளேசிறந்ததுசீர்த்தமலர்
வாசத்தலங்கருங்கூந்தற்ரூபம்மையின்மன்னனுறை
மாசத்தலங்கவ்வலிதாயமென்றுமதிப்பர்களே. (௩௨)

மதிக்கப்பரைபெனுந்தாயம்மையென்பாட்குமாலையிட்டோன்
விதிக்கப்பணைசரமேந்தியவீசன்விமலமுள
துதிக்கப்பரையிரங்கிக்காத்தவன்றாட்டுணையகத்திற்
பதிக்கப்பரசுமெய்பண்பர்களேயெம்பரமர்களே. (௩௩)

பரமரம்போதகத்தானனத்தார்தந்தைபார்ப்புடனே
பிரமரம்போதகத்தார்வலிதாயத்திற்பிஞ்ஞகர்பூப்
பிரமரம்போதிநிறத்தரேத்துஞ்சுப்பிரமரருள்
வரமரம்போல்விழுந்தாட்படுவார்க்கென்றன்வந்தனமே. (௩௪)

வந்தனந்தாளைசையாற்செய்தபேர்க்குவலியவினை
சிந்தனந்தானகலத்தம்மையாடனஞ்சேர்பரமன்
கந்தனந்தானவதனத்தனத்தன்கழுதுபல
தந்தனந்தானவெனும்வலிதாயஞ்சரித்தனனே. (௩௫)

சரித்திரங்கொள்ளையவற்றுட்சுருதியைச்சார்ந்தவையே
சரித்திரமென்றவற்றுட்கூறுஞ்சத்தார்த்தனிப்பெயருச்
சரித்திரங்கித்தொழுமெய்யடியார்குழுசந்தசஞ்சஞ்
சரித்திரந்துய்யும்வலிதாயமாம்பதிசார்மனனே. (௩௬)

சாரம்பரவுவலிதாயத்தண்ணலைத்தண்மதியோ
டீரம்பரவுமுடித்தகோடீரத்திறைவரைச்சீர்
சேரம்பரவுலகத்தர்தினம்பணிதேவரையெர்
சேரம்பரவுமெய்ஞ்ஞானியரேபவசித்தவரே. (௩௭)

நீத்தத்துவந்தெறியேட்டிரேற்றியநின்மலரா
மாத்தத்துவந்தெரிசம்பந்தர்வாழ்த்தியவண்புகழான்
பூத்தத்துவண்டினஞ்சூழ்வலிதாயமாம்பொற்பதியை
யேதத்துவண்டிரியும்பவமாவணவினர்களே. (௧௮)

ஈனரியம்பரிதாம்பவச்செய்கையிழந்தரக்க
ரூனரிபம்பரியம்புயன்காணுவுயர்கயிலைத்
தானரியம்பரிவர்த்தித்தொலிவலிதாயத்துவாழ்
கோணரியம்பரிபாகியதேவரைக்கூடுமினே. (௧௯)

கூடுங்களத்தனத்தாலலைபாதுகொடியநஞ்ச
மாடுங்களத்தனைத்தாயம்மைகோன்றனையாலையினின்
றோடுங்களத்தலையும்பாய்வலிதாயவொண்டலத்தை
நாடுங்களத்தனைநாகப்பூணரனைநல்லவரே. (௨0)

நல்லானையானனனைச்சூரனுயுளிறுன்கழித்த
வல்லானையாவருமேத்தவுயிர்த்தருள்வானவனைப்
புல்லானையூரும்வலிதாயக்கோமானைப்போற்றிமறை
கல்லானையென்படைத்தான்விதாதாவிர்தகாசினுக்கே. (௨௧)

காசித்தலங்கலந்துப்பவர்க்காம்பலன்கைவருங்காண்
ரேசித்தலங்கலணிந்துமுப்போதுநன்னீதிகளை
வாசித்தலங்கருங்கூந்தற்றூயம்மைமணமகனைப்
பூசித்தலங்கண்வலிதாயத்தின்கட்புரிபவர்க்கே. (௨௨)

புரிபதத்தாணிரைப்பாவலிதாயப்புரிவிமலன்
அரிபதத்தானுங்குழலம்மைபார்பதியன்றுபுலி
உரிபதத்தானைபுனைந்தவெம்மான்றனுபயவிதழ்
விரிபதத்தாமரைகட்கமேவரும்வீட்டரசே. (௨௩)

வீட்டும்பிரகிருதித்துறுமாயையையமேதையரைக்
கூட்டும்பிரமரக்கூட்டத்தினைப்பூங்குரீஇக்குழுவை
யூட்டும்பிரசப்பொழில்வலிதாயத்தினுத்தமன்பேர்
காட்டும்பிரமவிலையடுத்துய்ம்மின்கயவர்களே. (௨௪)

கயத்தாளைவாளையடிக்குமபாடிக்கண்கலசநிகர்
குயத்தாளைவாளைவடுவிளைவேலைக்குவளையைவெல்
நயத்தாளையம்புயனேர்விழித்தாயைநயந்தவன்பங்
கயத்தாளைநாளையென்றோதாதனுகனற்காரியமே. (சரு)

காரைக்கடுத்தமாலைச்சரமாக்கிமுன்கண்டகர்மூன்
றாரைக்கடுத்தவற்கோர்வலிதாயமாமொண்ணகரிற்
சேரைக்கடுத்தடுத்துப்பூசனைநாளுஞ்செய்துவரும்
பேரைக்கடுத்தனைநேராகவெண்ணுவர்பேதையரே. (சசு)

பேதித்துநெஞ்சையலைக்குமொராறுபெருங்கள்வரைச்
சேதித்துவஞ்சநமன்றன்பலத்தினைச்சேவடிபாற்
சாதித்துமஞ்சனுக்காயுளீயும்வலிதாயடரா
போதித்துவந்துன்சீரைப்புரந்தருள்புல்லனுக்கே. (சஎ)

புல்லுங்கறைமிடற்றுப்பாடித்தேவைப்பொருபகையை
வெல்லுங்கறையயிறகந்தனையீன்றருள்வித்தகனைக்
கல்லுங்கரையக்கருதும்பெரியோர்கழலிணைகள்
சொல்லுங்கரையறுபேரின்பவீட்டுச்சுகந்தருமே. (சஅ)

சுகந்தக்கவேண்டுமென்றான்மனமேமுன்புதொன்முனிவர்
மகந்தக்கவாறியற்றிப்பேறுபெற்றவலிதாயநா
டுகந்தக்கமானயக்குமுலகம்மையினொண்கணவன்
சுகந்தக்கழற்கமலங்கட்கணிபலதூமலரே. (சகூ)

தூமத்தைநோக்கிநெருப்புளதென்றுதுணிவதுபோல்
காமத்தையேதருமிவ்வுலகத்துறுகாட்சியினால்
ஊமத்தைசூடும்வலிதாயனுண்டவ்வொருவனுயர்
நாமத்தைத்தீமொய்த்தவீமத்தைக்கூடுமுனம்புமினே. (ருo)

நம்பவஞ்சங்கரித்தேழையைநாளுநலிந்திடச்செய்
வெம்பவஞ்சங்கரித்தான்வலிதாயவிமலவெழில்
பம்பவஞ்சங்கரிணிக்கிணையாகடைப்பச்சைநிறக்
கொம்பவஞ்சங்கரிதாயம்மையேமகிழ்கொற்றவனே. (ருக)

கொற்றவரான்மதிக்குஞ்செல்வமுற்றெனல்கூர்ந்திடலென்
மற்றவராலிகழும்புகழும்பெற்றென்மன்னுதட்டத்
துற்றவராலினர்தாம்வலிதாயத்திலுததமன்பேர்க்
கற்றவராலருள்பெற்றுமெய்ஞ்ஞானத்தைக்கண்டபின்னே. ()

கண்டலஞ்சேற்கிணையாகுந்தாயம்மைமன்கஞ்சமுளைத்
தண்டலஞ்சேற்றினுழையப்பிறழ்வலிதாயத்தினின்
மண்டலஞ்சேண்மதிமாதுமைநாதனைவாழ்த்தலரை
யண்டலஞ்சேர்குவமல்லும்பகலுமெய்யன்பரையே. (௫௩)

அன்பரையாதரிக்குந்தயாமூர்த்தியையாரணஞ்சொன்
முன்பரையானனமைந்துடையாரைமுயன்றணிந்த
வெண்பரையானந்தவாரியைப்பாடியிலீசர்தமைத்
துன்பரையாரொடியிற்போகவேண்டிடிற்சொல்லுமினே. (௫௪)

சொல்லுங்கருமத்தொடர்பிலாப்பேருஞ்சொரூபமுமே
கல்லுங்கருவார்பிறப்பெனவுள்ளங்கரைந்தெல்லியும்
அல்லுங்கருதாதவர்க்குகிடைப்பரிதாகுமெழில்
புல்லுங்கருமாக்களவலிதாயத்தன்பொன்னடியே. (௫௫)

பொன்னம்பரமன்னம்வேண்டிகற்பாலினிற்புல்லர்களை
யின்னம்பரசுதலெற்றுக்குக்கன்னெஞ்சமேயினத்தோ
டன்னம்பரவும்வயல்வலிதாயத்தரும்பதியின்
மன்னம்பரன்மறையின்[illegible]க்காற்றுவணக்கத்தையே. (௫௬)

வணக்கஞ்சனகசனந்தனராதியர்வந்திடினுங்
கணக்கஞ்சநான்மலர்ப்பண்ணைசூழ்பாடியின்கண்ணியற்ற
விணக்கஞ்சயிலத்துமங்கையுடன்கொண்டவீசவென்றன்
பிணக்கஞ்சலித்திடவிஞ்ஞான்றுகாத்தருள்பிள்ளையென்றே. ()

பிள்ளைமதிக்குஞ்சிப்பாடிகாதன்றிகழ்பிஞ்ஞகனவ்
வள்ளைமதிக்குஞ்செவித்தாய்மனோன்வலிகொடுத்துப்
புள்ளைமதிக்குந்திகழ்வலியாக்கிப்புரந்தவன்சீர்
உள்ளைமதிக்குங்கவலையையன்றேயொழித்திடுமே. (௫௮)

ஒழித்தானைமூன்றையுமெல்லாவுயிரொடுமொத்தவரா
யழித்தானையேபுரியையவரைநின்றனையண்டினரைப்
பழித்தானைதோறுந்திரிந்தநாயேற்குப்பரிந்துதெருள்
விழித்தானையென்னல்வலிதாயநாதவிரைந்துவந்தே. (௬௯)

விரைக்கமலஞ்செங்குமுதங்குவளைமிடைவயல்க
டிரைக்கமலமபுமணிபால்விளங்குந்திருப்பாடிவாழ்
துரைக்கமலம்பெறும்பிஞ்ஞகனுக்குத்துதிநசையால்
உரைக்கமலங்களறுமென்றனர்தெளியுள்ளத்தரே (௭௰)

உள்ளத்தைத்தாபெனுவல்லிக்குநாயகனும்பர்நதி
வெள்ளத்தைச்செஞ்சடையேற்றவன்பாதவிரைமலரிற்
கள்ளத்தைநீக்கியமெய்யடியாரைக்கலந்துதினந்
தெள்ளதைலத்தாரைபோனினைப்போமெங்கடேசிகரே. (௭௧)

தேசத்தவர்புகழண்ணாமலையினைத்தேசிகர்தூர்
வாசத்தவர்மொழியாறகந்திருவர்கள்வாசிபொடு
வாசத்தவப்புழுகுப்பூனையாகிவலம்வரப்புன்
பாசத்தவரொழித்தான்வலிதாயப்பதியண்ணலே. (௭௨)

பதியார்மனத்தில்வலிதாயநாதன்பதாம்புயத்தைத்
துதியார்பலர்சிலர்முக்குறும்பைத்தள்ளித்தூயவராய்
விதியார்சிரங்கரங்கொண்டவனன்றியேமீளகில்லாக்
கதியார்தருகுவரென்றேத்துவாரிக்கடலிடத்தே. (௭௩)

கடத்தந்திதேர்மாவுலாம்வலிதாயக்கவின்பதியி
னிடத்தந்திவண்ணனிருக்கின்றனன்வினையின்றொடர்பு
விடத்தந்திடைத்தாயென்மாதொடுபோற்றினரவெங்கூம்
பிடத்தந்திருபதங்காப்பாமெனன்றெண்ணுமின்பித்தர்களே. (௭௪)

பித்தாராவாரலர்நின்றிருநாமங்களபேசுமவர்
முத்தராவாரவர்வைதேகிரிதருமூடசனர்
இத்தராவ சியராஞ்சகேயன்குருவின்னமுள
பத்தராவார்பணியும்வலிதாயத்துப்பண்ணவனே. (௭௫)

பண்ணவரும்பூதலத்தவருந்துதிடன்னிநிதம்
எண்ணவரும்பூதநாயகனேநனியின்சுவைத்தேன்
உண்ணவரும்பூதனிக்காவலிதாயமுற்றவெளி
வண்ணவரும்பூதரத்தவெனக்கருள்வண்பதமே (௬௬)

வண்ணனையூர்ந்துகும்பக்குசத்திச்சிறுவாணிடைச்சி
பெண்ணனையபோனடைச்சித்தாயென்பாளொடுபேதையர்முன்
நண்ணனையமேதையர்பால்வருங்கோமானைநக்கனைமுக்
கண்ணனைமாவலிதாயத்திலேவந்துகாணுமினே. (௬௭)

காணுதகண்களைப்புண்களென்பார்தாயாங்கன்னிகையென்
பாணுதனைம்முகனைப்புயத்தனையடுத்துருகிப்
பேணுதனெஞ்சினைக்கல்லென்பர்கன்மப்பிணியகற்றும்
மாணுதகீர்த்தியில்லாமுதியோரிந்தமாநிலத்தே. (௬௮)

மானினங்கண்டுமருள்விழியென்றிடுமங்கையர்சொல்
தேனினங்கண்டுகடுக்குமென்றும்புகழ்செப்பவொழித்
தானினங்கண்டுகமர்வெரின்வாழ்வலிதாயரடி
வானினங்கண்டொளித்தெண்ணுதிருக்கின்றிரேழையரே. (௬௯)

ஏழையிருச்குபதேசமென்செய்யினுமேற்கவில்லீர்
ஊழையிருக்குமறைசொன்னவண்ணமொழிக்கவென்றால்
வாழையிருக்கும்வலிதாயமாம்பதிவந்தாளங்
கோழையிருக்குமுன்தேவர்க்குந்தேவனைக்கூவுமினே. (௭௰)

கூவத்திலேகுமுதஞ்சேர்வலிதாயக்கொற்றவனே,
பாவத்திலேவலைமாவெனச்சிக்கிப்பரதவித்தேன்
ஆவத்திலேபிறவிக்கடலேற்றிநின்னம்புயத்தா
ணுவத்திலேதாங்கியாதரிப்பாயிந்தஞாலத்திலே. (௭௧)

ஞாலத்திலேயுயிரெல்லாங்கடைத்தேறநண்பொடுமுற்
காலத்திலேமலரான்மாலனுமான்கருதவுயர்
சீலத்திலேவாய்த்ததென்பார்முதியோர்திருமீடறு
நீலத்திலேதிகழ்பாடிவாழீசனிலேத்தலமே. (௭௨)

நிலைக்கும்பதந்தருஞ்சன்மங்கடோறுநன்னீர்மைகெட
வலைக்கும்பதகங்கடீர்க்கும்வலிதாயமாந்தலத்தில்
மலைக்கும்பதந்தியின்றோல்போர்த்திருந்தவன்வல்வினையைக்
கலைக்கும்பதன்றாய்மணவாளனைக்கூறுங்கல்விகளே. (௭௩)

கல்விக்குமெட்டாத்திறல்வீரற்கொண்டுதக்கன்மகத்தை
வெல்விக்குஞ்சீர்த்திவலிதாயநாதவியன்றாயெனுஞ்
செல்விக்குங்கங்கைக்குமாமணவாளதிகம்பரவென்
சொல்விக்குங்காற்குழறாதந்தகாரந்துடைத்தருளே. (௭௪)

துடைக்குஞ்சனனச்சிறையினையேமன்றொடர்வழியை
யடைக்குஞ்சதுமுகனுணையைமாற்றுமனையெனுமெல்
லிடைக்குஞ்சரநடைத்தாயெனும்வல்லியையேமவிபண்டம்
படைக்குஞ்சதுரனுன்மாவுக்கான்மாவானுன்பாசுரமே. (௭ )

பாசுபதாந்திரம்பற்குணற்கீந்தபராபவிரை
வீசுபதாம்புயனேவலிதாயவிமலமறை
பேசுபதார்த்தநீயன்றிவேறில்லைபிரியமொடு
தாசுபதானந்தன்மச்சிந்தைநீக்கென்றன்சஞ்சலமே. (௭௬)

சஞ்சலஞ்சேற்கருளம்பகசதாவெனுந்தையலுட
னஞ்சலஞ்சேலென்றுரைத்தாளனரனொடியாகுள
புஞ்சலஞ்சேராத்தவசிகடோயூருணிகடொறும்
அஞ்சலஞ்சேதாம்பலார்வலிதாயத்ததிபதியே. (௭௭)

அதிரசப்போளிவடையப்பந்தோசையமைத்தனத்தோ
டதிரசமபோசனமென்றுண்டுமங்கையராற்சுரத
முதிரசம்போகத்திலிச்சையுளீர்கள்வர்மூவிருவர்
அதிரசம்போவலிதாயநாதாவென்றாற்றுமினே. (௭௮)

அரவக்கோடீரப்பாடிக்கோனைவேண்டாமலப்புவியோர்
பரவக்கோடீசுரராயிருந்தாலுமென்பாவமறக்
குரவக்கோடீமலரிட்டுப்பராவியக்கொற்றவனை
விரவக்கோடீரணமிக்கணமேபோம்வினைப்பகையே. (௭௯)

வினையைத்தொடரும்பிறவிக்குவாலறவீடுபெற
வனையைக்களிக்குங்குயிலைக்கிளியையலம்புயத்தின்
னனையைப்பொருவுநகிலாளைமேவியநாயகனை
மனையைச்சசிசேர்வலிதாயத்தானைமனங்கொண்மினே. (அ௦)

யனனஞ்செயாமுழுமூடரையேமாறிமாறியெழு
சனனஞ்செயிர்செயுந்தாயம்மைகோவினைத்தாவுசுட
ரினனஞ்செறியொளிமாமணிமாடத்தெழிலுமணி
யனனஞ்செயிலார்வலிதாயத்தின்கண்ணிலாதரித்தே. (அக)

ஆதரித்தாரணஞ்சொன்முறையாலேயகூறுதலுறுந்
தீதரித்தார்பணிசெங்கமலக்கண்ணன்றேஞ்றிமிறு
போதரித்தாலும்வலிதாயவாசநின்பொன்னடியிற்
றூதரித்தாமரைக்கண்ணிட்டுப்பெற்றனன்சக்கரமே. (அ௨)

சக்கரத்தானுஞ்சதுமுகத்தாணுவுஞ்சந்ததமஞ்
சக்கரத்தாற்றுதிசெய்யும்பரமரழலவனுஞ்
சக்கரத்தார்வேணியார்வலிதாயத்தரந்தகன்வஞ்
சக்கரத்தார்வடந்தீண்டாமலன்பரைத்தாங்குவரே. (அ௩)

தாங்கார்நமன்றமர்கோபித்துமேவுந்தருணத்தினிற்
றீங்கார்செயலேபுரிவாருறவினர்தீர்ந்தவரைப்
பூங்கார்தவழ்தண்டலைப்பழச்சாறுபுகுந்துவிளை
பாங்கார்வலிதாயத்தாயம்மைகோனைப்பணிநெஞ்சமே. (அ௪)

பணிலம்பரவைகளமல்குவென்றென்றுபாவையரை
யெணிலம்பதங்கிடையாதென்றுமூத்தோரிடம்பொருந்தி
கணிலம்பரும்பவன்னெஞ்சங்கரையக்கலந்துநிதம்
விணிலம்பரவும்வலிதாயத்தானைவிரும்புமினே. (அ௫)

விரும்புஞ்சருக்கரைகற்கண்டுதேமாவிரைப்பலவுங்
கரும்புஞ்சுவைகெடப்பேசுந்தாயம்மைகணவனருள்
வரும்புன்செயலெலாமாறுங்கமலத்தின்மாமகளுஞ்
சுரும்புஞ்சரிக்கும்வலிதாயமாம்பதிசூழ்பவர்க்கே. (அ௬)

சூழ்வார்சமபங்களாறினுந்தோய்ந்தவன்றாயவன்பி
லாழ்வார்பெறுகுவரெஞ்ஞான்றுமீளாவரும்பதத்தை
யேழ்வார்சடைத்தவர்சொல்வலிதாயத்தையேம்பலொடு
போழ்வார்பவத்தின்பிறங்கலையென்றுபுகலுவரே. (௮௭)

புகரானனத்தந்திதேர்சூழ்வலிதாயப்பொன்மயமா
நகரானனத்தந்திசாமுகன்போற்றியநக்கனைத்தே
சிகரானனத்தந்திகழ்கண்டத்தாயெனுஞ்செல்வியொடு
பகரானனத்தர்திறம்பாநரகம்படிந்திடுமே. (௮௮)

டடித்தஞ்சனவிழித்தாய்மதிசீரைப்பவளநிக
ரடித்தஞ்சமெனவந்தம்போருகத்தினருங்கிழங்கைக்
கடித்தஞ்சமுலவுஞ்செய்வலிதாயத்தின்கண்விரத
முடித்தஞ்சரும்புலன்வென்றோரெவரினுமூத்தவரே. (௮௯)

மூத்தவர்போற்றியசாத்துவிகத்தினன்மோகமெலாம்
நீத்தவர்நீற்றவரைம்புலக்கள்வரைநீக்கியமுத்
தீத்தவர்பார்க்கவராதியர்க்கின்பம்பொற்சேவடியி
லீத்தவர்பாடியாரெவ்வுலகங்கட்குமீச்சுரரே. (௯௦)

ஈச்சுரர்க்குப்பாடிநாயகர்க்கன்பாரிதயத்தினு
ளீச்சுரக்குந்தேன்பனிநீரன்னந்தயிரோர்தருங்கா
ராச்சுரக்கும்பாலபிடேகமாற்றார்க்கடுக்குமென்ப
பீச்சுரக்கும்புன்குரம்பைப்பிறவிப்பெரும்பிணியே. (௯௧)

பெரும்பாக்கியமென்றுபாடியினுதனைப்பேணுமவ
ரிரும்பாக்கிநெஞ்சத்தைக்காமத்தின்பாலேயிழியுடலைத்
துரும்பாக்கிவேம்பெனவெண்ணுங்கசடர்க்குத்தூயசுவைக்
கரும்பாக்கிநற்சிவநாமப்பெருமையைக்காட்டுவரே. (௯௨)

காட்டத்திற்றீமொய்த்துடலெரிக்காமுன்கருத்திடத்தில்
நாட்டத்தித்திக்குஞ்சிவநாமமோதிநரகத்தினிற்
கூட்டத்தித்தீரத்துதித்துக்குலாவிக்குரங்கினங்க
ளோட்டத்திற்றீங்கனியுண்வலிதாயஞ்சுலாவுமினே. (௯௩)

சலாவுமாவுங்கமுகுந்தெங்கும்புன்னையுந்தூமதுரப்
பலாவுமராத்தருவுஞ்சூழ்படப்பைநற்பாடியெனுந்
தலாவுமாநாதவலிதாயதேவதவறுபுரிந்
துலாவுமாந்தர்க்குட்சிகாமணியாமெற்குதவிசெய்யே. (கச)

உதரத்தைக்காப்பாற்றவெண்ணங்கொண்டனவுலுத்தரையு
மதரத்தைப்பானஞ்செயாசையாற்பெண்களழகினையு
மிதரத்தையும்பாடினேன்பாடிநாதவினியருளச்
சுதரத்தைமைந்தனருச்சனன்பூசித்ததொல்பொருளே. (கரு)

தொல்லலையார்பிறவிக்கடன்மூழ்கித்துயர்ப்படுமென்
னல்லலைநீக்கியருளென்றுகூவியுமாபத்திலே
கல்லலைபாவம்வலிதாயநெஞ்சக்கமலத்தினிற்
புல்லலையென்செயவெண்ணங்கொலோவெள்ளிப்பூதரனே. ()

பூதங்களுக்கெலாநாயகன்பாடிவாழ்புண்ணியனவ்
வேதங்களுக்கறியப்படாச்சீர்த்தியான்விண்ணவர்கள்
பாதங்களுக்கலர்தூவிப்பராவப்பயன்றருவா
னேதங்களுக்கிடையூறுசெய்வானடியெண்ணுமினே. (கஎ)

எண்ணும்படிவரமீந்தருள்பாடியினீசநிதம்
விண்ணும்படியும்பராவமகிழ்கொள்விமலகொலை
பண்ணும்படிறன்வெங்காமுகக்கள்ளப்பதகனெனை
நண்ணும்படிவச்சிறைவிட்டுநின்றனைநாடுதற்கே. (கஅ)

நாடும்பலசமயத்தவருந்தெளிஞானத்திறற்
றேடும்படிவமெடுத்தவ்வவர்கட்குந்தீமையற
நீடும்பதமருள்வானெங்களன்னையாநேரிழையா
ளோடும்பர்போற்றவலிதாயத்துற்றனனோர்ந்துய்ம்மினே. கக

ஓர்ந்தார்க்கும்பர்க்குங்கிட்டாப்பெரும்பேற்றையுவந்தளிக்கு
மார்ந்தார்க்கும்வண்சிலம்பந்தாட்செறிதாயாமம்பிகையைச்
சேர்ந்தார்க்குளிர்மதிக்கண்ணிவலீசன்றிருப்பதியைச்
சார்ந்தார்க்குஞ்சீர்தருங்கங்காதரன்பத்தாமரையே. (க00)

திருச்சிற்றம்பலம்.

சுவாமி திருநாமம்:— வலிதாயநாதர். அம்பிகை திருநாமம்:—தாயம்மை. பிரமவிஷ்ணுக்கள் பிரகஸ்பதி முதலிய தேவர்களாலும் பாரத்துவாசர் முதலிய முனிவர்களாலும் அநுமார் முதலிய அன்பர்களாலும் வழிபடப்பெற்றதாகியும், எண்ணிய வரங்களை எண்ணியவாறே தந்தளிப்பதாகிய பாரத்துவாச தீர்த்தம் அநுமதீர்த்தமுதலிய தீர்த்த விசேடங்களையுடையதாகியும் விளங்குகின்றது. பொன்னிநாட்டை யரசாண்டுவந்த விக்கிரமசோழனென்னு மரசன் நெடுநாள் புத்திரப்பேறின்றி ஏங்கியிருக்குநாளில் சிவசின்னத்தோடு விருத்தவேதியரொருவர்வர எதிர்கொண் டுபசரித்துத் தன்மனக்குறையை விண்ணப்பிக்க வேதியர் அரசனைநோக்கி 'அன்பனே! என்பால் புண்ணியரூபமாகிய க்ஷேத்திரக்கோவையென்னுமோர் நூலிருக்கின்றது. இன்று சோமவாரமாயிருத்தலின் இதனை யன்புடனேபூசித்துக் கயிறுசாத்திப்பார்ப்பையேல் அதிலெந்த புண்ணியத்தலங்காணப்படுகிறதோ அத்தலத்திற்குச்சென்று அங்கெழுந்தருளியிருக்கும் சிவபெருமானைப் பூசிப்பையேல் புத்திரப்பேறுண்டாம்' என்றனர். அங்ஙனமே அரசன் கயிறுசாத்தலும் திருவலிதாய க்ஷேத்திரம் வரக்கண்டு அளவிலா மகிழ்ச்சியடைந்து அத்தலத்தினை யிப்போதேதரிசிக்கவேண்டுமென்று தனதரசினை யமைச்சர்பாலொப்புவித்துத் தனது கற்பினிற் சிறந்த மனைவியுடன் வெளிப்பட்டு திருவலிதாயத்தினை யடைந்து தீர்த்தமாடி ஆலயத்துட்சென்று சிவார்ச்சனைபுரிந்து கண்குளிரத்தரிசித்து துதித்துவணங்கி உலகமாதாவாகிய தாயம்மையைப்பூசித்துக் குறையிரந்துநிற்க; அம்மையார் திருவுளமிரங்கி புத்திரசந்தானமுண்டாகும்படி வரந்தந்தருளினர். அரசன் மனமகிழ்ந்து மீட்டும் வணங்கி ஓராண்டளவும் சிவபுண்ணியங்களைச்செய்துகொண்டிருந்து புத்திரனைப்பெற்றுக் களிகூர்ந்து அநேக தானதருமமியற்றி திருவலிதாயநாதனையும் தாயம்மையையும் தரிசித்து விடைபெற்றுத் தனது நகரத்தினையடைந்து புத்திரபௌத்திரர்களை வாய்ந்து சுகமாய்வாழ்ந்து சிவப்பேறெய்தினன். இத்தலத்தை பலிதாயமெனவும், வலிதாயமெனவும், பாடியெனவும் வழங்குகின்றார்கள். பலி=பூசை; தாயம்=உரிமை. பலிதாயநாதர் = பூசையை யுரிமையாகக்கொண்டவர். பலிதாயமென்றது. தமிழில் வலிதாயமென்றாயிற்று. வலியன் + தாயம், வலிதாயமெனினும் பொருந்தும், வலியன் = பாரத்துவாசர். திருஞானசம்பந்தசுவாமிகளாற் றிருப்பதிகம் பெற்றுள்ளது.

திருச்சிற்றம்பலம்.

# உஉ.—வடதிருமுல்லைவாயில்.

—:0:—

## காப்பு.

### நேரிசைவெண்பா.

தீராத வல்வினைக ளார்க்கு மியக்கமறப்
பேராத ஞானம் பெருக்குமே—தாரார்
புயங்க ளிலங்கப் புகழ்முல்லை மேவும்
வயங்கொளத்திமாணடியைவாழ்த்து.

---

## நடராசர்.

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

புராழிய நகைபுரிந்த புனிதாபோற்றி
புட்பகணை மதனெரித்த கண்ணா போற்றி
பிரமன்சிர மறுத்தங்க நுதியாய் போற்றி
பிரசண்ட மாருதிபல் லுதிர்த்தாய் போற்றி
கரியுரித்துக் கலைதரித்த கையா போற்றி
கதித்தசலந் தரனுரத்தைக் கடிந்தாய் போற்றி
மறலிதனை வீழ்த்துமலர்ப் பதத்தாய் போற்றி
மன்னியபே ரம்பலத்தாய் போற்றி போற்றி.

---

## சிவகாமியம்மை.

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பூமல ரிமையோ ரிரைக்கமா தவர்கள்
போற்றிடக் கஞ்சனுந் துளவத்
தாமனுஞ் செங்கை சிரமிசைத் தாங்கித்
தங்கடம் வினைவிட வேண்டச்
சோமன்மே லாட வாடராப் புலிக்காய்ச்
சோர்விலா நடம்புரி யெந்தை
வாமம்விட் டகலா வருட்சிவ காம
வல்லிதாள் புல்லிவாழ்த் திடுவாம்

---

## முல்லைவனநாதர்.

### நேரிசைவெண்பா.

கந்த னயன்மாற் கதிரோ னமரர்கோ
னந்தமிகு மிந்து வகமகிழ்ந்து—சந்ததமு
மேத்துங் குசலவரு மெங்கடொண்டை மானுமலர்
சாத்துமுல்லை யீசனடி சார்.

## கொடியிடைநாயகியம்மை.

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பகருகின்ற பனிவரையின் புத்ரியாகிப்
பரசிவன்ற னிடைமருவும் பன்னியாகி
மகிமைபெறு மாதவன்றன் றங்கையாகி
மகபதியின் மகடனக்கு மாமியாகிச்
சகலவுயி ரீந்தளிக்குந் தாயுமாகித்
தனிச்சுருதிக் கெட்டாத தனியளாகிச்
சகமகிழுங் கொடையிடையாய் முல்லைமேவுந்
தாயடிக ளெம்முடிமேற் றரிப்பமாதோ.

## சுப்பிரமணியர்.

### கட்டளைக்கலித்துறை.

வேத னிளைத்திட வெங்காலன் சோர்ந்திட வெய்யகலி
நாத னகைத்திட நாலுரு வாகி நடிப்பதெல்லாம்
வாதனை யாகி வலிக்கவொட் டாமல் வலியமுல்லை
நாதனைப் பாடவந் தாதரிப் பாய்வள்ளி நாயகனே.

## திருநந்திதேவர்.

### கொச்சகக்கலிப்பா.

வந்தித்து மாலயனு மறியாத விமலனடி
சிந்திக்கு மாதவனுஞ் சிலாதரனற் றவப்புதல்வன்
பந்தித்த வல்வினைக்கோர் பிரசெனக்கைப் பிரம்பேந்து
நந்திப்பொற் பாதமலர் நம்முடிமேற் சூடியாமால்.

## திருஞானசம்பந்தசுவாமிகள்.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கன்னி யொருத்தி நோயகற்றிக்
காளை யொருவன் விடநீக்கி
யன்னு மெலும்பைப் பெண்ணாக்கி
மங்கை தன்னை யடிபடுத்தித்
துன்னுஞ் சமணைக் கழுவேற்றித்
தூய நீற்றை மலிவித்த
மின்னு மெயில்சூழ் காழிவரும்
விமல னடிகள் முடிக்கணிவாம்.

---

## திருநாவுக்கரசுசுவாமிகள்.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நீற்றறை நெருப்பை வென்றும்
நீண்டகோ டிபத்தைக் காய்ந்தும்
மாற்றரும் விடத்தை யுண்டு
மறிகடல் நீந்திச் சென்றும்
பாற்றரு மரவான் மாண்ட
பாலனை யெழுப்பித் தந்தும்
போற்றுசை வத்தைப் போற்று
மரசினைப் பரசி வாழ்வாம்.

---

## சுந்தரமூர்த்திசுவாமிகள்.

### கோச்சகப்பா.

வண்டறையுந் துளபமணி மாலயனு மாமறையுங்
கண்டறிய மாட்டாத கண்ணுதலெம் பெருமானை
மண்டிநெல் விரவுதளின் மாதினிடந் தூதுவிடுந்
தண்டமிழ்சொல் வன்றொண்டர் தாளிணையெந் தலைக்கணியே.

---

## மாணிக்கவாசகசுவாமிகள்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

புத்தரை வென்றும் புதுப்புன லழைத்தும்
புகுநரி பரியெனக் கொண்டும்
மத்தமு மதியுஞ் சூடுமெம் பெருமான்
மணிமுடி யிடத்துமண் ணேற்றிச்
சுத்தவே தாந்த மடங்கலுஞ் சுருக்கிச்
சொல்லருந் தமிழினிற் சொன்ன
வுத்தம வாத வூரர்தந் திருத்தா
ளுன்னிடின் மன்னிடா வினையே.

## சண்டேசுரர்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அண்டரு முனிவ ரசுரர்மூ வுலகத்
தவர்களு மற்றுமுள் ளோருங்
கண்டதி சயிக்கக் கண்ணுதற் பெருமான்
கழலருச் சனைபுரிந் தரிய
வண்டறை கொன்றைத் தாரிடப் புனைந்து
வளஞ்செறி சேய்ஞலூர் வந்த
தண்டியெம் மடிக ளாளிணை தொழுது
தகர்க்குவம் பண்டைவல் வினையே.

## பிரமதேவர்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

அந்தமிலான் வருத்தமான் மியமுணர்ந்தே யப்பெருமா
னருளினைக் கொண்டு
டெந்தைவளர் திருமுல்லை வனமெய்தி சிவானந்த
மிலங்கப் பெற்றுக்
கந்தமலர் தூவிநின்று கைகூப்பித் தொழுதிறைஞ்சிக்
கண்ணீர் பாய்ச்சிச்
சுந்தரஞ்சேர் விழாச்செய்த பிதாமகனை யெந்நாளுந்
தொழுது வாழ்வாம்.

## சரஸ்வதி.

### நேரிசை வெண்பா.

படிப்பின்றிக் கேள்வியின்றிப் பற்றின்றி நின்பாற்
றடிப்பின்றி மெய்யன்பர் சூழல்—நடிக்கின்ற
வேழைக ளிரங்கியரு ளீந்தாள்வெண் கஞ்சத்து
வாழுந்தா யேயருள்வை வந்து.

---

## குசலவர்கள்.

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அண்டர்துயர் தீரவென வயோத்தி வந்த
அரவணைச்செல் வன்னருளும் புதல்வ ராகி
எண்டிசையோர் துதிபரவு முலகை யாண்டே
இன்பமின்றி யெம்பெருமா னிணைத்தா ளுன்னித்
திண்குலவுந் திருமுல்லை வாயி லீசன்
திருவடியை யருச்சித்துத் திகழ்ந்தா னந்தத்
தொண்டரென வுலகுரைக்கத் தூய ஞானத்
தொழும்பராங் குசலவர்தாள் துதிசெய் வோமே.

---

## தொண்டைமான் சக்கிரவர்த்தி.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தொண்டைவள நன்னாட்டிற் குறும்பரகச் செருக்கொழித்துத்
தூய செங்கோற்
கொண்டரசு புரிந்துமுல்லைக் கொடிவழியே யளிமுரலுங்
கொன்றை வேணித்
துண்டமதிப் பெருமானைத் தொழுதெமக்குக் காட்டிவைத்த
தொண்ட ரான
தொண்டைமா னடிக்கமலம் பவக்கடலைக் கடக்கவொரு
தோணி யாமால்.

---

# ப தி க ம்.

## நேரிசை வெண்பா.

கரும்பாசக் காட்டிற் கவலையுற்ற நெஞ்சே
திரும்புவா யோர்வேலை தேடி—சுரும்பார்க்கும்
வாசமலர்க் கொடியை வாமமுற வைத்தருளும்
மாசிலா மாமணியை வாழ்த்து.

## எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மணித்தலை யரவ மானுமங் கையர்கண்
மதர்விழி வலையினான் மயங்கிப்
பிணித்தலை யடைந்திவ் வுலகினின் றுழலும்
பேயனேற் குனதரு ளுளதோ
பணத்தொடு பொலியும் பாப்பிடை சேர்த்த
பரமனே பிரமன்மா லறியா
வணத்தொடு நின்ற வளம்பயின் முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே. (௧)

பெருமநின் னருளைப் பெற்றிடு மடியர்
பேசருங் குழுவினிற் சேர்ந்து
கருமவாழ் வினைத்துங் கழன்றிட வெண்ணுக்
கடையனேற் கருடர லென்றோ
திருவுடைத் தொண்டை மானய னாதி
தேவருந் தொழுபதத் தவனே
வருவிடை பிரியா வடதிரு முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே. (௨)

வண்டுநின் றரற்றும் வனப்புறுங் குழலார்
வஞ்சக மொழியினான் மயங்கி
விண்டன னெளியேன் விண்ணவ ரேத்த
விடத்தினை யருந்திய நீல

கண்டநெஞ் சுருகிக் கண்கணீ ரரும்பக்
கைம்மலர் குவித்தடி யிறைஞ்சேன்
மண்டலா வியபூஞ் சோலைசூழ் முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே. (௩)

பழிக்குநல் லோர்கண் மொழிக்கு மஞ்சாது
பலவிதப் பகட்டினாற் பொருளைக்
கொழிக்குமென் மொழியார்க் கல்லதுன் னடியார்க்
கொருபொரு ளீந்திடாக் கொடியேன்
றழைக்குநல் லுணவை வயிறதற் கடைத்துச்
சதிரொடு திரிந்தனன் முத்தம்
வழுக்குறும் வயல்க ணெருக்குறு முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே. (ச)

கஞ்சனை வதைத்த கடவுளர்க் காழி
கருணையி னலளித் திட்ட
தஞ்சனே தில்லைத் தலத்தனே தேவர்
தலைவனே யெனப்பணிந் தேத்தா
நஞ்சினுங் கொடிய நெஞ்சினே னைய
நரகிடை புகாதுநீத் தருள்வாய்
மஞ்சுலா வியபூஞ் சோலைசூழ் முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே. (ரு)

பொன்னையே கொடுத்தும் பெறுவதற் கரிய
பொருளனை யாயுனைப் போற்றி
அன்னையே யென்றே யலறிடு மடியா
ரகத்திருள் கடிந்தவா ரிதியே
உன்னரும் தெய்வ நாயக மணியே
யும்பரார் தொழுதெழு மவனே
மன்னும்வல் வினைக ளொழித்திடு முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே. (சு)

அன்பொடுன் னடியா ரடிமலர்ப் பணியே
னருடிரு நீற்றினைப் புனையேன்

வன்பவப் பிணிதீர் விழிமணிப் பூணேன்
வாயினா லஞ்செழுத் தோதேன்
புன்புலால் யாக்கைப் பொதிசுமக் கின்ற
புலையனேற் கருடர லென்றோ
மன்றலங் கமழும் வடதிரு முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே. (எ)

நின்னடிக் கமலத் திமையள வேனு
நிற்கிலா திழிமடந் தையரைக்
கன்னலிற் கருதிக் கலந்துற வாடிக்
கழித்தன னினியவமே
மன்னுமா தவத்தின் மகிமையொன் றறியா
மர்க்கட மனமுடை யேனை
வன்மை செய்திடலும் வழக்கதோ முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே. (அ)

கன்னிய ராகுங் கானிடைப் பட்டுக்
களைத்துட லிளைத்துகா ரிருளின்
மின்னலை யனைய வெம்பிறப் படைந்து
மெலிவுறா தருள்கவென் றடியார்
உன்னிய வண்ண மளித்துமேற் பதவி
யுதவிட வுலகநா யகனாய்
மன்னிய தெய்வ மகிமைசேர் முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே. (கூ)

படுபொருள் வேட்டும் பலநிலம் வேட்டும்
பாவையர் மனமகிழ் கலவி
திடமுற வேட்டு மினியனு டோறுந்
திகைத்தனன் மனவலி கெட்டேன்
விடமுட ருனே விண்ணிறை தினமும்
வீழ்ந்திறைஞ் சிடுவிரை மலர்ச்சே
வடிபெற வருளாய் வடதிரு முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே. (கூ0)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அரியயனுக்கெட்டானை யனங்கனுடலெரித்தானை
யனல்கையானைப்
பரமுழியச்சிரித்தானைப் புண்ணியநீறணிந்தானைப்
புனலேற்றானை
வரையெடுத்து வளைத்தானை வாளரக்கனெறித்தானை
வரம்பிலானை
மறைபரவுந் திருமுல்லைமாசிலாமணியானை
மறக்கிலேனே. (௧)

புனலோடுஞ்சடையானைப் புள்ளித்தோலுடையானைப்
புநிதன்றன்னைக்
கனலாடுங்கண்ணானைக் காளியுடனடித்தானைக்
கலைவல்லானைச்
சினவரவையணிந்தானைச் சிலந்திதனக்கரசளித்த
சிறப்பினானை
மனமுருக்குந் திருமுல்லைமாசிலாமணியானை
மறக்கிலேனே. (௨)

செங்கண்மால்விடையானைச் சிரமாலையுடையானைச்
[illegible]ழியனீ[illegible]
மங்கையிடமுடையானைப் [illegible]தமலர்முடித்திட்ட
மகுடத்தானைப்
பங்கயன்கம்பறித்தானைப் பரிதிக்குக்கண்ணளித்தப்
பண்பினானை
மங்கலஞ்சேர் திருமுல்லைமாசிலாமணியானை
மறக்கிலேனே. (௩)

பஞ்சினுமெல்லடியானைப் பரவையின்கண்டுயின்றானைப்
பணிகொண்டானை
நஞ்சணிகண்டத் [illegible] நான்மறைமேனிற்பானை
ந[illegible]ச்சானை
அஞ்செழுத்[illegible] [illegible]யம்பலத்தினடித்தானை
[illegible]
மஞ்சுலவுந் [illegible] மாமணியானை
[illegible] (௪)

கட்டியசெஞ்சடையானைக்கந்தபிராற்கருள்செய்த
கருணையானைப்
பிட்டிடமண்சுமந்தானைப்பிரம்பினடிப்பட்டானைப்
பிறவாதானை
கெட்டரவக்கச்சானைநேரியனுக்கருள்சுரந்த
நேர்மையானை
மட்டுறுநற்றிருமுல்லைமாசிலாமணியானை
மறக்கிலேனே. (௫)

தாயினுந்தண்ணளியானைத்தாரகமாய்நின்றானைத்
தாயானானை
மாயபசுவதைத்தானைமறைமுனிக்குப்பசுவீந்த
மரபினானைச்
சேயுணவையுண்டானைச்சிவபுரத்தையழைத்தானைச்
சிறந்தநல்லோர்
வாயுமொழிற்றிருமுல்லைமாசிலாமணியானை
மறக்கிலேனே. (௬)

அக்குமணியணிந்தானைக்கொக்கிறகுபுனைந்தானை
யடியருள்ளப்
பக்குவமதறிந்தானைப்பரமகுருவானானைப்
பந்தபாசச்
சிக்கறுத்துவிட்டானைச்சித்திரசர்மனுக்குமருள்
செய்திட்டானை
மக்குலவுந்திருமுல்லைமாசிலாமணியானை
மறக்கிலேனே. (௭)

தலையில்பலியேற்றானைத்தாரக்கினதருளுடையானைத்
தருமிக்கன்று
விலையில்கிழிதந்தானைவிறகெடுக்குமாளானை
விரிவாய் நாரை
நிலையறிந்துகாத்தானைநீள்பாபந்தீர்த்தானை
நிகரில்கைலை
மலையனையதிருமுல்லைமாசிலாமணியானை
மறக்கிலேனே. (௮)

நரிபரியாய்க்கொண்டானை நகுதலையைப்பூண்டானை
 நக்கீரர்க்காய்ப்
பரிவிலருள்செய்தானைப்பாண்டியநாடாண்டானைப்
 பகராமூலங்
கரிக்குருவிக்குரைத்தானைக்கடல்சுவறக்கண்டானைக்
 கண்மூன்றானை
வருக்கைநசெறிதிருமுல்லைமாசிலாமணியானை
 மறக்கிலேனே. (கசு)

கணைப்பொழுதிற்கல்லானைக்கரும்பருந்தத்தந்தானைக்
 கவிவாணன்றன்
பிணைக்கறுக்கநின்றானைப்பிறங்குமணிமழைதன்னைப்
 பெய்வித்தானை
யணிவளையலிட்டானையட்டசித்தியுரைத்தானை
 யணிசேர்முல்லை
மணங்கமழுந்திருமுல்லைமாசிலாமணியானை
 மறக்கிலேனே. (கஎ)

---

# போற்றி.

## கட்டளைக்கலிப்பா.

போற்றியம்புவியெங்குநிறைந்தவ
 போற்றியன்பருளைகுடிகொண்டவ
போற்றிமுந்நீர்வருநஞ்சமுண்டவ
 போற்றிவெண்ணீறணிந்திடுமெய்யவ
போற்றிகங்கைசிரத்திலணிந்தவ
 போற்றிமங்கையோடிங்கிதஞ்சொன்னவ
போற்றிதொண்டைமான்மன்னனேர்வந்தவ
 போற்றிமுல்லைவாயிற்பதிபுங்கவ.

---

## கொடியிடைநாயகியம்மை.

# பஞ்சரத்தினம்.

—:o:—

### பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சீரிலகுமணிமௌலியணிமுடியுவாணிலெழு
சீதமதிநிறைவதனமும்
திலதமிடுவிளைநுதலுமிலகுமீன்கண்களுந்
தேசுற்றகுமிழ்நாசியும்
பேரிலகுநற்பளிங்கொக்குங்கபோலமும்
பேசரியதுப்பிதழ்களும்
பிறைபோலவொளிவிடுங்கம்மலிடுசெவிகளும்
பெருகெழிற்பசியமிடறும்
வாரிலகுதனபாரவரைகளும்நல்லறம்
வளர்த்திட்டசெங்கைமலரும்
மன்னுயிரெலாம்பூத்தளிக்கின்றதிருவயிறும்
வாய்ந்தமேகலையினிடையும்
ஆரிலகுநூபுரத்தாளையுங்கண்டுநித
மடியேன் றொழப்பெறுவனோ
அடியவர்கள்மிடியதனைநொடியில்பொடிபடவருள்செய்
கொடியிடைப் பெண்ணமுதமே. (க)

தொலையாதஜன்மக்கருப்பைக்குளேசிறிய
சுக்கிலசுரோணிததாற்
சூக்மவுருவாய்ப்பண்டைவினையினதுதொடர்பினால்
தொல்லுலகில்வந்துதித்து
நிலையாதவைம்புலக்கொலைவேடர்கையினுஞ்
செருக்குகாமாதிகளினும்
நீங்கரியசமுசாரப்படுகுழியினும்வறுமை
நிகரிற்பெருஞ்சேற்றினுங்
குலையாதவஞ்ஞானவல்லிருளினும்பொரு
கொடும்பசியெனுந்தழலினுங்
கூறரியதுன்பப்பெருங்கடலினும்முளங்
குன்றிமிகவாடிநின்றேன்

அலையாதுன்பதமலர்த்தெரிசனந்தந்தென்மே
லன்புவைத்தருள்முல்லைவாழ்
அடியவர்கள்மிடிபதனைநொடியில்பொடிபடவருள்செய்
கொடியிடைப்பெண்ணமுதமே. (௨)

உன்னுடையகோயிறனைவலமாகவந்தபேர்
உலகெலாமரசாளுவார்
உனதுமெய்த்தொண்டுபுரிவோர்கடைவினையகல
வயருமெய்ஞ்ஞானியாவார்
பன்னுநின்பாதமலர்பலகாலுமுன்னுவோர்
பகாருமுத்திசேர்வர்
பாவையர்கள்வன்னெஞ்சப்பாசத்துளேசிக்கிப்
பரதவித்தறிவழிந்து
தன்னிகரிலாதநின்னன்பர்கடொழும்பனாய்ச்
சார்ந்துவாழ்ந்திடவறிகிலேன்
தலையாமலராலுநின்னடிபணிந்துமர்ச்
சனைசெய்துகாண்கிலேன்யான்
அன்னையேயின்னமுஞ்சனனம்வராதபடி
யருள்சுரந்தெனையாளுவாய்
அடியவர்கள்மிடியதனைநொடியில்பொடிபடவருள்செய்
கொடியிடைப்பெண்ணமுதமே. (௩)

பண்டைநாளிற்பதுமநாரணனிரவிசசி
பகரிந்திரன்குசலவர்
பண்ணவர்கள்முனிவரொடுவெண்ணரியதேவரும்
பனிமலர்க்கொண்டுநிதமுந்
தொண்டுபுரிசெய்கையிற்சோர்வுறாதுன்னடித்
தொழுதடைந்தனர்வேண்டுவ
துட்டனேநமனிலுமெட்டதிகமாதருடன்
சுற்றமுற்றறிவழிந்தேன்
தண்டுளவணிந்தவனதங்கிவழிவந்தவனி
தந்தபிரமன்றம்பியைத்
தகணமிகுமுளரிக்கணைத்தனுநூவிற்பாதி
தழுவிக்குழைந்தவடிவே

அண்டபுவியின்கணுனையன்றியேயிங்கென்னை
யாதரிப்பவரார்சொலாய்
அடியவர்கள்மிடியதனைநொடியில்பொடிபடவருள்செய்
கொடியிடைப்பெண்ணமுதமே. (௭)

சீரார்ந்ததொண்டைநாட்டெல்லையிற்றிகழுமொரு
திருமுல்லைவனமதனிலே
தீயவர்குறும்பரதுகோட்டையையழித்திடத்
திருவருட்கொண்டுமுன்னம்
பாராளுந்தொண்டைமானரசனும்மகிழவே
பரிவாகநந்தியைவிடப்
பண்பினில்வெற்றிகொண்டேகவவனுக்கருட்
பரிசுதந்ததுமன்றியுங்
காராருங்குழலிநீயையர்வலமாகவுங்
கடிதிலருள்தந்திலையோ
கருதரியபிள்ளைகட்கன்னையல்லாமலொரு
கதியுமுண்டாங்கொல்புகலாய்
ஆராலுமறியாதமுக்கணர்க்கின்பருளு
மன்னையேவண்ணமயிலே
அடியவர்கள்மிடியதனைநொடியில்பொடிபடவருள்செய்
கொடியிடைப்பெண்ணமுதமே. (௮)

---

## வாழி.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வாழியநால்வர்வாழியவொருநான்
மறையொடாகமபலநூல்கள்
வாழியமதமால்களிறுவேற்கந்தன்
வயங்கறுபத்தொருமூவர்
வாழியமாசிலாமணியரனார்
வாழியகொடியிடைவல்லி
வாழியவெண்ணீரக்கமுமென்றும்
வாழியவையெனுமறையே.

திருச்சிற்றம்பலம்.

இந்தத்தலம் தொண்டைநாட்டு முப்பானிரண்டு க்ஷேத்திரங்களுள் ஒன்று. சென்னைக்கு மேற்கில் 10 மயிலிலும் அம்பத்தூர் ஆவடிஸ்டேஷன்களுக்கு முறையே 2-3 மயில்களிலுமுள்ளது. மிக்கதெய்வீகமுடையதும், அன்பர்கள் வேண்டிய சித்திகளை எளிதில் பாலிக்கவல்ல இலதாமத்யாம்பிகாசமேத நிர்மலமணீசுவரர் வீற்றிருப்பதுமானது. இங்குப்பெருமானுக்கும், பெருமாட்டிக்கும், தலத்திற்கும் பல திருநாமங்கள் வழங்கும். அவற்றைக்கீழே குறிப்பாம்.

இந்தலத்திற்குக் கிருதயுகமுதல் துவாபரயுகம்வரையும் கல்யாணபுரம், ஸ்திரக்ஷேத்திரம், பிரமபுரம், ஐராவதக்ஷேத்திரம், இரத்தினபுரம், பில்வாரணியம், சம்பகாரணியம், என்றும், இக்கலியுகத்தில் மாலதிக்ஷேத்திரம், மாலதீபுரம், மாலதீவனம், யூதிகாபுரம், வடதிருமுல்லைவாயில் என்றும்;

பெருமானுக்குக் கிருதயுகமுதல் துவாபரமிறுதிவரையும் பிரமநாதேசுவரர், இரத்நேசுவரர், இரத்நபுரீசுவரர், வில்வேசுரர், பசுபதீசுவரர் என்றும், இக்கலியில் அகளங்கரத்நேசுவரர் நிர்மலமணீசுவரர், சுமத்யாபதீசுவரர், மாசிலாமணீசுவரர் என்றும்;

அம்பிகையாருக்குச் சென்ற மூன்று யுகங்களிலும் நிர்துஷ்டாரத்னநாயகி, சித்ரமத்தியாநாயகி, சுமத்யாநாயகி, பிரமநாதநாயகி, மனோபிரமணீநாயகி, சாந்தமத்தியாநாயகி யென்றும், இவ்யுகத்தில் அகளங்காரத்நநாயகி மாலதீவனநாயகி, யூதிகாபுரநாயகி, இலதாமத்யாம்பிகா, கொடியிடையம்மை என்றும்;

தீர்த்தங்களுக்குள் முன் மூன்று யுகங்களில் கோயிற்குக் கிழக்கிலுள்ள திருக்குளத்திற்குப், பிரமதீர்த்தம், ஐராவததீர்த்தம், இரத்தினதீர்த்தம், சித்திதீர்த்தம், என்றும், கலியில் கலியாணதீர்த்தம், சுப்பிரமணியதீர்த்தம் என்றும்: புராணத்துட் பெயர்கள் கூறியிருக்கின்றன.

மற்றும் புராணத்துள் கூறியுள்ள பதுமதீர்த்தமென்னும் இந்திரதீர்த்தத்தை இப்போது செங்கெற்குட்டையென்றும், அக்கினிதீர்த்தத்தைப் பரமனேரியென்றும், இயமதீர்த்தத்தைத் தச்சன் குட்டையென்றும், நிருதிதீர்த்தத்தைத் திருமஞ்சனக்

குட்டையென்றும், வருணதீர்த்தத்தைக் கருமான் குட்டையென்றும், குபேரதீர்த்தத்தை வாழைக்குளமென்றும், வழங்கி வருகின்றார்கள். வாயு ஈசானதீர்த்தங்கள் இவ்விடத்தில் இன்ன பெயருடனிருக்கின்றனவென் றுணரப்போகவில்லை.

இவையன்றிச் சூரிய சந்திரதீர்த்தங்க ளென்றிரண்டுண்டு. அவை நகருக்குத் தக்ஷிணத்தில் மன்னாதசுவாமி மரகதாசலவம்மையார் சந்நிதிக்குக் குடபாரிசமர்கவிருக்கின்றன. பிற்காலத்தில் அவை ஒரேதீர்த்தமாகச் சேர்க்கப்பட்டு ஏளமங்கை தீர்த்தமெனச் சின்னாள் வழங்கி, இப்போது தாமரைக்குளமெனக் காரணப்பெயரைச் சூடி நிற்கின்றது.

மூர்த்திதலதீர்த்த விபவங்களுடைய இந்தக்ஷேத்திர புராணம் பதினெண்புராணங்களுள் பவிஷ்ய புராணத்தின் உத்தர பாகத்தில் சிவக்ஷேத்திரகண்டத்தில் மார்க்கண்டேய சம்மிதையில் மத்தியபாகத்தில் அம்பிகையாருக்குச் சிவபெருமானே உபதேசித்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. இத்தலத்தில் பிரம தேவர் வழிபட்டுப் பெருமானுக்கு விழாவெடுத்ததாயும், குமாரக்கடவுள் தேவசேனாதிபத்தியம் பெறுமாறு பூசித்து வரமடைந்ததாயும், பிருகு முனிவர் துவாதசவருடக்ஷாமம் நிவிர்த்தியாம்படி வழிபட்டு இரத்தினவருஷம் வருஷிக்க அனுக்கிரகம்பெற்றதாயும், வசிட்டமுனிவர் யாகசம்ரக்ஷணத்தின்பொருட்டு வழிபட்டுக் காமதேனுவைப்பெற்றதாயும், சந்திரன் தாராசங்கமதோஷநிவாரணத்தின் பொருட்டுப் பூசித்தருளடைந்ததாயும், அசுவனி முதலிய நாண்மீன்கள் தமது நாயகனை சந்திரன் விஷயமாக அபசாரப்பட்ட பாவவிமோசனமாம்படி அம்பிகையாரை வழிபட்டுய்ந்ததாயும், சூரியன் தக்கயாகத்தில் சிவநிந்தை கேட்ட தோஷநிவர்த்திக்காக வழிபட்டு இழந்த கண்ணையும் அடைந்ததாயும், குசலவர்கள் தமது பிதா இராமபிரானிடம் எதிர்த்துச் செய்யாதன செய்த அபராத க்ஷமைக்காக வழிபட்டுய்ந்ததாகவும், துர்வாசமகருஷி இந்திரனிடங் காட்டிய சோபத்தால் விளைந்த பாவத்தைப் போக்கிக்கொள்ள வழிபட்டதாயும், சிவப்பிரசாதத்தை அவமதித்த ஐராவதம் அப்பாவம் போமாறு பூசித்து அச்சாபத்தைப் போக்கிக்கொண்டதாயும்,

இந்திராணி தனது கணவன் பிறர் கண்களுக்குப் புலப்படாமல் கரந்துறைய நேர்ந்த தோஷம் போமாறு அம்பிகையாரை வழிபட்டதாயும், அப்போது வெளிப்போந்த இந்திரன் சுவாமியை வழிபட்டு உற்சவம் செய்வித்ததாயும், இந்தக்ஷேத்திரத்தில் பிரதோடம் சுக்கிரவாரம் மஹோதய அருத்தோதய முதலிய விசேடதினங்களில் செய்யும் சிவ புண்ணியங்கள் இந்தப் பலனைத் தருமென்பதாயும், தேவமித்திரனென்னும் ஆசாரவீனனு னவிப்பிரன் அபுத்தியாற் செய்த புண்ணியத்தாற் கதியடைந்ததாயும், சம்புதாஸர் என்னும் அடியவர் ஸத்கைங்கரியஞ் செய்து முத்தியடைந்ததாயும், சித்திர கர்மனென்னும் அந்தணன் அபுத்தி பூர்வமாப்ச் செய்த கைங்கரியத்தால் பரமபதமடைந்ததாயும், இக்கலியில் ஆதொண்டைசக்கிரவர்த்தியாரை வலிந்தாளத் திருவுளங்கொண்ட சிவபெருமான் முல்லைப்புதருளிருந்தபடி அவரேறிய யானையைத் தகைந்து அவரால் வெட்டுப்பட்டும் நிர்மலமணீசுவரராய் அவருக்கு முத்தியைப் பாலித்ததாயும், கூறியிருக்கின்றது. இத்தலத்தைப் பற்றிய வேறு துதிநூல்களில் விஷ்ணு அருச்சுனன் முதலிய பலரும் வழிபட்டதாகவும் கூறியிருக்கின்றன.

இத்தகைய விபவங்களின் விவரங்களையும், சந்நிதி அர்த்தமண்டபத்தில் எருக்கந்தூணிரண்டமைத் திருப்பதற்கும், நந்திதேவர் ஏனையதலங்களைப் போலாது புஷ்டபாகங் காட்டி நிற்பதற்கும், அம்பிகையார் வலமாக எழுந்தருளியிருப்பதற்கும் காரணங்களையும் அந்த க்ஷேத்திரத்திலுள்ள ஷை தேவஸ்தானம் ஸ்தானீகர் ஸ்ரீமத் நாகேசுவர சிவாசாரியாரிடமிருந்த வடமொழிப்புராணத்தின்படி ம-ள-ள-ஸ்ரீ வித்வான். க. வ. திருவேங்கடநாயடவர்கள் தமிழில்மொழிபெயர்த்து அச்சிட்ட வசன ரூபப்புராணமும்; ம-ள-ள-ஸ்ரீ வித்வான். திருமயிலை - சண்முகம் பிள்ளையவர்கள் செய்தச்சிட்ட செய்யுள்ரூபப்புராணமும் நன்கு விளக்கும். ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகளாற் திருப்பதிகம்பெற்றுள்ளது.

# உ௩.—திருவேற்காடு.

## நான்மணிமாலை.

—:0:—

### காப்பு.

நேரிசைவெண்பா.

கடற்பாரும்பொன்னுலகுங்கண்டுநிதம்போற்றுங்
கடக்காரிபமுகத்துக்கன்றே — கடுக்கைமலர்த்
தேன்மணிமாலைச்சடையான்சீர்த்திருவேற்காட்டீசன்
நான்மணிமாலைக்கருள்செய்நன்கு.

### சமயாசாரியர்கள்.

நேரிசைவெண்பா.

புகலிப் பிரானெம் புரைதவிர்த்தா ளுந்தாண்
டகச்சதுர னம்பி யவிருஞ்—சுகக்கடலாம்
வாதவூர் மாமணியா மாதவத்தோ ரல்லதுவே
றோதவோர் தேவுண்டோ வுற்று.

### நூல்.

நேரிசைவெண்பா.

பொன்னனையார்செங்கமலம்பூத்தொளிருந்தண்குளத்தின்
மின்னனையாராடுதிருவேற்காட்டின் — மன்னுமறை
நாவாற்பழிச்சவளர்நம்பனடிப்பதுமப்
பூவாற்பழிச்சனனம்போம். (௧)

கட்டளைக்கலித்துறை.

போமரும்பாதகந்தீமூன்பருத்தியைப்போலபரந்
தாமருந்தாமரைமேலயனுருஞ்சசிபதியுங்
காமருஞ்சோமருமாதித்தியருங்கருதுமெழி
லாமரும்பார்பொழில்வேற்காட்டரனையடுத்தவர்க்கே. (உ)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அடுத்துச்செல்வர்தமைப்பேணி
யருஞ்செந்தமிழ்ப்பாவோதாமல்
தொடுத்துப்பன்மாமலர்சூட்டித்
தொண்டாவார்க்குத்தொண்டாகி
விடுத்துக்கள்ளவினையனைத்தும்
வேற்காட்டின்கண்வாழ்வோரைக்
கடுத்துக்காலபடரென்றுங்
காணார்கோபம்பூணாரே. (ரு)

## நேரிசையாசிரியப்பா.

பூணாரங்கொள்பாணர்மொழியார்
சொற்கந்தனையுமக்கந்தனையும்
வடவரையென்றுங்குடமுடியென்றுஞ்
சலசரமென்றுங்கொலைசரமென்றும்
பலபலபுகழ்ந்தேயலமரலெய்திக்
காலங்கழிந்துமாலும்புலவீர்
குறுமுனிவன்மனக்குறைபதுதீர
திருமணக்கோலமருவிவேற்காட்டின்
மன்னியபரமன்பொன்னடிநிலையின்
மணமலர்தூவிக்குணமொடுவாழ்த்திக்
கள்ளந்தவிர்ந்தெழிலுள்ளங்கரைந்து
கண்ணீர்துளிர்ந்தவெண்ணீரெண்ணீர்
மோனத்தெளிருமெய்ஞ்ஞானத்தவர்பான்
மேவித்தினந்தொறுஞ்சேவித்துய்ம்மின்.
நரைதிரைமூப்புநணுகுமுன்
உரைதவறுதுவிரைமின்னீரே. (௬)

## நேரிசை வெண்பா.

நீரேற்றசெஞ்சடையானேரார்தமுப்புரத்தைப்
போரேற்றிநீறுக்கும்புண்ணியன்றன்—காரேற்ற
தண்டலையார்வேற்காட்டைச்சார்ந்தோர்மனத்துயரங்
கொண்டலையாரென்பார்குறித்து. (௭)

## கட்டளைக்கலித்துறை.

குறிக்கும்பொருட்டருவேற்காடுறைதருகொற்றவனை
மறிக்கும்மரைமலரீந்தோனைப்போற்றிவணங்ககில்லீர்
பொறிக்குங்கருணைவண்பச்சடிகட்கும்புளியடுத்த
கறிக்கும்பரதபித்தேக்குற்றுவாழுங்கசடர்களே. (௬)

## எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

கசடறச்சிந்தாமணிகாரிகைநன்னூலாதி
காப்பியங்கற்றுமென்னகாசினியோர்போற்ற
கசரதமாசிவிகைமுதல்வாகனமூர்ந்தென்ன
கனகமணியாபரணங்கலந்தணியுமென்ன
மசகமெனநிலையிலுடலினைமினுக்கினென்ன
மரகதமாமயில்வீரன்வண்மலர்க்கேசி
நகையொடுபூசனைபுரிந்தவேற்காட்டுநாதன்
நளினபதப்புகழ்பரவார்நாகர்தமிழ்ப்பரவார். (௭)

## நேரிசையாசிரியப்பா.

வார்சினைதளிர்த்துவளமுறப்பசந்த
மாந்தளிர்மாதர்காந்தியுமுல்லை
முறுவலுங்கமுகுமறுவறுகளனு
முருக்கெழிலிதழுந்திருக்கழைதோளுங்
கயலுமரும்புபங்கபமுங்கலந்து
நாட்டமுங்கச்சணிதவிரமுங்காட்டுங்
குளமுந்துருமமும்வளம்பெறச்சூழுந்
திருவேற்காட்டமர்தருவேயினிக்குங்
கனியேதன்னந்தனியேதொண்ட
னுயிருக்குயிரேசெயிர்தீர்பரமே
புலித்தோலுடையாயளித்தாளுடையாய்
மாணிக்கருளியமாண்பினையுணர்ந்து
நீயேகதியெனநினைந்து
நாயேனின்றுநணுகின்றேனே. (௨)

## நேரிசைவெண்பா.

நின்றுசனனந்தோறுநீங்காதுயிரினொடு
துன்றும்வினையகற்றச்சூழாம—லென்று
மருள்வேற்கண்ணாவிக்குமாரகத்தினீவந்
தருள்வேற்கண்ணாண்மணவாளா. (௯)

## கட்டளைக்கலித்துறை.

ஆளாகிவேற்காட்டரனார்க்கன்பாற்றினதுவினைக்கோர்
வாளாகியீர்க்குமென்றெண்ணிநெஞ்சேயந்தமாதுபங்கன்
றாளாகியமலர்க்கேபூசைசெய்பவர்ச்சார்ந்தவர்க்குக்
கேளாகிநாளும்பணிபுரிவார்க்கென்றுங்கேடிலையே. (௧௦)

## எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நேடிலாமறைதேர்ஞானசம்பந்தர்
கிளத்தியபதிகமாந்தெரியல்
தோடலர்கொன்றைமாலையோடுலவத்
தோட்கணிவேற்கணிகொழுநா
வாடியபைங்கூழ்முகிலினைநோக்கும்
வகையெனநினதுபேரளியை
நாடினேனிந்தநாயினேற்கின்று
நயந்தருடருதனின்னயமே. (௧௧)

## நேரிசையாசிரியப்பா.

நயமெனக்களித்தசயமிலாவிந்த
சடமெனுந்தேரமர்விடயமாம்பரியை
மனமெனுங்கயிற்றில்வனைந்துபுத்தியாஞ்
சாரதிசெலுத்தப்பாரகத்தனிலே
புல்வழியொரீஇநல்வழிபடர்ந்து
வீடெனும்பதத்திற்கூடிடவேண்டின்
ஐம்பொறிவேட்கைக்கலமந்தம்ம
செம்பொருள்வேண்டுஞ்சின்னாட்புலவீர்
தேமாங்கனிரதம்போமாறுதி
யேய்ந்தவண்சாலிபாய்ந்துவளர்க்கும்

வேற்காட்டீசனுர்க்காட்பட்டுப்
பல்புகழ்பாடிச்சொன்மலர்தூவிப்
பாணித்திடாதுபரிந்து
வேணத்தியானம்விரைந்துசெய்ம்மின்னே. (கஉ)

## நேரிசை வெண்பா.

மின்னனையார்கண்வலையில்வீழ்ந்துதிருவேற்காட்டு
மன்னனையார்வத்தான்மதிப்பவர்தம்—பொன்னடியிற்
றாழார்கடூநரகந்தப்பிப்பேரின்பத்தில்
வாழார்களென்குமகிழ்ந்து. (கங)

## கட்டளைக்கலித்துறை.

மகிழார்கடூவாய்நரகக்குழியினின்மாய்வர்பசுஞ்
சிகிவாகனன்றீர்த்தமாடிவேற்காட்டுச்சிவன்புகழை
மகியார்மதிக்குமெய்யன்பர்கள்கூட்டமருவிநன்மா
மகிராமெனுநயனத்தவராசையைமாய்த்தெண்ணியே. ( )

## எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

எண்ணிப்பெண்ணிமாரவேளெடுத்தெறிந்தவாளியாற்
கண்ணலேவேய்ந்தகூந்தன்மாதர்கண்ணிரங்கனீக்கிவேற்
கண்ணிநாயகன்றனைக்கருத்திருத்துவோர்களெலாம்
புண்ணியம்புரிந்திலார்கள்புலமையென்னபுலமையே. (கரு)

## நேரிசையாசிரியப்பா.

புலையாமுடலிதைச்சலனமிலாமற்
புரிந்திடவெங்குந்திரிந்துழன்றுழன்று
பொய்க்கரிகளவுபுரிந்துரைத்தீட்டும்
பணத்தினைவிழைந்துக்குணத்தினைநீக்கி
உண்ணுஅதுடாஅதுறங்காததனைக்
காத்துததொட்டுப்பார்த்துப்பார்த்து
வறியோர்தங்களைவறிதினிற்காணவும்
பேசவுமவர்குறையாசையிற்கேட்கவுந்
தீமைசெய்குருடாயூமையாய்செவிடாய்
அலையாதோடியலைவாய்கழுநீர்

படப்பையைச்சாலியைத்திடத்தொடுவளர்க்குந்
திருவேற்காட்டின்மருவியபரமன்
செந்தாமரைநேர்திருத்தாள்
வந்தனைசெய்துசிந்தனைபுரிமினே. (கசு)

## நேரிசைவெண்பா.

சிந்துரஞ்சேலசுணந்தேன்பதங்கம்போல
ஐந்துபெயராலழிபவரே—வந்து
நிதந்தவத்தகத்தியற்காநின்றவேற்காட்டீசன்
இதந்தனைப்பெற்றுய்வீரினி. (கஎ)

## கட்டளைக்கலித்துறை.

இனித்தும்பையாத்திபொற்கோடீரந்தன்னிலிலகுபரன் [ண்
தனித்தும்பித்தோலுடுத்தோன்றிருவேற்காட்டுத்தாணுவைக்க
பணித்துப்பரவிப்புகழுமின்வீணிற்படிப்பதென்னே
சனித்துமிறந்துழலுந்தொழிலினைத்தள்ளுதற்கே. (கஅ)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தள்ளிமாயவினைக்குழுவைப்புகழ்தழுவியவேற்காட்டிற்
றெள்ளியோர்பரவக்குடிகொண்டருடேவன்னடிமலரை
வுள்ளிநாளுமுவப்பர்முனிவர்களும்பர்போற்றநிதந்
வெள்ளிமாமலைமீதுகளிப்பொடுவீற்றினிதிருப்பாரே. (ககூ)

## நேரிசையாசிரியப்பா.

இரும்பினைக்காந்தப்பொருப்பிழுப்பதுபோல்
எனதுயிர்தன்னைநினதருமலைதான்
ஈர்ப்பதெற்றைக்கோபார்ப்பதிகொழுநா
தவளையுழக்குநீர்க்குவளைகளரிவையர்
கண்களைக்காட்டும்பண்கள்செய்யரிசூழ்
கருப்பமர்வேலிச்செருப்பொலிவேற்காட்
டப்பணிசடையோயொப்பனையிகந்தோய்
பண்ணவனேநுதற்கண்ணமர்பகவ
பெண்ணரைபொலியும்பெரியோய்
வெண்ணீறணியும்வண்ணமேனியனே. (உ0)

### நேரிசைவெண்பா.

மேனிக்கணியாகமெல்லியலைப்பாகங்கொள்
தேனிக்கனையதிருநாமா—நானிக்
குவலயத்திலேபிறந்துகூற்றுவன்பாற்செல்லுங்
கவலையற்றிருக்கப்பார்கண். (உச)

### கட்டளைக்கலித்துறை.

கண்ணேமணியேகருவூலமேகற்பகத்தருவே
பண்ணேகருணையென்றந்நாளிற்றேவர்படைத்தலைவன்
உண்ணேர்ந்தவன்பாற்றுதிக்கவேற்காட்டினிலுற்றவனை
மண்ணேயனலேயுடலுண்ணுமுன்சேர்மடமனமே. (உரு)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மடமானைக் கரத்தினுஞ்செம் மேனியினும் வைத்தருளு
மலைவி லானை
வடமாநன் னீழலிலே நால்வர்க்கன் றோத்துதலை
வகுத்திட் டானை
இடமாகத் திருவேற்காட் டினிலமர்ந்த பெருங்கருணை
யிறைவன் றன்னைக்
கடமாவி னுரியானைக் காதலொடு கருதில்வினை
கலைந்து போமே. (உகா)

### நிலமண்டிலவாசிரியப்பா.

கலைதெரிகுறுமுனிபலபலவேத்திப்
பழிச்சிடவவர்க்குச்செழித்தருள்கொண்டு
மணமலிகோலங்குணமலிந்தருளுங்
கமலத்தடஞ்சூழ்விமலவேற்காட்டில்
வீற்றிருந்தருளுமேற்றுடைக்கடவுள்
பிறவிக்கடற்குப்பெறலருவங்கமே. (உஎ)

### நேரிசைவெண்பா.

வங்கப்பயக்கடலுள்வாய்த்தநஞ்சமுண்டிலரே
லெங்கடிருவேற்காட்டிலீச்சுரனார்—சங்கணிந்த
நாரணனாராரணனார்நாட்டமீரைஞ்ஞூற்றுவெள்ளை
வாரணனார்சிரணமாவார். (உஅ)

### கட்டளைக்கலித்துறை.

வாரிற்பொலிமுலைவேற்கண்ணிநாயகன்வந்தவரைச்
சீரிற்புரந்தருள்வாவென்றுபன்முறைசெப்பியுந்தண்
ணீரிற்பொறித்தவெழுத்தெனச்செய்குவர்நீசர்நல்லோர்
தேரிற்றிகழ்சிலையக்கரமாக்குவர்சித்தத்திலே. (௨௬)

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சித்தங்கலங்கியெங்குந்திரிந்துசிந்தாமணிக்குநிகரா
மத்தன்மதிக்குடைக்கீழ்பொருந்துமரசேபடிக்கணுனையா
ரொத்திங்குளார்களெனவேயுலோபருக்குப்புனைந்தகவியீர்
மத்தம்புனைந்தவேற்கண்ணிமேவும்வள்ளற்றுதிக்கமதியீர். (௨௭)

### நேரிசையாசிரியப்பா.

ஈர்ந்திடற்குரியகூர்ந்திடுவாளொடு
தேர்ந்தசூதாட்டிலார்ந்தபொற்றேடிப்
பார்க்குட்சிவனடியார்க்கமுதருளிய
மூர்க்கநாயனார்க்கேற்கும்பதந்தருங்
கடவுளென்றுன்றனடியிணையடுத்தேன்
றுன்றுசெங்கமலநின்றுனைகையேற்பக்
கொன்னறவள்ளாலெனப்பொன்றருவேற்காட்
டீசமுருகவேள்பூசனைபுரிந்த
சரணம்புயமித்தருணந்
தருவாய்விடைமிசைவருவாய்நீயே. (௨௮)

### நேரிசைவெண்பா.

வருமிடிகணீக்கியினசவாய்ந்தபெருஞ்செல்வந்
தருந்திருஞானம்பலிக்குந்தக்க — திருவேற்காட்
டத்தன்புகழாலென்றாய்ந்தபரதத்துவந்தேர்
முத்தர்மொழிந்தாரிம்மொழி. (௨௯)

### கட்டளைக்கலித்துறை.

மொழியுமுடலுமனமுங்கவருமுன்வினையும்
பழியுந்துடைக்குமுன்பாதாம்புயத்தைப்பணிபவர்க்கே
வழிவழியாட்படவேண்டும்வேற்காட்டினில்வாழுமயில்
விழியின்கொழுநநாலாரணங்கூறியவித்தகனே. (௩௦)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வித்தாரமறைபொலியும்வாச்சியத்தினொலியுமரு
வேற்காட்டீசன்
நச்சானகளத்தயிற்கணங்கைமருவியதோளன்
ஞானமூர்த்தி
யித்தாரணிக்கணமையினிப்பிறவாதருளுவனென்
றெண்ணிநாளும்
பத்தாயகொடுமனமேசிறந்தவவன்புகழெடுத்துப்
பேசுவாயே. (௩௧)

## நேரிசையாசிரியப்பா.

பேசுங்கிளிச்சுழாம்வாசம்புரியும்
விண்டொடுதண்டலைவேற்காட்
டண்டர்பிரானேயருள்கமாமணியே. (௩௨)

## நேரிசைவெண்பா.

மணிபொன்மாதாதந்தைமக்கண்மனைகல்வி
யெனுங்கடவுளாசிரியரெல்லாம்—அணிமேவுஞ்
சித்திரவீதித்திருவேற்காட்டீசன்மலர்ப்
பத்திரஞ்சேர்பொன்னடியாம்பார். (௩௩)

## கட்டளைக்கலித்துறை.

பாருங்கனலுமாகாயமுங்காற்றும்பரவிநின்ற
நீருங்கதிருமதியமுமாயினனீறணிந்தோன்
காருஞ்சசியுந்தவழ்சோலைவேற்காட்டுக்கண்ணுதலோன்
ஆருங்கருதுமரவாபரணத்தரும்பரனே. (௩௪)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அரும்புதொறு மறுபதங்கொள் பொறிச்சுரும்ப ரளியினையே
யருந்தி நாளும்
விரும்பியுறை பொழில்குலவுந் திருவேற்காட் டினிலமரும்
விமல யேலைக்

கரும்புகணை மதனெரித்த கண்ணுதலே கழலடியைக்
கருத சித்தந்
திரும்புவகை யெளியேற்குத் திருவருளின் றிறலதனால்
செய்வை யின்றே. (௧௫)

## நேரிசையாசிரியப்பா.

செய்தனிலன்னம்மைவிழியார்போல்
திரிவேற்காட்டின்மருவுவேலாயுத
தீர்த்தத்துறையிலார்த்தியான்மூழ்கின்
பழமறையந்தணர்குழவிகளரிவையர்
கோவதைமுதலியமாவதைப்பவங்களுங்
களவுகள்பொய்யென்றுளவிவற்றால்வரும்
பாதகமும்போமாதலினாலே
நன்றெனமதியினினாட்டி
இன்றுநீவிர்கள்சென்றுகுடைமினே. (௧௬)

## நேரிசைவெண்பா.

குடையாறுத்தண்மதியைக்கொண்டானைச்சுட்ட
விடையானைத்திண்புலியின்மேதை—யுடையானை
எண்ணுமவருக்குதவியேபுரிகுவார்குழுவை
நண்ணுமவருக்கடிமைநான். (௧௭)

## கட்டளைக்கலித்துறை.

நான்காமறைநடவும்பெருமான்றிகழ்ஞானவள்ளல்
தேன்காமரம்புகல்கொன்றையங்கண்ணியன்றேவர்பிரான்
மீன்காவணந்தவழ்வேற்காட்டரன்பதிமேவிரென்னில்
ஏன்காணென்வார்த்தையையெண்ணாதலைகின்றீனர்களே. ()

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஈனக்கொடும்பாவியெற்குன்றனருண்மேவ
லெக்காலமோ
வானத்தவர்க்கிந்தஞாலத்தவர்க்கென்றும்
வைப்பென்னவாழ்

பீனத்தனத்தாளயிற்கண்ணியெம்மோய்
பிரிந்திட்டிடா
ஞானத்தரேத்துற்றவேற்காட்டினிலவுற்று
நண்ணுவோனே. (கக)

நேரிசையாசிரியப்பா.

நண்ணியவெளியேன்கண்ணியவரமருள்
நாகமிரண்டையுமாகம்விளங்குற
உரித்தும்வளைத்தும்தரித்திடுமெந்தாய்
சின்மொழிபுகன்றுபன்முறையேத்தும்
அளியன்மாற்றமுமிகழாதேற்றருள்
தூயராமூர்க்கநாயனாரகத்தியர்
சுப்பிரமணியரொப்புடன்வணங்கும்
மதிமலிசடையோய்சதிமிர்பதத்தோய்
உன்னிலையென்றுரைக்கும்பதத்ததோ
அற்புதவேற்காட்டரசே
பொற்புறும்பொருளேபுகலரும்பொன்னே. (சு)

திருச்சிற்றம்பலம்.

வேற்காட்டீச்சுரர். வேற்கண்ணியம்மை, வேலாயுத தீர்த்தம்; சுப்பிரமணியசுவாமி பூசித்ததலம். பரமசிவன் பார் வதிதேவியாரோடும் கணபதியோடும் திருமணக்கோலமாய் அகத்தியருக்குக் காட்சிக்கொடுத்தனர். மகாவிஷ்ணு விகடக் கூத்தாடி இத்தலத்திலிருக்கும் பாஞ்சசன்னிய விநாயகரிடத் துச் சங்கத்தைப்பெற்றனர். சுக்கிரன், வேதம், பரசுராமன், இந்திரன் முதலிய அஷ்டதிக்குப்பாலகரும் பூசித்துப் பேறு பெற்றனர். இத்தலத்திற் சர்ப்பவிஷ உபத்திரவம் நாளது வரையில் கிடையாது. இந்நகரத்தில் மூர்க்கநாயனார் வேளாள மரபில் மார்கழிமாதப் புனர்பூசத்தில் திருவவதாரஞ்செய்தரு ளித் தமதுசெல்வங் குறைந்தும் சிவனடியாருக்கு அமுதூட் டலைக் குறைவுபடுத்தாவண்ணம் சூதமாடி யமூசரூத்திவந்து கார்த்திகைமாத மூலநாளில் முத்திபெற்றனர். திருஞானசம் பந்தசுவாமிகளாற் றிருப்பதிகம்பெற்றுள்ளது.

திருச்சிற்றம்பலம்.

# ௨௪.—திருமயிலை.

## விநாயகர்.

### பின்முடுகு நேரிசை வெண்பா.

சன்மமறுங் கல்வியொடுங் காஞ்சனமுஞ் ஞானமிகும்
நன்மனைமக் கட்பேறு நல்குமே - சின்மயமா
னைமுகத் தானைமதத் தானைவதைத் தானைசிறுத்
தானைமிருத் தானைதுதித் தால்

---

## நடராஜர்.

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

புரமொடு மாரன் பொடிபட விழித்த
புனிதனே போதவா னந்தப்
பரம்பர விமல பார்பதி பாக
பண்ணவர் விண்ணவ ரேத்தத்
திரம்படு மறலி சாயமார்க் கண்டன்
தீவினை தீயவந் தருளே
சுரந்தெழு பதத்தாய் நிரந்தர நடத்தாய்
தொழும்பனேன் காணவந் தருளே.

---

## சிவகாமியம்மை.

### கட்டளைக்கலித்துறை.

ஆரணி வேணியெம் மண்ணறன் பாக மமர்ந்தவளே
காரணி நாரணி பூரணியே கஞ்சன் மான்முதற்குந்
தாரணி பாதத் திருவரு ளாலன்றித் தஞ்சமுண்டோ
சீரணி யேபணி யேனைந் தந்தாள் திரிபுரையே.

---

## சுப்பிரமணியர்.

### நேரிசைவெண்பா.

சொன்னவுட னேயெமன் சோருமே சோகமறும்
பன்னவுட னேபேறு பாலிக்கும் - வன்னமயில்
ஒப்பிகந்த வாரணத்தா னொள்ளியவே லேந்துகரச்
சுப்ரமணி யென்றதிருச் சொல்.

## திருநந்திதேவர்.

### கலிவிருத்தம்.

வந்தித் தோர்களுக் கன்றி வழிவிடாச்
சந்தத் தார்புனை தாபதன் சந்ததஞ்
சிந்திக் தேத்தச் சேர்த்திடுஞ் சிவகதி
நந்தி நாதனை நண்ணுவ நாங்களே.

## திருஞானசம்பந்தசுவாமிகள்.

### கட்டளைக்கலித்துறை.

காழியின் மேய கவுணியர் தங்குலக் கண்மணியைப்
பூழியன் வெப்பினைத் தீர்த்தருள் செய்திடும் புண்ணியனைப்
பாழிசை சூரிப் பதிக மமைத்திடும் பாவலனை
நாழிகை தோறும் நினைந்தவர் நற்பதம் நாடுவனே.

## திருநாவுக்கரசுசுவாமிகள்.

### நேரிசைவெண்பா.

வாரா நமனெதிரே வந்தடுக்கும் நல்லவெலாஞ்
சீரார் சிவபதமுஞ் சேர்விக்கும் - பேரான
கல்லைக் கலனாய்க் கடல்கடந்த வாகீசர்
சொல்லை யொருகாற் சொல.

## சுந்தரமூர்த்திசுவாமிகள்.

கட்டளைக்கலித்துறை.

ஆயுங் கலையுஞ் சுருதியுங் காண்டற் கரியபதந்
தோயும் படிநிலந் தூதுவிட் டென்றுந் துரிசறு பொன்
பாயும் நதியில் விடுத்துக் குளத்தில் பரிந்தெடுத்துச்
சேயும் பிழைக்க வழைத்தவர் தாண்முடி சேர்க்குதுமே.

---

## மாணிக்கவாசகசுவாமிகள்.

கட்டளைக்கலித்துறை.

வேதமொழியை விரித்துரை செய்திடும் வேதியனை
நாதனெழுதநற் கோவையைப் பாடிய நாயகனை
வாதபுரித்திரு வாளனை மாணிக்க வாசகனை
பாதம்பணியும் பணியே பணியெனப் பாடுவனே.

---

## சண்டேசுரர்முதலியநாயன்மார்கள்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தந்தையிரு பதஞ்சிதைத்துச் சிதையாத பதத்திருந்த
தண்டித் தாளைச்
சிந்தைமிசை குடியிருத்திச் சிறுத்தொண்டர் கண்ணப்பர்
சேரர் சோழர்
முந்தைவினைக் கட்டறுத்து முழுநீறு பூசியநல்
முனிவ ராதி
எந்தையரா யெமையாண்ட தொண்டர்திரு வடியிணையை
யிறைஞ்சு வாமே.

---

## பதிகம்.

கலிநிலைத்துறை.

மையார்விழிமாதருமக்களுமற்றுளோரும்
வையாமரனவெண்ணித்தினந்தினம்வாதையெய்திப்
பொய்யாகியசொல்லியென்சிந்தைபுறத்திலேகி
நையாவரந்தாகபாலீச்சுரநாதனே. (க)

வானாடருமாமுனிவோர்களும்வந்துவந்து
பூனாறுநின்பொன்னடிக்கேபணிந்தேத்திப்போற்றித்
தேனாரமிர்தமுண்டானந்தந்தேக்கிநின்றார்
தானாய்வளருங்கபாலீச்சுரத்தம்பிரானே. (௨)

வீடாடுமாடுமனைமக்களிலாசைவைத்து
காடானதேகுமுனின்கழல்கருதிலேனைப்
பாடானவைசெய்தெமன்பற்றிடாப்பான்மையாராய்
நாடாரிறைஞ்சுங்கபாலீச்சுரநாதனாரே. (௩)

அன்பாயொருபோதும்விபூதியணிந்தறியாத்
துன்பாலெலமைத்தொட்டவினையின்றொடககறுத்துத்
தென்பாலவன்வந்திடும்போதுதிகைத்திடாமல்
என்பாலிரங்காய்கபாலீச்சுரத்தீசனாரே. (௪)

நானேதினம்மாதர்கள்மையலினைந்துநைந்து
தேனேகனிரசமோவிதழெனத்தேட்டங்கொண்டு
வானோர்தொழுந்தேவனின்பொன்னடிவாழ்த்திடாமற்
போனேனருடாகபாலீச்சுரப்போதனாரே. (௫)

சாவேதனைபடமுடியாதுஜனனமென்னும்
மாவேதனைதரமாகாதிடையினில்மாரனெய்யும்
பூவேதனைசொலப்போக வறுமையிற்புக்கழுந்து
யாவேதனைதீர்கபாலீச்சுரமன்னனீரே. (௬)

சண்டாளராகிலுநின்சன்னதிச்சாருமுன்னம்
அண்டாதுகன்மவினையெய்தலாமருளையென்று
பண்டாரணஞ்சொன்னதறிந்துபணிந்துநின்றேன்
தொண்டாக்கிக்கொள்கபாலீச்சுரத்தோன்றலாரே. (௭)

ஆறாததுன்பத்திலாழடியேன்கலக்கந்
தேறாததற்கென்செய்கேனிங்கொருதிக்கிலாதேன்
பாராதியர்போற்றும்பரனருள்பண்ணிடாயேல்
வேறார்விளம்பாய்கபாலீச்சுரவேந்தனாரே. (௮)

எல்லாருங்கைக்கொள்ளுஞ்சமையமிஃதென்றெண்ணமல்
பல்லாருநகைக்கப்பல்வேடமதாகிப்பாரில்
செல்லாதவிடமில்லைநின்னருள்செய்வதென்றோ
நல்லார்பரவுங்கபாலீச்சுரநாதனே. (௯)

பொய்யானதெலாம்பொருளென்றுநற்புத்திகெட்டுச்
செய்யாதனசெய்துநல்லோர்சொற்செவிகொளாமல்
ஒப்யாரமதாய்க்கழித்தேனாளையொன்றுங்காணேன்
மெய்பாயடைந்தேன்கபாலீச்சுரவேந்தனே. (௰)

---

### நேரிசைவெண்பா.

தேர்குதிரை யானைத் திரண்ட படைசூழப்
பார்முழுது மாண்டும் பலனுண்டோ - ஓர்பகலே
சென்றழியு மாமயிலைச் செல்வகபா லீசனருள்
பொன்று தவர்தம் பொருள். (௧)

வாடிசுற்றத் தாரெல்லாம் வந்தாங் கிழவுகொண்டு
ஆடி யழுது வலராமுன் - ஓடிநணித்
தேன்பாயு மாமயிலைத் தேவன் றிருவடியை
என்பாடிப் போற்று யினி. (௨)

கையிற் றடியூன்றிக் கால்குலையக் கண்ணிருண்டு
மெய்யினின்று மூச்சதுவு மேலேற - வெய்யசமன்
வந்திறுக்கிக் கட்டி வலியாமுன் மாமயிலை
சிந்தித் தடைவாய்நற் சீர். (௩)

அழகும் வயது மதிகரிக்கத் தேகங்
கிழவுத் தனமெய்தக் கெட்டுப் - பழயபடி
சாயா ரிடைபுகுந்து தானழியா முன்னமே
வாயார மாமயிலை வாழ்த்து. (௪)

சேர்ந்தடியார் கூட்டத்துச் செய்யவர்க்கு நல்லடணி
சார்ந்தபல வல்வினையுஞ் சாராதே - ஓர்ந்துடன்
நண்ணுவாய் மாமயிலை நாதனடி யல்லதுவே
றெண்ணுவது மென்ன விழுக்கு. (௫)

எத்தனைதான் சொன்னாலு மெள்ளளவு மேறாமல் [யில்
பித்தனைப்போல் செல்கின்றாய் பேதைநெஞ்சே-இத்தரை
வேண்டுவன வெல்லாம் விரைந்தளிக்கு மாமயிலை
யாண்டவனைச் சென்றங் கடை. (௬)

அலைந்து நிதிதேடி யல்லலுக்கே யாளாய்க்
குலைந்துபிணை மென்றுகூ றாமுன் - நிலைந்துபுகழ்
மாமயிலைக் கற்பகப்பூ மாதுடனே மன்னிவளா
நாமணியைக் கண்டு தொழு. (௭)

ஆக்கைக் கிரைதேடி யையோ வலமந்து
காக்கைக் கிரையாய்க் கழியாமுன் - சீக்கிரததில்
துஞ்சினரை மீண்டெழுப்புந் துங்கமயிலை ப்பரமன்
கஞ்சமலர் போற்றக் கருது. (௮)

எந்தைபிரான் மாமயிலை யீசன் திருவருளால்
தாதவிர்த மானிடத்திற் சாராதே - பந்தமுற்று
வந்த வரவை மறந்தாய் மடநெஞ்சே
எந்தவிதம் வாழ்வா யினி. (௯)

திகையா தருளுந் திருமயிலை யூர்வாழ்
நகையாா புரமெரித்த நாதன் - வகையோடு
சொன்ன மொழிப்படியே சும்மா விருநெஞ்சே
இன்ன மயக்கமுனக் கேன். (௧௦)

---

## வாழி விருத்தம்.

அம்மைவாழி யப்பன்வாழி யானைமா முகத்தனும்
செம்மைவேலும் வாழியே சிறந்தநீறு கண்டியும்
மும்மையு முயர்ந்தவைந் தெழுத்தும் வாழிமுழுதுணா
தமமை யொப்பிலாதவன்பா் தாள்கள் வாழிவாழியே!

---

கபாலீச்சுரர். கற்பகவல்லியம்மை. கபாலிதீர்த்தம். பிரம தீர்த்தம். புன்னைவிருட்சம். மைலாப்பூர். மாயூரம். வேதபுரம. மாயாபுரி. எனவும் வழங்குகின்றன.

பிரமதேவன் சர்வதீர்த்தம் பூசிக்க, பரமன் கபால மேந்திய கையராய்ப்பிரசன்னரானதால் கபாலீசரெனபேருண் டாயது. பார்வதிதேவியார் மயிலுருவாகி பூசித்தமையால் மயிலை யெனப் பேருண்டாயது. பூர்வம் வேதங்களைக்கவர்ந்து சென்ற சோமுகாசுரனைச் சங்கரித்த விஷ்ணுவோடு வேதங்களும் பூசித்த தமையால் வேதபுரமென்றும் மாயாபுரமென்றும் வேததீர்த்த மென்றும் பேராயது. சுக்கிரன் பூசித்து வாமனனாலிழந்த கண்ணையும் பலவரங்களையும் பெற்றனன். ஸ்ரீசுப்பிரமணியக் கடவுள் பூசித்து வேலாயும் பெற்றனர். திருஞானசம்பந்த சுவாமிகள் அங்கத்தைப் பெண்ணாக்கியதலம். வாயிலாருயனா ரென்னுமரபிலவதரித்து சிவபணிவிடைசெய்ய பணமின்மை யால் ஞானபூசைசெய்து கொண்டிருந்து முத்திபெற்றதலம். ஐயடிகள் காடவர்கோனாயனார் க்ஷேத்திரவெண்பா பாடிய தலம். தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் அவதாரமு மயிக் கியமுமானதலம். திருஞானசம்பந்தசுவாமிகளாற் றிருப்பதிகம் பெற்றுள்ளது.

---

திருச்சிற்றம்பலம்.

# உரு-திருவான்மியூர்.

## வெண்பா அந்தாதி.

### காப்பு.

நேரிசைவெண்பா.

திருவான்மியூர்மருந்தைத் தேவர்பிரானை
ஒருவேனார் தாதிவெண்பா வோதத்—தருமால்வெள்
வாரணத்தான் பூங்கமல வாரிசத்தா னேத்துமுக
வாரணத்தான் பொற்றாண் மலர்.

---

## சுப்பிரமணியர்.

### நேரிசை வெண்பா.

வானசம் பந்தமுறு வார்வாழ்த்துங் காழியில்வந்
தானசம் பந்தமகற் றுத்தமனை - ஞானசம்
பந்தனென வந்தவருட் பான்மையனைத் தென்போரூர்க்
கந்தனைநீ நெஞ்சே கழறு.

---

## சமையாசாரியர்கள்.

### நேரிசைவெண்பா.

காழிவரு ஞானக் கவுணியருங் கற்புணையா
யாழி மிசைமிதந்த வண்ணலும் - வேழமூர்ந்
தக்கயிலை யுற்றுறு மன்றமுது வாழ்வித்த
மிக்கவரு நற்றுணையா மே.

---

## நூல்.

### நேரிசைவெண்பா.

பொன்னுலகத் தாரும் புகலவரி தாமென்னி
லின்னலுளத் தேனு மியல்வதோ - தன்னேர்
பெருவான் மயூரம் பிறங்குபொழி லாருந்
திருவான்மி யூரான் சிறப்பு. (௧)

சிறப்புறினு மென்றுஞ் சிறுமை யுறினு
மறப்பனோ வான்மியூர் வுள்ளாசல் - நறைக்கமலப்
பாதத்தை நான்மறையிற் பண்ணும் பொருடெரிந்
தேதத்தைத் தீர்ப்பா யிசைந்து. (௨)

இசையாத தொன்றை யிசையுமெனு மேழை
வசைதீரச் செய்வான்மி யூர்வாய் - நசைகொண்டு
மன்னுமுனைப் பாடிபார் வாழ்த்தும் பரம்பொருடா
னென்னுமுனைப் பாடியெழுது. (௩)

எடுத்துநறு மாமலரை யிட்டு முறையா
லடுத்துத் துதிக்க வறியேன் - நடிக்குந்
திருவடியைச் சேர்ந்தேன் றிருவான்மி யூர
கருவடியை நீக்கக் கருது. (௪)

கரும மிரண்டுங் களையவே நெஞ்சே
பெருமையுறு வான்மியூர்ப் பேணி - யொருமலரைத்
தொண்டினை யுருத்திடுதி தூயவரே யென்றியம்பச்
சண்டனடுத் திடுமுன் சார்ந்து. (௫)

சார்ந்தாரெஞ் ஞான்றுஞ் சதானந்த வின்பநலம்
ஆர்ந்தாரே யாவரதற் கையமிலை - ஓர்ந்தார்கள்
பான்மையூர் நெஞ்சத்தார் பாடிப் பரவுதிரு
வான்மியூர் தன்னை மதித்து. (௬)

மதிவதன மங்கையர்கண் மாயக் கலவி
புதுமையென நம்பும் புலையர் - பதிதராய்ப்
பாழ்நரகில் வீழ்வர் பழமறைசொல் வான்மியூர்
ஆழ்பொருளைச் சேரா ரறிந்து. (௭)

அறிபவரே செல்வ றறியாதார் தீய
வறிஞர்களே யாவரிது வாய்மை - செறிகுழலா
மாதங்கத் தோனெழிலார் வான்மியூர் தங்குமத
மாதங்கத் தோலான் வளம். (௮)

வளம்பலவி ளங்குபொழில் வான்மியூர் மேவுங்
களங்கறுத்த ஞானக் கடலே - உளங்கருணை
வையாய் வினைப்பகையை வாட்டுவாய் நஞ்சயின்ற
வையாவெங் கேபடைவே னுய்ந்து. (௯)

எங்குங்கண் டோமிலையே யெற்றமுறை பிறழா
தங்கங்கொண் மாமறையா லந்தணர்கள் - பொங்கும்
வசையுந் தியாகஞ்செய் வான்மியூர் மேவி
யசையுந் தியாக ரழகு. (௧௦)

அழகுகல்வி செல்வ மறிவொடுவீ டெய்தும்
பழவினைபோ நெஞ்சேயெம் பாவம் - பழிமொழியும்
வாதுநடத் தான்புரிந்தான் வான்மியூ ரான்பரனை
ஆதுநடர் தான்புகழைச் சொல். (௧௧)

சொல்லுந் திசையெட்டுஞ் சொன்னவுல குந்திரிந்து
வெல்லுந் திறல்படைத்து மேன்மையிலை - நல்லோர்
துணிந்தேத்தும் வான்மியூர்த் தோன்று னிணையே
பணிந்தேத்தல் செய்யார் பலர். (௧௨)

பலவின் பழச்சாறு பாய்ந்துவளர் பைங்கூழ்
பலவளங்க ளைக்கொழிக்கும் பான்மை - மலியுநதென்
வான்மியூர் மேவி வழிபடுவா ரெற்றைக்கு
மேன்மையுறு வார்கள் விரைந்து. (௧௩)

விரைந்து துதிமின் வியன்வான்மி யூரைக்
கரைந்துருகிக் கண்களாற் காண்மின் - இரைந்து
பதட்டம்போ தப்பேசிப் பாசதரன் சீறி
யதட்டும்போ தெண்ண லரிது. (௧௪)

அரிதந்த மாலு மயனு மறியாச்
சரித னெனுமருந்தீ சன்றன் - பரதமதைக்
கண்டார் பரானந்தங் காண்பர்வான்மி யூரை
விண்டார் பெறார்பரம வீடு. (௧௫)

வீடுமனை மக்கள் விரும்புதனம் மாடு
நாடு பலபொருளை நம்பாது - பீடுபெறும்
வேதத்தா னூடும் வியன்வான்மி யூரைநெஞ்சே
கோதற்றே நீவிரைவிற் கூடு. (௧௬)

கூடுவிட் டாவி குலைந்தோடு முன்னமே
ஓடுகரங் கொண்டாடு முத்தமன் - நீடுமினை
எங்குநிறை வான்மியூ ரெக்கை மருந்தீசன்
செங்கமலத் தாண்மனமே சேர். (௧௭)

சேரா பழவினைபின் செய்வனவும் வாராது
ஓராயு மேலோ ரனுதினமும் - நேரா
அடுத்துலவு வான்மியூ ரண்ணல் புகழைப்
படித்தவருக் குண்டாம் பதம். (௧௮)

பதகன் கொலைஞன் படிறனே னெனின்
பதமலரி லன்பு பதித்தே - இதம்பெறுத
லெந்நாள் வான்மியூ ரெந்தை மருந்தீசா
கந்தனுர் தந்தாய் கழறு. (௧௯)

கழலிணையை யென்னெஞ்சக் கஞ்சத் திருத்திக்
குழுமியவஞ் ஞானத்தைக் கொய்து - விழுமிய
பேறு பெறுவான் பெருவான்மி யூரரசே
கூறுபடச் செய்வாய் குறித்து. (௨0)

குறித்துவான்மி யூர்தனையே கொண்டாடாப் பேய்காள்
மறித்திடுவா ளந்தகனுர் வந்து - முறித்துமம்ம
மோதும்போ தென்செய்வீர் முக்கண் மருந்தீசரையெப்
போதும்போற் றீர்கள் புகழ்ந்து. (௨௧)

புகழ்ந்துபுகழ்ந் துன்னடியைப் போற்றுமற் போனேன்
திகழ்ந்த விடைக்கொடியெந் தேவே - சுகந்தமுறு
தண்ணருங்கா வின்னளவுஞ் சார்வான்மி யூராவென்
கண்ணிரங்கா யென்செய்வேன் காண். (௨௨)

காணக்கிடையாத கட்டழகன் வான்மியூர்
மாணப் பிறங்கு மருந்தீசன் - சேணுறுநாற்
றூயர்களே யாவீர் துயர்களைவான் போற்றுமினே
பேயர்களே நீங்கும் பிறப்பு. (௨௩)

பிறந்திறந்து மூதுலகிற் பெற்றதுய ரெல்லாம்
மறந்தனையோ வேழை மனமே - துறந்தெனைத்தும்
வந்தாருங் காண்பரிய வான்மியூர் வள்ளலருள்
சிந்தாமற் கொள்வாய்நீ தேர்ந்து. (௨௪)

தேர்ந்தருந்து வோர்கடஞ் சிந்தை பரவசமே
யார்ந்திருக்கச் செய்யு மருமறையோர் - சார்ந்துதினம்
பூவிட் டடிமை புரிவான்மி யூரடைந்து
தேவர்க் கமுதளித்த தேன். (௨௫)

தேனோ பா கோபாலோ தெள்ளமுதோ கற்கண்டு
தானோ கனியோ தனிரசமோ - வானோ
ருமா மறைமுனிவ ரண்டுவான்மி யூர்வாழ்
பெருமான் மருந்தீசன் பேர். (௨௬)

பேர்பலவா மெண்ணும் பிறப்பும் பலபலவாம்
ஊர்பலவா மோது முறவுபல - சீர்க்கமலப்
பூவினான் போற்றிப் புகழ்வான்மி யூர்முதை
மேவினார்க் கெல்லாம் விடும். (௨௭)

விடுமி னறுபகையை வெம்பிறவி யேழுந்
தடுமி னிலைபந்தவற்றைத் தானங் - கொடுமினோ
சித்திர வீதித் திருவான்மி யூர்சேர்மின்
பத்தி புரிமின் பணிந்து. (௨௮)

பணியராப் பூண்டவனைப் பார்ப்பதியோ டெண்ணைத்
துணியாருக் கேழைபங்கன் றாத்தாள் - நணிநாளும்
பேணாருககத்தன் பெரிதுவக்கும் வான்மியூர்
காணாருக் கேது கதி. (௨௯)

கதிரோன் பரிகமுகஞ் சோலை தடுக்கு
பதிவான்மி யூரைப் பணிந்து - மதிபழியின்
பங்குதிருப் பாற்கடலும் பாக்கியமுந் தந்திடுவாள்
பொங்கு திருப்பாற்கடலின் பொன், (௩௦)

---

வாழி வெண்பா.

வாழி மறை யாகமங்கள் வாழிதிரு வெண்ணீறு
வாழிபர ணக்கமணி வாழியரோ - தாழ்வில்
திருவெழுத் தஞ்சுந் திருவான்மி யூர்வாழ்
ஒருமருந்தி னந்தாதி யும்.

திருச்சிற்றம்பலம்.

கோகரந்தீச்சுரர். மருந்தீச்சுரர் நடனத்தியாகேசர். சொக்கநாயகியம்மை. வான்மீகதீர்த்தம். சமுத்திரதீர்த்தம்.

வெண்ணிறமான சுயம்புலிங்கம் ஓர்பசுத் தனது பாலைச் சொரிந்து பூசித்து முத்தியடைந்தது வான்மிகருஷி பூசிக்கத் திருநடன தரிசனக்கட்டளை யிட்டருளியதலம். திருநாவுக்கரசுசுவாமிகள் திருஞானசம்பந்த சுவாமிகளாற் றிருப்பதிகம் பெற்றுள்ளது.

---

திருச்சிற்றம்பலம்.

## ௨௬.—திருக்கச்சூர்.

மாலை.

---

### காப்பு.

நேரிசைவெண்பா.

திருவகலா தோங்கூர் திருக்கச்சூர் மேவும்
பெருவயிற்றெம் புண்ணியனைப் போற்ற—விரும்பி
ஆதரிப்பான் காப்பான் அளிப்பான் சுகானந்த
போத முணர்த்துவானிப் போது.

### சமயாசாரியர்கள்.

மட்டுவிருத்தம்.

நஞ்சூட்டிப் பாலருத்தி நாயர்தோலைச் சுருள்காட்டி
யெஞ்சாத நூலருளி யிவ்வுலகிலாட்கொண்ட
துஞ்சாத பெருமாற்குத் தூயதமிழ் மறைபாடும்
விஞ்சுபுகழ் நால்வர்பத முடிமலரா மிலேந்திடுவாம்

---

### நூல்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

காரார்மேனிமாலயனுங்கவிஞன்மறையும்புரந்தரனு
மோராரென்னிலொருகாலேயுணரும்பரிசையுண்டேனோ
வாரார்சிலைமெய்மாதங்கம்வாய்ந்தவரசேதிருக்கச்சூர்
ஏராலக்கோயிலமர்சிவனேதேவர்செழுஞ்சுடரே. (௧)

சுடரேசோதிவானவனேசுயம்பேவடியாருளம்புகுந்து
இடரேயகற்றியின்னமுதையிதமாய்ப்பொழியுஞ்சுகக்கடலே
நடமேபுரியுந்திருவடியைநாயேன்காணக்கடவேனோ
இடமேபொற்றடஞ்சூழ்மெழிலார்க்கச்சூர்கண்ணுதலே. (உ)

நுதலார்திலதமிட்டொளிரு நுணங்குமிடையாரெ நோளும், இதமேபேசியிரப்பவர்க்கொன் றீயாதிருந்தேனினிப்பிழைக்கும், விதமொன் றுணராவெறிநாயேன் வீணேகழிந்தேன்விரைக் கமலஞ், சதமென்றடைந்தேன்றிருக்கச்சூ ராலக்கோயிற்சார்ந் தானே. (ங)

சார்ந்தவடியார்க்கருளளிக்குஞ்சாந்தநிதியேதற்பரமே
ஆர்ந்தவடவாலிடமமருமமுதப்பெருக்கேகருங்கனியே
நேர்ந்தபொல்லாவினையேனைநேடியாளாய்திருக்கச்சூர்
சேர்ந்தவாலக்கோயிலமர்செல்வஞானக்குருமணியே. (ச)

மணியேமணியின்றிகழொளியேமறைதேர்நாவலூரன்பசிப்
பிணியேபகலச்சென்றிரந்தபெருமான்விருந்திட்டீச்சுரனே
பணியேனினையல்லாலென்றுபாசத்துழலும்பரதெய்வம்
அணியேவிளங்குந்திருக்கச்சூராலக்கோயிலம்பரனே. (ரு)

பரனேபாபவினையகற்றிப்படியிலாளாய்ப்பழமறையின்
சிரமேநடிக்குஞ்சின்மயமேசிந்தாமணியேசிறந்தசீ
தரனேயோறுவிடையாகுந்தகமைவாய்ந்ததனிக்கைதுடிக்
கரனேவித்யாதரர்பணியுங்கச்சூராலக்கோயிலனே. (சு)

கோயில்சுடுகாடெனக்கொள்ளுங்கோதிலமுதேகுணக்கடலே
பாயுநரைமால்விடையிவரும்புண்யபாவடியார்க்குற்றதுயர்
மாயும்வகையேயுளங்கொண்டுமாண்டபுகழ்சேர்திருக்கச்சூர்
ஏயுமாலக்கோயிலமர்ந்தாயென்னையாண்டருளே. (எ)

அருளேவடிவாயவனிதனில்வந்தவன்றொண்டர்
தெருளேவழங்குஞ்சிவநெறியைச் செழிக்கப்பாடுந்திறத்தினுங் [கு
இருளேமுழங்குநள்ளிரவிலிலையைத்துறந்துசென்றவனே
கருளேயகற்றக்கடைக்கணிப்பாய்கச்சூராலக்கற்பகமே. (அ)

பகவேயன்னநுண்மருங்கேய்பண்பாரமுதாம்பிகையாரின்
அகமேகளிக்கத்திருநடனமாடுமரசேவானந்த
சுகமேவியநல்வீடுதவுந்துரியாதீதப்பழம்பொருளே
ககமேசுவணமுடையானேகச்சுராலக்காதலனே. (௯)

தலனேதிகழ்நற்றிருக்கச்சூர்த்தலைவாதமியேன்றனைநாளும்
மலமேயுழலாதுனதடியைமறவாதேத்துவரமருள்வாய்
சலமேவியசெஞ்சடையானேதையல்சேரொருகூறுடையாய்
கலனைபரவாக்கொண்டவருட்கண்ணாரமுதப்பொழிகாரே. ()

திருச்சிற்றம்பலம்.

விருந்திட்டீச்சுரர். அமுதத்தியாகேசர். அஞ்சனாட்சியம்மை. அமுதத்தீர்த்தம். வித்தியாதரர் பூசித்ததலம். சுந்தரமூர்த்திசுவாமிகள் பசியால்வருந்திக் களைப்புற்றிருத்தலையறிந்து திருவருள்சுரந்து சிவபெருமானே ஓர்மறையவராயோடேந்திச்சென்று அமுது யாசித்தருளியதலம். சுந்தரமூர்த்திசுவாமிகளாற் றிருப்பதிகம் பெற்றுள்ளது.

---

திருச்சிற்றம்பலம்.

## ௨௭-திருவிடைச்சுரம்.

:0:

### காப்பு.

நேரிசைவெண்பா.

கல்வியொடு செல்வங் கதித்துவரு மெய்ஞ்ஞானம்
வல்வினையு நீங்கி வழிவிடுமே - தொல்லை
கெடுத்தாளுங் கண்டீர் கேடிரு செம்மைத்
துடுதகு ணர் தந்திமுகன் றாள்.

---

## சுப்பிரமணியர்.

நேரிசைவெண்பா.

மெய்ஞ்ஞான மெய்துமே மெய்யடியா ருக்குமே
அஞ்ஞானம் விட்டே யகலுமே - எஞ்ஞான்றும்
நீறாடு மேனி நின்மலனா ரீன்றெடுத்த
கூறுவடி வேலன்றாள் கூடு.

---

## திருநந்திதேவர்.

விருத்தம்.

பூதலத்தினிற் புண்ணியஞ்செய்திடாப் புலையேன்
மாதர் மையலிற் சிக்கியே மாணடி மறந்தேன்
வாது செய்திடும் வல்வினை வராமலே நந்தி
நாதனார்திருத் தாளிணை நான்மற வேனே.

---

## சமயாசாரியர்கள்.

நேரிசைவெண்பா.

ஆளுடைய பிள்ளை யரசுநம்பி யோடடிகள்
தாளுடையே மென்னுந் தருக்கினால் - நாளும்
மதிக்கே மொருவரையும் மன்னுபிற தெய்வந்
துதிக்கே மிதுவென் றொழில்.

---

## நூல்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திருவே கருணைக் கடலே யமுதச்
செறிவே பொதுவிற் றிருநன் னடனம்
புரிகா ரணமே புனிதப் பொருளே
போற்றுந் தவருட் பொலிகின் றவருட்
குருவே நினதா ளையலா துளமே
குறியேன் கொடியேன் குறைதீர் பழம்பஞ்
சுரமே நிகர்சொல் லவர்கா டுமிடைச்
சுரமே வியவின் னவர்நா யகனே. (க)

கரிசுற் றபுலக் கயவர்க் கடியேன்
கவல்கின் றனனென் செயவல் லெனெனக்
கொருசுற் றமெனப் பலகா லுனதா
ளுழைநா னுரைத் தெளியே னுலகிற்
றிரிகுற் றயர்வேன் றனையாண் டருள்மை
செறிபூங் குழன்மா மலைமங் கையுமை
துரிசற் றவுளத் தினிது மேவிடைச்
சுரமே வியவிண் ணவர்நா யகனே. (௨)

வல்லேய் முலைமா தர்மயக் கதனான்
மயர்வுற் றனனின் மலரன் னகழல்
வல்லே யடைகிற் பவர்நே யமதே
மனநா டகிலேன் றனையாண் டருள்வாய்
கொல்லே றுடையாய் மழுமா னுடையாய்
குழவிச் சிறுமா மதியச் சடையாய்
தொல்லா கமநா டியநல் லவிடைச்
சுரமே வியவிண் ணவர்நா யகனே. (௩)

கடியே றுமலர்க் கணைகொண் டுகொடுங்
காமன் பொருகின் றனனின் னருளைப்
படிமே லடைவார் தமைநா டகிலேன்
பரமா பணிமா மதிசூ டியவா
மிடியே றுமனத் தவனென் புரிவேன்
விடையார் கொடிமே தகுசே வகனே
தொடிமே வுகரத் துமைநா மேவிடைச்
சுரமே வியவிண் ணவர்நா யகனே. (௪)

தேன்றாழ் குழன்மா தர்மயக் கதனாற்
சிறியே னுளனென் தலையின் றனனின்
மூன்றோ டோரைந் தெனனின் றவுரு
முன்னித் தொழுகின் றிலனெம் முடையாய்
சான்றா முனைநா டிவதன் றுகொலோ
சலசத் திருமங் கைமணா ளனுந்
தோன்றா லெனவம் போமோர் துமிடைச்
சுரமே வியவிண் ணவர்நா யகனே. (௫)

கலையான் றலையோர் விரல்கொண் டுமுனங்
கழியப் புரியுங் கருணைக் கடலே
மலையான் றருமா தொருபா கசெழு
மழுமா னுடையாய் மலையோர் சிலையாக்
கொலையே புரிமூ வர்புரங் கொளுவக்
குறிவைத் தெயுமென் குணவா ரிதியே
தொலையா தபவந் தெறுகிற் குமிடைச்
சுரமே வியவின் னவர்நா யகனே. (௬)

விண்ணத் தொருமூ வெயிலெய் தவநின்
வியன்சே வடிநா டியறிந் தறியேன்
மண்ணிற் பலவெம் பிறவித் தொடர்பான்
மனைநந் தயர்வேன் றனையாண் டருள்வாய்
கண்ணற் குமலர்க் கண்ணற் குமதிக்
கண்ணல் லியகா மருகன் னிலையாய்
சுண்ணப் பொடிபூ சியகல் லவிடைச்
சுரமே வியவின் னவர்நா யகனே. (௭)

பொன்னே பொடியா டியமே னியனே
பொருளே கருணைப் புயலே யடிமேல்
அன்னே நினைதா னைவழுத் தகிலே
னயர்கின் றனனென் செய்வனு னுடையாய்
மின்னா ருமிலைக் கழுமுட் படையாய்
விடையாய் மதிமே வியசெஞ் சடையாய்
நுன்னார் தமைநா டகிலா தவிடைச்
சுரமே வியவின் னவர்நா யகனே. (௮)

அன்பே யுருவங் கொடுநீற் பணிவோ
ரகநா டிபவா ரணமா முடிவே
இன்பார் கவியே யுமையம் மைவலத்
தெழிலார் வடமுல் லையிடத் தவனே
வன்பே யுமனக் கொடியே னுனையே
வழிபா டுசெயேன் வறியேன் படுவெந்
துன்போ வவருட் கண்பார் தவிடைச்
சுரமே வியவின் னவர்நா யகனே. (௯)

வேதப் பயனே விமலா வெனநின்
விரையார் கழல்வேண் டிலேன் மிளிரும்
பாதிப் படிவைத் துமையம் மையையான்
பாடும் பரிசே பரிசா வருளாய்
கோதிப் படியிற் புரிநின் றனனென்
குறைதீர்த் தருளா மையென்கோ மனமே
சோதித் திடவெம் முடையாய் நலிடைச்
சுரமே வியவிண் ணவர்நா யகனே. (௧0)

---

## நேரிசை வெண்பா.

கழல்கண்டு போற்றாக் கயவரிரு கண்ணைத்
தழல்கொண் டெமன்தமர்கள் தாக்க—விழல்கண்டு
தாளா திடைச்சுரத்தைத் தாழ்ந்தார் தமக்கடிமை
யாளாக வந்தே னடைந்து. (க)

ஆசைப்படாத பொருளில்லை யவனியிலே
மாசற்ற சோதி மலரடிக்கே—நேசமற்று
வாளா கழித்தின்று வந்தே னிடைச்சுரத்தில்
ஆளாதிருப்ப தென்கொ லாய்ந்து. (உ)

கட்டையிலே வைத்துறவோர் காணச் சுடலைகரை
முட்டையிலே வைத்தனலை மூட்டாமுன்—கெட்டநெஞ்சே
நல்வந் தனைபுரிந்து நம்ப னிடைச்சுரத்து
செல்வனடிக் கன்புநிதஞ் செய். (ங)

நடக்கையிலே நிற்கையிலே நண்ணலிலே நாடிக்
கிடக்கையிலே கர்வித்துக் கேத—மடமனமே
சால்புடைய நல்லோர்கள் சாரு மிடைச்சுரத்து
மால்விடைமேல் வந்தானை வாழ்த்து. (ச)

செல்லாக் கயவரிடஞ் செஞ்சொற் றமிழ்மாலை
சொல்லாதே சொற்கேட்டுச் சோராதே—நன்மனமே
கொண்டனவெ லாந்தன்பால் கோதி லிடைச்சுரத்து
அண்டர்பிரா னுண்டங் கணே. (ரு)

எல்லாந் தெரியு மிறைவா வுனக்கிருக்கும்
பொல்லாத தொல்வினையைப் போக்கியே—நல்லடியார்
சூழு மிடைச்சுரத்துத் தோன்றலே நின்னடிக்கீழ்
வாழும் வரந்தருவாய் வந்து. (சு)

பொல்லாப் பிறவி தனக்கீடான பொய்யுலகை
வெல்லாப் பெரும்பாவி மேலான—கல்லாத
மூடனேன் பாழ்நரகில் மூழ்கா திடைச்சுரத்தை
நாடித் தொடர்ந்து நட. (எ)

வாடுமுகங் கொண்டேனை வாடா திடைச்சுரத்து
நீடுவ கருணை நிறைவாளன்—வீடுபெற
வைப்பா னருளை வழங்குவான் வள்ளலவர்க்
கொப்பாவா ருண்டோ வுரை. (அ)

தீவினையோ முன்செய்த தீங்கோ திருவருளோ
கூவி யழைத்துங் குறைகேளா—தோவியம்போல்
வான்புக ழிடைச்சுரத்தான் வாய்திறவா னுமாகில்
நான்பிழைப்ப தெவ்வாறு நாட்டு. (கூ)

ஆவி யுடல்விட் டகன்றிடுமுன் னேமலரைத்
தூவிப் பணிந்து துதியாதே—பாவிநெஞ்சே
வாணாள் கழித்தனையே வள்ள லிடைச்சுரத்துப்
போனாலென் சொல்வாய் புகல். (க0)

---

## குறள் வெண்செந்துறை.

அன்புகொண் டிடைச்சுரத் தமர்ந்த நாதனை
இன்புறநாளு மிறைஞ்சி வாழ்த்துவாம்.

திருச்சிற்றம்பலம்.

இடைச்சுரநாதேச்சுரர். ஞானபுரீச்சுரர். இமையமடக்கொடியம்மை. கோவர்த்தனாம்பிகை. கோவர்த்தனகிரி. இந்திரதீர்த்தம். கௌதமருஷி சனற்குமாரருஷி பூசித்ததலம். திருஞானசம்பந்தசுவாமிகளால் திருப்பதிகம் பெற்றுள்ளது.

திருச்சிற்றம்பலம்.

# ௨௮.—திருக்கழுக்குன்றம்.

———:o:———

## காப்பு.

### நேரிசை வெண்பா.

நல்லதெலாம் வந்தெய்தும் நம்பு மடியவர்கள்
தொல்லையெலாம் விட்டுத் தொலையுமே - வல்ல
மதுரமொழி மாதுமையாள் மைந்தனர விந்த
பதமலரைப் பற்று பவர்க்கு.

---

## ஸ்ரீ நடராஜர்.

### கலிவிருத்தம்.

வீணில் நாளை வெறுமனே போக்கினாய்
நாணி லாய்மட நெஞ்சே நவிலக்கேள்
ஆணிப் பொன்னம்ப லத்துள்வா ழத்தனைப்
பேணினால் பெறு வாய்பெரும் பேற்றையே.

---

## சிவகாமவல்லி.

### கொச்சகக்கலிப்பா.

ஆரணத்தி னுட்பொருளா யானந்த மயமாகி
காரணகா ரியங்கடந்த கருணைசெறி வடிவான
பேரணங்கு முலைச்சுவடு பிறங்கசிவத் தோடுறையுஞ்
சீரணங்குஞ் சிவஞான செல்விமலர்த் தாள்போற்றி.

---

## சுப்பிரமணியர்.

### நேரிசைவெண்பா.

நின்று நினைமனமே நீயடைவாய் நற்பேறு
குன்றுடையான் வீரன் குறுமுனியோ - டன்றபார்க்கும்
ஓதி யுயிர்காத் துரைத்துத் தனைவைத்து
மாதுக் களித்தமலர்த் தாள்.

---

## திருநந்திதேவர்.

### கலிவிருத்தம்.

பாவி மாதர் படுகுழி வீழ்ந்திடர்
மேவி மேனி மெலிந்து மடிவுகொண்
டாவி யேங்கி யலையாம னந்திதாள்
சேவித் தேத்தித் தகர்த்துதுந் தீமையே.

---

## திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள்.

### விருத்தக்கலித்துறை.

கருவினிற் புகுதார் நரகினிற் பயிலார் கடுங்காலன்
வெருவிட மதியார் வேள்விடு கணையால் விரகெய்தார்
பொருவிடை வருவாரருள்பெறு புகலிச் சம்பந்தன்
திருவடி பணிவார் திருவரு ளடைவார் தேர்வாரே.

---

## திருநாவுக்கரசுசுவாமிகள்.

### நேரிசைவெண்பா.

கல்லாற் சமைந்த கதவைத் திறந்தொரு
கல்லாற் கடலைக் கடந்துபெருங் - கல்லாய
நெஞ்சுடைய புத்தரிடு நீற்றறையி னின்றெழுந்தார்
கஞ்சமலர்த் தாளே கதி.

---

## சுந்தரமூர்த்திசுவாமிகள்.

### கலிவிருத்தம்.

அத்தனை யுல கம்மை யிடத்தனைப்
பித்த னென்றும் பிணங்கு பரவைபால்
எத்தித் தூதுகொண் டேவியுந் தோழமை
வைத்த நாவலூர் வன்றொண்டை வாழ்த்துவாம்.

---

## மாணிக்கவாசகசுவாமிகள்.

### நேரிசைவெண்பா.

வீணில் மடநெஞ்சே மெலிந்து மயலாழ்ந்து
நாணித் திரிகின்றாய் நானிலத்தில் - கேணீ
கருவா தனையொழித்துக் காக்குமே யெங்கோன்
திருவாத வூரர்திருத் தாள்.

---

## சண்டேசுரர்.

### கலிவிருத்தம்.

தந்தை யென்று மறிந்தவன் றாளிணை
சிந்த வெட்டிச் சிதைத்தரன் பூசையில்
முந்த நின்ற முனிவன் முளரித்தாள்
எந்த நாளு மிறைஞ்சுது மேத்தியே.

---

## இத்தலத்தில்பூசித்தடைந்தவர்கள்.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சீரார்கோடியுருத்திரருஞ்சிறந்தநந்திமாலீசன்
பேரார்காமதேனுவசுபிரமனரியிந்திரன்முனிவர்
பாரார்தொழுநாரதர்கணங்கள்பரிதிக்குருபதஞ்சலியும்
ஆராதனைசெய்தருளடைந்தாரடியென்முடிமேலணிவேனே.

---

## பதிகம்.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பூவாவிட்டமன்மதனைப்பொடியவிழித்தாய்பெருங்கலையை
ஓவாவிட்டசாக்கியனையெல்லாச்செல்வமுறவைத்தாய்
காவாவென்றேதொழுதேத்தாக்கசடனேனைக்கண்பாராய்
தாவாமூவாமணிவிளக்கேதருவேகழுக்குன்றுடையானே. (௧)

அழுதபிள்ளைக்கேபாலையுண்ணவளிப்பாளன்னையென்பர்
அழவேவலியில்லாப்பிள்ளைக்களிப்பதுவுமவள்கடனே
தொழுதுதுதிக்கின்றோர்க்கன்றித்தூட்டன்றனக்குமெளிவந்து
பழுதிலாதவருட்குருவாய்பரனேகழுக்குன்றுடையானே. (௨)

ஐந்துபுலனுமுள்ளடக்கியறிவைநிறுத்தியகண்டமய
சிந்தைசெய்யுமடியரைவிட்டகந்தைசெய்தபாதகனை
முந்தைவினைதீர்த்தருளளித்தமுதல்வாவுன்றன்பெருங்கருணை
எந்தவிதமோயானறியேனெந்தாய்கழுக்குன்றுடையானே. (௩)

முந்தப்பதினாறும்வயதுமுறையோடளித்தான்முன்னிருக்க
வந்திங்கழைத்தகாலனையேவலியவுதைத்தாயிதுவென்னே
சிந்தைமயக்கந்தெளியாதசிறியேன்செய்ததீமையெலாம்
வெந்துவிழவுன்னருடருவாய்விமலாகழுக்குன்றுடையானே. ()

ஆவினெய்யிற்றிருவிளக்கையமைத்தானிருக்கநெய்திருடத்
தாவுமெலிக்குத்தராதலத்தைத்தானாயாளுந்தரமீந்தாய்
சேவித்தடியார்பணிவிடையிற்செல்லாப்பொல்லாப்பாவியெனை
மேவியலையாதருடருவாய்மேலாங்கழுக்குன்றுடையானே. (௫)

அழுவார்தொழுவார்க்கியாமலகந்தைபுரியுமந்திக்கு
வழுவாவரமுஞ்செங்கோலும்வலிதிலளித்தாய்வன்பெண்ணே
புழுவால்மலிந்தபுன்குரம்பைப்பொறியேசுமந்தபுன்மையனை
நழுவாவரந்தந்தாட்கொள்வாய்நாதாகழுக்குன்றுடையானே. ()

வரைந்தவடிவாமெனதுளங்காவல்லதவத்தோரிருக்க
விரைந்துகதறுமண்டூகம்விரும்பாமுன்னேவிரிநிலத்தைப்
புரந்துவாழ்கவெனக்கருணைபொழியுமுகிலேபொல்லாதேன்
கரைந்தமனத்தோடுனைப்பணிந்தேன்கண்பார்கழுக்குன்றுடை
[யானே. (௭)

மடிமைவிளையாட்டதனாலுமனத்திணுருண்மையிலாதாலும் [ல்
கொடுமைபொறாமைதம்மாலுங்கோவேயொருகால்நினைவாரே
படியிற்பதினாறும்பெற்றுப்பதமும்பெறுவரெனமறைகள்
முடிவின்றொலிக்கக்கேட்டுவந்தேன்முதல்வாகழுக்குன்றுடை
[யானே. (௮)

பாவிமொழிந்தமொழிகேட்டும்பாராதிருப்பதழகேயோ
கூவியழைத்துங்குறைகேளாக்கொடியேன்செய்தகுறையேயோ
தாவியகிலசராசரமுந்தானாய்முளைத்தமுதலேயோ
ஆவியலையாதருடருவாயரசேகழுக்குன்றுடையானே. (௯)

அழியுமுடலிலுறுநோயையகற்றவுரியமருந்தருந்திக்
கழியும்போகநுகர்ச்சியினிற்காலங்கழித்தேன்கல்லாதேன்
இழியும்வினைக்கேயிடுமருந்தையிறைவாதேடிப்பிடியாத
பழியைபகற்றிப்பதமருள்வாய்பரனேகழுக்குன்றுடையானே.()

---

## நேரிசைவெண்பா.

சீர்நிறைந்த சிந்தை சிதையாமற் செல்வனே
நீர்நிறைந்த வேணி நிமலனை - ஓர்ந்து
நெறியால் கழுக்குன்றம் நின்று நினைவார்க்குக்
குறியால் வரங்கொடுக்குங் குன்று. (௧)

குன்றுபோல் செல்வமுளார் கூடுந் தலைவாயில்
நின்றுநின் றேங்குகின்ற நெஞ்சமே - இன்றுமுதல்
தாசக்குங் காசுக்குந் தொல்பசியைத் தீர்த்தற்கும்
பூசிக்க வேதகிரி போ. (௨)

போயடைந்த வன்பரெலாம், பொல்லா வுடற்கமையு
மாயப் பிறவிப்பிணியு மாற்றியே - ஆயுங்
கழுக்குன்ற நாதன் கழலிணையின் கீழே
வழுக்கின்றி வீற்றிருந்தார் வாழ்ந்து. (௩)

வாழ்ந்தாலும் வையமொடு வானவரும் வந்துதினந்
தாழ்ந்தாலுமென்ன தனிகனே - வீழ்ந்தொருகால்
ஈசா கழுக்குன்றத் தேந்தலே யென்றன்பால்
பேசா தவன்பெரும் பேய். (௪)

பேயகலும் நோய்விலகும் பேசரிய பெண்டுதவுஞ்
சேயளிக்குஞ் செல்வஞ் செழிக்குமே - தீயவழி
செல்லா திழுக்குஞ் செலுத்துஞ் சிவபதத்தில்
நல்லார் கழுக்குன்ற நாடு. (௫)

---

## வாழி.

### சந்தவிருத்தம்.

ஈசன்வாழி யிறைவிவாழி யிலங்கு மைங்கரத்தனும்
மாசிலாத கந்தன்வாழி மறைகள்வாழி மன்னுசீர்
நேசர்வாழி நீறுவாழி நிலவிய கழுக்குன்றமும்
பேசுநூலுஞ் சண்டிவாழி பெருகுசைவம் வாழியே.

திருச்சிற்றம்பலம்.

உருத்திரகோடீஸ்வரர், வேதகிரீசர். பெண்ணினல்லாளம்மை சங்குதீர்த்தம், வசுதீர்த்தம், இந்திரதீர்த்தம், பட்சிதீர்த்தம். நான்குவேதங்களே ஒரு மலையுருவாகின்றது. அஷ்டவசுக்கள், திருநந்திதேவர், மாயீகன், இந்திரன், யமன், திருமால், நாரதர், கணங்கள், சூரியன், பதஞ்சலி முதலாயினோர் பூசித்தனர்கள். பசு, வராகம் முதலியவை பிரதக்ஷணம்வந்து தேவ உருப்பெற்றன. திருப்பாற்கடலைக்கடைய மந்தரகிரியைப் பெயர்த்தபோது அதிலுண்டாகிய கோடிராட்சதர்களைக்கொன்ற கோடி உருத்திரர்கள் பூசித்துப் பேறடைந்தனர்கள். கிரேதாயுகத்தில் சண்டன், பிரசண்டனெனும் கழுகரசர்களும், திரேதாயுகத்தில் சம்பாதி, சடாயுவென்னுங் கழுகரசர்களும், துவாபரயுகத்தில் சம்புகுத்தன், மாகுத்தனெனும் ருஷிகள் சத்திபெரிது சிவம்பெரிதெனத் தர்க்கித்து அவ்விருவரும்வந்து கூறியதையும் சம்மதியாமற் பெற்ற சாபவசத்தாற் கழுகுருவுடையோராயிருந்த அக்கழுகுகளும் பூசித்து முத்தியடைந்தன. அதுபோலவே கலியுகத்தில் பூடா, விருத்தாவென்னு மிரண்டு தவசிகள் சிவபெருமானருளிய திருவார்த்தையைமறுத்து உடனே முத்தி வேண்ட, எதிர்மொழிந்த தப்பிதத்திற்காக கழுகுருபம்பெற்றுக் கலியீற்றில் முத்தியடைய கண்காட்சியாக இன்றும் வழிபட்டுக்கொண்டிருக்குந்தலம். ஸ்ரீமன் மாணிக்கவாசகசுவாமிகள் குருவடிவந்தொழப்பெற்று "காட்டினாய் கழுக்குன்றிலே" எனத் திருப்பதிகம் பாடியருளினர். இத்தலத்தில்மாத்திரம் சமயாசாரியர்களுக்குப் பிரத்தியேகமாக திருக்கோயில்களிருக்கின்றன. சமயாசாரியர்கள் நால்வர்களாலுந் திருப்பதிகம் பெற்றுள்ளது.

திருச்சிற்றம்பலம்.

# ௨௯.—திரு அச்சிறுபாக்கம்.

—:0:—

## காப்பு.

### நேரிசைவெண்பா.

சிந்தித்தோர் வல்வினையைச் சேதிக்குஞ் சிற்பரனுங்
சந்துகரி யானனனைக் கன்மனமே - சந்ததமுங்
காவளஞ்சே ரச்சிறுபாக் கத்துறையுங் கண்ணுதலை
நாவளம்பா டித்திரிய நாடு.

---

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஒன்றான நிலையானைப் பலவாகி விரிந்தானை
    யும்ப ரேத்தும்
நன்றான பதிபலவுங் கொண்டானை. யெல்லையாள
    நயக்கின் றானை
அன்றாத வனுமதியு மறைந்திடவே யனல்விழியை
    மலர்த்தி னானைக்
குன்றாத புகழானை யச்சிறுபாக் கத்தானைக்
    குறித்து வாழ்வாம். (௧)

இரண்டான வுருவானை யெரிகாற்றொ டிலமற
    லிந்து வானந்
திரண்டாருங் கதிருயிரு மானானை யானானைச்
    சிரமீ தொன்றக்
குரண்டாசு ரன்னிறகைக் கூட்டியணி யழகனையென்
    குறைதீர்த் தானை
அரண்டார்தம் புரமெரித்த வச்சிறுபாக் கத்தானை
    யடைந்து வாழ்வாம். (௨)

மூன்றான கண்ணானை முடியாத நிலையானை
    முடித்த வேணி
தான்றாழ நின்றாடுந் தன்மையனை தண்மையனைத்
    தலைகை சேர்த்த

வான்றாழு மழகனையென் னுளம்புக்க வடிவானை
வான மேய
தேன்றாழுந் துடலைசெறி யச்சிறுபாக் கத்தானைத்
தெளிந்து வாழ்வாம். (௩)

நாலான மறையானை நல்லோர்க ளுளத்தென்று
நணுகு வானை
மேலான நிலையானை வெண்ணீறு சண்ணித்த
வேடத் தானை
ஆலாரும் பெருமானை யடியேனை யாட்கொண்ட
வண்ண லானைக்
கோலாக மாலாக்கு மச்சிறுபாக் கத்தானைக்
குறித்து வாழ்வாம். (௪)

ஐந்தான முகத்தானை யழலாருங் கரத்தானை
யமர ரேத்தும்
இந்தாரு முடியானை யீற்றினிலு முடியானை
யெண்ணு ருள்ளம்
வந்தார வருளானை முனமானை யழைத்தானை
மருவி னானைக்
கந்தாருங் களிற்றுரிசே ரச்சிறுபாக் கத்தானைக்
கருதி வாழ்வாம். (௫)

ஆறடங்கு முடியானை யாறடங்க வடியேனை
யாளுங் கோனை
வேறிடங்கொண் டோடாதே தன்னடியை விரும்பிடவே
வேட்கை தந்த
கூறிடங்கொள் குமரிக்குக் குழைவான கோலமார்
குழையி னானைப்
பாறிடங்கொள் வேலானை யச்சிறுபாக் கத்தானைப்
பணிந்து வாழ்வாம். (௬)

ஏழான பொழின்மூற்று மையாவென் றேத்தெடுக்க
வீய வீயத்
தாழாத வருளுடைய தலையானைத் தலையானைத்
தனையன் றன்னைப்

போழாரு மாகத்தே யணைத்தெடுத்து மகிழ்வெய்தும்
புனிதன் றன்னை
வீழாக சடைமுடித்த வச்சிறுபாக் கத்தானை
மேவி வாழ்வாம். (எ)

எட்டானை யாவர்க்கு மெழில்வாத வூரர்க்கா
விலங்கக் கொண்ட
கொட்டானை யட்டபுயக் குலவரையி லழகாகக்
கோக்க ளட்டும்
பட்டாக வுடையானை யுடையாக வுரியுடுத்த
பண்பி னானை
யட்டாருந் தண்டலைசூ ழச்சிறுபாக் கத்தானை
மதித்து வாழ்வாம். (அ)

ஒன்பதா கியகோலச் சடையானை யச்சடையா
வுயர்வி னானைத்
தின்பதா கியவுணவு நஞ்சாக வுடையானைத்
தேவர் யாரும்
அன்பதா கியநீரும் பச்சிலையு மிட்டளவே
யருள்செய் வானை
என்பதா கியமாலை யச்சிறுபாக் கத்தானை
யேத்தி வாழ்வாம். (கூ)

பத்தான செயலுடையார் நிதம்போற்ற வவருள்ளம்
பாங்கா கக்கொண்
டெத்தாலு மொவ்வாத நிலையமென வமர்வானை
யியங்க ளோங்க
முத்தாலு மணியாலு மானமா னத்தயரர்
முறைவந் தேத்த
நத்தாலுந் தடமாரு மச்சிறுபாக் கத்தானை
நாடி வாழ்வாம். (க0)

திருச்சிற்றம்பலம்.

பாக்கபுரீச்சுரர். ஆதிசுந்தரமின்னம்மை. தேவதீர்த்தம். கொன்றைவிருட்சம். தேவர்கள் பூசித்ததலம். திரிபுராதிகளைச் செயிக்கும் பொருட்டுச் சிவபெருமானுக்குச் சகலதேவர்களுந் திருத்தேராய் வந்தபொழுது அத்தேவர்கள் தம்முதவியாலன்றிச் சிவபெருமான் திரிபுரத்தைச் செயித்தல் எவ்வாறு கூடுமென நினைத்த நினைப்பையுணர்ந்த சிவபெருமான் தேரின்மீது திருவடி வைத்தூன்ற அத்தேரின் அச்சுகள் ஒடிந்ததலம். திருஞானசம்பந்த சுவாமிகளாற் றிருப்பதிகம் பெற்றுள்ளது.

---

திருச்சிற்றம்பலம்.

# ௩௦.—திருவக்கரை.

—:o:—

## காப்பு.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

புயல்காட்டு மலையரையன் மகடருநற் கரிமுகத்துப்
புனிதன் றன்னை
மயல்காட்டுஞ் சகவாழ்க்கை யறவொழித்தோர் தம்முருவ
மருவி மேவுஞ்
செயல்காட்டும் பெருங்கருணைத் திருநயன முடையானைத்
தெளிவார் ஞானத்
தியல்காட்டுந் திறலானை யிரவுபக லெஞ்ஞான்று
மிறைஞ்சி வாழ்வாம்

---

கலிநிலைத்துறை.

உலகுபடைத்தோன் றனைவலங்கொண்டவுத்தமனே
கலகம்பயில்விழியார் மயன்மூழ்கிக்கலங்காமுன்
சலசமலர்ப்பதமேத்திடவருளாய்சங்கரனே
திலகமெனவொளிர்மாநகர்திருவக்கரையானே. (௧)

ராழிநற்றோளாபண்ணவனேயென்பவலேலை
வாழும்படிக்கேவந்தருள்செய்வாய்தக்கோனே
வீழிப்பதியிற்காசருளப்பெறும்வித்தகனுங்
காழிப்பதியோன்கருதிடுதிருவக்கரையானே. (௨)

பையாரரவமசைத்தருளெங்கள்பரமேட்டி
மையார்பொழில்சூழ்த்திலகிப்பகலவனொளிமாற்று
ஐயாறுடையாயனறுடியான்மழுவமர்கிற்குங்
கையாவெளியனையாண்டருடிருவக்கரையானே. (௩)

மானார்விழியுடைசேனும்பிகைமகிழ்வானமுதே
ஊனாருடல்கொடுதிரிதருநாயேனுருகிநிதந்
தேனார்கமலத்திருவடியேத்துந்திறனுரையாய்
கானார்திலங்கிக்கவண்பெறுதிருவக்கரையானே. (௪)

தெருளேயோங்குஞ்சந்திரசேகரத்தெள்ளமுதே
பொருளேபொருண்முடிவானவனேநினைப்போற்றகிலேன்
மருளேகொண்டிங்கயர்வடைகின்றேன்மாயையினாற்
கருளேநீக்கிக்கடைக்கணிதிருவக்கரையானே. (௫)

நாகமணிந்தாய்நாகம்வளைத்தாய்நாகவுரி
யாகமிலங்கப்போர்த்தவனேதிசழச்சுதனோர்
பாகம்விளங்கும்பானேர்நீற்றுய்பசுபதியே
தேகமெடுக்காவகையருடிருவக்கரையானே. (௬)

வந்தேசரணம்புகுந்துனையேத்துமதிக்கருளைத்
தந்தேபரிவுடனாண்டருள்சீவாதரப்பொருளே
அந்தமிலின்பமெய்திடவர்ரகசூர்க்கருளுங்
கந்தமலர்ப்பதமீந்தருடிருவக்கரையானே. (௭)

மாலேறுடையாய்மதகரியுரியாய்மலைமகளோர்
பாலேயுடையாய்பவளநிறத்தாய்பரம்பரனே
வேலேயுடையாய்வேளைமுனிந்தாய்மினிர்தண்டைக்
காலேயுடையாய்காதருடிருவக்கரையானே. (௮)

சிற்பரமேசிவமேயெனநாளுஞ்சீர்மிகுந்த
நற்பரஞானியர்நாடிடுஞானநாயகனே
தற்பரனேதனிமாதவனேதண்ணளியாருங்
கற்பகமேயெனைக்காத்தருடிருவக்கரையானே. (கூ)

குருமாமணிசுடரானவனேநின்குரைகழலைத்
தருமாமலர்கொடுபரசிடவெண்ணேன்றண்ணமுதே
கருமாவொழியக்கடையனையாள்வதன்கடனலவோ
திருவாழ்மல்குமாநகர்திருவக்கரையானே. (க0)

திருச்சிற்றம்பலம்.

சந்திரசேகரேச்சுரர்; தேனும்பிகையம்மை. வக்கிரதீர்த்தம். குண்டலமகாமுனியும், வக்கிராசூரனும், சந்திரனும் பூசித்ததலம். திருஞானசம்பந்தசுவாமிகளாற் றிருப்பதிகம் பெற்றுள்ளது.

---

திருச்சிற்றம்பலம்.

ஒழுந்தியார் பட்டியெனவழங்கும்

# நக.—திருஅரைசிலி.

## காப்பு.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பூமேவு நான்முகனு மணிவண்ண நெடுமாலும்
 பொற்பின் மிக்க
காமேவு மலர்த்தொடையல் வானவருஞ் சசிபதியுங்
 கவிந்து நின்று
நாமேவுந் துதிபுகல நலத்தருபே ரருட்டிறத்தை
 நல்கி வாழுந்
தேமேவு கொன்றைமுடி குஞ்சரப்பொற் செஞ்சரணஞ்
 சென்னி சேர்ப்பாம்.

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கடல்வரு விடநிறை களமுடை யிறைபவன்
கண்ணு ரமுதனையான்
கடையனை யாள்பவன் கலைமதி முடியவன்
கதிரவ னெயிறுதிர்த்தோன்
படமுடை யரவணி பசுபதி பண்ணவன்
பகரரு ஞானியரை
யடையொடு காத்திட வமருந் திருப்பதி
யரைசிலி யம்பதியே. (௧)

இரணிய னுரங்கிழித் தெழுநர மடங்கலை
யீர்த்திடும் புயவலியான்
முரணிய தனஞ்சயன் வில்லடி பட்டவன்
முக்கணு டைப்பரமன்
சரணிய மேனியன் கண்மலர் சாத்திடச்
சருதரும் பரிசீந்தான்
அரணை யெரித்தவ னமருந் திருப்பதி
யரைசிலி யம்பதியே. (௨)

திரைகடல் வளர்திரு மாலயன் மகபதி
திகழ்முனி வரரறியா
வரைசிலை மான்மழு கரங்கொளும் வானவன்
வளமறை கோவணத்தான்
குரைகழ லீந்தெனை தளம்புகுங் கொற்றவன்
கூறரு மலைமகளை
யரைமெயி லுடையவ னமருந் திருப்பதி
யரைசிலி யம்பதியே. (௩)

கடகரி யுரியினைக் கலையென வணிந்தவன்
கலைமறை முடிநடித்தோன்
புடைசெறிக் தனியிசை யிதழியந் தொடையவன்
புரமூன் றினையெரித்தோன்

விடையுடை கொடியவன் வியன்கணப் படையவன்
வினையுட லகற்றிடவே
அடைபவர் தமையாண் டவனமர் திருப்பதி
யரைசிலி யம்பதியே. (௪)

காலனை யுதைத்தவன் காமனைப் பொடித்தவன்
காம கடற்படியார்
சீலமோ டிமனங் கனியவே யேத்திடச்
சீரகந் தந்திடுவான்
சால கடுர்துயர் நீக்கிடுஞ் சங்கரன்
சலந்தர னுரங்கடிந்தான்
ஆல மிடற்றின னமருந் திருப்பதி
யரைசிலி யம்பதியே. (௫)

தோணியம் பதிக்கிறை தொழுதிடும் பரம்பரன்
றுகளறும் பொற்பதத்தான்
ொணியு மவன்மா மியுமிரு விழியென
வைப்பவள் சேருரத்தான்
வேணிமேல் வேணியை வியன்பெற வைத்தவன்
விதிசிர மகழ்கரத்தான்
அணிப்பொன் னனையவ னமருந் திருப்பதி
யரைசிலி யம்பதியே. (௬)

பழவினைக் கயிற்றினிற் பல்லுயி ராடிடப்
பதஞ்சலி யாநடத்தான்
மழவிளங் குழவியை மகிழுடன் பாற்கடன்
மடுத்திட செய்தபிரான்
மழைவளர் பொழில்செறி மதுரையி லுறைபவன்
மறைச்சிலம் பினையணிந்தோன்
அழகுறு மேனிய னமருந் திருப்பதி
யரைசிலி யம்பதியே. (௭)

கடுவளி கனல்புனற் கதிரவ னுடுபதி
ககனமொ டகலிடமும்
படிமிசை நீளுயிர் டடிவ மவைக்கொளும்
பானிற மேனியுளன்
முடைதலை பலியிரக் கொண்டிடு முத்தமன்
மூதறி வோர்தினமும்
அடியிணை டணியமே வமருந் திருப்பதி
யரைசிலி யம்பதியே. (௮)

மடலவிழ் மலர்கொடு மனநிலை பெற்றிட
மாணடி பைப்பணிவோர்க்
கிடரை யகற்றிடு மிறையவன் முடியினி
லிர்தாறணிந் திடுவோன்
படியளந் தவனொடு பதுமனு மடிமுடிப்
பார்ப்பதற் கரியபரன்
அடியனை யாள்பவ னமருந் திருப்பதி
யரைசிலி யம்பதியே. (௯)

சூலமும் பாசக் கயிறுங் கொண்டெம
தூதர்கள் வருமுன்னங்
காலம தறிந்தெனைக் கடைக்கணித் தாள்பவன்
கண்ணுத லெம்பெருமான்
ஞாலம துண்டவன் மருகனை யீன்றவன்
ஞானசி தம்பரத்தோன்
ஆலடி யுறைபவ னமருந் திருப்பதி
யரைசிலி யம்பதியே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

அரைசிலிநாதேச்சுரர், பெரியநாயகியம்மை. அரசடித்தீர்த்தம். வாமதேவன் என்னும் ருஷியாற் பூசிக்கப்பெற்றதலம் ஒழுந்தியார்பட்டியென வழங்குகின்றது. திருஞானசம்பந்தசுவாமிகளாற் றிருப்பதிகம் பெற்றுள்ளது.

திருச்சிற்றம்பலம்.

# ௧௨—திருஇரும்பைமாகாளம்.

## பஞ்சரத்தினம்.

———:*:———

### காப்பு.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

புகழ்பூத்த கோபாலன் மருமானைக் கோபாலம்
பொருந்தி னானை
யகழ்பூத்த நகரையூரி லமர்ந்தானைப் பெண்ணுருவோ
டாணு மானை
திகழ்பூத்த கோட்டானைத் திருவருள்சேர் வீட்டானைச்
சிறக்கு மன்பர்
இகழ்பூத்த மலந்துமிக்கு மிந்துமுடி யானடியை
யிறைஞ்சி வாழ்வாம்.

பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கங்கையுஞ் செஞ்சடையு மதியுமு மத்தையுங்
காமனை யெரித்தழித்த
கனல்விழியு மாடகக் குலவரை வலஞ்செயுங்
கதிர்மதிக் கண்களுஞ்செங்
குங்குமங் குலவுகொங் கைக்குயின் மொழித்தெரிவை
கொண்டதொ ரிடப்பாகமுங்
குலவமர ருயவலைக் கார்கோ ளுதித்துவரு
கொடுவிட மமைத்தகரமும்
அங்கதப் பல்லணியு மாதரவ தாகவே
யறிவிலேன் காணவருவாய்
அன்றுகா ழியில்வந்த ஞானசம் பந்தனுரை
யமுதகவி மாலைகொண்டோய்
மங்குலுறு சோலையிற் கங்குலங் குழன்மாதர்
மகிணரொடு மகிழிரும்பை
மாகாள நாதபர மாகாள முற்றகர
மாகாள கண்டவரனே. (௧)

ாதலொடு ஞானசம் பந்தனுக் கன்றுபொற்
கலசமுலை வழியொழுகுதீங்
கலசங் கொடுத்துப் பரானந்த மாமறிவு
காணவரு டந்ததாயாஞ்
ீதமதி வதனமுந் தீதில்வா ணயனமுஞ்
செறிந்தவற லொத்தகுழலுஞ்
சிலைகொண்ட நுதலினிடை யிலகுமொண் டிலகமுந்
திகழ்தருங் குழலம்மையோ
—ாதரத் தொடுமேவி நாயினுங் கடையேனை
யாளுநா ளெந்தநாளோ
அன்புகொடு மாகாளர் புரிபூசை கைக்கொண்ட
வண்ணலே பவளமலையே
மாதிரம் பரவுபுகழ் சீதரன் பொற்கஞ்ச
மலரயன் றேடுபரமே
மாகாள நாதபர மாகாள முற்றகர
மாகாள கண்டவரனே. (உ)

ஓதரிய மறைமுடியி லொளிர்கின்ற பிரமமே
யொப்பரிய முத்திமுதலே
ஒருபொழுதி லும்பரவி யேத்தாத வென்னையுன்
னுப்புடைச் சோதிவீட்டில்
நாதநீ வைத்தியோ கைவிடுதி யோவறியே
னக்கனே யாதிமூர்த்தி
நாரணன் பிரமனு மறிவதற் கரியவொரு
ஞானச்செழும் பிழம்பே
த ் துலாஞ் சோலைசெறி தண்காழி நகர்வருந்
தனிஞான சம்பந்தனுர்
சாற்றுமது ரப்பனுவன் மாலையொடு கொன்றையந்
தார்குலவு மணிமார்பனே
மாதவத் தோராருப் போதுசேர் தடவையார்
மாங்குயின் மொழிக்கணவனே
மாகாள நாதபர மாகாள முற்றகர
மாகாள கண்டவரனே. (௩)

வீழியங் கனிவாய் மடந்தையர் வசத்தனாய்
வீணாள் கழித்துநின்றேன்
விண்ணவர்க் கரசாய வண்ணலே யுன்பாத
மீளிர்தா மரைப்போதிலோர்
நாழிகைப் பொழுதேனு மன்புவைத் தறியேனி
னற்பதங் காண்பதென்றோ
நாகாரி வாகனனு நான்முகனு மோதுவெளி
நகச்சிரமேய மணியே
சூழிமத யானையுரி போர்த்தருளு மெய்யனே
தூயரக மணிவிளக்கே
தொல்லா ரணங்கட்கு மெட்டாத வையனே
துரிசின்மா சாளமுனிவர்
வாழிய வணங்குபர னேமாதர் சாயலென
மஞ்ஞைநிரி பொழிலிரும்பை
மாகாள நாதபர மாகாள முற்றகர
மாகாள கண்டவரனே. (௪)

நஞ்சார்ந்த கண்காட்டி நகையூட்டி நகைபூட்டி
நகுமுலையி னெஞ்சைவாட்டி
நசைகூட்டு மாதரார் மையல்வலை யிற்சிக்கி
நாணாளு மெலிவெய்தினேன்
கஞ்சா தனத்திநற் கொழுநனுங் காணாத
கழலடித் துணைவருந்தக்
கருதுதிரு வாரூரி லாலால சுந்தரர்
கருத்துக் கிசைந்துமாதர்
பஞ்சாரு மெல்லடிப் பரவைபா லுற்றன்று
பணிமொழி பணித்தவரனே
பாவியே னுய்யவொரு பொழுதாயி னுஞ்சிறிது
பட்சம்வைத் தினிதாளுவாய்
மஞ்சார்வ மொடுசோலை மீதுலா விக்குமுற
மயிலடன மிடுமிரும்பை
மாகாளநாதபர மாகாள முற்றகர
மாகாள கண்டவரனே. (௫)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சீலா போற்றி சிவைமகிழுஞ்
செல்வா போற்றி செழுங்கமலக்
காலா போற்றி காலனுயிர்
கவர்ந்தாய் போற்றி கவின்மறையின்
மூலா போற்றி முனிவர்துதி
மூர்த்தி போற்றி மோனமருள்
ஆலா போற்றி யடியேனை
யாண்டாய் போற்றி போற்றியவே.

திருச்சிற்றம்பலம்.

மாகாளேசர், குயின்மொழியம்மை. மாகாளதீர்த்தம். அரிகரபுத்திரரது சேனைத்தலைவராகிய மாகாளர் பூசித்ததலம். திருஞானசம்பந்தசுவாமிகளாற் றிருப்பதிகம் பெற்றுள்ளது.

---

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உலகமெலாந் தானாகித் திருவிளையாட் டியற்றுமெந்தை
யுயர்பூங் கச்சித்
தலமுதலா மாகாள மீருமுப் பானிரண்டு
தலங்கண் மீது
தொலைவில்பவத் தொடக்கொழிய மோகூர்வாழ் முனிசாமி
துதிக்கும் பாடல்
நலமலிதொண் டைப்பதியின் றிருக்கோவை யெனவிசைய
நவின்றான் மாதோ.

திருச்சிற்றம்பலம்.

---

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

# திருப்போரூர்.

———:o:———

## காப்பு.

### நேரிசைவெண்பா.

வருவா யரனளித்த வாரணமே கண்ணே
அருவா யுருவாகு மையா—திருவாகத்
தாத்திரிப்பாற் போரூர்வாழ் சாமிக்கி யானுரைக்குந்
தோத்திரப் பாவுக்குத் துணை.

———

## வேல்.

### பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

எட்டுமா மலைகள்கரி யெட்டுநா கங்கடிசை
யெட்டுந் திரும்பியாட
எமன் பயந்துவரு காமன் வெருண்டுமலர்
பூமன் னயர்ந்துநாட
கட்டடங் காக்காளி நட்டமிடு காலையுங்
கண்டிலே மென்றுகூட
காகமொடு நாய்நரிக ளலகைபூ தங்களுங்
கனவிருந் தென்றுதேட
துட்டதா னவர்கள்விடு பட்டுத் திடுக்கிட்டு
துயரத் தழுந்திவாட
தூயமா தவர்தெளிவி லாயுமறி வாலிஃது
தோற்றமே தென்றுநீட
வட்டமிடு மயிலேறி யுக்ரமொடு சூர்கிளைகள்
கொட்டம டங்கிஓட
வருமுருக னரிமருக னிருகரத் தேந்துமணி
வாய்ந்தவடி வெற்றிவேலே.

———

## இதுவுமது.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நாழுதலைகமா தவர்சித்த சூரகர்மண மறுகினனி
சோர்வுற் றங்தோ
ழூதகண்ணீர் துடைக்கமலை மகண்மகனுக் காதரவா
யன்ற ளித்த
ழுகடற்கப் பாற்கொக்கை கெடுங்கிரியைக் கொடுஞூரை
யிரையாய்க் கொண்டு
ழுதகற்றும் வடிவேலை யெனதுவினை களைதவிர்க்கப்
பணிகு வேனே.

---

## மயில்.

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தாரகைக ளுதிரவை ராவதம் பெதரழுத்
தலமுழுதுஞ் சாய வசுரர்
ஆரவா ரங்கொண்டு கூச்சலிட் டோடவே
அண்டர்தவர் பய மாறவே
பாரமுடன் வட்டமிடு சிறைவேக நம்மைப்
பகைத்துவரி வீழ்த்து மென்னுஞ்
சாரம தறிந்துவளி யோடவறு முகவனூர்
தருமயிலை யஞ்ச லிப்பாம்.

---

## சேவல்.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உலகுயிர்கள் குறிகொள்ள வுயர்மலையை வலமாகி
யொளிரும் வெய்யோன்
அலைகடலி னிடைமுளைக்கக் கூவுதலு மன்றிமிகு
வடியர் கூட்டம்

நிலைகலங்கா தகவிருளைப் பறக்கடித்துத் தலைநீட்டி
சிறகை யாட்டி
வலமயிலோன் வரவுரைக்குங் கொடிசேவ லடிமுடிமேல்
வைப்ப மன்றே.

---

## வீரவாகுதேவர்.

கார்கொண்ட புயலிடத்தே மின்னொளிகள் தோன்றுகின்ற
காட்சி போல
நீர்கொண்ட சடைவெள்ளப் பொடிமெய்யா காயத்தில்
நேர்ந்த நீலச்
சீர்கொண்ட புயற்களத்தான் மேனோக்கப் பதச்சிலம்பு
தெரித்த தானல்
ஏர்கொண்டிங் குதித்ததிரு வீரவா குவினிணைத்தா
ளிணை முடிப்பாம்.

---

## நவவீரர்கள்.

உயிர்சிதறக் கொடுமைபுரி தானவர்கள் களைந்தெறிந்த
வுக்ர வேலே
பயிர்செய்குடி வைத்திடுமோ ராயுதம்போ லிருந்தது வோ
களையப் பார்க்குள்
செயிரறுமோர் பணியாகிக் கூறிட்டுப் போரிட்டுத்
தேவர் கூட்டம்
அயர்வறச்செய் நவவீர ரடிமுடிக்கே யணிபவருக்
கன்பு கூர்வாம்.

---

## சிதம்பரசுவாமிகள்.

பானகண்டு கொடியேறிப் படர்ந்தவதி சயங்காட்டும்
பண்பு வீறும்
வினைகொண்ட கொடியேறு விதங்களைந்துள் ளிருந்தருளும்
விமலன் றன்னை

நனைவிண்ட மனமலரிற் குடியேற வைத்ததென
    நன்கு சார்ந்த
கனதொண்டு செயவந்த சிதம்பரசுவா மிகளடியைக்
    கருத்துள் வைப்பாம்.

---

## தெய்வயானையம்மை.

### கலித்தாழிசை.

மதியற்றயான் றுதிசெய்திட மன்னித்துமே மகவான்முனம்
அதிகத்தவ மதையாற்றிய வயிராவதன் றருகன்னியே
சதிசூரனைக் கொலைசெய்திடுஞ் சமராபுரிக் கொருநாயகி
கதிதந்துநீ யெனையாளுவாய் கனதெய்வயா னையெனம்மையே.

---

## வள்ளியம்மை.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தப்.

சினையாகி மான்வயிற்றிற் செறிந்துவள்ளிக் கொடிநீழல்
    சிறந்த ஞான
நினைவாய்ந்த மகவாகி நீணிலத்தி லவதரித்து
    நிறைவு கொண்டு
தினைமூலந் தேனுணவாங் குறிஞ்சிமக்கள் பால்வளர்ந்த
    செய்ய மாதை
நனைவாய்ந்த மரந்தழுவும் வள்ளியம்மை பதமுடிமேல்
    நாட்டு வாமால்.

---

## நூல்.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பொன்னே பொலிவே பூரணமே
    புனித வாலை தருசுதனே
என்னே யுன்னைப் பணியாதே
    யிருந்தே னின்பே ரருள்வலியால்

கன்னே ருள்ளங் கரைந்தின்பக்
    கடலுண் மூழ்கிக் களிக்கின்றேன்
மன்னே மணியே போரிவளர்
    மருந்தே முருகப் பெருமானே. (க)

மோகந் தருமா மாயையிலே
    முழுகிக் கிடந்திங் கயர்வேனைச்
சோகந் தவிர்த்திட் டுயுமாறு
    துணைமா மலர்த்தா ளென்றீவாய்
மேகந் தவழு மலையரையன்
    மகண்மென் முலைப்பா லமுதூட்டத்
தாகந் தவிர்ந்து போரிவளர்
    தருவே முருகப் பெருமானே. (௨)

பாழா கியபொன் னாசையினாற்
    பணமே தேடிப் பாவையர்கள்
தோழா மைக்கொண் டவரேவுந்
    தொண்டு புரிந்தே னந்தோநான்
தாழா தடியார் தாளிணையைத்
    தவிர்த்தே நாளைத் தனிநரகில்
ஆழா தருளாய் போரிவள
    ரரசே முருகப் பெருமானே. (௩)

தாரம் பிள்ளை தமர்செல்வந்
    தம்மி லழுந்தித் தாண்மறந்து
ஈர மில்லா நெஞ்சினனா
    யெண்ணா தெண்ணி யேங்குகிறேன்
சூர னுரமுங் கிரியோடு
    தொளைபட் டுருவுஞ் சுடர்வேலா
வீரம் விளங்கும் போரிவளர்
    விமலா முருகப் பெருமானே. (௪)

பட்டி மாடு போற்றிரிந்து
    பாபம் பழியென் றஞ்சாமல்

எட்டி மரம்போ லீவின்றி
யிருந்தே னிறந்தா லேமனென்னைக்
கட்டி நெருப்பி லிடுமுன்னே
கருதிற் றொடரா னெனக்கேட்டு
ஒட்டி யுவந்தேன் போரிவள
ரொளியே முருகப் பெருமானே. (௫)

கற்றுங் கேட்டுங் காரிகையார்
காமக் கடலின் மூழ்கிகிதஞ்
சற்று நெஞ்சிற் றுயரின்றிச்
சதிரா யிருந்தேன் சாவென்னைப்
பற்று மென்னும் பயமீர்த்துப்
பற்றித் துரத்தப் பாலடைந்தேன்
வெற்றி வேலோய் போரிவளர்
விமலா முருகப் பெருமானே. (௬)

காடே யடைந்து மலையேறிக்
கடிதா மரிய தவமியற்றி
நாடே திரிந்து நதிமூழ்கி
நற்காய் கிழங்கு சருகருந்தி
யோடே யெடுத்து மூடைதரித்து
முனையே பணிய வறியாதார்
வீடே விரும்பார் போரிவளர்
வெற்பே முருகப் பெருமானே. (௭)

எப்போ தமுனின் புகழ்பாட
வெப்போ தமுனின் பதநாட
எப்போ தமுனின் கதைகேட்க
வெப்போ தமுனின் னெழிநோக்க
எப்போ தமுனின் பணிசெய்ய
வெப்போ தமுனன் மலர்கொய்ய
எப்போ தடைவேன் போரிவள
ரெந்தாய் முருகப் பெருமானே. (௮)

பாரை யாளவேண் டாவப்
　　பலதே வர்கடம் பதிவேண்டா
நீரைச் சொரிந்து மலர்தூவி
　　நினைக்கு மடியார் பணிவேண்டும்
சீரைக் கொண்மா தர்களிருவர்
　　சிறக்க மயின்மீ தேறிவரு
வாரைக் காணேன் போரிவளர்
　　வாழ்வே முருகப் பெருமானே. (௯)

கன்னி தனக்குக் கையீந்தாய்
　　கவியாற் கீரற் குயிரளித்தாய்
மன்னும் பொய்யா மொழியார்க்கு
　　மலர்மே லயற்கு மதிகொடுத்தாய்
மின்னும் பொதிகை முனிசிவற்கு
　　மீளாப் பொருள்சொன் னீரெனக்கே
என்ன வுரைத்தாய் போரிவளர்
　　நிறையே முருகப் பெருமானே. (௧௦)

---

## வாழி விருத்தம்.

வள்ளிதெய்வ யானைபதம் வாழி வாழி
　　மாமயிலுஞ் சேவலுமே வாழி வாழி
கள்ளவினைக் கட்டறுத்தோர் வாழி வாழி
　　கடம்பணியும் பன்கழல்கள் கதித்து வாழி
துள்ளிவருஞ் சூரனுரங் கிழிவேல் வாழி
　　துலங்குகர மும்பதமுந் தோன்ற வாழி
தெள்ளியசீ ரறுமணியா றெழுத்தும் வாழி
　　திருப்போரூர் தோத்திரப்பா வாழி வாழி.

திருச்சிற்றம்பலம்.

---

திருச்சிற்றம்பலம்.

# வெண்பா அந்தாதி மாலை.

:0:

## காப்பு.

நேரிசைவெண்பா.

குஞ்சரமு கத்தொற்றைக் கோட்டானே காக்கையே
நெஞ்சகத் திற்கொண்ட நிமலனே—யஞ்சலென
நண்பாவந் தாதிதுணை நற்போரூ ரான்மாலை
வெண்பாவந் தாதிசொல வே.

## நூல்.

சீர்கடப்ப மாலை திகழுந் திருவுரத்தான்
பேர்கடம்ப னெங்கள் பெருமான் - போரிதனில்
வள்ளிதெய்வ யானை மருங்கிருப்ப வீசர்செவி
கொள்ளுமறை யோதுங் குரு. (க)

குருவாகி வந்து குறுமுனிக்கு முன்னே
திருவா மறைபணித்த தேவே - முருகாபுன்
மாத ரெழிலான் மயங்கினேன் போரூரா
நீதமுட னென்பவத்தை நீக்கு. (உ)

நீக்கப் பிரியா வினைக்கமறக் கக்கூடாப்
போக்கு வரவற்ற பொருளையே - தேக்கமற
உண்டுதிருப் போரிவள ருத்தமனார் நற்பதத்தைக்
கண்டென்று கொள்வேன் களி. (ங)

களிப்பகலக் காலன் கதித்துவர நோக்கி
யிளிப்பதனா லென்னையய னெய்தும் - பளிச்சென்று
மூச்சுப்போ முன்பே முருகனடிக் கென்னெஞ்சே
பூச்சொரிந்து போக்குவாய் போது. (ச)

போதப் பழிக்கும் புழுமலிந்த புன்குரம்பை
ஏதுக் கினிப்பிழையா தென்றுமுன் - மாதுகுற
வள்ளிதெய்வ யானையொடு வாழுந் திருப்போரூர்
பிள்ளைமுரு கையனடி பேசு. (௫)

பேசுவார் பேச்சைப் பிரியமாய்க் கேட்டந்தோ
வேசுமுட லத்தையெடுத் தேமாந்தேன் - மாசுபடு
சிந்தையே னொந்து தியங்குகிறேன் போரிவளர்
எந்தையே நீயிருப்ப தெங்கு. (௬)

எங்கும் பரவடிவா யென்வடிவு நின்வடிவாய்
கங்குல்பக லற்றவிடங் காணாதேன் - சங்கையற
வந்துரையாய் போரிவளர் வாழ்வே சிவனார்க்கு
முந்தி யுரைத்த மொழி. (௭)

மொழிக்குமொழி தித்திக்கு மோனக் கரும்பே
விழிக்கு ளொளிரும் விளக்கே - பழிப்பிறங்காச்
சேனார் தொழும்போரிச் சேயே நினைமறந்தேன்
வீணாக வாணாளை விட்டு. (௮)

விட்டவிடத் தேயடுத்து மேவியிருக் கும்பரிசு
தொட்டுக்காட் டாய்போரித் தோன்றலே - பட்டப்
பகலாகப் பார்த்தேன் பரவெளியை யுற்றுப்
புகலா யிதற்கோர்நற் பூட்டு. (௯)

பூட்டில்லாக் கோட்டையினுட் பொல்லா மணிவிளக்கை
நாட்டும் வகையறிந்து நாட்டாமல் - சேட்டையினால்
ஆடாத வாட்டமெலா மாடிப்போ ரூரானைப்
பாடாதே போனேனற் பா. (௰)

பாவிபடுங் கண்கலக்கம் பார்த்திரங்கி வாராக்கால்
ஆவிக் கொருதுணையா ரையா - மேவிய
துன்பந் தனையோட்டித் தூய்போரூர் வாழ்வேபே
ரின்பந் தருவாயி சைந்து. (௧௧)

இசைந்திருகா லோடிமன மேரார் சுழிமுனைக்கண்
ணைசையா திருத்த வறியேன் - தசையுதிரப்
பாண்டஞ் சுமந்து பரதவித்தேன் போரிவளா
ராண்டவனே செய்வா யருள். (கஉ)

அருள்சுரந்து வந்தடுத்த வன்பர் துயர்நீக்கித்
தெருள்வளர்க்கும் போரூர்வாழ் தேவே - மருளாங்
களைபறித்தன் பாம்பைங்கூழ் காத்தெனது நெஞ்சில்
நளினத் திருவடியை நாட்டு. (கங)

நாட்டியம யூர நடாத்தக் குயிலிசையைக்
கூட்டிவளர் போரூர் குருபரனே - வட்டி
லெழுதவடங் காப்பவஞ்செய் தெய்த்தே னினியென்
பழுதனைத்து மோட்டியருள் பார். (கச)

பாராண்ட மன்னவரும் பாசதரன் கைச்சிக்கி
யேராள மாக விறந்தார் - போரூரா
வாதலினா னாயே னபயமெனப் புன்பிறவி
யேதமற வந்தடுத்தே னின்று. (கரு)

இன்றுனக்கு நானடிமை யேய்ந்ததனா லெந்தாய்நற்
கன்றினுக்குப் பெற்றங் கனிவதுபோல் - நின்று
சுரந்தருளைப் போரிவளர் தூயவனே காட்டாய்
நிரந்தரநீ நிற்கு நிலை. (கசா)

நிலைத்த வினையிரண்டு நீக்கிநா யேனுக்
கிலைப்பிறவி யென்ன வியற்றிப் - பலவண்ணக்
கந்தமலர் வாவி கவின்செய்போ ரூரானே
சந்ததமு நெஞ்சகத்திற் சார். (கஎ)

சாரு மடியேன் பெறுசலத்தைச் சங்கரிப்பா
ராருங்கா ணேன்கா ணமலனே - தாருமினிப்
பேர்கதிக்கும் போரியனைப் பேசுவார்க் கின்பருளுஞ்
சீர்கதிக்குஞ் செம்பொற் கழல். (கஅ)

கழற்பெய் குடம்போற் கலங்காதே நெஞ்சே
தழற்க ணுறுதகப்பன் சாமி - கழற்கால்
அமரரேத் தப்போரூ ரம்பதியில் வாழும்
குமரனடி யாருறவு கொள். (க௯)

கொள்ளக் கிடையாக் குருவே கொதிப்பகல்
வெள்ளக் கருணைபொழி வேலவனே - யுள்ளுள்ளே
நின்ற நிலையோ நினைவிலேன் போரூரிற்
சென்று பணிவதென்று செப்பு. (உ0)

செப்புவதென் நெஞ்சே திறமில்லை யோசிறிதும்
மைப்படிந்த கண்ணி மகிழ்ந்தளித்த - ஒப்பிலான்
வாழ்கின்ற போரூரில் வந்தடைந்த வன்பரெலா
மாழ்கின்றா ரின்பத் தகம். (உக)

அகரம்போ லேயுலகுக் காதியாய் நிற்கும்
பகவற்கு போரிநகர் பாலன் - புகன்றான்
மகரமரை மாத்திரையே மன்னிநீண் டுச்சரிக்கும்
ஒகரமதை முன்னா ளுகந்து. (உஉ)

உகந்துனது பொன்னடிக்கே யோயாதாட் செய்யும்
சுகந்தந் தஞ்ஞானந் துரந்தே - நிகழ்ந்தெழில்செய்
மட்டவிழ்தார் வள்ளிசுர மாதங்கங் காதலிக்குங்
கட்டழகா போரிநாயகா. (உ௩)

காசினியோ டண்டங் கதறப் பொருசூரன்
நாசமுறச் செய்தும்பர் நாணுளுந் - தேசுபெற
மன்ன வமைத்தவெழின் மாறாப்போ ரூரானே
நின்னருளுக் கேவரவுண் ணோர். (உ௪)

சேர்விந் திருக்கு நிலைக்குந் தலந்தனிலே
பார்நந்தி பாவென்றாய் பார்த்திலேன் - தேர்ந்த
வருந்தவத்தோ ருக்க வருள்போரூ ரையா
பெருஞ்சிறப்பு கொண்டெடிப் பேன். (உ௫)

பேயோடா டிக்குகந்த பிள்ளாய் சரவணத்தில்
தீயோ டிருந்து திகழ்ந்துவளர் - சேயே
கொடியாடு மாளிகைத்தென் கோமளப்போ ரூரா
வடியேனுக் கீவாயின் றன்பு. (உசு)

அன்பரெலா மின்ப மருந்திடவு நானொருவன்
றன்புறுத னன்றோவென் றேன்றலே - யென்புருகி
வாடுகின்றேன் போரூரில் வாழ்வா யடியிணையைத்
தேடுகின்றேன் காணேன் றிகைத்து. (உஎ)

திகைத்துப்பே ராசையெனுந் தீப்பேய் பிடிக்க
நகைத்திடநா டின்புற்று நாளு - மிகச்சீர்சேர்
கண்ணகன்ற போரூரிற் கந்தனடி காணாதார்
விண்ணொடுமண் ணாண்டாலும் வீண். (உஅ)

வீணா மயற்கடலில் வீழ்வேனோ போரூரா
நீணா ளுனதருளை நேசித்தும் - சேணாடர்
கண்டுதினந் தொண்டுபுரி கட்டழகா வண்டுளருந்
தண்டெரியல் கொண்டபுயத் தாய். (உகூ)

தாயுந் தமப்பனுஞ் சாருமுற வுங்குருவுஞ்
சேயுங் கடவுளுமெச் செல்வமுந் - தோயுந்
தயிர்தொட்டுண் டான்மருகன் தண்போரூர் வாசன்
செயிர்விட் டகன்றொளிருஞ் சீர். (ஙO)

---

## போற்றி.

வேலாபோற்றி சூர்கடிந்த விமலாபோற்றி விடையனருள்
பாலாபோற்றி நவவீரப் படையாய்போற்றி பக்தரனு
கூலாபோற்றி போரிவளர் குமராபோற்றி குலவுதண்டைக்
காலாபோற்றி யடியேன்கண் காணவருவாய் கழல்போற்றி.

திருச்சிற்றம்பலம்.

---

திருச்சிற்றம்பலம்.

# திருத்தணிகை.

## வெண்பா அந்தாதிமாலை.

### காப்பு.

நேரிசைவெண்பா.

திண்பா ரெலாம்போற்றுஞ் செவ்வே டிருத்தணிகை
வெண்பாவந் தாதிமுப்ப தும்விளம்ப - பண்பாகும்
ஐம்முகத்த னுந்துதிக்கும் ஆரணத்தி னுட்பொருளாங்
கைம்முகத்தன் செம்பொற் கழல்.

---

பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அருமறையின் முடிவினட மிடுபரம னுதல்விழியி
லுறுபொறிய தாய்த்தோன்றியே
யழகுபெறு சரவணத் திடைதவழ்ந் தறுவர்முலை
யமுதருந் திக்கடலனைப்
பருதளைக் கொடுகட்டி யண்டகோ ளங்களைப்
பரித்தரசு செய்தசூர
பதுமனொ டசுரகுல மறவேலெ டுத்தமரர்
பயம்வேர் களைந்தகுமரன்
கருதரிய மகபதியி னகமகிழ்கு மாரியொடு
கனகுறவர் கு மாதையுங்
கவின்வதுவை செய்துமிகு சதிரொடுதி ரிந்துவரு
கலபமயின் மிசையிவர்ந்து
திருமகட னுதயிலத மெனவொளிர்வ ளஞ்செறி
திருத்தணிகை மேவிநாளுந்
திகழடியர் வினையொழிய வருமமல விறைகுகன்
றிருமலர்ப் பதம்பணிகுவாம்.

---

## நேரிசைவெண்பா.

சீர்கொண்ட வேணிச் சிவபெருமா னெற்றிவிழி
பேர்கொண்ட வாறுபொறி யெம்மானே - போர்கொண்ட
வேலோய்! திருத்தணிகை வித்தகனே! யாதொன்றும்
ஏலேன்மேல் வாதே னினம். (க)

இன்னமருள் செய்யா திருந்திடில்யா னென்செய்கேன்
வன்னத் தணிகை மலைவீரா! - கன்னன்
மொழியழைப்ப வந்த முருகா வருளும்
பொழிகருணை யுள்ளமெங்கே போச்சு. (உ)

போச்சுதென்போல் லாவூழ் பொறைத்தணிகை கண்டவன்றே
வாச்சுதுநல் லூழ்தா மரைத்தாளா - மூச்சுவிட்டுப்
போகா முனநிற் புணையாக்கொள் வாரன்றோ
சாகா வரம்பெறுவர் சார்ந்து. (ங)

சார்வுறுமாற் றுப்படையாற் சங்கடந்தீர்த் திப்புவியிற்
கீரர்தமை யாண்டதணி கேசாகேள் - தாரணியிற்
செந்தமிழே பேசத் திறமற்ற விவ்வேழைக்
கந்தவிதி வாய்ப்புறுமோ வாள். (ச)

ஆளானோர்க் கன்றோ வடிமைப் படவேண்டும்
வாளாக் கழித்தேனென் வாணாளைத் - தேளாம்
பசியாற் களைத்தேன் பருஉத்தணிகை யையா
மிசையாற் களித்தேனுள் வெந்து. (ரு)

வெந்து பிடிசாம்ப ராகி வியனுலகில்
வந்து பிறந்ததொகை மட்டில்லை - இந்து
தவழ்தணிகை யுச்சித் தடவரையா யென்புன்
பவமொழிய வைப்பாய்நின் பண்பு. (சா)

பண்புறுதி ருத்தணிகைப் பண்ணவனே! பாவைகடம்
புண்படுகை நீக்கிப் புரந்தருள்வாய் - எண்ணியெண்ணி
மெய்சிலிர்த்துக் கண்ணீர் விடுத்துமொழி வாய்குழறிக்
கைகுவித்து நின்றேனைக் கா. (எ)

கார்கொண்ட மேதியுகை காலன் வருங்காலின்
சீர்கொண்ட நாமத்தைச் செப்பியழைத் - தேர்கொண்டு
சிந்தியே னேல்தணிகைத் தேவசே னாபதியே
எந்தனுக் குண்டோ விடம். (௮)

இடஞ்சுற்றம் பெண்டிர்நல் லில்லமுமிவ் வாவி
உடம்பைவிட் டேகும்போ துண்டோ - கடம்பலங்கற்
றோளா! திருத்தணிகைச் சுப்பிரமண் யாவடிமை
யாளாக நல்லூ முருள். (௯)

அருள்வழிவி லோசனங்க ளாறிரண்டு பூத்த
தருவே! தணிகையினின் றாயே - மருவெளியேன்
நின்ற நிலைபெயரா நீர்மை மனநினைவா
லொன்றச்செய் வாயே யுனை. (௧௦)

உனைத்தவிர வேறொருவ ருற்றதுணை காணேன்
சுனைத்தணிகை மாமலையிற் றுன்னும் - தனித்தகதிர்
வேன்முருகா! பாற்கடற்கண் மேவி யறிதுயில்கொண்
மான்மருகா! காணவென்முன் வா. (௧௧)

வாயார வேத்தி வழிப்படா தங்குமிங்கு
நாயாய்த் திரிந்து நலிவுற்றேன் - மாயாமுன்
வாசிப் பரியேறி வண்டணிகை மேவியுனைப்
பூசிப்ப னேவருளிப் போது. (௧௨)

போதாதோ யான்பெற்ற புல்லியசன் மக்குவையல்
வாதேதோ வின்னம் வறியேன்மேற் - றீதரித்தே
யந்தோ தணிகைவள ரம்மானே நின்னருடான்
வந்தாளா தோவுள் ளுவந்து. (௧௩)

வந்துன் னருளேயென் வல்வினையைப் போக்குமெனற்
சிந்தையே நிற்கடிமை செய்விக்குஞ் - சந்ததமுஞ்
சாயுச்யந் தன்னைத் தருந்தணிகை யாளாயான்
வீயச்செய் யாது விழை. (௧௪)

விழைபன்ப ரிட்டத்துண் மேவுவிப்பா யோபுன்
பிழைநண்ப ரிற்புகுவிப் பாயோ - சுழுமுனையிற்
கண்டார்க்கின் பே!தணிகைக் கற்கண்டே! நன்னெறியை
யண்டார்க்குண் டோநின் னடி. (கரு)

அடியாருக் காட்பட்டே னில்லையே யம்பொற்
றொடியார்க்காட் பட்டேனித் துன்பன் - மிடியசலப்
பார்ப்பவர்பார் காண்டணிகைப் பன்னிருதோ ளாவெனைத்தற்
காப்பவர்யா ருன்னைவிடக் காட்டு. (கசு)

காட்டினெளி தாநின் கழல்காட்டி டாயேலென்
கூட்டுணர்வாற் காண்பரிதாங் குஞ்சரியும் - வேட்டுவர்தம்
பைங்கொடியும் வாழ்தணிகைப் பன்னிருகை வேலவா
இங்கெனைவிட் டேகா திரு. (கஎ)

இருந்துந் தவழ்ந்து மெழுந்துநடந் தும்பின்
மரிந்துஞ் சுகிப்பதெவண் வல்லாய் - பிரிந்திடுமுன்
ஒண்டணிகை தன்னி லுயிர்நிலைப்பிப் பாய்நினது
தொண்டரொடு கூடித் தொழ. (கஅ)

தொழவரா துள்ளந் துவளிலைமெய் கண்ணி
லழவரா தென்செய்கே னையா - புழைநிரட்கை
யானைக் கிளையதணி காசலனே! யெவ்வகைநா
யேனுக் கிளகு மிதம். (ககூ)

இதங்கவேண் டுந்தணிகை யீசனே! நின்பொற்
பதங்களன்றி யுண்டோவோர் பற்று - நிதங்கலிக்கும்
பேரோசை யுள்ளே பிரிந்தெழுந்த ரீங்காரச்
சீரோசை கேட்கவருள் செய். (உ0)

செய்ப கமலத்தாட் டிருமருக னேதணிகை
ஐயனே யான்றே டருமருந்தே - மைவிழியார்
வள்ளிதெய்வ யானை மருவு மணிக்குன்றே!
அள்ள லகற்றிசுத்த மாக்கு. (உக)

ஆக்குவோ னைச்சிறையி லாக்கி யரற்கொருசொற்
றேக்கி யுரைத்த சிவக்கொழுந்தே! - தூக்குபல
வேந்தூர் திருத்தணிகை யேந்தலே நின்னருளே
போந்ததுணை யாயிற் புணை. (உ௨)

புணையருளா லென்புன் பிறவிப் புணரி
யணையினைசேர்ந் தின்ப மடைவேன் - தணிகைக்கண்
மேவுஞ் சிவக்குருந்தே மெய்ஞ்ஞான விண்மணியே!
யாவுஞ் செயுநின் னகம். (உ௩)

அகமும் புறமு மடங்காவா னந்த
சுகமே! தணிகைச் சுயம்பே! - இகபரங்க
டம்முட் பயனே! தமியேன் றனித்துன்பம்
எம்மைக்கும் வாரா தியல். (உ௪)

இயலு மிசைநா டகமு மெனக்கு
நயமுறச்செய் வாய்தணிகை நாதா! - வியனுலகி
னின்னையே பாட நினைவு தரக்கடவாய்
பன்னரிய வேலாகண் பார். (உ௫)

பார்வதிதன் கையாற் பரிந்தணைப்ப வோருருக்கொ
ளாரணனே! நற்றணிகை யண்ணலே - ஓராறுமீன்
கொங்கையமு துண்டு குதித்தாடு மூவிரண்டாம்
அங்கமுரு காவெனக்கிங் கார். (உ௬)

ஆரறிவா ருன்னை யரனறிவான் றாயறிவாள்
நாரணனு மேயறியா னுலைய - னூர்முதலாய்
விண்ணறியு மோதணிகை வேலா! விரும்படிமை
மண்ணிலறி வானெவ் வகை. (உ௭)

வகையாய் வகுத்த வகையாவு நின்றன்
தொகையா மவையிலொன்றாய்த் தோன்று - திகழ்வுபெறும்
அற்பனுக்கு நிற்றணிகை யண்ட வீடந்தருமோ
உற்பவமா யென்று முளாய். (உ௮

உள்ளாய்ந் தெடுத்தியற்று முண்மைப் பயனின்னைக்
கொள்ளார்க்கு முண்டோ குணப்படுகை - கள்ளாரும்
பொங்கர் வளத்தணிகைப் புண்ணியனே! நின்கருணைத்
துங்கமலர்த் தாளே துணை. (௯௯)

துணைவள்ளி தெய்வானை தோகைமயில் வேலுந்
துணைநின் னடியார் தொகையுந் - துணையான
கஞ்ச மலர்ப்பதத்தைக் கைதொழுதே னுக்கருள்வாய்
செஞ்சொற் புலமைவளச் சீர். (௱)

---

## கொச்சகக்கலிப்பா.

சீருதிக்கு மன்பரெலாஞ் சிற்சுகநற் கடன்மூழ்கக்
காருதிக்கு மனக்கொடியேன் கலகவிழி யார்மயலாற்
பாருதிக்கும் வினைச்சழக்கிற் பட்டிழிந்து வாடுவதே
ஞருதிக்குந் தணிகைவரை யாறுமுகத் தாண்டவனே, (௧)

தண்டமிழா வினன்குடிவாழ் தண்ணமுதே தனிவாழ்வே
துண்டமதிச் சடையரனைச் சூழவலம் வரும்பெரியோய் [ருளா
தொண்டெனநின் றாட்பணிந்தேன் றொல்லைவினை தொலைத்த
யண்டர்தொழுந் தணிகைவரை யாறுமுகத் தாண்டவனே. (௨)

கல்லனைய கடுநெஞ்சேன் கடலனைய கன்மமுளேன்
வல்லனைய முலைமாதர் வஞ்சவிழிப் பட்டிழிந்தேன்
மல்லமருந் தோளுடைய மறலிபய மென்றொழிவே
னல்லலறு தணிகைவரை யாறுமுகத் தாண்டவனே. (௩)

பிறவியெனும் பெருந்தளையிற் பிணிப்புண்ட புன்மையனேன்
றுறவடைந்து பெரியோர்பாற் றுகளறுக்கச் செல்லாதே
னறவிதழிச் சடைப்பெருமா னல்குகம்ப நிற்பணிய
வறிந்திலனே தணிகைவரை யாறுமுகத் தாண்டவனே, (௪)

அஞ்சுபெரு வறுமையினா லலைப்புண்டு வவனிமிசைத்
தஞ்சமென வடைந்தவரைத் தாங்கறியாத் தன்மையனேன்
மஞ்சுலவுந் தணிகைவரை மன்னுமரகதமயின்மே
லஞ்சலென வந்தருள்வா யாறுமுகத் தாண்டவனே. (௫)

பித்தனாய்த் திரிந்துழன்று பேருலகி னாசைகொண்டு
பத்தியென்ப தோரணுவு மறியாத பாவியனே
னெத்தனைநாட் செல்லுமந்தோ விடர்க்கடல்விட் டேறுதற்கிங்
கத்தனே தணிகைவரை யாறுமுகத் தாண்டவனே. (௬)

படங்காட்டு மரவமெல்லாம் விழப்புடைக்கும் வியன்மயின்மே
னடங்காட்டுந் தாட்பணியே னல்லன்பர் தமைநாடேன்
மடங்காட்டும் வாழ்வினையே மதித்தலைந்துக் கெட்டேனே
படல்காட்டுந் தணிகைவரை யாறுமுகத் தாண்டவனே. (௭)

பாவியெனப் பலரிகழ்ந்தும் பதமலரைப் போற்றாம
லாவிகொடு திரிதருமிவ் வவலனேன் றனைத்தழலின்
மேவவிடி னுந்தண்ட மெதுசெயினுந் தீராதே
யாவிளங்குந் தணிகைவரை யாறுமுகத் தாண்டவனே. (௮)

பானேரு மதிதவழும் பரங்கிரியி லுறைவோயே
யானேறு சடையரற்கன் றருமறையின் பொருளுரைத்தோய்
மானேரு விழிமடவார் மயற்கடல்விட் டருட்கடலில்
யானேறு மாறருளா யாறுமுகத் தாண்டவனே. (௯)

கோளுடையார் காணாக் குருபரனே யீராறு
தோளுடையாய் கடப்பமலர்த் தொடையுடையாய் செங்கமலத்
தாளுடையா யங்கையினிற் சதியுடையாய் தமியேனை
யாளுடையாய் தணிகைவரை யாறுமுகத் தாண்டவனே. (௧௦)

## நெஞ்சொடு கிளத்தல்.

சீரணியும் வெண்சோறுஞ் சிறப்பொடுநன் மாதரையுந்
தாரணியும் வேண்டியிவண் டயங்குமட நெஞ்சேநீ
பூரணமாய்ப் பூரணத்தின் பொலிவான புண்ணியன்ற
னாரணங்க டொழுந்தணிகை யரும்பதிசேர்ந் துய்வாயே. (க)

அறுசமயந் தனைவிளக்க வறுமுகங்கொண் டமர்ந்தருளு
நெறியறிய மாட்டாது நீடுயர்கொ ளென்னெஞ்சே
குறுமுனிக்கன் றருள்செய்த குகப்பெருமா னுறைதருநன்
னறுமலர்சேர் திடுதணிகை நற்பதிசேர்ந் துய்வாயே. (உ)

இம்மா நிலவாழ்வுக் கிருநிதிக்கே யலமந்து
சும்மா விருக்குஞ் சுகமறியா வென்னெஞ்சே
செம்மான்றன் மகடழுவுஞ் செல்வன்றிரு மான்மருக
னம்மான்றன் செருத்தணிகை யரும்பதிசேர்ந் துய்வாயே. (ங)

சிரந்தழுவுஞ் சிவநெறியைத் திருநீற்றி னரும்பொலிவை
யரம்பெறவே நாடாதிங் குணர்வழியு மென்னெஞ்சே
மரந்தழுவு மான்மகளை மகிழவலம் வைத்தவன்ற
னரந்தையறு செருத்தணியெ னரும்பதிசேர்ந் துய்வாயே. (ச)

செப்பாடு மூலைமடவார் திருக்கதனி லகப்பட்டே
யிப்பாடு படவுனக்கிங் கெவருரைத்தா ரென்னெஞ்சே
கைப்பாலில் வேலேந்திக் கடம்பணிந்த காங்கெயன்ற
னப்பாடுஞ் சுனைத்தணிகை யரும்பதிசேர்ந் துய்வாயே. (ரு)

உண்டதையே மீண்டுண்டு முடுத்ததையே யுடுத்துப்பினுங்
கண்டதையே கண்டுதினங் களிப்படையுங் கன்னெஞ்சே
பண்டைமறை காணரிய பரமனருள் சரவணன்றன்
மண்டுலவுஞ் செருத்தணிகை வளப்பதிசேர்ந் துய்வாயே. (சு)

கந்தமுடை மலர்கொண்டு கழலிணையை யருசித்துப்
பந்தமறப் பரமனையே பாடாவென் பாழ்நெஞ்சே
செந்தினகர் வருமெந்தை சிவக்கொழுந்தி னுறைவிடமா
மந்தமிலாத் திருத்தணிகை யரும்பதிசேர்ந் துய்வாயே. (எ)

எண்ணரிய பிறவிதனை யெடுத்தலைந்த தென்பொருட்டோ
மண்ணின்பஞ் சதமென்று மதிமயங்கு மடநெஞ்சே
கண்ணியநன் மறைப்பயனே கடவுளே யென்றேத்தி
விண்ணிறைதாழ் செருத்தணிகை வியன்பதிசேர்ந் துய்வாயே.

சூலமொடு பாசமது சுற்றியே தூதருடன்
காலன்வருங் கால்கண்டு கலக்கமுறு மென்னெஞ்சே
நீலமிடற் றினனருளு நித்தியா னந்தனெனும்
வேலனது செருத்தணிகை வியன்பதிசேர்ந் துய்வாயே. (௯)

போனவைவீண் போனாலும் புதுநாள்வீண் போகாமல்
மானவாழ் வதுநாடி வந்தனைசெய் தென்னெஞ்சே
மோனவா னந்தமதை முக்கணற்கன் றருள்செய்த
ஞானநா யகன்றணிகை நற்பதிசேர்ந் துய்வாயே. (௰)

---

### கட்டளைக்கலித்துறை.

நோயற்ற வாழ்வுங் குறைவற்ற செல்வமு நும்மடியார்
பாலுற்ற தொண்டு மளித்தருள் வீர்பழ னங்கடொறுஞ்
சாலுற்ற வெள்வளை யூருந் திருத்தணி காசலத்தின்
மேலுற்ற நாயக மேயறு கோண விழுப்பொருளே.

---

## வாழி.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சிரித்துபுர மெரித்தபரன் சேயனறு முகவேள்செம்
பொற்றாள் வாழி
விரித்தசிறைச் சிகிவாழி யயில்வாழி யிருமருங்கு
மின்னார் வாழி
ஒருத்தனிவா ரணத்தொடுநீ றுருத்திராக் கமுமடியா
ரொருங்கு வாழி
திருத்தணிகை வெண்பாவந் தாதிமுப்ப தும்வாழி
தினமு மாதோ.

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

# ஆளுடையபிள்ளையார்.

:0:

## காப்பு.

### குறள் வெண்பா.

*சிந்துர முகத்தன் றிருவடி பணிவேன்*
*பந்த மகற்றப் பரிந்து.*

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

*சீர்வளர் புறவ நகர்புரி தவத்தாற்*
*றிகழ்தருங் கவுணியர் மரபிற்*
*பேர்வளர் தெய்வ வடிவினை யெடுத்த*
*பேசருந் தனிப்பரஞ் சுடரே*
*ஏர்வளர் பருவ மூன்றினி லுமையா*
*ளெழில்குலா முலையமு தருந்தி*
*நார்வளர் பனுவ லயந்துரை செய்யும்*
*ஞானசம் பந்தமா மணியே.* (க)

*வாரியங் கடல்சூழ் மலர்தலை யுலகின்*
*மழவிடை யுடையவெம் பெருமான்*
*வேரியங் கமலத் திருவடி வணங்கி*
*வியன்பெறு கவிகையுந் தாளஞ்*
*சேரியங் கிடைநற் சிவிகையும் பொன்னுஞ்*
*சிறப்பொடு பெற்றநற் பரிசை*
*நாரியந் தொடையோ யார்பெற வல்லார்*
*ஞானசம் பந்தமா மணியே.* (உ)

*மன்னவன் மகளை வலியினுண் மிகவும்*
*வருத்திடு முயலகன் றவிர்த்துங்*
*கன்னலம் பழனஞ் சூழ்திரு மருகற்*
*காளையை யெழுப்பியு மன்றித்*

சொன்னலம் விளக்கு மங்கையர்க் கரசி
தொழும்புசெய் திடவரு ளினையால்
நன்னல மருளாய் நாயினே னுய்ய
ஞானசம் பந்தமா மணியே. (௩)

மண்ணிய தடஞ்சூழ் மயிலைநன் னகரின்
மன்னிய வென்பினைப் பெண்ணாய்ப்
பண்ணிய பரனே புகலிமன் னவநின்
பான்மையா ரறிந்திட வல்லார்
புண்ணியப் பயனே புகழொளி விளக்கே
பொருவரு மாணிக்க மலையே
நண்ணியே நாயேனுய்யுமா றருளாய்
ஞானசம் பந்தமா மணியே. (௪)

பழித்திடும் வேறு சமயஞ்சென் றுழலும்
பாண்டியன் சுரப்பிணி யகற்றிப்
புழுத்தலை யமணப் பேய்களைக் கழுவிற்
பொருந்திடச் செய்துசற் சைவந்
தழைத்திட வந்த தனிப்பெருந் துணையே
தமியனேன் வினைப்பெருக் கனைத்து
நழுவிட வருளாய் நான்மறைப் பயனே
ஞானசம் பந்தமா மணியே. (௫)

ஆரண முடிவே யாண்டசற் குருவே
யமுதமே யாருயிர்த் துணையே
தாரணி தன்னிற் சலசமா மலர்த்தா
டமியனேற் கருளுநா ளுளதோ
பூரண நிலையே பொருவில் சாரூபம்
புகழ்பெறு கச்சிமா நகரி
னாரண னரிய நலம்பெற வருளும்
ஞானசம் பந்தமா மணியே. (௬)

அஞ்சுகம் பயிலு மாமறைக் காடனுடையா
ரருமறை வனத்தடை கதவ
நெஞ்சுகந் தேத்தித் திறந்திட வதனை
நீதியா யடைத்திடு நினைக்குப்

பஞ்சினை யனையேன் பாசம தகலப்
பார்த்திரு ணீக்குமா றறிதோ
நஞ்சணி களத்த னருள்பெறுந் தகையே
ஞானசம் பந்தமா மணியே. (௭)

அலகில்சீ ரோத்தூ ரரனரு ளாலே
வாண்பனை பெண்பனை யாக்கி
நிலவுநன் மதுரைப் பாண்டியன் கூனை
நிமிர்த்தியுங் கனல்புன றனிலே
குலவிய வேட்டை யேறிடச் செய்து
குவலய முய்யுமா றெண்ணி
நலமிகுந் திலங்குந் தமிழ்மறை யளித்தோய்
ஞானசம் பந்தமா மணியே. (அ)

தாண்டகம் பாடு மாண்டகைப் பெருமான்
றணிவில்பொற் காசினைப் பெறநீ
யாண்டவ னிடத்து வாசிசேர் காண
மடைந்தது மென்கொலோ வறையாய்
காண்டகு சுடரே கருணையங் கடலே
காத்தனின் கடனென வடைந்தேன்
நாண்மலர் செறியுங் காழியம் பரனே
ஞானசம் பந்தமா மணியே. (௯)

சுண்ணகன் ஞாலத் திருவகைப் பவஞ்சங்
காட்டினை யன்னவற் றுள்ளே
யெண்ணரும் பிறவி யெடுத்தெடுத் துழன்றே
னேழையே னென்செய கிற்பேன்
மண்ணிலே யுள்ளா ரனைவரும் வதுவை
வந்துகாண் மெனப்பெரு வீடு
நண்ணியே யுதவுங் காழியர் தவமே
ஞானசம் பந்தமா மணியே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

# ஆளுடையவரசு.

:0:

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நீர்கட லுடுத்த நெடும்புவி போற்று
நிகரிலாச் சிவபெரு மானே
கார்நிறப் பாசக் கட்டறுத் தளிக்குங்
கடவுண்மா மணியெனக் காட்டி
ஏர்பெறு சைவ நெறிதனக் குரிய
விணையிலா நீறொடு கண்டி
ஆர்பெற வணிய மன்பதைக் குரைத்தோ
யாண்டருள் தாண்டக மணியே. (௧)

பத்தர்க ளுள்ளங் குடியெனக் கொள்ளும்
பசுபதி பரஞ்சுட ரெங்கள்
கொத்தலர் கொன்றைக் குழகன்முன் னிளைக்குக்
கொடுமைசெய் சூலைநோ யுதவி
இத்தரை சைவப் பயிர்தழைத் தோங்க
விரங்கியாண் டருளின னென்னின்
அத்தநின் பெருமை யுரைப்பதென் றரமோ
வாண்டருள் தாண்டக மணியே. (௨)

யாற்றரு விடத்தை யருந்தியுந் துணிவாய்
மறிகட னீந்தியு மன்றி
நீற்றறை தன்னிற் றுன்பிலா திருந்து
நீண்டகோட் டிபந்தனைக் காய்ந்த
சாற்றரு நினது புகழினை யோதச்
சார்பிலேன் றனக்கெளி தாமோ
ஆற்றரு கீழ லமர்சிவற் கன்பே
யாண்டருள் தாண்டக மணியே. (௩)

தோணியம் பதியி லவதரித் தருளோங்
தோன்றலா ஞானசம் பந்தன்
பாணிமா சடைகொள் பரபர்தம் மாட்டுப்
படியிலா வன்புடை யாயென்

றேணிலா நேச முதிர்வினு லப்ப
ரெனவழைத் திடுவரே யென்னின்
ஆணிப்பொன் னேநின் றிறனென்னே யறைவே
னுண்டருள் தாண்டக மணியே. (௪)

உலகெலாம் போற்று முயரொளிப் பிழம்பை
யுத்தம ருள்ளுறை சுயம்பைக்
கலனெலா மரவாக் கொண்டகற் பகத்தைக்
கவின்மறைக் காட்டினிற் கதவம்
நலனெலா மடையத் திறந்துடன் காட்டு
நாயக நாயினேன் றனக்கென்
அலமெலாந் தீர்ப்ப தரிதுகொ ணினக்கே
யாண்டருள் தாண்டக மணியே. (௫)

அரவினுன் மாண்ட பாலனைத் தந்த
வத்தனே யாரூர ரரசே
கரவுடை மனத்தேன் கழலிணை பணியக்
கடைக்கணித் திடுவதெந் நாளோ
கரனுயிர் மாய்த்த மாயவன் கஞ்சன்
கழன்முடி நேடியுங் காணு
அரனடி பரசு மண்ணலே யென்னை
யாண்டருள் தாண்டக மணியே. (௬)

பழிப்புறு பிறவிக் கடலினின் றேறப்
படிறனேற் குன்னடித் துணையாஞ்
செழிப்புறு புணைய தின்றெனி னெளியேன்
சீலனுந் தன்மையு முளதோ
தழைத்திடு சோலை சூழ்திரு வதிகைச்
சங்கர னருள்பெறுந் தகையே
அழிப்பிலாச் சைவ குரவனே யென்னை
யாண்டருள் தாண்டக மணியே. (௭)

ஒழிவிலா தருளுங் கற்பகம்போல
வோதினே ருறுபய னடைவான்
இழிவிலா முத்திக் கரையயி னேற்றி
யிலகிடு மென்னினு யடியேன்

கழிவிலா நினது பனுவலின் றிறத்தைக்
கசடற வுரைக்குமா றெளிதோ
அழிவிலாப் பொருளை யடைந்தவெம் மிறையே
யாண்டருள் தாண்டக மணியே. (௯)

அப்பனே யரசே யருமறைக் கொழுந்தே
யலையொழி யமுதசா கரமே
ஒப்பிலா தருளுங் கற்பகக் கனியே
யூனுறு முடலினுக் குயிரே
துப்பிதழ் மடவார் மயலுழந் தேங்கித்
துயருறு வகையெனக் கருளு
மப்பணி வேணி யரனருள் பெறுவோ
யாண்டருள் தாண்டக மணியே. (௯)

உண்ணிறை யற்புப் பெருக்கினு னின்றிங்
குலையிடு மெழுகென வுருகி
எண்ணுமே னென்னுந் தமிழ்த்திரு மறையை
யிமையவர் போற்றிட வருளிக்
கண்ணுதற் பெருமா னடியிணைக் கீழே
கலந்தரு ளமுதவா ரிதியே
அண்ணல்சீர் குலவுந் தாண்டகம் பாடி
யாண்டருள் தாண்டகமணியே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

---

திருச்சிற்றம்பலம்.

# பஞ்சரத்தினம்.

:o:

பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திலகவல் லிக்கிளை வளைத்திட வளைப்புண்டு
செறியத்தி தோன்றுமரசின்
செம்மைபெறு வேரியஞ் தாளினிற் பிணியுண்டு
திகழ்தமிழ்ப் பூமலர்த்திட்

டிலகுநா கத்தகப் பட்டசிறு சேய்தன்னை
யெழில்பெறத் தழைவித்துமே
யேங்குதிரை யரியினிற் கல்லாற் பிறங்கிவள
ரெங்களர சைப்பணிகுவாம்
அலகிலடி யார்குழாந் தன்னிலே யடியனு
யண்டிவாழ் வுறும்பேறிலா
துயினேன் முந்நிற்று னடியருக் கடியனு
யாதரித் திடவேண்டுவேன்
திலகமென வாழு நமர்ந்தபர தெய்வமே
தெய்வநா யகருவக்குந்
திருநெறித் தமிழ்தந்த வருநெறிச் சைவனே
திகழும்வா கீசகுருவே. (௧)

வருணவா சாரநெறி பத்திநெறி கல்விநெறி
வாய்ந்தவப் பூதியடிகள்
வாகீச னென்னுநின் பேரொன் றறைந்திட்டு
வளரன்பி னுலிறுக்குண்
டருணகிர ணக்கமல வடியிற் புகச்செறிந்
தானந்த முற்றனன்முனு
னடியனே னென்றுமில் லேனெனினு மென்னையோ
வாட்படப் பத்தியில்லேன்
இருணகும் புன்னெஞ்ச ரிடுநீற்றி னறைமேவி
யேதுமோ ரூறுமின்றே
யெல்லிற் பொலிந்தவெம் மிறைவனே யிறையேனு
மிங்கொர்துணை பெற்றறிகிலேன்
திருமலிந் தொளிரதிகை யானருட் சூலையுஞ்
செல்வமென மேற்கொண்டவா
திருநெறித் தமிழ்தந்த வருநெறிச் சைவனே
திகழும்வா கீசகுருவே. (௨)

சிரநடுக் குற்றுமொழி குழறிவிழி பீளையொடு
செயலற் றழிந்திடர்முன்
திரையெனத் தோற்றிரைந் தேதவ ரெனத்தனு
செறிந்துகோ லூன்றிடாமுன்

விரவுற்ற மனைமக்க ளொடுசுற்ற முற்றுமே
வெய்துரை வழங்கிடாமுன்
வேலையென வேவருங் கோலவிய மன்றனால்
வீயாமு னெனையாளுவாய்
கரவுற்ற குண்டரா மமணரே விடுமதக்
கயம்வீ றழித்தசதுரா
கருதவரி தாயசிங் கியையமுத மென்னவே
காமாரி போலயின்றாய்
சிரபுரக் கவுணியத் தேவரப் பாவெனச்
செறிந்ததவ யோகதீரா
திருநெறித் தமிழ்தந்த வருநெறிச் சைவனே
திகழும்வா கீசகுருவே. (௫)

எந்நாளு நின்றிருச் சேவைசெய் தேத்தவு
மிலங்கும் பணிக்கொராளா
யிருப்பவு மருப்பொலியு மலர்தூய் வணங்கவு
மெளியேன்ற னுள்கடம்மைக்
கொன்னே யொழிந்திடா துனது திருமுறைகளைத்
குறித்துப் படித்திடவுமே
குறைகொண்டு பிறர்மனைச் சென்றேற் றிடாமலே
கொண்டதிலு மோகையருள்வாய்
பின்னே ரிடுஞ்சடைப் பெருமான்ற னருள்வீறு
பெண்ணினும் பொன்னினானும்
பிறங்கிடச் செய்தவர்ப் பிரசநா றடிமலர்ப்
பேணிமுடி கொண்டபெரியோய்
தென்னே தெனாவெனப் பொறிவண்டு பண்பாடு
செறிதுடைவை சூழுமதிகைத்
திருநெறித் தமிழ்தந்த வருநெறிச் சைவனே
திகழும்வா கீசகுருவே. (௬)

வேலையலை போலவரு மின்னலிற் பல்கால்
வெதும்பிப் பதைத்தலைந்தேன்
வெய்யமட வார்தமைத் தெய்வமென் றுன்றனை
விரைத்தாண் மறந்திருந்தேன்

ஏலவே கோள்கரவு கற்றுச் சமத்துவ
மில்லே னெனச்செருக்குற்
றிருந்தன னிருந்தநாள் பல்லவினி யேனுநின்
னிணையடிக் காளாக்குவாய்
கோலமுறு நீற்றினைக் கோலத் தினும்பவக்
கோடையை யகற்றுமேன்மை
கொண்டவஞ் சக்கரத் தினைநெஞ் சகத்தினுங்
கொண்டுமெதி கொண்டகோவைச்
சீலமுற வுறவழுத் திக்கவின் புகலூர்த்
திகம்பரனை மேவுமணியே
திருநெறித் தமிழ்தந்த வருநெறிச் சைவனே
திகழும்வா கீசகுருவே. (௰)

திருச்சிற்றம்பலம்.

---

திருச்சிற்றம்பலம்.

# ஆளுடைய நம்பி.

—— :0: ——

## நேரிசைக்கலிப்பா.

பூமேவுங் கொன்றைபுனை புண்ணியனுக் கார்வமுடன்
பாமேவு மாலையணி பரங்கருணை வாரிதியே
சேமேவு நின்னடியென் சிந்தையுற வைத்தருளாய்
மாமேவு நாவலூர் வன்றொண்ட மாமணியே. (க)

குந்தியின்செய்க் காரருளைக் கொடுத்தாண்ட கோமானைச்
சந்தித்தே பித்தனெனச் சாற்றிடுநின் றிறம்புகல
நிந்தையிலா மாதவர்க்கு நீணிலத்தி லரிதென்றால்
வந்திப்ப தென்றரமோ வன்றொண்ட மாமணியே. (உ)

பொங்குபாற் கடலெழுந்த பொருவிடத்தை யரனுக்கு
அங்கையினு லேற்றிட்ட வாலால சுந்தரனே
துங்கமுறு நின்னடியேன் றூய்மைபெற வருளமிர்தை
மங்கலிலா தெனக்கீவை வன்றொண்ட மாமணியே. (ங)

கொங்குசெறி கொன்றைவளர் கோடீரச் சங்கரன்றன்
பங்கயநேர் தாளிரண்டும் படிதோயப் பரவையிடந்
தங்கியதூ தாகவிடுந் தனித்தலைமைப் புலவோய்நீ
மங்குலென வருள்பொழிந்தாள் வன்றொண்ட மாமணியே.(௪)

களக்கருமைக் கந்தரத்தார் கனிந்தீந்த காணமெலாம்
அளப்பரிய மணிமுத்த வணிநதியி லிட்டாரூர்
குளத்தெடுத்த குணக்குன்றே குரைகழற்கா ளாக்கிடுவாய்
வளக்கழனி சூழ்நாவல் வன்றொண்ட மாமணியே. (௫)

எஞ்சுமிடை யஞ்சநடை யெழிலமைந்த சங்கிலியைக்
கஞ்சமலர் வாவிகள்சூழ் கவினொற்றி மாநகரில்
விஞ்சமண வினைமுடித்த வித்தகனே யாண்டிடுவாய்
மஞ்சமரும் பொழினாவல் வன்றொண்ட மாமணியே. (௬)

காணார்ந்த வவிநாசிக் கவினகரிற் கராமுண்ட
தேனார்ந்த மொழிமதலை தெளிவுடன்றந் தளித்தோயே
ஊனார்ந்த தேகமதி லுள்ளழுக்கை நீக்கிநல
வானார்ந்த பேறருளாய் வன்றொண்ட மாமணியே. (௭)

பரம்பரனைக் கலைகளெலாம் பகரரிய பரவெளியைத் [ய்தோய்
திரம்பெறத் தோழமைகொண்டு திருத்தொண்டத் தொகைசெ
உரம்பெறநின் பெருமைதனை யுரைத்தடியே னுய்யும்வகை
வரந்தருவாய் நாவலூர் வன்றொண்ட மாமணியே. (௮)

ஆடுகின்ற சிற்சபையி லாரணத்தி னுட்பொருளைத்
தேடுகின்ற மாலயனுந் திகைப்புறச்செங் கல்லையெலாம்
நாடுகின்ற பொன்னாக நயந்துரைசெய் நாயகனே
வாடுகின்ற வெற்கெளிதோ வன்றொண்ட மாமணியே. (௯)

சங்குடையான் றாமரையான் சதமகனும் வானவரும்
அங்கைசிரங் கூப்பமுர ணணித்தவள யானையின்மேன்
மங்கையுமை பங்குடையான் மனமகிழச் சேரனொடும்
வங்கமலைக் கெழுந்தருளும் வன்றொண்ட மாமணியே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

# ஆளுடைய வடிகள்.

—:o:—

## கோச்சகக்கலிப்பா.

மாநாக மணிந்தாடு மாமறையாங் கோவணத்தெங்
கோனாறு புனைசடைமேல் கொண்டதுமண் வியப்பன்றே
வானோரு மண்ணோரும் வந்திக்க வாசகமாந்
தேனாய மழைபொழியுந் திருவாத வூர்மணியே. (௧)

நாரணனு நான்முகனு நான்மறையு நாடகிலா
ஆரணத்தி னுட்பொருளை யாய்ந்தறிந்த வுணர்வினர்போல்
பூரணமாய் மூகையினாற் பேசுவித்த புண்ணியமாங்
காரணநின் கழல்பணிவோர்க் கருள்வாத வூர்மணியே. (௨)

ஆணிப்பொன் னம்பலத்தே யாடுகின்ற வெம்பெருமான்
மாணிக்க வாசகனென் றிட்டழைக்கு மாண்பினனே
பேணித் துதித்தறியாப் பேதையனே னெஞ்சமுன்றன்
றாணிற்க வைப்பாய் தனிவாத வூர்மணியே. (௩)

மாயவுருக் கொண்டுள்ள மயக்குகின்ற மங்கையர்தந்
தீயதொழிற் காளாய்த் தினமுமுழன் றலைவேனை
நேயமொடு பேறுபெறும் நியதியையெற் களித்தாண்ட
தூயவருட் சற்குருவாந் துரைவாத வூர்மணியே. (௪)

பட்டமரம் போலுலகிற் பாவையர்கள் கூட்டுறவால்
கெட்டலமந் தேகாமே இளத்துதிரு வாசகத்தைத்
தொட்டெடுத்திங் கோதுந் திறனெற்கின் றருளுதியேல்
நிட்டையிலே நிற்பேன் நிகழ்வாத வூர்மணியே. (௫)

முத்திதரு முக்கண் முதல்வனொரு மாவேறி
பித்த வுலகிற் பிறப்போ டிறப்பகற்றும்
அத்திருக் கோல மகங்கனிந்து கண்டோதும்
வித்தகநிற் போற்றுவனோ வியன்வாத வூர்மணியே. (௬)

கொத்தலர் கொன்றை குராமதியம் வாளரவம்
வைத்துடைய செஞ்சடில வள்ளலொருத் திக்காளாய்
பித்தனெனநடித்துப் பிரம்படிகொண் டெவ்வுயிர்க்கும்
ஒத்தநிலை காட்டச்செய் யுயர்வாத வூர்மணியே. (௭)

மண்ணாய் விண்ணாகி மறைந்தொளிரு மாமணியைக்
கண்ணாற் கருத்தாற் கண்டுகளித் தேநடித்த
அண்ணா வுடற்பொருளோ டாவியுமங் கைக்கணருள்
உண்மையே யென்னோ வொருவாத வூர்மணியே. (௮)

ஓயாத பம்பரநேர்ந் தொழியாக் கவலைதனில்
வீயாமற் பொல்லேன் வினைகளை வீக்கொழித்துத்
தூயோ ரணையுஞ் சுகநெறிதந் தாண்டருள்வாய்
தாயேயாய் நின்ற தனிவாத வூர்மணியே. (௯)

வன்புத்தப் பேய்கள் மயக்கையகற் றும்பரமே
அன்புருவத் தாயே யருளார் கலியேயிங்
குன்பதமே நாடி யுருகவருள் செய்வாயே
செம்பதமே தெய்வத் திருவாத வூர்மணியே. (௧௦)

---

நேரிசைவெண்பா.

மன்னுபுகழ்க் கச்சிமுதன் மாகாள மீருகத் [யமாய்
துன்னுதொண்டைச் சோதிதலத் தோத்திரத்தைச் - சொன்ன
மோகூர் முனிசாமி முற்றுவித் தச்சிட்டான்
றேகூரச் சிந்தை தெளிந்து.

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டுத் திருப்பதித் தோத்திரக்கோவை

முற்றிற்று.